இந்திய
ஒப்பந்தச்சட்டம் - II

[சிறப்பு ஒப்பந்தங்கள்]

Indian
Contract Act - II

[Special Contracts]

• இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு •

இந்திய
ஒப்பந்தச் சட்டம் - II

[சிறப்பு ஒப்பந்தங்கள்]

Indian Contract Act - II

[Special Contracts]

தமிழ்நாடு அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

P.R.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும் (Indemnity and Guarantee)
ஒப்படைவும் அடகும் (Bailment and Pledge)
முகவரியம் (Agency)
சரக்கு விற்பனை (Sale of Goods)
கூட்டாண்மை (Partnership)
பிரச்சனைகளுக்கான தீர்வுகள் (Solutions to Problems)
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள் – அண்மைக்காலம் வரை
சட்டப்பல்கலைக்கழக பாடத்திட்டம் (Law University Syllabus)
தேர்வில் அடிக்கடி வினா கேட்கப்படும் பகுதிகள் – ஒரு சிறு விளக்கம்

11-ஆம் பதிப்பு

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழ்நாடு அரசின் பரிசு பெற்ற சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, **சேலம் 636007.**

மின்வணிக வலைதளம் : **www.shripathirajanpublishers.com**

11-ஆம் பதிப்பில் உங்களுடன்....

1872–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய ஒப்பந்தச் சட்டத்தை இரண்டு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். இச்சட்டத்தின் 1 முதல் 75 வரையிலான சட்டப் பிரிவுகள், ஓர் **'ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகள்' (The General Principles of Contract)** பற்றி கூறுகின்றன. அவற்றை நாம் **'இந்திய ஒப்பந்தச் சட்டம் – I' (Indian Contract Act - I)** எனும் நமது வெளியீட்டில் கண்டுள்ளோம்.

இதற்கடுத்து வரும் சட்டப்பிரிவுகள் **'சிறப்பு ஒப்பந்தங்கள்'** அல்லது **'தனி வகை ஒப்பந்தங்கள்' (Special Contracts)** பற்றி விளக்குகின்றன. சிறப்பு ஒப்பந்தங்கள் என்பன, **ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தம்** (பிரிவுகள் 124 முதல் 147 வரை) (Indemnity and Guarantee), **ஒப்படைவும் அடகும்** (பிரிவுகள் 148 முதல் 181 வரை) (Bailment and Pledge), **முகவரியம்** (பிரிவுகள் 182 முதல் 238 வரை) (Agency) ஆகும். மேற்கண்ட பிரிவுகளுக்கு இடையில் வரும் 76 முதல் 123 வரையிலான பிரிவுகள் முன்னதாக சரக்குகள் விற்பனை (Sale of Goods) ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டன. பின்னிட்டு 1930–ஆம் ஆண்டில் தனியாகக் இயற்றப்பட்ட **சரக்கு விற்பனைச் சட்டத்தால்** (The Sale of Goods Act, 1930) மேற்படி பிரிவுகள், இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. அதுபோல் மேற்படி சட்டத்தில் 239 முதல் 266 வரையிலான பிரிவுகள், கூட்டாண்மை ஒப்பந்தம் (Partnership) குறித்து வகை செய்திருந்தன. ஆனால் அப்பிரிவுகள் 1932–ஆம் ஆண்டின் **இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தால்** (The Indian Partnership Act, 1932) இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன.

நாம் **'இந்திய ஒப்பந்தச்சட்டம் – II' (Indian Contract Act-II)** எனும் இப்புத்தகத்தில், **124 முதல் 238 வரையிலான சட்டப்பிரிவுகளின்** வாயிலாக கூறப்பட்டிருக்கும் மேற்கண்ட சிறப்பு ஒப்பந்தங்களையும் (Special Contracts), 1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தையும், 1932–ஆம் ஆண்டின் இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தையும் காண உள்ளோம். மேலும் இப் புத்தகத்தின் இறுதியில், பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகளைத் தந்துள்ளேன்.

தவிர பல்கலைக்கழக வினாத்தாளின் வடிவமைப்பு மாற்றமடைந்துள்ளது என்பதையும், அதன்படி எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண்கள் 70–ஆகவும், தேர்வு நேரம் 2½ மணியாகவும் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

வாழ்த்துகள் !

என்றும் அன்புடன்,

வி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

1. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 - ஒரு அறிமுகம் [The Indian Contract Act, 1872 - An Introduction] 1

2. ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும் [Indemnity and Guarantee] 3

- ஈட்டுறுதி ஒப்பந்தம் 3
  - வரையறை 4
  - ஈட்டுறுதிக்கான வரையறை முழுமையானதல்ல 5
  - ஒரு செல்லத்தகு ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் கூறுகள் 5
  - ஈட்டுறுதி பெறுபவரின் உரிமைகள் 6
  - ஈட்டுறுதி அளிப்பவரின் உரிமைகள் 7
  - ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு துவங்கும் காலம் 9
- பொறுப்புறுதி ஒப்பந்தம் 10
  - வரையறை 10
  - இன்றியமையாத சிறப்பு கூறுகள் 11
  - பொறுப்புறுதியின் வகைகள் 13
  - தொடர் பொறுப்புறுதி மறுத்தழிப்பு 14
  - பிணையாளரின் பொறுப்பு நிலை 15
  - உடனிணைந்து பரவும் தன்மை 17
  - ஈட்டுறுதி, பொறுப்புறுதி – வேறுபாடுகள் 20
  - பிணையாளர் தனிச் சலுகை பெற்ற கடனாளி 22
  - பிணையாளரின் உரிமைகள் 23
  - பிணையாளர் விடுவிப்பு பெறும் சூழ்நிலைகள் 28

3. ஒப்படைவும் அடகும் [Bailment and Pledge] 32

- ஒப்படைவு 32
  - வரையறை 32
  - ஒப்படைவின் முக்கிய இயல்புகள் 33
  - ஒப்படைவு செய்பவரின் உரிமைகளும் கடமைகளும் 36
  - ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் 38
  - பற்றுரிமை 41
    - இரு வகைகள் 42
    - குறிப்பிட்ட பற்றுரிமை, பொதுப் பற்றுரிமை – வேறுபாடுகள் 43
  - தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவர் – விளக்கம் 44

- தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவரின் உரிமைகள் 45
- தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவரின் பொறுப்புகள் 45

– ஒப்படைவின் முடிவு 46

– அடகு 46

- வரையறை 47
- 'அடகு என்பது ஒரு வகை ஒப்படைவே ஆகும்' 47
- அடகு, ஒப்படைவு – வேறுபாடுகள் 48
- அடகு வைப்பவரின் உரிமைகளும், கடமைகளும் 48
- அடகு பெறுபவரின் உரிமைகளும், கடமைகளும் 49
- உரிமையற்றவர்களால் உருவாக்கப்படும் அடகு செல்லத்தக்கதாகும் சூழ்நிலைகள் 51

4. முகவரியம் [Agency] 53

- விளக்கம் 53
- முகவரிய ஒப்பந்தத்தின் சிறப்புக் கூறுகள் 54
- அளிப்படைவு பெற்றவர் மேலும் அளிப்படைவு செய்ய முடியாது 56
- துணை முகவர் 56
- மாற்று முகவர் 58
- துணை முகவர், மாற்று முகவர் – வேறுபாடுகள் 58
- முகவர்களின் வகைகள் 60
- முகவரியத்தின் பல்வேறு வகைகள் (அல்லது) முகவரியம் உருவாக்கப்படும் பல்வேறு வழிகள் 64
- முகவரின் உரிமைகள் 71
- முகவரின் கடமைகள் 72
- மூன்றாம் நபருக்கு முகவரின் தனிப்பட்ட பொறுப்பு 74
- நலன் இணைந்த முகவரியம் 76
- முகவரியம் முடிவுறுதல் 79
- மூன்றாம் தரப்பினர்களுக்கு முதல்வரின் பொறுப்பு 81

5. 1930-ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம் [The Sale of Goods Act, 1930] 84

- விற்பனை (அல்லது) விற்பனை ஒப்பந்தம் – வரையறை 85
- சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் 86
- விற்பனை, விற்பனைக்கான உடன்பாடு – வேறுபாடுகள் 87
- விற்பனை, தவணை கொள்முதல் உடன்பாடு – வேறுபாடுகள் 89
- நிபந்தனைகளும், நம்புறுதிகளும் 92
- நிபந்தனை, நம்புறுதி – வேறுபாடுகள் 94
- உட்கிடையான நிபந்தனைகள் 96

- உட்கிடையான நம்புறுதிகள் 101
- வாங்குபவனே விழித்திரு 103
- சொத்துரிமை மாறுதல் அல்லது சரக்குரிமை மாறுதல் 107
- சொத்துடன் இடரும் முதற்தோற்றத்திலேயே கடந்து செல்கிறது 111
- உரிமைமூல மாற்றம் குறித்த பொது விதி 113
- விலை பெறாத விற்பனையாளர் 118
  - அவரது உரிமைகள் 119
- C.I.F. ஒப்பந்தங்கள் 121
- F.O.B. ஒப்பந்தங்கள் 123
- ஏல விற்பனை 123

6. 1932-ஆம் ஆண்டின் இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் [The Indian Partnership Act, 1932] 125

- கூட்டாண்மை – வரையறை 126
- கூட்டாண்மையின் இன்றியமையாத கூறுகள் 126
- கூட்டாண்மை ஒன்று இருக்கிறதா என்று கண்டறியும் சோதனைகள் 127
- கூட்டாண்மை, இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் – வேறுபாடுகள் 130
- கூட்டாண்மை, கூட்டுரிமை – வேறுபாடுகள் 132
- கூட்டாண்மை, நிறுவனம் – வேறுபாடுகள் 134
- கூட்டாளிகளின் வகைகள் 136
- கூட்டாளியாக ஒரு இளவரின் நிலை 139
- நிறுமங்களைப் பதிவு செய்தல் 143
- நிறுமத்தைப் பதிவு செய்யாததால் ஏற்படும் விளைவுகள் 144
- கூட்டாளியின் உரிமைகள் 146
- கூட்டாளியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் 148
- மூன்றாம் நபர்களுடன் கூட்டாளிகளின் உறவு 151
- கூட்டாளிகளின் அதிகாரம் 151
  - வெளிப்படையான அதிகாரம் 151
  - உட்கிடையான அதிகாரம் 151
  - உட்கிடை அதிகாரங்களும் மூன்றாம் நபர்களும் 153
- உள்வரும் கூட்டாளிகள் 154
- வெளிச் செல்லும் கூட்டாளிகள் 155
- வணிக நற்பெயர் 158
- நிறுமக் கலைப்பு 160
- கலைப்பிற்குப் பின் கூட்டாளிகளின் உரிமைகள் 162
- கலைப்பிற்குப் பின் கூட்டாளிகளின் பொறுப்புகள் 162

7 பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions] 165

சிறு குறிப்புகள்

1.	உட்கிடை ஈட்டுறுதி [Implied indemnity]	3
2.	தொடர் பொறுப்புறுதி [Continuing guarantee]	13
3.	உடன் பிணையாளருக்கு எதிராக பிணையாளருடைய உரிமைகள் [Rights of a surety against co-sureties]	23
4.	ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் [Rights and duties of a bailee]	35
5.	ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமை [Bailee's Lien]	41
6.	ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமையின் தன்மை [Nature of Bailee's Lien]	41
7.	பற்றுரிமை [Lien]	41
8.	தொலைந்த பொருட்களை கண்டெடுத்தவர் [Finder of lost goods]	44
9.	அடகு [Pledge]	46
10.	உரிமை அல்லாதோர் அடகு வைத்தல் [Pledge by non-owners]	51
11.	அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது [Delegatus non-potest delegare]	55
12.	துணை முகவர் [Sub agent]	55
13.	மாற்று முகவர் [Substituted agenty]	55
14.	முகவர்களின் வகைகள் [Kinds of agents]	59
15.	வணிக முகவர் [Mercantile agent]	59
16.	பிணை முகவர் [Del credere agent]	59
17.	தடையினால் முகவரியம் [Agency by estoppel]	62
18.	தேவையினால் எழும் முகவரியம் [Agency by necessity]	62
19.	பின் ஏற்பு முகவரியம் [Agency by Ratification]	63
20.	ஏற்புறுதி [Ratification]	63
21.	பின்னர் பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம்[Expost facto agency]	64
22.	திரும்பப் பெற இயலாத முகவரியம் [Irrevocable agency]	76
23.	நலன் இணைந்த முகவரியம் [Agency coupled with interest]	76
24.	முகவர் நிலை முடிவுறச் செய்தல் [Termination of agency]	78
25.	வெளிப்படுத்தப்படாத முதல்வர் [Undisclosed principal]	81
26.	விற்பதற்கான உடன்பாடு [Agreement to sell]	84
27.	நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகள் [Conditions and Warranties]	92
28.	உட்கிடை நிபந்தனைகள் [Implied conditions]	96
29.	மாதிரி மூலம் விற்பனை [Sale by sample]	102
30.	வாங்குபவனே விழித்திரு [Caveat emptor]	103
31.	விலை பெறா விற்பனையாளர் [Unpaid seller]	117

32. செல்லுகையில் நிறுத்தம் [Stoppage in transit] 118
33. ஏல விற்பனை [Auction sale] 123
34. கூட்டாண்மையின் உண்மைச் சோதனை [True test of partnership] 126
35. கூட்டாண்மை [Partnership] 126
36. உரிமைப் போலி கூட்டாண்மை [Partnership by holding out] 135
37. முரண்தடைக் கூட்டாளி [Partnership by estoppel] 136
38. உறங்கும் கூட்டாளி [Sleeping partner] 136
39. கூட்டாண்மை நிறுமத்தில் இளவர் சேர்த்தல் [Minor's admission to partership firm] 139
40. வயதுறா பங்குதாரர் [Minor partner] 139
41. கூட்டமைப்புகளை பதிவு செய்தல் [Registration of firms] 142
42. கூட்டமைப்புகளைப் பதிவு செய்யாததின் விளைவுகள் [Effects of non-registration of a firm] 143
43. கூட்டாளியின் உட்கிடை அதிகாரம் [Implied authority of a partner] 150
44. உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் கூட்டாளிகள் [Incoming and Outgoing partners] 154
45. ஓய்வு பெறும் கூட்டாண்மையரின் பொறுப்பு நிலை [Liability of a retiring partner] 154
46. உள் நுழையும் கூட்டாளியின் உரிமைகளும் பொறுப்புகளும் [Rights and Liabilities of an incoming partner] 154
47. கூட்டாளி ஒருவரை நீக்குதல் [Expulsion of partner] 157
48. நிறுமத்தின் நற்பெயர் [Goodwill of a firm] 158

வேறுபாடுகள்

1. ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தம் [Contract of Indemnity and Contract of Guarantee] 20
2. குறிப்பிட்ட பற்றுரிமை மற்றும் பொதுப் பற்றுரிமை [Particular Lien and General Lien] 43
3. அடகு மற்றும் ஒப்படைவு [Pledge and Bailment] 48
4. துணை முகவர் மற்றும் மாற்று முகவர் [Sub Agent and Substituted Agent] 58
5. விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்பாடு [Sale and Agreement to sell] 88
6. விற்பனை மற்றும் தவணை கொள்முதல் விற்பனை [Sale and Hire Purchase Agreement] 89
7. நிபந்தனை மற்றும் நம்புறுதி [Condition and Warranty] 94
8. கூட்டாண்மை மற்றும் இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் [Partnership and Hindu Joint Family Business] 130

9. கூட்டாண்மை மற்றும் கூட்டுச் சொத்துரிமை
[Partnership and Co-ownership] 131
10. கூட்டாண்மை மற்றும் நிறுவனம்
[Partnership and Company] 134

சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்குகள்

"A"

Andrews v. Singar Company Ltd. 97
Asst. Sales Tax Officer v. B.C. Kame 91
Atkinson v. Bell 110

"B"

Badeley v. Consolidated Bank 25
Baldry v. Marshall 93
Bechevaise v. Lewis 24
Behn v. Burness 94
Bettini v. Gye 94
Bombay Trading Corporation v. Aga Mohamed 100
Brook v. Hook 69

"C"

Calcutta Credit Corporation Ltd. v. Prince Peter 39
Corporation Bank, Banglore v. Lalitha H. Holla 77
Cory & Son v. Lambton 6
Cryathron v. Swinburn 24

"D"

Damodar v. Sheoram 69
Dodd v.Wilson 91
Donoghue v. Stevenson 188

"E"

Elphick v. Barnes 110

"F"

Frost v. Aylesbury Dairy Company 101

"G"

G.I.P. Railway Company v. Hanumandas 120
Gajanan Mareshwar v. Madan Mantri 8, 9
Grafton v. Armitage 91

"H"

Heibutt v. Hickson 98

"J"

Jones v. Just 101
Jyoti Prokash v. Jhowmull 124

"K"

Kaliaperumal Pillai v. Visalakshmi 34
Kashiba v. Shripat 18

Keighley v . Durant 68
Kelner v . Baxter 68
Krishnaswami v . Raghviah 6

"L"

Lallan Prasad v . Rahmat All 50
Lilley v . Doubleday 72
Lyell v . Ganga Dal 37

"M"

M.R. Dhawan v . Madan Mohan 49
Mauji Rama v . Tara Singh 69
Mohari Bibi v . Dharmadas Ghose 139

"N"

Narayan Singh v . Chatt ar Singh 17, 166
Nichol v . God ts 99

"P"

Peer Muhammed v . Dalooram 100
Pinnock v . Lewis 98
Priest v . Last 100

"R"

R. v . Wood Green Profiteering Committee 91
Robinson v . Greaves 90
Rouse v . Bradfard Banking Co. 24
Rowland v . Divall 97
Rugg v . Minnett 109

"S"

Smith v . Hughes 104

"V"

Varley v . Whipp 187

"W"

Wallis v . Pratt 97

-o0o-

அர்ப்பணம்

எனது தந்தை அமரர்
திரு. பி.ஆர்.ரங்காச்சாரி, பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ.,
வழக்குரைஞர் அவர்களின் நீங்கா நினைவிற்கு—
- பி.ஆர்.ஜெ.

1

இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 - ஒரு அறிமுகம் [The Indian Contract Act, 1872 - An Introduction]

இந்தியாவிற்கு பொருந்தி வந்த 1726-ஆம் ஆண்டின் ஆங்கில ஒப்பந்தச் சட்டம்:

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்திய நாட்டின் வட்டார சூழலுக்கு பொருந்தக் கூடிய ஆங்கில ஒப்பந்தச் சட்டமானது, முதலாம் ஜார்ஜ் மன்னரால் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு 1726–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பட்டயத்தால் (by the Charter of 1726) சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணப் பெரு நகரங்களில் (Presidency Towns) அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்னிட்டு 1781–ஆம் ஆண்டில் பிரிட்டன் பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட தீர்வகைச் சட்டமானது (Act of Settlement), இசுலாமியர்கள் மற்றும் இந்துக்களிடையே மரபுரிமை மற்றும் வாரிசுரிமை, மற்றும் ஒப்பந்தங்கள் குறித்த விஷயங்களைப் பொறுத்து எழும் வழக்குகளானது அந்தந்த மதத்தினருக்குப் பொருந்தக் கூடிய சட்டத்தால் தீர்க்கப்பட வேண்டும் என்று வழிவகை செய்தது. இந்நிலைப்பாடு, வழக்கிற்குரிய தரப்பினர்கள் இருவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவராக இருக்கும் பொழுது மட்டுமே ஆகும். எனவே அத்தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் இசுலாமியராகவும், மற்றொரு தரப்பினர் இந்துவாகவும் இருப்பின், அவர்களுக்கிடையிலான வழக்கு 'பிரதிவாதிக்குரிய சட்டங்கள் மற்றும் வழக்காறுகளால்' (by the laws and usages of the defendant) தீர்க்கப்பட வேண்டும் என்றும் அச்சட்டத்தில் மேலும் வகை செய்யப்பட்டிருந்தது. இவை எல்லாம் மேற்கண்ட பெரு நகரங்களைப் பொறுத்து மட்டுமே பொருந்தக் கூடியதாகும். சிறு நகரங்களில் (mofussil) அதாவது பெரு நகரங்களுக்கு வெளியில்

உள்ள நிலப்பரப்புகளுக்கு பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்து எச்சட்டமும் இல்லை. எனவே, அங்கெல்லாம் ஒப்பந்தங்கள் குறித்து எழும் வழக்குகளானது நீதி, நேர்மை மற்றும் நன் மனச்சான்றின் (Justice, Equity and Good Conscience) அடிப்படையில் தீர்க்கப்பட்டன.

1872-ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டம்:

இவ்வாறு இந்தியாவில் ஒப்பந்தங்கள் குறித்து முன்னதாக இருந்த சட்டங்களில் ஒரே சீரான, நிச்சயமான தன்மை இல்லை. அனைவருக்கும், அனைத்து நிலப்பரப்புகளுக்கும் ஒரே மாதிரியாக பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்த சட்டம் இந்தியாவில் அமைந்திருக்கவில்லை. எனவே இந்நிலையைக் களையும் பொருட்டு, **1872-ஆம் ஆண்டில் இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அது அந்த ஆண்டின் செப்டம்பர்த் திங்கள் முதல் நாளில் இருந்து அமலுக்கு வந்தது.**

இச்சட்டத்தில் மொத்தம் **238 பிரிவுகள்** உள்ளன. அவற்றில் 1 முதல் 75 வரையிலான பிரிவுகள் ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகள் (General Principles of Contract) குறித்து விளக்குகின்றன. அதற்கடுத்து வரும் சட்டப் பிரிவுகள் சிறப்பு ஒப்பந்தங்கள் அல்லது தனிவகை ஒப்பந்தங்கள் (Special Contracts) குறித்து விளக்குகின்றன. சிறப்பு ஒப்பந்தங்கள் என்பன, **ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தம்** (பிரிவுகள் 124 முதல் 147 வரை) (Indemnity and Guarantee), **ஒப்படைவும் அடகும்** (பிரிவுகள் 148 முதல் 181 வரை) (Bailment and Pledge), **முகவரியம்** (பிரிவுகள் 182 முதல் 238 வரை) (Agency) போன்றவையாகும். மேற்கண்ட பிரிவுகளுக்கு இடையில் வரும் 76 முதல் 123 வரையிலான பிரிவுகள் முன்னதாக சரக்குகள் விற்பனை (Sale of Goods) ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிட்டன. பின்னிட்டு 1930-ஆம் ஆண்டில் தனியாக கொண்டு வரப்பட்ட **சரக்கு விற்பனைச் சட்டத்தால்** (Sale of Goods Act, 1930) மேற்படி பிரிவுகள், இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. அதுபோல், மேற்படி சட்டத்தில் 239 முதல் 266 வரையிலான பிரிவுகள், கூட்டாண்மை ஒப்பந்தம் (Partnership) குறித்து வகை செய்திருந்தன. ஆனால் அப்பிரிவுகள் 1932-ஆம் ஆண்டின் இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தால் (Indian Partnership Act, 1932) இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன.

நாம் இந்நூலில், **124 முதல் 238 வரையிலான சட்டப் பிரிவுகளின்** வாயிலாக கூறப்பட்டிருக்கும் **சிறப்பு ஒப்பந்தங்களையும் (Special Contracts), 1930-ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தையும், 1932-ஆம் ஆண்டின் கூட்டாண்மைச் சட்டத்தையும்** காண உள்ளோம். ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகளை நாம் ஏற்கனவே **'இந்திய ஒப்பந்தச் சட்டம் - I'** எனும் ஒரு தனி நூலின் வாயிலாகக் கண்டுள்ளோம். மேலே தொடர்வோமா?

-oOo-

2

ஈட்டுறுதியும் பொறுப்புறுதியும் [Indemnity and Guarantee]

ஈட்டுறுதி ஒப்பந்தம் [Contract of Indemnity]

1.Define a 'Contract of Indemnity'. What are the rights of an Indemnity holder when sued? (ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையறு. ஈட்டுறுதி பெறுபவரின் மீது வழக்கு தொடரப்படும் போது அவருடைய உரிமைகள் யாவை ?)

(அல்லது)

What are the rights of an Indemnified when he is sued? (ஈட்டுறுதி செய்யப்பட்ட நபரின் மீது வழக்குத் தொடரும்போது அவரது உரிமைகள் யாவை ?)

(அல்லது)

Explain the rights of indemnity holder. (ஈட்டுறுதி ஏற்பவரின் உரிமைகள் யாவை?)

(அல்லது)

Implied Indemnity - Write short notes. (உட்கிடை ஈட்டுறுதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Section 124 and 125 of the Contract Act are not exhaustive of the Law of Indemnity - Explain. (ஒப்பந்தச் சட்டத்தின் 124 மற்றும் 125 பிரிவுகள் ஈட்டுறுதி சட்டம் குறித்து முழுமை பெற்றதல்ல – மதிப்பீடு செய்க.)

முன்னுரை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 124 முதல் 147 வரை உள்ள பிரிவுகள் ஈட்டுறுதி (Indemnity) மற்றும் பொறுப்புறுதி (Guarantee) ஒப்பந்தங்களைப் பற்றி கூறுகின்றன. அவற்றில் 124, 125 ஆகிய பிரிவுகளானது, **ஈட்டுறுதி ஒப்பந்தத்தைப் (Contract of Indemnity)** பற்றி விளக்குகின்றன.

ஈட்டுறுதி ஒப்பந்தம் - வரையறை :

ஈட்டுறுதியின் வரையறையை **பிரிவு 124** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "உறுதியுரை அளிப்பவரின் அல்லது வேறு நபரின் செய்கையால் விளையும் இழப்பிலிருந்து மறுதரப்பினரைக் காக்க, அவ்வுறுதியுரையை அளிப்பவர், அத்தரப்பினருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம், ஈட்டுறுதி ஒப்பந்தமாகும்."[1]

பொதுவாக, ஈட்டுறுதி என்பது இழப்பினை ஈடு செய்வதாகும் (Compensating the loss). இரு நபர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது அவர்களில் ஒருவர் தம்மாலோ அல்லது பிற நபர்களாலோ மேற்படி ஒப்பந்தத்தின் மறு தரப்பினருக்கு இழப்புகள் ஏதேனும் ஏற்பட்டால் அவற்றை ஈடு செய்வதாக உறுதியுரை அளித்தால், அது ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இதை பின்வரும் எடுத்துக்காட்டு மிகத் தெளிவாக விளக்கும்.

எடுத்துக்காட்டு :

A என்பவர் B என்பவரிடமிருந்து ரூ. 200/– கடன் வாங்கியுள்ளார். B என்பவர் அப்பணத்தை வசூலிக்கும் பொருட்டு A என்பவர் மீது வழக்கு தொடர் கிறார். அப்பொழுது C என்பவர், மேற்படி வழக்கு நடவடிக்கையில் A என்பவருக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதனை தாம் ஈடு செய்வதாக A-யிடம் உறுதியுரை அளிக்கிறார். இந்நிலையில் ரூ.200/–அய் செலவுத் தொகையுடன் மேற்படி A என்பவர் B-க்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று B-க்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இங்கு A-க்கும் C-க்கும் இடையே ஈட்டுறுதி ஒப்பந்தம் இருப்பதால், மேற்படி C அப்பணத்தை ஒப்புக் கொண்டபடி A-க்குச் செலுத்த வேண்டும்.

ஈட்டுறுதி அளிப்பவர் மற்றும் ஈட்டுறுதி பெறுபவர்:

ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் ஈடுபடுவோர்கள் இருவர். ஒருவர் ஈட்டுறுதி அளிப்பவர்; மற்றொருவர் ஈட்டுறுதி பெறுபவர். அதாவது, இழப்பை ஈடு செய்ய

1. A contract by which one party promises to save the other from loss caused to him by the conduct of the promisor himself, or by the conduct of any other person, is called a "contract of indemnity" - **Section 124 of the Indian Contract Act, 1872.**

உறுதியுரைப்பவர் (Promisor), **ஈட்டுறுதி அளிப்பவர் (Indemnifier)** எனப் படுவார். இழப்புக்கு ஈடு பெறுவோர், **ஈட்டுறுதி பெறுபவர் (Indemnity Holder)** அல்லது **ஈட்டுறுதி கொண்டுள்ளவர் (Indemnified)** எனப்படுவார்.

ஈட்டுறுதிக்கான வரையறை முழுமையானதல்ல:

பிரிவு 124 ஈட்டுறுதிக்கான வரையறையைக் கூறுகிறது. இதனை மேலே கண்டோம். ஆனால் இவ்வரையறை முழுமையானதோ அல்லது விரிவானதோ அல்ல (Section 124 is not exhaustive). இவ்வரையறை (1) வெளிப்படையான ஈட்டுறுதி உரையையே உள்ளடக்குகிறது. (2) உறுதியுரையளிப்பவரின் அல்லது வேறு நபரின் செயலால் நேரும் இழப்பையே உள்ளடக்குகிறது (Loss due to human conduct).

ஆனால் அது (1) உட்கிடையான ஈட்டுறுதியுரையை உள்ளடக்குவதில்லை; அதுபோல் (2) நெருப்பு, கடல், தீ, விபத்து போன்ற மனித நடத்தையால் அல்லாதன வற்றால் (loss not arising due to human conduct) ஏற்படும் இழப்பை உள்ளடக்குவதில்லை. அதாவது காப்பீட்டு ஒப்பந்தங்கள் (Contract of Insurance) பிரிவு 124–ன் கீழ் வருவதில்லை. மேலும் (3) உறுதியுரையேற்றவரின் (Indemnity holder) செய்கையால் ஏற்படும் இழப்பையும் உள்ளடக்குவதில்லை.

ஒரு செல்லத்தகு ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் கூறுகள் (The elements of a valid contract of Indemnity) :

1. ஈட்டுறுதி ஒப்பந்தம் ஒன்று, செல்லத்தகு ஒப்பந்தமொன்றின் அனைத்து அடிப்படைக் கூறுகளையும் பெற்றிருக்க வேண்டும். அதாவது, மறுபயன், ஒப்பந்தம் செய்யும் தகுதி, இசைவு, சட்டப்படியான நோக்கம் ஆகியவற்றை ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தம் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பொதுவாக ஈட்டுறுதிக்கான உறுதியுரை வெளிப்படையாக இருத்தல் வேண்டும். எனினும் அது சில சமயங்களில் உட்கிடையானதாகவும் உள்ளது. இங்கு வரும் **'உட்கிடையான ஈட்டுறுதி ஒப்பந்தம்' (Implied Indemnity)** என்பது, சூழ்நிலைகளிலிருந்தும் அல்லது நபர்களின் தொடர்புகளிலிருந்தும் அறியப் படுகிறது. ஈட்டுறுதி ஒப்பந்தங்கள் அனைத்தும் **நிகழ்வுசார் ஒப்பந்தங்களே (Contingent Contracts)** என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **69–வது பிரிவு,** ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தத்தை உட்கிடையாக்குகிறது. இப்பிரிவின்படி, "மற்றொருவர் சட்டப்படி செலுத்தக் கடமையுடைய பணத்தில் அக்கறையுடைய ஒருவர், அப்பணத்தை செலுத்திவிட்டால், அதை அவர் அம்மற்றொருவரிடமிருந்து திரும்பப் பெற உரிமையுடையவர்."

எடுத்துக்காட்டாக, A என்பவர் தனது நிலத்தை B-க்கு குத்தகைக்கு விட்டிருந்தார். ஆனால் அதற்கான வரியை, A அரசுக்கு செலுத்தவில்லை எனவே

வரி பாக்கிக்காக அந்நிலத்தை விற்க அரசு விளம்பரம் செய்தது. இதனால், B என்பவரின் குத்தகை சட்டப்படி முடிவுக்கு வரும். இதைத் தடுப்பதற்காக B என்பவர் மேற்படி வரி பாக்கித் தொகையை அரசுக்கு செலுத்திவிடுகிறார். இங்கு A என்பவர் அத்தொகையை B-க்குச் செலுத்த வேண்டும்.

பிரிவு 69–ன் கீழான மேற்படி எடுத்துக்காட்டில் ஈட்டுறுதிக்கான ஒப்பந்தம் வெளிப்படையாக இல்லாது போனாலும், உட்கிடையாக உள்ளது.

Krishnaswami v. Raghviah[1] – எனும் வழக்கில், தரப்பினர்கள் தங்களுக்குள் ஈட்டுறுதிக்கான ஒப்பந்தத்தை வெளிப்படையாக செய்து கொள்ளா விட்டாலும், அவர்கள் அத்தகு ஈட்டுறுதிக்காக விருப்பம் கொண்டிருந்தனர் என்பதை சங்கதிகளிலிருந்து அனுமானிக்க முடியுமென்றால், அங்கு உட்கிடையான ஈட்டுறுதியின் வாயிலாக ஈட்டுறுதிக்கான உரிமை எழுகிறது என்று சென்னை உயர் நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது.

Cory & Son v. Lambton[2] – எனும் மற்றொரு வழக்கில், B–யின் வேண்டுகோளுக்கிணங்க, A என்பவர் ஏதேனும் செயல்களைப் புரிந்து, அதனால் A–க்கு இழப்பு ஏதும் ஏற்பட்டால், அதற்கு ஈடு கொடுக்க வேண்டிய பொறுப்பு B-க்கு உள்ளது என்றும், இது உட்கிடையான ஈட்டுறுதியினால் ஏற்படும் விளைவு என்றும் கூறப்பட்டது.

3. மற்றொரு நபருக்கு தன்னாலோ அல்லது மற்றவர்களாலோ இழப்புகள் ஏதேனும் ஏற்பட்டால், அவரை அதிலிருந்து காப்பாற்றுவதாக ஒரு நபர் உறுதியுரை அளிக்க வேண்டும்.

4. அவ்வாறு உறுதியுரை ஏற்றவர் அல்லது ஈட்டுறுதி பெற்றவர் (Indemnify Holder) ஒரு இழப்பு அடைந்திருக்க வேண்டும்.

5. ஈட்டுறுதி பெற்றவர், ஒரு சாதாரண செயலறிவுத்திறம் வாய்ந்த (Prudent) நபர் எவ்வாறு செயல்படுவாரோ, அவ்வாறு செயல்பட்டிருந்தால், ஈட்டுறுதி அளித்தவர், மேற்படி ஈட்டுறுதி பெற்றவருக்கு ஏற்பட்ட இழப்பையும் அதனைச் சார்ந்த சட்டபடியான செலவுகளையும் அளிக்கக் கடமைப்பட்டவராவார்.

ஈட்டுறுதி பெறுபவரின் மீது வழக்கு தொடரப்படும் போது அவருடைய உரிமைகள் (Rights of an Indemnity holder when sued) (அல்லது) ஈட்டுறுதி பெறுபவரின் உரிமைகள் (Rights of Indemnity holder):

பிரிவு 125–ஆனது, ஈட்டுறுதி பெறுபவரின் மீது வழக்கு தொடரப்படும்

1. (1927) 53 M.L.J. 679 : 26 L.W. 687 : 107 I.C. 423 : (1928) Mad. 43
2. (1916) 86 L.J.K.B. 401

போது, அவருக்கு என்னென்ன உரிமைகள் கிடைக்கின்றன என்று கூறுகிறது. இதன்படி, ஈட்டுறுதி பெறுபவர், ஈட்டுறுதி அளிப்பவரிடமிருந்து பின்வருவனவற்றைப் பெறும் உரிமை உண்டு.

1. இழப்பீடுகள் அனைத்தும் (All Damages) : ஈட்டுறுதியில் அடங்கும் எந்த விஷயத்திற்காகவும் தொடரப்படும் வழக்குகளில் ஈட்டுறுதி பெறுபவர், செலுத்தக் கட்டாயப்படுத்தப்படும் அனைத்து இழப்பீடுகளையும் ஈட்டுறுதி அளிப்பவரிடமிருந்து பெற உரிமையுடையவர் ஆவார்.

2. வழக்கு செலவுத் தொகைகள் அனைத்தும் (All Costs): வழக்காடவோ அல்லது எதிர்வாதம் (defending) செய்யவோ ஈட்டுறுதி பெறுபவர் கட்டாயப்படுத்தப்பட்டு செலுத்திய அனைத்து செலவுத் தொகைகளையும் அவர் ஈட்டுறுதி அளிப்பவரிடமிருந்து பெற உரிமையுடையவராவார்.

3. சமரசத்தின் போது கொடுக்கப்பட்ட தொகைகள் அனைத்தும் (All sums paid under the terms of compromise) : வழக்கில் ஏற்பட்ட சமரசத்தின் (Compromise) மூலம் கொடுக்கப்பட்ட தொகைகள் அனைத்தையும் திரும்பப் பெற ஈட்டுறுதி பெறுபவருக்கு உரிமை உண்டு. ஆனால் அச்சமரசமானது ஈட்டுறுதி அளிப்பவரின் ஒப்புதல் பெற்றதாக இருக்க வேண்டும்.

மேற்கண்டவை யாவும் வழக்காடும் போது ஈட்டுறுதி பெறுபவருக்கு கிடைக்கும் உரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் ஈட்டுறுதி பெறுபவர் தனது அதிகார எல்லைக்குள் செயல்பட்டிருந்தால் கிடைக்கும்.

ஈட்டுறுதி அளிப்பவரின் உரிமைகள் (Rights of an Indemnifier):

இந்திய ஒப்பந்தச் சட்டமானது ஈட்டுறுதி ஒப்பந்தத்தில் ஈட்டுறுதி அளிப்பவரின் உரிமைகள் பற்றி எதையும் கூறவில்லை. ஆங்கிலச் சட்டத்தில் ஈட்டுறுதி அளிப்பவரின் உரிமைகள், பிணையாளர் (Surety) ஒருவரின் உரிமைகளை ஒத்ததாக உள்ளன. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 141–வது பிரிவு ஒரு பிணையாளரின் உரிமைகளைப் பற்றி கூறுகிறது. எனவே பிணையாளரின் உரிமைகளைப் பற்றி கூறும் 141–வது பிரிவையே ஈட்டுறுதி அளிப்பவரின் உரிமைகளாகக் கொள்ளலாம்.

ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு துவங்கும் காலம் (Commencement of Indemnifier's Liability):

ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு எப்பொழுது தொடங்குகிறது என்பதைப் (Commencement of Indemnifier's Liability) பற்றி மேற்படி **பிரிவு 125** ஆனது விரிவாக எதையும் கூறவில்லை.மேலும் நீதிமன்றங்களிடையே

இது குறித்து சில கருத்து வேறுபாடுகளும் இருந்தன. இறுதியில் ஈட்டுறுதி பெறுபவருக்கு முழுப் பொறுப்பு (absolute liability) ஏற்பட்டுவிட்டாலே, ஒப்புக் கொண்டபடி ஈடு அளிக்க வேண்டிய கடமை ஈட்டுறுதி அளித்தவருக்கு துவங்கி விடுகிறது எனக் கூறப்பட்டது. **(மேலும் விரிவாக அடுத்த வினாவின் விடையில் காணலாம்.)**

முடிவுரை :

பிரிவு 124–ஆனது ஈட்டுறுதிக்கான வரையறையைக் கூறுகிறது. அது போல் பிரிவு 125–ஆனது ஈட்டுறுதி பெறுபவர் மீது வழக்கிடப்படும் பொழுது அவருக்கு கிடைக்கும் உரிமைகளைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் இவ்விரு பிரிவுகளும் சில முக்கிய கூறுகளைப் பற்றி எதையும் எடுத்துக் கூறவில்லை. அவற்றை நாம் ஏற்கனவே மேலே கண்டுள்ளோம். ஆகவே ஒப்பந்தச் சட்டத்தின் 124 மற்றும் 125–வது பிரிவுகள் ஈட்டுறுதிச் சட்டம் குறித்து முழுமை பெற்றதல்ல (not exhaustive) எனும் கூற்று உண்மையே. இக்கருத்து **Gajanan Mareshwar v. Madan Mantri**[1] வழக்கில் **நீதிபதி சோக்லா (Chagla J.)** அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது. **(அடுத்த வினாவின் விடையையும் சுட்டிக் காட்டுதல் நலம்.)**

2. Define a contract of indemnity. "Indemnity requires that the party to be indemnified shall never be called upon to pay". Explain. (ஈட்டுறுதி ஒப்பந்தத்தினை வரையறை செய்க. "ஈட்டுறுதி செய்யப்பட வேண்டிய நபரை ஈடு கொடுக்குமாறு செய்யக் கூடாது என்பதுதான் ஈட்டுறுதியின் அடிப்படை". விளக்குக.)

(அல்லது)

"Indemnity requires that the party to be indemnified shall never be called upon to pay." ("ஈட்டுறுதி செய்யப்பட வேண்டிய நபரை ஈடு கொடுக்குமாறு செய்யக் கூடாது என்பதைத்தான் ஈட்டுறுதி காட்டுகிறது". விளக்குக.)

முன்னுரை :

'ஈட்டுறுதி செய்யப்பட வேண்டிய நபரை ஈடு கொடுக்குமாறு செய்யக் கூடாது என்பதுதான் ஈட்டுறுதியின் அடிப்படை' என்ற கூற்று சரியே. ஆனால் இதன் விளக்கத்தைக் கூற வேண்டுமெனில் ஈட்டுறுதி அளிப்பவரின் (Indemnifier) பொறுப்பு எப்பொழுது துவங்குகிறது என்பதிலிருந்து ஆரம்பித்தல் அவசியமாகும்.

1. A.I.R. 1942 Bom. 302 : 44 Bm. L.R. 703

ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு துவங்கும் காலம் (Time of commencement of the Indemnifier's liability) :

ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பானது, ஈட்டுறுதி பெற்றவருக்கு (Indemnifier) ஒரு பொறுப்பு ஏற்படுவதற்கு முன்னரே ஏற்படுகிறதா அல்லது உண்மையில் அவருக்கு இழப்பு ஏற்பட்ட பிறகு ஏற்படுகிறதா என்பதில் நீதிமன்றங் களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஏனெனில் **பிரிவு 125–ல்** இது பற்றி கூறப்படவில்லை.

இப்பிரச்சனையில் இலாகூர் மற்றும் நாக்பூர் உயர் நீதிமன்றங்களானது, ஈட்டுறுதி பெற்றவருக்கு உண்மையில் இழப்பு ஏற்பட்ட பிறகே, அதை ஈடு செய்ய வேண்டிய பொறுப்பு ஈட்டுறுதி அளிப்பவருக்கு ஏற்படுகிறது, என்று கூறின.

ஆனால் பம்பாய், கல்கத்தா, சென்னை மற்றும் அலகாபாத் உயர் நீதி மன்றங்களானது, இங்கிலாந்து நாட்டின் தகைமை நெறி நீதிமன்றத்தால் (Court of Equity) அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தினைப் பின்பற்றி மாறுபட்ட ஒரு கருத்தினைக் கூறின. அதன்படி, ஈட்டுறுதி பெற்றவருக்கு உண்மையில் இழப்பு ஏற்படுவதற்கு முன்னரே, ஒப்பந்தப்படி ஈடு செய்யுமாறு ஈட்டுறுதி அளித்தவரை கட்டாயப்படுத்த லாம் என்று கூறின. இக்கருத்தானது, பம்பாய் உயர் நீதிமன்றத்தில் **நீதிபதி சோக்லா** அவர்களால் பின்வரும் வழக்கின் தீர்ப்புரையில் வலியுறுத்தப்பட்டது.

Gajanan Mareshwar v. Madan Mantri[1]

இங்கிலாந்து தகைமை நெறி நீதிமன்றங்களானது ஈட்டுறுதி பெற்றவரின் பொறுப்பானது முழுமையடைந்து விட்டாலே (liability becomes absolute), அவர் ஈட்டுறுதி அளித்தவரிடமிருந்து ஈட்டுத் தொகையை பெற உரிமை படைத்தவராகிறார் எனக் கூறியுள்ளன. அதாவது ஈட்டுறுதி பெற்றவர் உண்மையில் இழப்பு எதையும் அடைந்திருக்க வேண்டியதில்லை. ஈட்டுறுதி ஒப்பந்தங்கள் பற்றிய 124 மற்றும் 125–வது பிரிவுகளானது அதைப்பற்றி விரிவாக எதையும் கூறவில்லை (not exhaustive).எனவே இந்திய நீதிமன்றங்களானது இங்கிலாந்தின் தகைமை நெறிக் கொள்கையை மேற்படி விஷயத்தைப் பொறுத்தவரை பின்பற்றுவது சாலச் சிறந்தது என்று மேற்படி வழக்கில் நீதிபதி சோக்லா கூறினார். ஆகவே, ஈட்டுறுதி பெற்றவருக்கு (Indemnified) ஒரு பொறுப்பு உண்டாகி, அப்பொறுப்பும் முழுமையான ஒன்றாக இருப்பின் (absolute liability), அவர் உடனே தமக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பிலிருந்து காப்பாற்றுமாறு ஈட்டுறுதி அளித்தவரை அழைக்க உரிமை பெற்றுள்ளார். எனவே ஈட்டுறுதி பெற்றவரை ஈடு கொடுக்கும்படி எக் காலத்திலும் கூறக் கூடாது. அதாவது அவரை பணம் செலுத்தும்படி அழைத்தல் கூடாது (The indemnified shall never be called upon to pay). ஈட்டுறுதி

1. A.I.R. 1942 Bom. 302 : 44 Bm. L.R. 703

அளித்தவர்தான் அதைச் செலுத்த வேண்டிய பொறுப்புடையவர். இதனை பின்வரும் ஒரு எளிய எடுத்துக்காட்டு விளக்கும்.

எடுத்துக்காட்டு :

ஒரு இரயில்வே பார்சல் மீது A மற்றும் B என்ற இருவர் உரிமை கொண்டாடுகின்றனர். அவர்களில் A என்பவர் இரயில்வே நிருவாகத்திற்கு சார்பாக ஒரு ஈட்டுறுதி பத்திரத்தை எழுதிக் கொடுத்துவிட்டு அப்பார்சலை பெற்றுச் செல்கிறார். அந்த ஈட்டுறுதிப் பத்திரத்தில், எதிர்காலத்தில் B என்பவர்தான் அப்பார்சலுக்கு உண்மையான உரிமையாளர் எனத் தெரிய வந்தால், அதனால் இரயில்வே நிருவாகத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பினை தாம் ஈடு செய்வதாக மேற்படி A உறுதியுரை அளித்திருந்தார். இங்கு மேற்படி A ஈட்டுறுதி அளிப்பவர் (Indemnifier); இரயில்வே நிருவாகம் ஈட்டுறுதி பெறுபவர் (Indemnified) ஆவார்கள். பின்னர் B என்பவர் அப்பார்சலின் உரிமைக்கான உண்மையான ஆதாரங்களுடன் இரயில்வே நிருவாகத்தை அணுகுகிறார். இதனால் அப்பார்சல் உண்மையில் B-க்குத்தான் சேர வேண்டியது என்பது இரயில்வே நிருவாகத்திற்கு தெரிய வருகிறது. தற்பொழுது அப்பார்சலுக்குண்டான தொகையை B-க்கு அளிக்க வேண்டிய முழுமையான பொறுப்பு (absolute liability) ஈட்டுறுதி பெற்றவராகிய (indemnifier) இரயில்வே நிருவாகத்திற்கு ஏற்படுகிறது. ஆனால் அத் தொகையை இரயில்வே நிருவாகம் B-க்கு அளித்து, தொகை இழப்பிற்குள்ளான பின்னரே தனக்கு ஈட்டுறுதி அளித்த நபராகிய A- யிடமிருந்து ஈடு பெற வேண்டும் என்று எவ்வித கட்டாயமுமில்லை. இங்கிலாந்தின் தகைமை நெறிப்படியும், நீதிபதி சோக்லா அவர்கள் கூறிய கருத்துரையின்படியும் அதற்கான பொறுப்பு முழுமை அடைந்துவிட்டால் அதுவே போதுமானது. ஈட்டுறுதி பெற்றவர் (indemnified) தனக்கு ஈட்டுறுதி அளித்த நபரை ஈட்டுத் தொகையை கொடுக்குமாறு கட்டாயப் படுத்தலாம். எனவே ஈட்டுறுதி பெற்றவர் தன்னுடைய கையிலிருந்து எவ்வித ஈட்டுத் தொகையையும் தர வேண்டியதில்லை. இதுதான் ஈட்டுறுதியின் அடிப்படை.

பொறுப்புறுதி ஒப்பந்தம்
[Contract of Guarantee]

3. Define a contract of guarantee and explain its essential features. (பொறுப்புறுதி ஒப்பந்தத்தை வரையறு. அதன் இன்றியமையாத கூறுகளை விளக்குக.)

பொறுப்புறுதி ஒப்பந்தம் (Contract of Guarantee) :

மூன்றாம் நபர் ஒருவர், அவர் அளித்த உறுதியுரையை நிறைவேற்றவோ அல்லது அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்பைத் தீர்க்கவோ தவறினால், அவற்றை

முறையே தாம் நிறைவேற்றுவதாக அல்லது முடிப்பதாக மற்றொருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தமே, பொறுப்புறுதி ஒப்பந்தமாகும்'[1] என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **126–வது பிரிவு** பொறுப்புறுதி ஒப்பந்தத்தை வரையறுக்கிறது.

எடுத்துக்காட்டு:

A என்பவருக்கு ரூ. 5000/– கடன் கொடுக்கும்படி B என்பவர் C என்பவரைக் கேட்டுக் கொள்கிறார். மேற்படி A கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கத் தவறினால், அத்தொகையை தாம் கொடுப்பதாக B என்பவர் C –க்கு உத்திரவாதம் (பொறுப்புறுதி) அளிக்கிறார். இது ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தமாகும்.

பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் :

பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் மூன்று தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். அதாவது உத்திரவாதம் (பொறுப்புறுதி) தருபவர், **'பிணையாளர்' (Surety or Guarantor)** என அழைக்கப்படுகிறார். யார் செய்யும் தவறுகைக்காக உத்திரவாதம் (பொறுப்புறுதி) தரப்படுகிறதோ, அவர் **'தலைக் கடனாளி' (Principal Debtor)** எனப்படுகிறார். உத்திரவாதம் (பொறுப்புறுதி) பெறுபவர், **'கடனீந்தவர்' (Creditor)** எனப்படுகிறார்.

முத்தரப்பு உடன்பாடு :

பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒவ்வொன்றிலும் மூன்று உடன்பாடுகள் இடம் பெறுகின்றன. முதலாவது, கடனீந்தவருக்கும் தலைக்கடனாளிக்கும் இடையே; இரண்டாவது, பிணையாளருக்கும் தலைக்கடனாளிக்கும் இடையே; மூன்றாவது பிணையாளருக்கும் கடனீந்தவருக்கும் இடையே. இதில் முதலாவது, **'கடன் உடன் பாடு'**. இரண்டாவது, தலைக்கடனாளி தவறுகை புரிந்தால், தான் செலுத்துவதாக பிணையாளர் உறுதியுரைக்கும் **'பொறுப்புறுதி உடன்பாடு'**. மூன்றாவது, பிணையாளர் கடனை செலுத்தியிருந்தால், தலைக் கடனாளி அவருக்கு இழப்பீடு அளிப்பதற்கான **'ஈட்டுறுதி உடன்பாடு'**. இது வெளிப்படையாக இல்லாவிட்டாலும் உட்கிடையாக எடுத்துக் கொள்ளப்படும்.

பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் இன்றியமையாத சிறப்பு கூறுகள் :

1. **தலையாய கடன் (Principal Debt) :** பொறுப்புறுதி ஒப்பந்தம் மூன்று தரப்பினர்களிடையே உருவாகிறது. இவ்வொப்பந்தத்தின் கருப்பொருள் ஒரு தலையாய கடனாகும். அக்கடன், செயல்படுத்தத்தக்க கடனாக இருக்க வேண்டும். காலாவதியான கடனாக இருத்தல் கூடாது.

1. A "contract of guarantee" is a contract to perform the promise, or discharge the liability, of a third person in case of his default - **Section 126 of the Indian Contract Act, 1872.**

2. செல்லத்தகு ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் (Essential elements of a valid contract) : செல்லத்தகு ஒப்பந்தம் ஒன்றின் அனைத்து அடிப்படைக் கூறுகளையும் ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தம் பெற்றிருக்க வேண்டும். இதில் மறுபயன் மற்றும் ஒப்பந்தத் தகுதி ஆகியவை குறித்த சிறப்புக் கூறுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவை அடுத்து வருமாறு.

3. மறுபயன் (Consideration) : தலைக் கடனாளி பெற்ற மறுபயனே, பிணையாளருக்கும் (Surety) போதுமானதாகும். அது பிணையாளருக்கும் ஏதாவது ஆதாயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்பதில்லை. தலைக் கடனாளியின் நலனுக்காக ஏதாவது செய்திருந்தாலோ அல்லது உறுதியுரை அளித்திருந்தாலோ, அதுவே போதுமானதாகும் **(பிரிவு 127).**

4. ஒப்பந்தம் செய்யும் தகுதி (Competency) : ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்யத் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டுமெனினும், ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் தலைக்கடனாளி அவ்வாறு தகுதியில்லாமலும் இருக்கலாம். அத்தருணத்தில் பிணையாளரே, தலைக் கடனாளியாக கருதப்படுவார். அவரே பணம் செலுத்தக் கடமைப்பட்டவராவார். உதாரணமாக, இளவர் (Minor) ஒருவர் தலைக் கடனாளியாக இருப்பின், அவர் தனிப்பட்ட முறையில் பணம் செலுத்த பொறுப்புடையவரல்ல. பிணையாளரே பொறுப்பு.

5. முழு இசைவு (Concurrence) : பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் முத்தரப்பினர்களின் முழு இசைவும் அவ்வொப்பந்தத்திற்கு தேவை.

6. பொறுப்புறுதி ஒப்பந்தம் முழு நம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தமல்ல (Not an *Uberimae fidei* contract) : கடனீந்தவர், பொறுப்புறுதி அளிப்பவருக்கு எல்லா உண்மைகளையும் வெளிப்படுத்த வேண்டுமெனும் அவசிய மில்லை. ஆனால் காப்பீட்டு ஒப்பந்தமாக இருந்தால் அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்த வேண்டும்.

7. எழுத்து மூலமாகவே ஒப்பந்தம் இருக்க வேண்டுமென்பதில்லை : பிரிவு 126–ன்படி பொறுப்புறுதி ஒப்பந்தமொன்று வாய்மொழி மூலமாக அல்லது எழுத்து மூலமாக இருக்கலாம். ஆனால் இங்கிலாந்தில் எழுத்து மூலமே இருந்தாக வேண்டும்.

4. What is meant by 'Continuing guarantee'? State the circumstances under which a continuing guarantee can be revoked. (தொடர் பொறுப்புறுதி என்றால் என்ன? அது இரத்து செய்யப்படக் கூடிய சூழ்நிலைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What is meant by continuing guarantee? (தொடர் பொறுப்புறுதி என்றால் என்ன?)

(அல்லது)

Continuing guarantee – Write short notes. (தொடர் பொறுப்புறுதி – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

ஒரு நபர் கடன் பெறுவதோ, கடனில் பொருள்கள் பெறுவதோ அல்லது பணி (employment) பெறுவதோ ஒரு பொறுப்புறுதியின் செயல்பாடாகும். எனவே ஒரு பொறுப்புறுதி (1) கடனைத் திருப்பித் தரவோ (2) பொருள்களின் விலையைச் செலுத்தவோ (3) ஒரு பணியாளின் நன்னடத்தைக்கோ அளிக்கப் படலாம். பொதுவாக ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தம் பல வகைகளில் எழுகிறது. அவற்றில் ஒரு முக்கியமான ஒரு வகைதான் **தொடர் பொறுப்புறுதி (Continuing guarantee)** ஆகும். இதனைப் புரிந்து கொள்ள நாம் பொறுப்புறுதியின் அனைத்து வகைகளையும் இங்கு காணல் அவசியமாகும். அவை வருமாறு :

பொறுப்புறுதியின் வகைகள் :

1. முன்னிகழ்வு பொறுப்புறுதி (Retrospective Guarantee): நடைமுறையிலிருக்கும் ஒரு கடனுக்கு அளிக்கப்படும் பொறுப்புறுதி, 'முன்னிகழ்வு பொறுப்புறுதியாகும்.'

2. பின்னிகழ்வு பொறுப்புறுதி (Prospective Guarnatee) : பின்னர் ஏற்படவிருக்கும் கடனுக்கோ அல்லது பின்னர் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைக்கோ பொறுப்புறுதி அளிக்கப்பட்டால், அது 'பின்னிகழ்வு பொறுப்புறுதி யாகும்.' **எடுத்துக்காட்டாக,** ஒரு மெய்ப்பற்று பொறுப்புறுதியில் (Fidelity Guarantee), ஒரு பணியாளின் பிற்கால நன்னடத்தைக்கு பொறுப்புறுதி அளிக்கப்படுகிறது.

3. தனிப்பட்ட அல்லது குறிப்பிட்ட பொறுப்புறுதி (Simple or Specific Guarnatee): இது ஒரு குறிப்பிட்ட நடவடிக்கைக்கு மட்டுமே தரப்படும் பொறுப்புறுதியாகும். இவ்வகைப் பொறுப்புறுதி, பிணையாளரின் பொறுப்பை ஒரே ஒரு நடவடிக்கைக்கு மட்டுமே கட்டுப்படுத்துவதாக அமையும்.

4. தொடர் பொறுப்புறுதி (Continuing Guarantee) : தொடர்ந்த மற்றும் வரிசையான பல நடவடிக்கைகளுக்கு விரிவுபடுத்தப்படும் பொறுப்புறுதி, தொடர் பொறுப்புறுதியாகும் **(பிரிவு 129).** எனவே இவ்வகைப் பொறுப்புறுதி ஒரு தனி நடவடிக்கைக்கு மட்டுமே கட்டுப்படுத்துவதாகாது.

எடுத்துக்காட்டு :

A-க்கு சொந்தமான வீட்டின் வாடகையை வசூலிக்க B-யை நியமிக்கும் படியும், B அவ்வாடகையை ஒழுங்காக வசூலித்து செலுத்தும் பொருட்டு ரூ.10,000/–

வரை தாம் பொறுப்பேற்பதாக C என்பவர் மேற்படி A-க்கு ஓர் உறுதியுரை அளிக்கிறார். இது ஓர் தொடர் பொறுப்புறுதியாகும். B அவ்வேலையில் நீடிக்கும் வரை C அளித்த பொறுப்புறுதியும் தொடர்ந்து நீடிக்கும்.

தொடர் பொறுப்புறுதி மறுத்தழிப்பு (இரத்து செய்தல்) (Revocation of a Continuing Guarantee) :

(a) அறிவிப்பு மூலம் மறுத்தழித்தல் (Revocation by notice) : ஒரு தொடர் பொறுப்புறுதியை எச்சமயத்திலும் பிணையாளரானவர் பின்னர் எழும் விவகாரங்களுக்கு தான் பொறுப்பு அல்ல என கடனீந்தோருக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பி அதன் மூலம் மறுத்தழிக்கலாம் என இந்திய ஒப்பந்த சட்டத்தின் **130–வது பிரிவு** கூறுகிறது. அத்தகைய அறிவிப்பு எழுத்து மூலமாகத்தான் இருக்க வேண்டும் என ஒப்பந்தத் தரப்பினர் நிருணயிக்காதபட்சத்தில் வாய்மொழி மூலமாகவும் தெரியப்படுத்தலாம். அறிவிப்பின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் விவகாரங்களைத்தான் மறுத்தழிக்கலாம். ஏற்கனவே நடந்து முடிந்த அல்லது இறந்த கால விவகாரங்களை மறுத்தழிக்க முடியாது.

(b) பிணையாளரின் இறப்பினால் மறுத்தழிப்பு (Revocation by death): பிணையாளர் இறந்துவிட்டால் தொடர் பொறுப்புறுதியில் எதிர்கால விவகாரங் களுக்கு அவர் அளித்த பொறுப்புறுதி தானாகவே முற்றுப் பெற்று விடுகின்றதென ஒப்பந்தச் சட்டத்தின் **131–வது பிரிவு** கூறுகிறது. இவ்விதி அவ்வொப்பந்தத்தில் எதிரிடை ஒப்பந்தம் இல்லாத போதுதான் பொருந்தும். பிணையாளர் அல்லது அவரது வாரிசுகள் அறிவிப்பு மூலம் தங்களது பொறுப்பு நிலையை முடிவுக்கு கொண்டு வரலாம் என வெளிப்படையாக உடன்பாடு செய்து கொள்வது என்பது ஒப்பந்தத்தில் எதிரிடை ஒப்பந்தமாகும். இதில் பிணையாளரின் இறப்பு மட்டும் தொடர் பொறுப்புறுதியை மறுத்தழிப்பதற்கு போதுமானதாகாது.

(c) புது ஒப்பந்தம் அல்லது புத்தீடு மூலம் மறுத்தழிப்பு (by novation): ஏற்கனவே உள்ள தொடர் பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கு பதிலாக அவ்வொப்பந்த தரப்பினர் தங்களுக்குள்ளாகவோ அல்லது வேறு நபர்களுடனோ புதியதோர் பொறுப்புறுதி ஒப்பந்தம் செய்து கொண்டால், ஏற்கனவே உள்ள பொறுப்புறுதி ஒப்பந்தம் முற்றுப் பெற்று விடுகிறது.

(d) ஒப்பந்தத்திலுள்ள சரத்துக்களை மாற்றுவதன் மூலம் மறுத்தழித்தல் (Revocation by variance in the terms of contract) : பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் கடனீந்தோருக்கும் தலைக் கடனாளிக்கும் இடையே உள்ள ஒப்பந்த சரத்துக்கள் பிணையாளரின் சம்மதமின்றி மாற்றப்படும் பொழுது, அவர் அதன் பின்பு தன் பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படுவார் என ஒப்பந்தச் சட்டத்தின் **133–வது பிரிவு** கூறுகிறது. அவ்வாறே தொடர் பொறுப்புறுதி ஒப்பந்தத்திலும் பிணையாளரது சம்மதமின்றி ஒப்பந்த சரத்துக்களில் மாற்றங்கள் ஏதேனும் செய்யப் பட்டால் அவரது பொறுப்புநிலை முடிவுக்கு வந்து விடுகிறது.

(e) தலைக் கடனாளியை அவரது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிப்பதன் மூலம் (By release of principal debtor) : தலைக் கடனாளியை அவரது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிப்பதாக கடனீந்தவர் அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், பிணையாளரது தொடர் பொறுப்புறுதி நிலை முற்றுப் பெறுகிறது.

5. Define a contract of guarantee. Discuss the extent of a surety's liability. (பொறுப்புறுதி ஒப்பந்தத்தை வரையறை செய்க. பிணையாளர் ஒருவரின் பொறுப்பின் அளவை ஆராய்க.)

(அல்லது)

State the extent of the liability of a surety. (ஒரு பிணையாளரின் பொறுப்பு நிலை அளவினைக் கூறுக.)

(அல்லது)

Describe the exact nature and scope of a surety's liability. (ஒரு பொறுப்புறுதியாளர் பொறுப்பு நிலையின் சரியான இயல்பையும் நோக்கெல்லையையும் விவரி.)

பொறுப்புறுதி ஒப்பந்தம் - வரையறை :

(வினா எண். 3–ன் விடையில் காண்க.)

பிணையாளரின் பொறுப்பு நிலை (Liability of Surety):

1. உடனிணைந்து பரவும் தன்மை (Co-extensive) : பிரிவு 128–ன்படி பிணையாளரின் பொறுப்பு, ஒப்பந்தத்தில் வேறு விதமாக விதிக்கப்பட்டிருந்தாலொழிய, தலைக் கடனாளியுடன் இணைந்து பரவும் தன்மையுடையது. தலைக் கடனாளிக்கு உள்ள பொறுப்பே, பிணையாளருக்கும் உள்ளது. அவை அளவில் மற்றும் தன்மையில் ஒன்றாக இருக்கும். **(விரிவாக அடுத்த வினாவில் காண்க.)**

2. உடனடியானது (Immediate) : பிணையாளரின் பொறுப்பு உடனடியானது. தலைக் கடனாளிக்கு எதிராக கடனீந்தவர் என்னென்ன தீர்வழிகளை பெற வழியுள்ளதோ அவற்றையெல்லாம் பெறும் வரை, பிணையாளரின் பொறுப்பை தள்ளிப் போடத் தேவையில்லை. அதாவது, கடனீந்தவர், தலைக் கடனாளிக்கு எதிரான எல்லாத் தீர்வழிகளையும் முதலில் தீர்க்கும்படி, கடனீந்தவரைக் கோர பிணையாளருக்கு உரிமையில்லை. தலைக் கடனாளி கடன் செலுத்தத் தவறி விட்டார் எனும் அறிவிப்பை (Notice) பிணையாளருக்கு கொடுக்க வேண்டும் என்பது தேவையில்லை. எனவே இப்பொறுப்பிலிருந்து தப்பிக்க, தலைக் கடனாளி பணம் செலுத்தி தன் உறுதியுரையை நிறைவேற்றுவதை அப்பிணையாளரே, ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. பொறுப்பிற்கு வரம்பிடல் (Limiting the liability): பிணையாளருக்கு

(e) தலைக் கடனாளியை அவரது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிப்பதன் மூலம் (By release of principal debtor) : தலைக் கடனாளியை அவரது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிப்பதாக கடனீந்தவர் அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், பிணையாளரது தொடர் பொறுப்புறுதி நிலை முற்றுப் பெறுகிறது.

5. Define a contract of guarantee. Discuss the extent of a surety's liability. (பொறுப்புறுதி ஒப்பந்தத்தை வரையறை செய்க. பிணையாளர் ஒருவரின் பொறுப்பின் அளவை ஆராய்க.)

(அல்லது)

State the extent of the liability of a surety. (ஒரு பிணையாளரின் பொறுப்பு நிலை அளவினைக் கூறுக.)

(அல்லது)

Describe the exact nature and scope of a surety's liability. (ஒரு பொறுப்புறுதியாளர் பொறுப்பு நிலையின் சரியான இயல்பையும் நோக்கெல்லையையும் விவரி.)

பொறுப்புறுதி ஒப்பந்தம் - வரையறை :

(வினா எண். 3–ன் விடையில் காண்க.)

பிணையாளரின் பொறுப்பு நிலை (Liability of Surety):

1. உடனிணைந்து பரவும் தன்மை (Co-extensive) : பிரிவு 128–ன்படி பிணையாளரின் பொறுப்பு, ஒப்பந்தத்தில் வேறு விதமாக விதிக்கப்பட்டிருந்தாலொழிய, தலைக் கடனாளியுடன் இணைந்து பரவும் தன்மையுடையது. தலைக் கடனாளிக்கு உள்ள பொறுப்பே, பிணையாளருக்கும் உள்ளது. அவை அளவில் மற்றும் தன்மையில் ஒன்றாக இருக்கும். **(விரிவாக அடுத்த வினாவில் காண்க.)**

2. உடனடியானது (Immediate) : பிணையாளரின் பொறுப்பு உடனடியானது. தலைக் கடனாளிக்கு எதிராக கடனீந்தவர் என்னென்ன தீர்வழிகளை பெற வழியுள்ளதோ அவற்றையெல்லாம் பெறும் வரை, பிணையாளரின் பொறுப்பை தள்ளிப் போடத் தேவையில்லை. அதாவது, கடனீந்தவர், தலைக் கடனாளிக்கு எதிரான எல்லாத் தீர்வழிகளையும் முதலில் தீர்க்கும்படி, கடனீந்தவரைக் கோர பிணையாளருக்கு உரிமையில்லை. தலைக் கடனாளி கடன் செலுத்தத் தவறி விட்டார் எனும் அறிவிப்பை (Notice) பிணையாளருக்கு கொடுக்க வேண்டும் என்பது தேவையில்லை. எனவே இப்பொறுப்பிலிருந்து தப்பிக்க, தலைக் கடனாளி பணம் செலுத்தி தன் உறுதியுரையை நிறைவேற்றுவதை அப்பிணையாளரே, ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. பொறுப்பிற்கு வரம்பிடல் (Limiting the liability): பிணையாளருக்கு

தனது பொறுப்பை வரம்பிடும் உரிமையுண்டு. இதை ஒப்பந்தம் உருவாகும் போதே அவர் செய்து கொள்ளலாம்.

4. தொடர் பொறுப்புறுதியில் பிணையாளரின் பொறுப்பு (Liability in continuing guarantee) : தொடர் பொறுப்புறுதி பற்றி பிரிவு **129** கூறுகிறது. பொறுப்புறுதியானது பல்வேறு தொடர் நடவடிக்கைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டால், அது தொடர் பொறுப்புறுதி எனப்படுகிறது. தொடர் பொறுப்புறுதியில் பிணையாளரின் பொறுப்பு, 'பொறுப்புறுதி மறுத்தழிப்பு' (revocation) செய்யும் வரை எல்லா நடவடிக்கைகளுக்கும் உரியதாகும்.

கடனீந்தவருக்கும் தலைக் கடனாளிக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம் இல்லா நிலை அல்லது தவிர்தகு ஒப்பந்தமாயின் பிணையாளரின் பொறுப்பு (Liability of surety in the contract between creditor and principal debtor is void or voidable) :

பிணையாளருக்கும் கடனீந்தவருக்கும் இடையேயுள்ள ஒப்பந்தம் தனித்தியங்கும் ஒப்பந்தமாகும் (independent). சார்புடைய (collateral) ஒப்பந்தமாகாது. அதாவது தலைக் கடனாளி பொறுப்பாளியானால்தான் பிணையாளர் பொறுப்பாளி ஆவார் என்பதில்லை. கடனீந்தவர், தலைக்கடனாளி மீதுதான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பிணையாளர் மீதே நேரடியாக வழக்குத் தொடரலாம்.

மேற்கண்ட சூழ்நிலையில் பிணையாளரின் நிலை :

1. ஒப்பந்தம் இல்லா நிலையதாக (void) இருந்தால், பிணையாளர் விடுவிப்பு (discharge) அடைவதில்லை. உதாரணமாக, தலைக்கடனாளி இளவராக (minor) இருக்கும் ஒப்பந்தத்தில் பிணையாளர் பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெறுவதில்லை. அவர் தலைக்கடனாளி போன்றே பொறுப்பைப் பெறுவார். கடனீந்தவர் பொறுப்புறுதியின் துணை கொண்டு பிணையாளர் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

2. ஒப்பந்தமானது தலைக் கடனாளியின் விருப்பத்தின் பேரில் தவிர்க்கத்தக்கதாக (voidable) இருந்து, அவர் அவ்வாறு தவிர்த்தார் என்பதற் காக பிணையாளர் விடுவிப்பு அடைவதில்லை. அத்தருணத்தில் அவர் தலைக் கடனாளி போன்றே பொறுப்பை பெறுவார். எனினும், பிரிவு **145–ன்படி** பிணையாளர், கடனீந்தவருக்கு பணத்தைச் செலுத்தியபின் தலைக் கடனாளியிடம் அப்பணத்திற் காக உரிமைக் கோரல் செய்யலாம்.

3. கால வரையறைக்குள் கடனீந்தவர் தலைக் கடனாளி மீது வழக்கு தொடரவில்லை என்றாலும், பிணையாளர் விடுவிக்கப்படுவதில்லை. (ஆனால் அவர் பின்னொரு நாளில் அக்காலவரையறைக்குள் பொறுப்புறுதியை புதுப்பித்திருக்க

வேண்டும் அல்லது தனது பொறுப்பை வட்டி அல்லது அசலில் ஒரு பகுதி செலுத்தி செயல்பாட்டில் வைத்திருக்க வேண்டும்).

4. சட்டச் செயல்பட்டால் தலைக் கடனாளி விடுவிக்கப்பட்டால், எடுத்துக் காட்டாக, அவர் நொடிப்பு நிலை (insolvent) அடைந்துவிட்டாலும், பிணையாளர் விடுவிப்பு பெறுவதில்லை.

6. Explain "The liability of the surety is always co-extensive with that of the Principal Debtor." ("பிணையாளரின் பொறுப்பு நிலை தலைக் கடனாளியின் பொறுப்பு நிலையுடன் உடன் இணைந்து செல்கின்றது" – விளக்குக.)

(அல்லது)

How far is it true that a surety's liability is co-extensive with that of the principal debtor? Can a surety of a minor borrower be held liable ? (ஒரு பிணையாளரின் பொறுப்பு நிலை முக்கிய கடனாளியின் பொறுப்பு நிலையுடன் உடனிணைந்து பரவியுள்ளது என்பது எம்மட்டில் மெய்யானது? ஒரு இளவர் கடனாளியின் பிணையாளரை பொறுப்பு நிலை உள்ளவராக கருத இயலுமா?)

உடனிணைந்து பரவும் தன்மை (Co-extensive) :

இந்திய ஒப்பந்த சட்டத்தின் **128**–வது பிரிவின்படி, பிணையாளரின் பொறுப்பு, ஒப்பந்தத்தில் வேறுவிதமாக விதிக்கப்பட்டிருந்தாலொழிய, தலைக் கடனாளியுடன் உடனிணைந்து பரவும் தன்மையுடையதாகும். அதாவது, தலைக் கடனாளி எந்தத் தொகைக்குப் பொறுப்பாகிறாரோ அந்தத் தொகைக்கு பிணையாளரும் பொறுப்பாவார். அவருடைய பொறுப்பு தலைக் கடனாளியின் பொறுப்பை விட அதிகமாக இருக்கவே முடியாது. மேலும் தலைக் கடனாளியின் பொறுப்பு, தீர்ப்பாணை மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ குறைக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் பிணையாளரின் பொறுப்பும் அதற்கு சரியாக குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும். இக்கருத்து பின்வரும் வழக்கில் கூறப்பட்டது.

Narayan Singh v. Chattar Singh[1]

இவ்வழக்கில் தலைக் கடனாளி ஒரு விவசாயி. அவரது கடன் தொகை, கடன் நிவாரணச் சட்டம் ஒன்றினால் குறைக்கப்பட்டது. இங்கு அவ்வாறு குறைக் கப்பட்ட தொகைக்கே பிணையாளர் பொறுப்பாவார் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில், அவரது பொறுப்பு நிலை தலைக் கடனாளியின் பொறுப்பு நிலையுடன் இணைந்து பரவுகிறது (உடன் இணைந்து செல்கிறது) (Co-extensive).

1. A.I.R. 1973 Raj.347

பொறுப்புறுதி ஒப்பந்தம் சட்ட விரோதமானால் (illegal), அதனை தலைக் கடனாளிக்கு எதிராக வலியுறுத்த முடியாது.

மேலும் கடனீந்தவருக்கு, தலைக் கடனாளி கடனில் ஒரு பகுதி தொகையை கொடுத்துவிட்டு, மீதியை கொடுக்கத் தவறிவிட்டால், அந்த மீதித்தொகைக்கு மட்டுமே பிணையாளர் பொறுப்பாளி ஆவார். அவரிடமிருந்து அதற்கும் மேலான தொகையை வசூல் செய்ய இயலாது. எனவே பிணையாளரின் பொறுப்பு தலைக் கடனாளியின் பொறுப்புடன் உடனிணைந்து பரவுவதாகும் என்பது சரியே.

ஒரு இளவர் கடனாளியின் பிணையாளரை பொறுப்பு நிலை உள்ளவராக கருத இயலுமா ?

ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்தின் தரப்பினர்கள், ஒப்பந்தம் செய்யத் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்றாலும், ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தத்தில், தலைக் கடனாளி அவ்வாறு தகுதியில்லாத ஒரு இளவராக (minor) இருக்கலாம். அத்தருணத்தில் பிணையாளரே தலைக்கடனாளியாக கருதப்படுவார். அவரே பணம் செலுத்தக் கடமைப்பட்டவராவார். தலைக் கடனாளி பணம் செலுத்தத் தேவையில்லை. எனவே, ஒரு இளவர் கடனாளியின் பிணையாளரை பொறுப்பு நிலை உள்ளவராகவே கருத வேண்டும். இங்கு உடனிணைந்து பரவும் தன்மையை பிணையாளர் தனக்கு சாதகமாக எடுத்துக் கொள்ள முடியாது. இது பின்வரும் வழக்கில் வலியுறுத்தப்பட்டது.

Kashiba v. Shripat[1]

இவ்வழக்கில், ஒப்பந்தத் தகுதியின்மை (இளவர் போன்ற தகுதியின்மை) காரணத்திற்காக தலைக் கடனாளி செய்து கொண்ட ஒப்பந்தம் இல்லாநிலை (void) அடைந்தாலும், பிணையாளர் அவரது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட மாட்டார். அத்தகு ஒப்பந்தங்களில் பிணையாளரின் உறுதியுரையே முதன்மையான ஒப்பந்தமாகி, அவரே தலைக் கடனாளியாகி முழுப்பொறுப்பையும் சுமக்க வேண்டும் என்றும், அவ்வொப்பந்தம் சட்டப்படி வலியுறுத்தப்படக் கூடியதே என்றும் கூறப்பட்டது.

7. 'An indemnifier's liability is primary, a surety's secondary.' Discuss. ("ஒரு ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு நிலை முதன்மையானது. ஒரு பிணையாளரின் நிலை இரண்டாவது." கூர்ந்து ஆராய்க.)

ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு நிலை முதன்மையானது:

ஈட்டுறுதி ஒப்பந்தமென்பது (indemnity) இரு நபர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது, அவர்களில் ஒருவர், தம்மாலோ அல்லது பிற நபர்களாலோ மேற்படி ஒப்பந்தத்தின் மறு தரப்பாளருக்கு இழப்புகள் ஏதேனும் ஏற்பட்டால் அவற்றை ஈடு

1. (1894) 19 Bom. 697.

செய்வதாக உறுதியுரை அளித்தலாகும். இங்கு ஈட்டுறுதி அளிப்பவரின் (indemnifier) பொறுப்பு முதன்மையானதாகும் (primary). ஏனெனில் தம்மாலோ அல்லது மற்றவர்களாலோ ஈட்டுறுதி பெற்றவருக்கு, இழப்புகள் ஏற்படும்பொழுது அதை ஈடுகட்ட அவர்தான் உடனடியாக முன் வர வேண்டும்.

பிணையாளரின் பொறுப்பு நிலை இரண்டாம் நிலையானது:

ஆனால் அதே சமயத்தில் ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தமென்பது (Guarantee), 'மூன்றாம் நபர் ஒருவர், அவர் அளித்த உறுதியுரையை நிறைவேற்றவோ அல்லது அவர் ஏற்றுக் கொண்ட பொறுப்பைத் தீர்க்கவோ தவறினால், அவற்றை முறையே தாம் நிறைவேற்றுவதாக அல்லது முடிப்பதாக மற்றொருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தமாகும்.' இங்கு மேற்படி மூன்றாம் நபர், தலைக் கடனாளி (Principal Debtor) ஆவார். பொறுப்புறுதி அளிப்பவர், பிணையாளர் (Surety) ஆவார். மேற்படி தலைக் கடனாளி, தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பை தீர்க்கத் தவறும்பட்சத்தில்தான், அதனை பிணையாளர் தீர்க்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே பிணையாளரின் பொறுப்பு வந்து விடுவதில்லை. எனவே, பிணையாளர் ஒருவரின் பொறுப்பு நிலை, இரண்டாவதேயாகும் (Secondary). இதனை பின்வரும் எடுத்துக்காட்டு சுலபமாக விளக்கும்.

எடுத்துக்காட்டு:

A-யும் B-யும் கடை ஒன்றில் நுழைந்தனர். வியாபாரியிடம் மேற்படி A என்பவர், "Bக்குத் தேவைப்படும் பொருள்களைத் தருக! அதற்குண்டான பணம் செலுத்தப்படுவதை பொறுத்தவரை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறுவாரானால், அது ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இங்கு A என்பவர் ஈட்டுறுதி அளிப்பவராக (Indemnifier) உள்ளார். பொருளுக்குண்டான பணம் செலுத்தும் பொறுப்பு மேற்படி A-யிடமே நேரடியாக உள்ளதால், அவரது பொறுப்புநிலை முதன்மையானதாகும் (Primary liability).

ஆனால் இதற்கு மாறாக A-யும் B-யும் கடையில் நுழைந்த பிறகு வியாபாரியிடம் மேற்படி A என்பவர், "B-க்குத் தேவைப்படும் பொருள்களைத் தருக! அவர் பணம் செலுத்தாவிடில், நான் செலுத்துகிறேன்" என்று கூறுவாரானால், அது ஒரு பொறுப்புறுதி ஒப்பந்தமாகும். இங்கு B என்பவர் தலைக் கடனாளியாகவும் A என்பவர் பிணையாளராகவும் (Surety) உள்ளார். தலைக் கடனாளி பணம் செலுத்தாதபட்சத்தில்தான், பிணையாளர் பணம் செலுத்துவதாக உறுதியுரை அளிக்கிறார். ஆகவே பிணையாளரின் பொறுப்பு நிலை இரண்டாவதே (Secondary liability) ஆகும்.

8. Mention differences between a contract of indemnity and a contract of guarantee. (ஈட்டுறுதி ஒப்பந்தத்துக்கும் பொறுப்புறுதி ஒப்பந்தத்துக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.)

ஈட்டுறுதி ஒப்பந்தம் [Contract of Indemnity]	பொறுப்புறுதி ஒப்பந்தம் [Contract of Guarantee]
1. **தரப்பினர்கள்:** இரு தரப்பினர்கள் மட்டுமே உள்ளனர். ஈட்டுறுதி அளிப்பவர் (Indemnifier); ஈட்டுறுதி பெறுபவர் (Indemnified).	மூன்று தரப்பினர்கள் உள்ளனர். கடனீந்தவர், தலைக் கடனாளி, பிணையாளர் (Creditor, Principal Debtor, Surety).
2. **பொறுப்பு நிலை :** ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு நிலை முதன்மையானதாகவும் (Primary), தனித் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது.	பிணையாளரின் பொறுப்பு நிலை இரண்டாம்தரப்பட்டதாக (Secondary) அல்லது துணையானதாக (Collateral) உள்ளது. தலைக் கடனாளி செலுத்தாவிட்டால்தான் பிணையாளரின் பொறுப்பு ஏற்படுகிறது.
3. **ஒப்பந்தங்களின் எண்ணிக்கை:** இரு தரப்பினர்களிடம் ஏற்படும் ஒரேயொரு ஒப்பந்தம்.	இதில் மூன்று ஒப்பந்தங்கள் அடங்கும். தலைக் கடனாளி – கடனீந்தவர்; பிணையாளர் – கடனீந்தவர்; பிணையாளர் – தலைக் கடனாளி, இவர்களுக்கிடையிலான மூன்று ஒப்பந்தங்கள்.
4. **கடனாளியின் வேண்டுகோள்:** கடனாளியின் வேண்டுகோள்படி ஈட்டுறுதி அளிப்பவர் செயல்படத் தேவையில்லை.	தலைக் கடனாளியின் வேண்டுகோளின் பேரிலேயே பிணையாளர் செயல்பட வேண்டியது அவசியம்.
5. **பொறுப்பு :** ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு, ஒரு நிகழ்வுசார் பொறுப்பாகும். ஏதாவது நிகழ்வு ஏற்பட்டால் தான் அவர் பொறுப்பாவார்.	பிணையாளரின் பொறுப்பு, நிகழ்ந்து விட்ட கடமை அல்லது கடமை மேல் ஏற்படும் பொறுப்பாகும். அதன் நிறைவேற்றத்திற்கே பிணையாளர் பொறுப்புறுதி தருகிறார்.
6. **வழக்காடு உரிமை :** ஈட்டுறுதி அளித்தவர், தனக்கேற்பட்ட இழப்புக்கு மூன்றாம் நபர் மேல் வழக்காற்ற முடியாது. ஏனெனில் இதற்கு சட்டத்தால் ஒப்புக் கொள்ளப் பட்ட ஒப்பந்த உறவு இல்லை.	தலைக் கடனாளி செலுத்த வேண்டிய கடன் தொகையை பிணையாளர் செலுத்திவிட்டால், அவர் கடனாளி மீது தன் சொந்த உரிமையில் வழக்குரைக்கலாம்.

ஈட்டுறுதி ஒப்பந்தம் [Contract of Indemnity]	பொறுப்புறுதி ஒப்பந்தம் [Contract of Guarantee]
7. நோக்கம் : நட்டத்தை ஈடு செய்வதே இதன் நோக்கமாகும். ஈட்டுறுதி பெற்றவருக்கு காப்பளிக்கிறது.	தலைக் கடனாளிக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு கடனீந்தவருக்கு காப்பு (Security) அளிக்கிறது.
8. நலன் (அக்கறை) (Interest): ஈட்டுறுதி அளிப்பவருக்கு ஒப்பந் தத்தில் நலன் எதுவும் இருக்கலாம். (எ.கா.) பிணையத்துடன் கூடிய முகவர் (Del cradre Agent)- பொருள் விற்பனையால் ஏற்பட்ட கடனுக்கு ஈட்டுறுதி வழங்கி அந்தக் கடனை பெறும் போது அதற்கு தரகுத் தொகை (commission) பெறுகிறார்.	பிணையாளருக்கு எவ்விதமான நலனும் (தனிப்பட்ட பங்கு) ஒப்பந்தத்தில் இருக்கவே கூடாது.

9. 'Surety is a favoured debtor' - Discuss. ('பிணையாளர் ஒரு அனுகூலம் பெற்ற கடனாளர்'–விவாதி.)

(அல்லது)

'A surety is undoubtedly and not unjustly an object of some favour both at law and at equity'- Comment. ('ஒரு பிணையாளர் சந்தேகமில்லாத மற்றும் நியாயத்திற்குப் புறம்பற்ற சட்டத்திற்கும் நேர்மை நெறிக்கும் சில சலுகைகள் உள்ள நோக்கமுடையவராவார்' – விளக்குக.)

(அல்லது)

What are the implications of calling a surety a favoured debtor? (ஒரு பிணையாளரை தனிச் சலுகை பெற்ற கடனாளி என்பதன் உட்கிடை கருத்துக்கள் யாவை ?)

முன்னுரை :

பிணையாளர், எப்போதும் ஒரு தனிச் சலுகை (favoured or privileged) பெற்ற கடனாளியாவே கருதப்படுகிறார். தலைக் கடனாளி பணத்தைச் செலுத்தத் தவறினால்தான் பிணையாளர் பொறுப்பேற்கிறார். ஆகவே அவரது பொறுப்பு இரண்டாந்தரமானதாகும் (Secondary). அவர் சட்டப்படியும், நீதி நேர்மைக்

கோட்பாட்டின் கீழும் சலுகை பெற்றவராக கருதப்படுகிறார். இக்கருத்தை பின்வரும் ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதி சட்ட விதிகளில் காணலாம்.

'பிணையாளர் ஒரு தனிச் சலுகை பெற்ற கடனாளி'- எவ்வாறு ?

1. கொடுபடாமல் இருக்கும் மீதித் தொகைக்கே பிணையாளர் பொறுப்பாகிறார். தலைக் கடனாளி ஏதாவது செலுத்தியிருந்தால், மீதித் தொகைக்கு மட்டுமே அவர் பொறுப்பாகிறார்.

2. கடனீந்தவர் தலைக் கடனாளி மீது தொடுக்கும் வீணான, அற்பத் தனமான வழக்குகளுக்கெல்லாம் பிணையாளர் பொறுப்பாகமாட்டார். (அவருக்கு தகுந்த அறிவிப்பு செய்திருந்தாலொழிய).

3. தலைக் கடனாளி, கடனீந்தவரிடம் செய்த ஒத்தேற்பு மற்றும் ஏற்பிற்கு (Admission and acceptance), பிணையாளர் பொறுப்பாக மாட்டார்; அவர் மீது பெறப்பட்ட தீர்ப்புக்கும் பொறுப்பாக மாட்டார். தலைக் கடனாளிக்கும் கடனீந்த வருக்கும் இடையிலான ஒப்பந்தமும், கடனீந்தவருக்கும் பிணையாளருக்கும் இடையிலான ஒப்பந்தமும் தனி ஒன்றான (Exclusive), தனித்தியங்குகின்ற (Independent) தன்மை பெற்றவை என்பதே இதற்கு காரணமாகும். அதாவது தலைக் கடனாளியும் பிணையாளரும் ஒரே நபரல்லர்.

4. கடனீந்தவர், பொருண்மை ஒன்றை திரித்துக் காட்டியோ அல்லது சொல்லாமலிருந்தோ பொறுப்புறுதியை பெற்றிருந்தால், அதற்கு பிணையாளர் பொறுப்பாகமாட்டார்.

5. கடனீந்தவருக்கும் தலைக் கடனாளிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் சரத்துக்கள் எதுவும் பிணையாளரின் அனுமதி இல்லாமல் மாற்றியமைக்கப்பட்டால், அதற்கு பிணையாளர் பொறுப்பாகமாட்டார்.

6. கடனீந்தவர், தன்னுடைய உறுதியுரையை நிறைவேற்றும் வரை பிணையாளர் பொறுப்பாகமாட்டார். அதாவது கடனீந்தவர் நிறைவேற்ற வேண்டிய முன் நிபந்தனை ஏதேனும் இருப்பின், அதை அவர் நிறைவேற்றிய பின்தான் பிணையாளரை பொறுப்பாக்க முடியும்.

7. இறுதியாக, பிணையாளரின் பொறுப்பு தலைக் கடனாளியின் பொறுப்புடன் இணைந்து பரவும் (Co-extensive) தன்மையது. தலைக் கடனாளி எந்தத் தொகைக்குப் பொறுப்பாகிறாரோ, அதற்கே பிணையாளரும் பொறுப்பாவார். அவருடைய பொறுப்பு தலைக்கடனாளியின் பொறுப்பை விட அதிகமாக இருக்கவே முடியாது. மேலும் தலைக் கடனாளியின் பொறுப்பு தீர்ப்பாணையின் மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ குறைக்கப் பட்டால் அல்லது நீக்கப்பட்டால் பிணையாளரின் பொறுப்பும் அவ்வாறே குறைக்கப் படும் அல்லது நீக்கப்படும்.

முடிவுரை :

மேற்கண்டவற்றை பார்க்கையில், பிணையாளின் நிலை பாதுகாப்பாகவே உள்ளது. அவர் சட்டத்தின்படியும், நீதி நேர்மை கோட்பாட்டின்படியும் தனிச் சலுகைக்கு உரிமையுடையவராகவே கருதப்படுகிறார். எனவே, "ஒரு பிணையாளர் சந்தேகமில்லாத மற்றும் நியாயத்திற்கு புறம்பற்ற சட்டத்திற்கும் நேர்மை நெறிக்கும் சில சலுகைகள் உள்ள நோக்கமுடையவராவார்" என்று நீதிப்பெருமகனார் செல்பார்ன் (Lord Selborne) கூறுவது மிகச் சரியே.

10. Discuss the rights of surety against

(a) the creditor
(b) the principal debtor and
(c) the co-sureties

(அ) கடனாளர்
(ஆ) தலை கடனாளி மற்றும்
(இ) உடன் பிணையாளர் –

ஆகியவர்கள் மீது பிணையாளரின் உரிமைகள் குறித்து விவாதிக்கவும்.

(அல்லது)

Discuss the rights of a surety against the creditor and principal debtor. (கடனீந்தவருக்கும் தலைக் கடனாளிக்கும் எதிராக பிணையாளருக்கு உள்ள உரிமைகளை விவாதிக்க.)

(அல்லது)

What are the rights of a surety against the creditor? (கடன் தருநருக்கு எதிராக பிணையாளரின் உரிமைகள் யாவை?)

(அல்லது)

Rights of a surety against co-sureties - Write short notes. (உடன் பிணையாளருக்கு எதிராக பிணையாளருடைய உரிமைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

பிணையாளின் உரிமைகள் (Rights of Surety) :

1. கடனீந்தவருக்கு எதிரான உரிமைகள் (Rights against the Creditor):

(a) பொறுப்புறுதி அளிக்கப்பட்ட கடன் தீர்வதற்கு முன் (Before payment of the guaranteed debt) : பொறுப்புறுதி அளிக்கப்பட்ட கடனைச் செலுத்தக் கெடு வந்த பின், தான் செலுத்தக் கோரப்படுவதற்கு முன் தலைக்

கடனாளியின் மேல் வழக்குரைத்து கடனை வசூல் செய்ய பிணையாளர் கோரலாம். அவ்வாறு செய்தால் ஏற்படும் செலவுகளை பிணையாளர் ஈடு செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யும்படி பிணையாளரைக் கட்டாயப்படுத்த முடியாது என **Rouse v. Bradford Banking Co.**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

(b) மெய்ப்பற்றுப் பொறுப்புறுதியில் உரிமை (Right in Fidelity Guarantee) : மெய்பற்றுப் பொறுப்புறுதியில் (தலைக் கடனாளியின் நன்னடத்தை, கண்ணியம் பற்றியது) பிணையாளர், தலைக் கடனாளியை பணியிலிருந்து நீக்கும் படி கடனீந்தவரை வற்புறுத்தலாம். இதன் மூலம் இழப்படைவதிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

(c) எதிரீடு செய்யும் உரிமை (Right to set off) : பிணையாளர் மீது வழக்குரைக்கப்பட்டால் அவர் எதிரீடு ஒதுக்கல் (Appropriation), சரிக்கட்டுதல் (Adjustment) முதலியவற்றை உரிமைக் கோரல் செய்யலாம் என **Bechevaise v. Lewis**[2] எனும் வழக்கில் கூறப்பட்டது.

(d) கடனீந்தவரின் பிணையத்தின் மீதான பலனை அடையும் உரிமை (Right to benefit of creditor's securities) (பிரிவு 141) : கடனீந்தவருக்கு பணத்தை செலுத்திய பின் அவர், தலைக் கடனாளிக்கு எதிராகக் கொண்டுள்ள பிணையங்கள் அனைத்திலுமுள்ள பலனைப் பெற பிணையாளர் உரிமை பெறுகிறார். இப்பிணையம் பற்றிய தகவல் அவருக்குத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் இவ்வுரிமை அவருக்கு உண்டு.

(e) பற்றுரிமை மாற்றீடு உரிமை (Right of subrogation): பொறுப்புறுதிக் கடன் கெடு ஏற்பட்டு பிணையாளரால் செலுத்தப்பட்ட பின், கடனீந்தவர் தலைக் கடனாளிக்கு எதிராக கொண்டிருந்த உரிமைகள் யாவும் பிணையாளரை வந்தடையும் **(பிரிவு 140).** இங்கு இயற்கை நீதி மற்றும் நியாயத்தின்படி பிணையாளர் பற்றுரிமை மாற்றீடு உரிமை பெறுகிறார், என **Cryathron v. Swinburn**[3] எனும் வழக்கில் கூறப்பட்டது.

2. தலைக் கடனாளிக்கு எதிரான உரிமைகள் (Rights against the Principal Debtor):

(a) பற்றுரிமை மாற்றீட்டு உரிமை (Right of Subrogation) (பிரிவு 140) : பிணையாளர் தன் பொறுப்பு முழுவதையும் செலுத்தியபின், தலைக் கடனாளிக்கு எதிராக கடனீந்தவருக்குரிய எல்லா உரிமைகளையும் பெறுகிறார். கடனீந்தவர் தலைக் கடனாளி மேல் வழக்குரைக்க உரிமை பெற்றிருக்கிறார். அதே போன்ற வழக்குரைக்கும் உரிமையை பிணையாளரும் பெறுகிறார். இந்தப்

1. (1894) 2 Ch. 75
2. (1872) LR 7 CP 372
3. (1790) 33 E.R. 172

பற்றுரிமை மாற்றீடு உரிமை, ஒப்பந்தத்தின்பால் விளைவதல்ல. இயற்கை நீதியின் பாற்பட்டது. கடனீந்தவருக்கு சரக்கு விற்பனையில் உள்ள பற்றீட்டு உரிமை (Lien), செல்கையில் சரக்கு நிறுத்தம் (Stopage of goods in Transit) ஆகிய உரிமைகளும், நொடிந்த கடனாளியிடமிருந்து கடன் விகிதாச்சாரத்தின்படி தொகை பகிர்ந்து கொள்ளும் உரிமையும் பிணையாளருக்கு வந்து சேரும்.

(b) பொறுப்பு விடுவிப்பு (Right of Exoneration) : பணம் செலுத்து வதற்கு முன்னர், பிணையாளர் தலைக் கடனாளியை பணத்தைச் செலுத்தி தன்னை விடுவிக்கும்படி கட்டாயப்படுத்தலாம், அல்லது தலைக் கடனாளி மட்டுமே பணத்தைச் செலுத்த கடமைப்பட்டவர் என்று அறிவிப்பு செய்யத் தூண்டலாம். அவ்வாறானால் பிணையாளர் பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெற்றவராவார்.

(c) ஈட்டுறுதி உரிமை (Right to Indemnity) : பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒவ்வொன்றிலும், தலைக்கடனாளி, பிணையாளரை ஈட்டுறுதி செய்ய வேண்டும் என்ற உட்கிடையான உறுதியுரை உள்ளது. எனவே பிணையாளர் தான் செய்த எல்லா விதமான சரியான செலுத்தல்களையும் தலைக் கடனாளியிடமிருந்து பெற, உரிமையுடையவராகிறார் **(பிரிவு 145).** தலைக் கடனாளிக்காக பொறுப்புறுதியின் கீழ் பிணையாளர் ஏதாவது செலுத்தியிருந்தால் பிணையாள் கடனீந்தவராகிறார். அவர் அத்தொகையை தலைக் கடனாளியிடமிருந்து பெற முடியும் என **Badeley v. Consolidated Bank**[1] எனும் வழக்கில் கருத்துரைக்கப்பட்டது. இங்கு 'சரியான செலுத்தல்கள்' மட்டுமே பெற முடியும், தவறான செலுத்தல்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

3. இணைப்பிணையாளர்களுக்கு எதிரான உரிமைகள் (Rights against Co-sureties):

ஒரு கடனுக்கு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பொறுப்புறுதி அளித்தால், அவர்கள் இணைப் பிணையாளர்கள் ஆவர். ஒரு கடனுக்கு பல இணைப் பிணையாளர்கள் இருந்தும், ஒரு பிணையாளர் கடன் தொகை முழுவதையும் செலுத்தியிருந்தால், அவர் பின்வரும் உரிமைகளை இதர இணைப் பிணையாளர் களுக்கு எதிராகப் பெறுகிறார்.

(a) விகிதப் பங்களிப்பு உரிமை (Right of Contribution) (பிரிவு 146): ஒரே கடனுக்கோ, கடமைக்கோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைப் பிணையாளர்கள் இருந்து, அங்கு தலைக் கடனாளி தவறுகை புரிந்தால் இணைப் பிணையாளர்கள், எதிரிடையான ஒப்பந்தம் இல்லாதமட்டில் தவறுகைத் தொகையை சரிசமமான விகிதப் பங்களிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பு இணையாகவோ (joint), தனித்தனியாகவோ (several) இருந்தாலும், ஒரே அல்லது வெவ்வேறான ஒப்பந்தத்தின் கீழிருந்தாலும், ஒவ்வொருவரும் அறிவிக்கப்

1. (1886) 34 Ch. D. 556

பற்றுரிமை மாற்றீடு உரிமை, ஒப்பந்தத்தின்பால் விளைவதல்ல. இயற்கை நீதியின் பாற்பட்டது. கடனீந்தவருக்கு சரக்கு விற்பனையில் உள்ள பற்றீட்டு உரிமை (Lien), செல்கையில் சரக்கு நிறுத்தம் (Stopage of goods in Transit) ஆகிய உரிமைகளும், நொடிந்த கடனாளியிடமிருந்து கடன் விகிதாச்சாரத்தின்படி தொகை பகிர்ந்து கொள்ளும் உரிமையும் பிணையாளருக்கு வந்து சேரும்.

(b) பொறுப்பு விடுவிப்பு (Right of Exoneration) : பணம் செலுத்து வதற்கு முன்னர், பிணையாளர் தலைக் கடனாளியை பணத்தைச் செலுத்தி தன்னை விடுவிக்கும்படி கட்டாயப்படுத்தலாம், அல்லது தலைக் கடனாளி மட்டுமே பணத்தைச் செலுத்த கடமைப்பட்டவர் என்று அறிவிப்பு செய்யத் தூண்டலாம். அவ்வாறானால் பிணையாளர் பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெற்றவராவார்.

(c) ஈட்டுறுதி உரிமை (Right to Indemnity) : பொறுப்புறுதி ஒப்பந்தம் ஒவ்வொன்றிலும், தலைக்கடனாளி, பிணையாளரை ஈட்டுறுதி செய்ய வேண்டும் என்ற உட்கிடையான உறுதியுரை உள்ளது. எனவே பிணையாளர் தான் செய்த எல்லா விதமான சரியான செலுத்தல்களையும் தலைக் கடனாளியிடமிருந்து பெற, உரிமையுடையவராகிறார் **(பிரிவு 145).** தலைக் கடனாளிக்காக பொறுப்புறுதியின் கீழ் பிணையாளர் ஏதாவது செலுத்தியிருந்தால் பிணையாள் கடனீந்தவராகிறார். அவர் அத்தொகையை தலைக் கடனாளியிடமிருந்து பெற முடியும் என **Badeley v. Consolidated Bank**[1] எனும் வழக்கில் கருத்துரைக்கப்பட்டது. இங்கு 'சரியான செலுத்தல்கள்' மட்டுமே பெற முடியும், தவறான செலுத்தல்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

3. இணைப்பிணையாளர்களுக்கு எதிரான உரிமைகள் (Rights against Co-sureties):

ஒரு கடனுக்கு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பொறுப்புறுதி அளித்தால், அவர்கள் இணைப் பிணையாளர்கள் ஆவர். ஒரு கடனுக்கு பல இணைப் பிணையாளர்கள் இருந்தும், ஒரு பிணையாளர் கடன் தொகை முழுவதையும் செலுத்தியிருந்தால், அவர் பின்வரும் உரிமைகளை இதர இணைப் பிணையாளர் களுக்கு எதிராகப் பெறுகிறார்.

(a) விகிதப் பங்களிப்பு உரிமை (Right of Contribution) (பிரிவு 146): ஒரே கடனுக்கோ, கடமைக்கோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைப் பிணையாளர்கள் இருந்து, அங்கு தலைக் கடனாளி தவறுகை புரிந்தால் இணைப் பிணையாளர்கள், எதிரிடையான ஒப்பந்தம் இல்லாதமட்டில் தவறுகைத் தொகையை சரிசமமான விகிதப் பங்களிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். பொறுப்பு இணையாகவோ (joint), தனித்தனியாகவோ (several) இருந்தாலும், ஒரே அல்லது வெவ்வேறான ஒப்பந்தத்தின் கீழிருந்தாலும், ஒவ்வொருவரும் அறிவிக்கப்

1. (1886) 34 Ch. D. 556

பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் இக்கோட்பாடு பயன்படுத்தப்படும். இணைப் பிணையாளர்களுக்கு இடையேயான பொறுப்பும் பயனும் (Burden and benefit) ஒன்றுக்கொன்று சரி நிகரானவை. இதற்குரிய சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

எடுத்துக்காட்டுகள் :

(i) பி1, பி2, பி3 எனும் மூவர் 'க' என்பவருக்கு, அவர் 'த' என்பவருக்கு கொடுத்த கடன் ரூ.3000/–க்கு பொறுப்புறுதி அளிக்கின்றனர். 'த' தவறுகை புரிகிறார். பி1, பி2, பி3 மூவரும் தலைக்கு ரூ.1000/– வீதம் மேற்படி 'க' வுக்கு செலுத்த கடமைப்பட்டவராவார்கள்.

(ii) பி1, பி2, பி3 ஆகிய மூவரும் 'க' என்பவருக்கு, அவர் 'த'–வுக்கு கொடுத்த கடன் ரூ.1000/–க்கு, பிணையாளர்கள் அவர்களுக்குள் செய்து கொண்ட ஒப்பந்தப் படி பி1 – 1/4 பங்கும், பி2 – 1/4 பங்கும், பி3 – 1/2 பங்கும் பொறுப்பேற்றால், 'த' தவறுகை புரிந்தால் பி1 – ரூ.250/–ம், பி2 ரூ.250/–ம், பி3 ரூ. 500/–ம் செலுத்த வேண்டும்.

எனினும், ஒரு இணைப் பிணையாளர், மற்ற இணைப் பிணையாளர் களிடமிருந்து உரிமை கோருதல் பின்வரும் தருணங்களிலேயே நிகழ்வுறும் : (1) அவர் தனது பங்குக்கு அதிகமாக கடனீந்தவரிடம் செலுத்தி இருக்க வேண்டும். அல்லது (2) அவருக்கு எதிராக முழுத் தொகைக்கும் தீர்ப்பாணை வழங்கப் பட்டிருக்க வேண்டும். இது போன்றே மற்ற இணைப் பிணையாளர்கள், தலைக் கடனாளியிடமிருந்து பெற்ற பயனிலும், பிணையங்களிலும் பங்கு பெற ஒரு இணைப் பிணையாளருக்கு உரிமை உண்டு.

(b) வேறுபட்ட தொகைகளுக்குக் கடமைப்பட்ட இணைப் பிணையாளர்கள் (பிரிவு 147) : இணைப் பிணையாளர்கள் வேறுபட்ட தொகைகளுக்கு பொறுப்புடையவர்களாக இருக்க உடன்பாடு கொண்டிருந்தால், அவர்கள் தாங்கள் உடன்பட்ட தொகையின் வரம்புகள் எந்த அளவு அனுமதிக்கிறதோ, அந்த அளவிற்கு சமமான விகிதத்தில் பங்களிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் (அதாவது தொகை செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள்). (விகிதப் பங்களிப்புரிமையில் மேலே கண்ட விளக்கம் இதற்கும் பொருந்தும்).

எடுத்துக்காட்டு :

பி1, பி2, பி3 மூவரும் 'த' என்ற தலைக் கடனாளிக்கு பிணையாளர்களாக மூன்று வெவ்வேறான தொகைக்குப் பொறுப்பேற்க உடன்படுகிறார்கள். அதாவது, பி1 – ரூ. 10,000/–க்கும், பி2 – ரூ.20,000/–க்கும், பி3–ரூ.40,000/–க்கும் பொறுப் பேற்க உடன்பாடு கொண்டிருந்து, அங்கு 'த' தவறுகை புரிந்தால், அவர்கள் பின்வருமாறு பொறுப்படைகிறார்கள்.

(அ) 'த' ரூ.30,000/–க்கு தவறுகை புரிந்தால், மேற்கண்ட மூவரும் சரிசமமாக ரூ.10,000/–க்கு பொறுப்படைகிறார்கள்.

(ஆ) 'த' ரூ.40,000/–க்கு தவறுகை புரிந்தால், மேற்கண்ட மூவரும் முறையே சம விகிதப் பங்களிப்பாக பி1 – ரூ.10,000/–க்கும் (உயர்ந்த அளவு பொறுப்பு), பி2 – ரூ.15,000/–க்கும், பி3 – ரூ.15,000/–க்கும் பொறுப்படைகிறார்கள்.

(இ) 'த' ரூ.70,000/–க்கும் தவறுகை புரிந்தால் பி1–ரூ. 10,000/–க்கும், பி2–ரூ.20,000/–க்கும், பி3–ரூ.40,000/–க்கும் பொறுப்படைகிறார்கள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டு, **இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்** 147–வது பிரிவின் கீழானதாகும். ஆனால் **ஆங்கிலச் சட்ட விதிகளின்படி** மேற்கூறிய எல்லாத் தருணங்களிலும் பி1, பி2, பி3 மூவரும் 1: 2: 4 என்ற விகிதத்தில் பங்களிக்க கடமைப் படுவார்கள்.

(c) பிணையாளர்களாகவும், கடனாளியாகவும் செயல்படும் இணைப் பிணையாளர்கள் (பிரிவு 132) : ஒரு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இரண்டு நபர்கள், மூன்றாம் நபர் ஒருவருடன் முதலில் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்கின்றனர். பின்னிட்டு, அப்பொறுப்பை தீர்ப்பதில் ஒருவர் தவறுகை புரியும் பொழுது மட்டுமே, மற்றொருவர் அதற்குப் பொறுப்புடையவர் ஆவர் என்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் இரண்டாவதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இந்த இரண்டாவது ஒப்பந்தத்திற்கு மேற்கண்ட மூன்றாம் நபர் ஒரு தரப்பினராக இல்லாது போனாலும், முதல் ஒப்பந்தத்தின் கீழாக அவ்விரு நபர்களில் ஒவ்வொருவருக்கும் அம்மூன்றாம் நபருக்கு ஆற்ற வேண்டிய பொறுப்பானது, அவ்விரண்டாவது ஒப்பந்தத்தின் காரணமாக பாதிக்கப்படாது. இங்கு அந்த இரண்டாவது ஒப்பந்தம் குறித்து அம்மூன்றாம் நபர் அறிந்திருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல. எனவே இரண்டு பிணையாளர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கடனாளிகளாவும், அம்மூன்றாம் நபரைப் பொறுத்தவரை பிணையாளர்களாகவும் உள்ளனர்.

எடுத்துக்காட்டு :

'அ'–வும், 'ஆ'–வும் சேர்ந்து 'இ'–க்கு கடனுறுதிச் சீட்டு ஒன்றை எழுதித் கொடுக்கின்றனர். ஆனால் இங்கு உண்மையில் 'அ' என்பவர் 'ஆ'–க்கு பொறுப்புறுதியே வழங்குகிறார். கடனுறுதிச் சீட்டு வழங்கப்படும்போதே, இந்த உண்மை 'இ'–க்கு தெரியும். இவ்வாறு 'இ'–க்கு தெரிந்திருப்பது, அவர் 'அ' மீதும், 'ஆ' மீதும் கடனாளிகளாகவே தொடரும் வழக்கை பாதிக்காது.

இணைப் பிணையாளரின் விடுவிப்பு (பிரிவு 138) : கடனீந்தவர் இணை பிணையாளர் ஒருவரை விடுவிப்பு செய்தால் மற்ற இணை பிணையாளர்கள் விடுவிப்பு அடைவதில்லை; விடுவிப்புப் பெற்றவரும் மற்ற இணைப் பிணையாளர்களிடம் தனக்குள்ள பொறுப்பிலிருந்து விடுவிப்புப் பெறுவதில்லை.

11. 'As between co-sureties there is to be equality cf burden and benefit.' Explain the statement with reference to the

provisions of the Indian Contract Act pointing out the difference if any under English Law. ('உடன் பிணையாளர்களுக்கிடையே பொறுப்புச் சுமையும் பயனும் சம பங்கானதாக இருக்க வேண்டும்.' இங்கிலாந்து சட்டத்தில் இது குறித்து வேறுபாடு இருப்பின் அதனைச் சுட்டிக்காட்டி, இந்திய ஒப்பந்தச் சட்டப்பிரிவுகளைக் குறிப்பிட்டு இக்கூற்றினை விளக்குக.)

(முந்தைய வினாவின் விடையில் 'இணைப் பிணையாளர்களுக்கு எதிரான உரிமைகள்' எனும் தலைப்பின் கீழ்க் காண்க.)

12. What are the modes of discharge of surety from liability? (பொறுப்பு நிலையினின்றும் பிணையாளி நீக்கம் பெறுவதற்குரிய வழிகள் யாவை?)

(அல்லது)

State and explain the circumstances under which a surety is discharged from liability. (எவ்வகையான சூழ்நிலைகளிலிருந்து பிணையாளர் ஒருவர் தன்னுடைய பொறுப்புகளிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம் என்பதனைக் குறிப்பிட்டு விளக்கம் செய்யவும்.)

முன்னுரை:

பின்வரும் சூழ்நிலைகளில் பிணையாளர் ஒருவர் தனது பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெறுகிறார்.

I. மறுத்தழிப்பு மூலம் (By Revocation) :

1. அறிவிப்பு மூலம் மறுத்தழித்தல் (Revocation by Notice) (பிரிவு 130): ஒரு பொறுப்புறுதி செயல்பாட்டுக்கு வந்த பின் மறுத்தழிக்க முடியாது. இருப்பினும் ஒரு தொடர் பொறுப்புறுதியை பிணையாளர் எச்சமயத்திலும் பின்னால் வரும் விவகாரங்களுக்கு, தான் பொறுப்பாளி அல்ல என கடனீந்தோருக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பி அதன் மூலம் மறுத்தழிக்கலாம். இதன் மூலம் அவர் பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெறுகிறார்.

2. பிணையாளரின் இறப்பினால் மறுத்தழிப்பு (Revocation by Death) (பிரிவு 131) : பிணையாளர் இறந்துவிட்டால், ஒரு (தொடர்) பொறுப்புறுதியில் எதிர்கால விவகாரங்களுக்கு அவர் அளித்த பொறுப்புறுதி தானாகவே முற்றுப் பெற்றுவிடும். எனினும் அவரது இறப்பிற்கு முன் ஏற்பட்ட பொறுப்புகளுக்கு பிணையாளரின் வாரிசுகள் பொறுப்பாவார்கள்.

3. புத்தீடு மூலம் (By Novation) (பிரிவு 62) : ஏற்கனவே உள்ள பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கு பதிலாக அவ்வொப்பந்தத் தரப்பினர் தங்களுக்குள்ளாக அல்லது வேறு நபர்களுடன் புதியதோர் ஒப்பந்தம் செய்து கொண்டால், ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் விடுவிப்பு பெறும். பிணையாளரும் விடுவிப்பு பெறுவார்.

II. கடனீந்தவரின் நடத்தையின் மூலம் (By the Conduct of Creditor) :

4. ஒப்பந்த வரம்புகளை (வரைவுரைகளை) மாற்றம் செய்வதன் மூலம் (By variance in the terms of contract) (பிரிவு 133): பிணையாளரின் இசைவின்றி, தலைக் கடனாளிக்கும் கடனீந்தவருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் வரம்புகளை (terms) மாற்றியமைத்தால், மாற்றம் செய்வதற்குப் பின் ஏற்படும் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை பிணையாளர் விடுவிப்பு பெறுவார். அம்மாற்றம் பிணையாளரின் பயனுக்காகவே என்றாலும் விடுவிப்பு கோரலாம்.

5. தலைக் கடனாளியை விடுவிப்பு செய்தால் (By discharge of principal debtor) (பிரிவு 134): தலைக் கடனாளிக்கும் கடனீந்தவருக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலம் தலைக் கடனாளி விடுவிப்பு பெற்றால் அல்லது கடனீந்தவரின் செயலாலோ (act) செயல் தவிர்ப்பாலோ (omission) ஏற்பட்ட சட்டப்படியான பின்விளைவில் தலைக் கடனாளி விடுவிப்பு பெற்றால், பிணையாளரும் விடுவிப்பு பெறுவார்.

ஆனால், **கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் பிணையாளர் விடுவிப்பு பெறுவதில்லை.** அவை **(அ)** தலைக் கடனாளி ஒருவர், சட்டச் செயல்பட்டால் (எடுத்துக்காட்டு : நொடித்தல்) விடுவிப்பு செய்யப்பட்டால், பிணையாளர் விடுவிக்கப்படுவதில்லை; **(ஆ)** கடனீந்தவர் சட்டமுறைக் காலகெடுவுக்குள் தலைக் கடனாளி மீது வழக்குரைக்காவிட்டால் பிணையாளர் விடுவிப்பு பெறுவதில்லை.

6. பிணையாளரின் தீர்வழியை ஊறுபடுத்துவதன் மூலம் (By impairing surety's eventual remedy) (பிரிவு 139) : கடனீந்தவர், பிணையாளரின் உரிமைக்கு ஒவ்வாத ஒரு செயலைச் செய்தோ அல்லது பிணையாளருக்குச் செய்ய வேண்டியதாக உள்ள ஒரு கடமையைச் செய்யாமல் விடுத்தோ, தலைக்கடனாளிக்கு எதிராக பிணையாளருக்கு கிடைக்கும் தீர்வழிகளுக்கு ஊறு விளைவித்தால், பிணையாளர் விடுவிப்பு பெறுகிறார். பிணையாளருக்கு முடிவாகக் கிடைக்கிற தீர்வழியானது தலைக் கடனாளிக்கு எதிராக ஊறுபடுத்தப்படவில்லையெனில், பிணையாளர் விடுவிக்கப்படமாட்டார்.

7. தலைக் கடனாளியுடன் கடன் தீர்வு உடன்படிக்கை செய்வதால் (By composition with the principal debtor) (பிரிவு 135): தலைக் கடனாளிக்கும் கடனீந்தவருக்கும் இடையே பிணையாளரின் இசைவின்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன் மூலம் கடனீந்தவர் தலைக்கடனாளியுடன் கடன் தீர்வு (சமரசம்) (compounds with) செய்து கொண்டால், அல்லது கடனை அடைப்பதற்கு காலக் கெடு (gives time to) அளித்தால் அல்லது அக்கடனுக்காக தலைக் கடனாளி மீது வழக்கு தொடர்வதில்லை (agrees not to sue) என்று கடனீந்தவர் உறுதியுரைத்தால் பிணையாளர் விடுவிப்பு பெறுவார்.

8. பிணையங்களை இழந்திருந்தால் (By losing socurities) (பிரிவு 141): தலைக் கடனாளி ஒப்பந்தம் செய்யும் போது அளித்த பிணையத்தை கடனீந்தவர் இழந்தாலோ அல்லது பிணையாளரின் இசைவின்றி பிணையத்தை விட்டுப் பிரிந்தாலோ, பிணையாளர் அவ்வாறு இழந்த அல்லது பிரிந்த பிணையத்தின் மதிப்பு வரையிலான பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெறுகிறார்.

III. ஒப்பந்தம் செல்லுபடியாகாமல் போவதால் (By the Contract becoming invalid) :

9. திரித்துக்காட்டி பொறுப்புறுதி பெறப்பட்டிருந்தால் (By misrepresentation) (பிரிவு 142) : ஒப்பந்தம் செய்து கொள்வதின் மூலக்கூறான பொருண்மை பற்றி கடனீந்தவர் திரித்துக்காட்டியோ அல்லது அவர் அறிந்தும், இசைந்தும் செய்யப்பட்ட திரித்துக்காட்டலினாலோ பொறுப்புறுதி பெறப்பட்டிருந்தால், அது செல்லுபடியாகாமல் போகிறது. இங்கு பிணையாளர் விடுவிப்பு பெறுகிறார்.

10. மறைத்தலால் பெறப்பட்ட பொறுப்புறுதி (By concealment) (பிரிவு 143): மூலக்கூறான பொருண்மையை மறைத்து கடனீந்தவர், பொறுப்புறுதியை பெற்றிருந்தால் அது செல்லுபடியாகாமல் போகிறது. இங்கும் பிணையாளர் விடுவிப்பு பெறுகிறார்.

11. இணைப்பிணையாட்கள் இணையவில்லை என்றால் (By non-joining of co-sureties) (பிரிவு 144) : தன்னுடன் மற்றொரு நபர் இணைப் பிணையாளராக இணைந்தாலொழிய, பொறுப்புறுதியின் பேரில் கடனீந்தவர் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொண்டு பொறுப்புறுதி அளித்திருந்தால், அந்த மற்றொரு நபர் அதற்கு இசையவில்லை எனில் பொறுப்புறுதி செல்லத்தக்கதாகாது. இத்தருணத்தில் அப்பிணையாளர் விடுவிப்பு பெறுகிறார்.

12. மறுபயன் தோல்வி அடைந்தால் (By failure of consideration): கடனீந்தவருக்கும் தலைக் கடனாளிக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் மறுபயன் தோல்வியடைந்தால் பிணையாளர் விடுவிக்கப்படுவார். இங்கு மறுபயன் கணிசமான அளவில் (substantial) தோல்வியடைந்திருக்க வேண்டும்.

எத்தருணங்களில் பிணையாள் விடுவிப்பு பெறுவதில்லை அல்லது விதிவிலக்குகள் :

(1) தலைக் கடனாளிக்கு காலக்கெடு கொடுப்பதற்காக, கடனீந்தவர், மூன்றாம் நபர் ஒருவருடன் (தலைக் கடனாளி அல்ல) ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால், அங்கு பிணையாளர் விடுவிப்பு பெற மாட்டார் **(பிரிவு 136). (2).** கடனீந்தவர் தலைக் கடனாளி மீது வழக்குத் தொடராமல் அல்லது வேறு தீர்வழிகளை அவருக்கெதிராக செயல்படுத்தாமல் பொறுமையாக (forbearance) இருப்பது மட்டுமே பிணையாளரை விடுவிப்பு செய்யாது **(பிரிவு 137). (3)** பல

இணைப் பிணையாளர்கள் இருந்தால், அவர்களில் ஒருவரை விடுவிப்பது மற்றவர்களையும் விடுவிப்பதாகாது. அவ்வாறு விடுவிப்பு செய்யப்பட்டவர், மற்ற பிணையாளர்களிடம் தனது பொறுப்பை விடுவிப்பு செய்தல் இயலாது (பிரிவு 138).

13. Mention the circumstances in which a surety is discharged owing to the creditor's improper conduct (கடனீந்தவரது முறைகேடான நடத்தையின் விளைவால் பிணையாளர் கடப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படும் சூழ்நிலைகளைக் குறிப்பிடவும்.)

(முந்திய வினாவின் விடையில் 4–லிருந்து 10–வது எண் கொண்ட பத்தி வரை குறிப்பிடவும்.)

14. Discuss the effect of varience in the terms of the contract without the consent of the surety. (பிணையாளரின் இசைவின்றி ஒப்பந்தத்தின் வரைவுரைகளில் மாற்றம் செய்வதின் விளைவை விவாதிக்க.)

பொறுப்புறுதி ஒப்பந்தத்தில், கடனீந்தவருக்கும் தலைக் கடனாளிக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தின் வரைவுரைகள் (கட்டுவரம்புகள்), பிணையாளரின் சம்மதமின்றி மாற்றப்பட்டால், பிணையாளர் தனது பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படுவார் (Discharged), என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 133–வது பிரிவு கூறுகிறது. மேற்படி மாற்றமானது பிணையாளரின் பயனுக்காகவே என்றாலும், அவர் விடுவிப்பு கோரலாம்.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவருக்கு சனவரி மாதம் முதல் வாரத்தில் ரூ.5,000/ கடன் கொடுக்க ஒப்புக் கொள்கிறார். C என்பவர் அதை திருப்பிக் கொடுப்பதற்கு பொறுப்பேற்கிறார். ஆனால் மேற்படி A என்பவர் சனவரி முதல் வாரத்தில் கடன் கொடுப்பதற்கு பதிலாக பிப்ரவரி முதல் வாரம் ரூ.5,000/–த்தை கடனாகக் கொடுக்கிறார். இங்கு ஒப்பந்தத்தின் வரைவுரைகள் C யின் சம்மதமின்றி மாற்றம் செய்யப்பட்டதால் அவர் தன் பொறுப்பு நிலையிலிருந்து விடுவிக்கப்படுகிறார். அதாவது C-யின் சம்மதமின்றி கடன் தொகையை சனவரி முதல் வாரம் கொடுப்பதற்கு பதிலாக காலந்தாழ்த்தி பிப்ரவரி முதல் வாரம் கொடுத்தால், அதற்கு மேற்படி C என்பவர் பிணையாளராக இருக்கக் கடமைப் பட்டவரல்ல.

விதிவிலக்குகள் : (அ) வெவ்வேறான கடப்பாடுகளுக்கு அல்லது கடன்களுக்கான பொறுப்புறுதியில் ஒரு கடப்பாட்டில் அல்லது கடனில் செய்த மாற்றம் மற்றவற்றை பாதிக்காது. (ஆ) மாற்றத்துக்கு பிணையாள் இசைந்திருந்தால் அது அவரை விடுவிப்பு செய்யாது. (இ) மாற்றமானது மூலக்கூறான பொருண்மை குறித்ததாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் பிணையாளர் விடுவிப்பு பெற மாட்டார்.

-oOo-

3

ஒப்படைவும் அடகும்
[Bailment and Pledge]

ஒப்படைவு
[Bailment]

1. Define contract of bailment and explain how far consideration is necessary for bailment. (ஒரு ஒப்படைவு ஒப்பந்தத்தினை வரையறுத்து, அதற்கு மறுபயன் எந்த அளவிற்கு அவசியமானதாக இருக்கிறது என்பதை விளக்குக.)

ஒப்படைவு (Bailment) - வரையறை (பிரிவு 148) :

ஒப்படைவு என்பது,

(அ) ஒரு பொருளை (goods),

(ஆ) ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் (purpose),

(இ) ஒரு நபர் மற்றொரு நபரிடம் (by one person to another),

(ஈ) அந்தக் குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறியதும் திரும்பத் தர வேண்டும் (to be returned) அல்லது கொடுத்தவரின் ஏவலுக்கு இணங்க வேறு விதத்ததில் செய்து முடிக்க வேண்டும் (otherwise disposed of according to the directions of the person delivering) என்ற ஒப்பந்தத்துடன் கொண்ட,

(உ) ஒரு வழங்கல் (delivery) (அல்லது பொருள் ஒப்படைப்பு) ஆகும்.

(ஊ) பொருள்களை வழங்குகிறவர் **'ஒப்படைவு செய்பவர்' (Bailor)** என்றும், பொருள்களை பெறுபவர் **'ஒப்படைவு பெறுநர்' (Bailee)** என்றும் அழைக்கப்படுவர்.

எடுத்துக்காட்டுகள் :

(1) A தனது 'டி.வி.டி. பிளேயரை', திரைப்படம் பார்த்த பின் திருப்பித் தர B-க்கு அளிக்கிறார். (இங்கு குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறியதும் திரும்பத் தர வேண்டும் என்ற ஒப்பந்தம்).

(2) A தனது துணியை சட்டையாகத் தைக்க B-யிடம் அளிக்கிறார். (இங்கு பொருள் கொடுத்தவரின் ஏவலுக்கு இணங்க வேறுவிதத்தில் செய்து முடிக்க வேண்டும் என்ற ஒப்பந்தம்).

(3) A ஒரு பொருளைக் கண்டெடுக்கிறார்.

மேற்படி எடுத்துக்காட்டுகளில் முதல் இரண்டும் வெளிப்படையான ஒப்படைவு ஆகும். மூன்றாவது உட்கிடையான ஒப்படைவு ஆகும்.

ஒப்படைவின் முக்கிய இயல்புகள் (Characteristics of Bailment or Requisites of Bailment) :

1. ஒப்பந்தம் (Contract) : ஒப்படைவு என்பது, ஒப்படைவு செய்பவருக்கும் ஒப்படைவு பெறுபவருக்கும் இடையேயான ஓர் ஒப்பந்தமாகும். எனினும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஒப்படைவு என்பது உட்கிடையானதாக இருக்கிறது. உதாரணமாக, காணாமல் போன பொருளை கண்டெடுப்பவருக்கும், அதன் உண்மையான உரிமையாளருக்கும் இடையே உட்கிடையான ஒப்படைவு உள்ளது. எனவே ஒப்படைவு என்பது வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தத்தின் வாயிலாக எழலாம்.

2. பொருட்களை வழங்குதல் (Delivery of goods) : ஒப்படைவில் பொருட்களை வழங்குதல் அல்லது ஒப்படைத்தல் நிகழ வேண்டும். அதுவும் பொருட்களின் உரிமையாளரால் மற்றொருவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

3. வழங்குதல் உண்மையானதாக அல்லது கொள்நிலையானதாக இருத்தல் (Actual or Constructive delivery) : பொருளை வழங்குதல் உண்மையானதாக அல்லது கொள்நிலையானதாக (constructive) இருக்க வேண்டும். உண்மையான வழங்கல் என்பது பொருளை நேரடியாக வழங்குவதாகும் (direct). கொள்நிலையான வழங்கல் என்பது, பொருட்களை ஒப்படைவு பெறுபவரின் அல்லது அவரின் முகவரின் உடைமையில் சேர்க்கும் விளைவை ஏற்படுத்தும் ஒரு செயலால் நிகழலாம் **(பிரிவு 149).** இதனை **'அடையாளமான வழங்கல்' (Symbolic delivery)** என்றும் கூறலாம். இதற்கு உதாரணமாக, இரயில்வே பார்சல் இரசீது வழங்கலை, அந்த இரசீதிற்குட்பட்ட சரக்குகளை வழங்குவதற்கு ஒப்பாக அமைதலைக் குறிப்பிடலாம்.

4. உடைமையை வழங்குதல் (Delivery of possession): ஒப்படைவில்

பொருள்களின் உடைமை தற்காலிகமானதாக இருந்தாலும், அது ஒப்படைவு பெறுநருக்கு மாறியதாக வேண்டும். பொருட்களை வைத்திருத்தல் மட்டுமே ஒப்படைவாகிவிடாது. எனவே, ஒரு பணியாளர் தன் எசமானரின் பொருள்களை உபயோகித்தால், அவர் ஒப்படைவு பெறுநராக கருதப்படமாட்டார். இதை பின்வரும் வழக்கு விளக்கும்.

Kaliaperumal Pillai v. Visalakshmi[1]

நகைத் தொழிலாளியிடம் நகை செய்ய தங்கம் கொடுத்து தினந்தோறும் வேலை முடியாமலிருக்கும் நகையை ஒரு பெட்டியில் பூட்டி, நகைத் தொழிலாளியின் வீட்டில் வைத்து, சாவியைத் தானே வைத்திருந்து வந்தார் ஒரு பெண்மணி. பெட்டியிலிருந்த நகை ஒரு நாள் திருடு போய்விட்டது. இங்கு மேற்படி நகைத் தொழிலாளி பொறுப்பில்லை என்று தீர்ப்பானது. ஏனெனில் மேற்படி நகையின் உடைமை ஒப்படைப்பு நகைத் தொழிலாளியிடம் உண்மையில் செய்யப்படவில்லை. அதன் உடைமை அப்பெண்மணியிடமே உள்ளது. எனவே இங்கு 'ஒப்படைவு' கிடையாது, என்று மேற்படி வழக்கில் கருத்துரைக்கப்பட்டது.

5. உரிமை மாறுவதில்லை (Ownership is not transfered): ஒப்படைவில் சம்பந்தப்பட்ட பொருளின் உரிமை மாறுவதில்லை. அதன் உடைமை தான் (possession) மாறுகிறது. உரிமையை ஒப்படைப்பு அளிப்பவர், தன்னிடமே தக்க வைத்துக் கொள்கின்றார் (Retention).

6. நோக்கம் (Purpose) : ஏதாவது ஒரு நோக்கத்துடன் ஒப்படைவு செய்யப்பட வேண்டும். பழுது பார்க்க அல்லது பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட பொருள், ஒரு கடனுக்கு பிணையமாக கொடுக்கப்பட்ட பொருள் ஆகியவை ஒரு நோக்கத்தின் அடிப்படையில் அமைவதால், அவை ஒப்படைவாகும். தவறுதலாக ஒருவரிடம் கொடுக்கப்பட்ட பொருள் ஒப்படைவாகாது.

7. குறித்தவகையிலான பொருளை திருப்பி அளித்தல் (Return of Specific goods) : ஒப்படைவு எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறியபின் ஒப்படைக்கப்பட்ட பொருள் திரும்ப அளிக்கப்பட வேண்டும் அல்லது ஒப்படைப்பவரின் ஏவலுக்கு இணங்க செய்து முடிக்கப்பட வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலையில் அளிக்கப்பட்ட குறிப்பிட்ட பொருளின் வடிவம் மாறுவதற்கும் வாய்ப்புண்டு. அவ்வாறு மாறினாலும் அது ஒப்படைப்பே ஆகும். உதாரணமாக, தையல்காரரிடம் அளிக்கப்படுகின்ற ஒரு துணி, 'சட்டையாக' மாறி வந்தாலும் அதுவும் ஒரு ஒப்படைப்பாகவே கருதப்படும்.

8. அசையும் பொருட்கள் (Movable goods) : ஒப்படைவில் அசையும் சொத்துக்களே, பொருட்களாக கருதப்படுகின்றன. அதாவது அசையும் பொருட்களையே ஒப்படைவு செய்ய முடியும். அசையாச் சொத்துக்கள் (Immov-

1. AIR 1936 Mad. 32

able) இங்கு பொருட்களாக கருதப்படுவதில்லை. எனினும் இங்கு பணம், ஒரு அசையும் பொருள் அல்ல. உதாரணமாக, வங்கிச் சேமிப்பு கணக்கில் செலுத்தப் பட்ட அதே எண் கொண்ட பணத்தாள்களை வங்கியானது அந்தச் சேமிப்பு கணக்கிற்குரிய வாடிக்கையாளருக்கு திருப்பித்தர கடமைப்பட்டதல்ல.

ஒப்படைவு ஒப்பந்தத்தில் மறுபயன் :

ஒப்படைவு ஒப்பந்தத்தில் பண வடிவில் மறுபயன் இருக்கலாம். இதை ஒப்படைவு செய்பவர் அளிக்கலாம். (உதாரணமாக, மோட்டார் சைக்கிளை பழுது பார்ப்பவரிடம் ஒப்படைவு செய்தால், அதன் சொந்தக்காரர், அதாவது ஒப்படைவு செய்பவர் பழுது பார்த்தற்குண்டான கூலியை மறுபயனாக அளிக்கிறார்.)

இத்தகு மறுபயனை சில சூழல்களில் ஒப்படைவு பெறுநர் கூட அளிக்கலாம். (உதாரணமாக, சைக்கிளை வாடகைக்கு எடுத்தால், அதனை வாடகைக்கு எடுத்த ஒப்படைவு பெறுநர், அதற்குண்டான வாடகையை மறுபயனாக அளிக்கிறார்). ஆனால், ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்களை ஒப்படைவு பெறுநர் திரும்ப அளிக்கச் செய்யும் உறுதியுரைக்கு மறுபயன் தேவையில்லை. இதற்கு ஒப்படைப்பவர் அப்பொருட்களை பிரிந்திருத்தலால் அவருக்கு ஏற்படும் தீங்கே (detriment) மறுபயனாக அமையும்.

2. Enumerate the rights and liabilities of a bailor and bailee. (ஒப்படைவு செய்பவர் மற்றும் ஒப்படைவு பெறுபவர் ஆகியவர்களின் உரிமைகளும் பொறுப்பு நிலைகளும் யாவை ?)

(அல்லது)

Explain the rights and duties of a bailor of goods. (சரக்குகள் ஒப்படைப்பு செய்பவரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விளக்குக.)

(அல்லது)

What are the rights and liabilities of bailor. (ஒப்படைவு செய்பவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை?)

(அல்லது)

Define bailment and enumerate the rights and duties of a bailee. (ஒப்படைவு என்பதை வரையறு. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி விவரி.)

(அல்லது)

Rights and duties of a bailee - Write short notes. (ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Duties of a bailee - Write short notes. (ஒப்படைவு பெறுபவரின் கடமைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

I. ஒப்படைவு செய்பவரின் உரிமைகளும் கடமைகளும் (Rigts and Duties of Bailor):

ஒப்படைவு செய்பவரின் உரிமைகள் (Rights of Bailor) :

1. **ஒப்படைவை முடிவிற்கு கொண்டு வரும் உரிமை (Right of Termination) (பிரிவு 153):** ஒப்படைவின் நிபந்தனைகளுக்கு (conditions) முரணான வகையில், ஒப்படைவு பெற்றவரின் செயல்கள் அமையுமானால், அந்த ஒப்படைவை முடிவுக்குக் கொண்டு வர (termination) ஒப்படைவு செய்பவருக்கு உரிமை உண்டு. ஒப்படைவு செய்பவர் தனது விருப்பத்தின் பேரில் அவ்வொப்படைவை தவிர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக, ஒப்படைவு பெறுபவர் ஒப்படைவு பொருளை தாறுமாறாக பயன்படுத்தினால், ஒப்படைவு செய்தவர், அந்த ஒப்படைவை முடிவிற்கு கொண்டு வந்துவிடலாம். இதனால் ஒப்படைவு நீக்கப்படும்.

2. **ஊதிய நோக்கமில்லாமல் கடனாகக் கொடுக்கப்பட்ட ஒப்படைவு பொருளை திருப்பிக் கேட்கும் உரிமை (Right to demand return of goods any time in the case of gratutious bailment) (பிரிவு 159) :** ஊதியம் பெறும் நோக்கமின்றி கடனாகக் கொடுக்கப்பட்ட பொருளை, ஒப்படைவு பெற்றவரிடமிருந்து எந்நேரத்திலும் திரும்பப் பெற ஒப்படைவு செய்பவருக்கு உரிமை உண்டு.

3. **ஒப்படைவு செய்யப்பட்ட பொருளினால் ஏற்படும் ஆதாயத்திற்கும் கூடுதலுக்குமான உரிமைகள் (To claim profits or increase in value of goods bailed) (பிரிவு 163):** ஒப்படைவு செய்யப்பட்ட பொருளில் ஏதாவது ஆதாயம் ஏற்பட்டாலும் அல்லது மதிப்பில் கூடுதல் ஏற்பட்டாலும் அதையும் திரும்பப் பெற ஒப்படைவு செய்பவர் உரிமை பெறுகிறார்.

எடுத்துக்காட்டு : A என்பவர் ஒரு பசுவை பாதுகாக்க B என்பவரிடம் விடுகிறார். அப்பசு ஒரு கன்றைத் தருகிறது. B அந்தப் பசுவையும் கன்றையும் திருப்பியளிக்க கடமைப்பட்டவராவார்.

4. **உரிமைகளைச் செயல்படுத்துதல் (Enforcement of rights):** ஒப்படைவு பெறுபவரின் கடமைகள் (duties) ஒப்படைவு செய்பவரின் உரிமைகளாகும். எனவே ஒப்படைவு செய்பவர் அவற்றை செயல்படுத்த ஒப்படைவு பெறுபவர் மீது வழக்காட உரிமையுண்டு.

5. **தவறு செய்பவர் அல்லது மூன்றாம் நபர் மீது வழக்கு தொடர்தல் (Suit against a wrong doer or a third party) (பிரிவு 180) :** மூன்றாம்

நபர் ஒருவர் ஒப்படைவு பெறுபவரை தவறான வழியில் ஏமாற்றி ஒப்படைவு பெற்ற பொருளை வீணாக்கச் செய்தால், ஒப்படைவு செய்பவர் அல்லது பெறுபவர் அம்மூன்றாம் நபர் மீது வழக்கு தொடரலாம். இவ்வழக்கின் வாயிலாகப் பெற்ற பலனில் அல்லது நட்டஈட்டில் ஒப்படைவு செய்பவரும், பெறுபவரும் தங்களுக்கு உரியதை பகிர்ந்து கொள்ள வேண்டும் **(பிரிவு 181).**

ஒப்படைவு செய்பவரின் கடமைகள் (Duties of Bailor) :

1. ஒப்படைவுப் பொருளின் குறைபாட்டை வெளிப்படுத்துதல் (To disclose faults in the goods bailed) (பிரிவு 150) : ஒப்படைவு செய்யப்பட்ட பொருட்களில் உள்ள தனக்குத் தெரிந்த குறைபாடுகளை ஒப்படைவு செய்பவர் வெளிப்படுத்த வேண்டியது அவரது தலையாய கடமையாகும். குறைபாடுகளை தெரியப்படுத்தாவிடில் அதனால் ஒப்படைவு பெறுபவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்படைவு செய்பவரே பொறுப்பாவார்.

Lyell v. Ganga Dal[1]

இவ்வழக்கில் வெடி மருந்துகள் அடங்கிய பார்சல் ஒன்று லாரியில் ஏற்றப் பட்டது. ஆனால் அதை ஒப்படைவு செய்தவர், அது வெடி மருந்து பார்சல் என ஒப்படைவு பெறுபவருக்கு தெரிவிக்கவில்லை. இங்கு மேற்படி வெடி மருந்து பார்சலினால் ஒப்படைவு பெறுபவருக்கு சேதம் ஏதாவது ஏற்பட்டால், அதற்கு ஒப்படைவு செய்தவரே பொறுப்பாவார்.

2. ஒப்படைவு செய்பவர் அசாதாரணமான செலவினங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் (Bailor should bear the extraordinary expenses) (பிரிவு 158) : ஒப்படைவில் சாதாரண செலவினங்களை ஒப்படைவு பெறுபவரும், அசாதாரணமான செலவுகளை ஒப்படைவு செய்பவரும் ஏற்க வேண்டும். ஊதிய நோக்கமில்லாத இலவசமான ஒப்படைவில், ஒப்படைவு பெறுபவர் ஒப்படைவுக்காக செய்த எல்லா செலவினங்களையும் ஒப்படைவு செய்பவர் திருப்பி அளிக்க வேண்டும்.

3. ஒப்படைவு பெறுபவருக்கு ஒப்படைவு செய்பவர் பொறுப்பேற்கும் கடமை (Bailor's responsibility to Baileee) (பிரிவு 164) : பொருளின் மீது குறைபாடான உரிமை ஏதேனும் இருந்து, அதனால் ஒப்படைவு பெறுபவருக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டிருந்தால், அதற்கு ஒப்படைவு செய்பவர் பொறுப்பேற்க வேண்டும்.

4. ஒப்படைவு செய்த பொருட்களை திரும்பப் பெறும் கடமை (To receive back the bailed goods) : ஒப்படைவில் குறிப்பிடப்பட்ட நோக்கம் நிறைவேறியவுடன் அல்லது ஒப்படைவிற்கான காலக்கெடு முடிவடைந்தவுடன் ஒப்படைவு செய்பவர் பொருட்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

1. (1875) 1 All. 60

திரும்பப் பெற மறுத்தால் அப்பொருட்களை பாதுகாப்பதற்காக ஒப்படைவு பெறுபவருக்கு ஆகும் செலவினங்களை ஒப்படைவு செய்பவர் ஏற்க வேண்டும்.

II. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும், கடமைகளும் (Rights and Duties of Bailee):

ஒப்படைவு பெறுபவரின் உரிமைகள் (Rights of Bailee):

ஒப்படைவு செய்பவரின் கடமைகள், ஒப்படைவு பெறுபவரின் உரிமை களாகும். இதனால் ஒப்படைவு செய்பவரின் கடமைகளை வழக்குரைப்பதன் மூலம் ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளாக்கிக் கொள்ள முடியும். இவற்றுடன் ஒப்படைவு பெறுபவருக்கு பின்வரும் வேறு சில உரிமைகளும் உள்ளன. அவை.

1. **இணை ஒப்படைவு செய்பவர்களில் ஒருவருக்கு பொருளை அளிக்கும் உரிமை (Delivery of goods to one of several bailors of goods) (பிரிவு 165):** பல இணை உரிமையாளர்கள் பொருளை ஒப்படைவு செய்தால், அங்கு எதிரிடையான ஒப்பந்தம் ஏதுமில்லாத பொழுது, அவர்களில் யாராவது ஒரு இணை உரிமையாளருக்கு பிற இணை உரிமையாளர்களின் இசைவைப் பெறாமலேயே, ஒப்படைவுப் பொருளை ஒப்படைவு பெறுபவர் திருப்பி அளிக்க உரிமை படைத்தவர்.

2. **உரிமைமூலம் இல்லாத பொருள்களை ஒப்படைவு செய்பவருக்கு திருப்பியளித்தல் (Delivery of goods to bailor without title) (பிரிவு 166):** ஒப்படைவு செய்பவர் ஒப்படைவுப் பொருளின் மீது உரிமைமூலம் (title) பெற்றிரா விட்டால், ஒப்படைவு பெறுநர் நல்லெண்ணத்தில் அப்பொருளை, ஒப்படைவு செய்பவருக்கோ அல்லது அவரது ஏவலுக்கிணங்க மற்றொருவருக்கோ திரும்ப அளித்துவிட்டால், ஒப்படைவு பெறுநர் அவற்றின் உண்மையான உரிமையாளருக்கு பொறுப்பாகமாட்டார்.

3. **தவறு செய்பவர் அல்லது மூன்றாம் நபர் மீது வழக்கு தொடர்தல் (Suit against a wrong doer or a third party) (பிரிவு 180) :** மூன்றாம் நபர் ஒருவர் ஒப்படைவு பெறுபவரை தவறான வழியில் ஏமாற்றி ஒப்படைவு பெற்ற பொருளை வீணாக்கச் செய்தால், ஒப்படைவு செய்பவர் அல்லது பெறுபவர் அம்மூன்றாம் நபர் மீது வழக்கு தொடரலாம். இவ்வழக்கின் வாயிலாகப் பெற்ற பலனில் அல்லது நட்டஈட்டில் ஒப்படைவு செய்பவரும், பெறுபவரும் தங்களுக்கு உரியதை பகிர்ந்து கொள்ள வேண்டும் (பிரிவு 181).

4. **ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமை (Bailee's Lien) (பிரிவுகள் 170, 171) :** ஒப்படைவுக்கான சட்டமுறையான செலவுகள் செலுத்தப்படவில்லை எனில், ஒப்படைவு பெறுபவர் பொருள்களை திருப்பித் தராமல் தன்னிடமே தக்க வைத்துக் கொள்ள உரிமை உண்டு. இவ்வுரிமை பற்றுரிமை எனப்படும். இது குறிப்பிட்ட பற்றுரிமை (Particular Lien) என்றும், பொதுவான பற்றுரிமை (General Lien) என்றும் இரு வகைப்படும்.

ஒப்படைவு பெறுபவரின் கடமைகள் (Duties of Bailee) :

1. ஒப்படைவுப் பொருட்களை கவனமாகப் பராமரித்தல் (To take care of the goods bailed) (பிரிவுகள் 151, 152) : ஒப்படைவு பெறுபவர் ஒப்படைவுப் பொருள்களை கவனமாகப் பராமரித்தல், அவரது தலையாய கடமையாகும். ஒப்படைவு பெறுபவர் தன்னுடைய சொந்தப் பொருளை எந்த அளவிற்கு கவனமாகப் பராமரிப்பாரோ, அதே அளவிற்கு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளையும் பராமரிக்க வேண்டும். **(பிரிவு 151).** ஆனால் ஒப்படைவு பெறுபவர் மேற்சொன்னவாறு நியாயமான கவனத்துடன் இருந்தும், ஒப்படைவு பொருளில் இழப்பு (Loss) ஏதேனும் ஏற்பட்டாலோ அல்லது அது அழிந்துபட்டாலோ (Distruction) அல்லது தரங்குறைவானதாக ஆனாலோ (Deterioration) அதற்கு அவர் பொறுப்பாக மாட்டார் **(பிரிவு 152).** முக்கிய வழக்கு வருமாறு.

Calcutta Credit Corporation Ltd. v. Prince Peter[1]

இவ்வழக்கில் கார் ஒன்றை பழுது பார்ப்பதற்காக கரேஜ் (Garage) ஒன்றில் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் மேற்படி கரேஜில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அக்கார் சேதமடைந்தது. இங்கு பின்வரும் பொருண்மைகள் நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டன. அவை (1) மேற்படி கரேஜில் நிறுத்தப்பட்டுள்ள வண்டிகள் யாவுமே பெட்ரோல் நிரம்பிய வண்டிகள் ஆகும். அது மட்டுமல்லாது வண்டிகளுக்கு பூச 'பெயிண்டுகளும்', 'தின்னர்' வகையராக்களும் அங்கு நிறைந்து காணப்பட்டன. அவை மிக எளிதில் தீப்பிடிக்கக்கூடியவை. (2) கரேஜின் ஒருபுறம் சமையல் செய்வதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. (3) கரேஜ் தீப்பிடித்த பொழுது, அதிலிருந்து மேற்படி காரை உடனடியாக வெளிக் கொண்டுவர இயலவில்லை. ஏனெனில் கரேஜை திறப்பதற்குண்டான சாவிகள் சட்டென்று கிடைக்கவில்லை. இப் பொருண்மைகளின் மூலம் காரை ஒப்படைவு பெற்ற கரேஜானது அதைப் பராமரித்து, பாதுகாக்க தக்க கவனத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்பது மிகத் தெளிவாக நிரூபணமானதால், காருக்கு ஏற்பட்ட சேதத்திற்கு அதனை ஒப்படைவு பெற்ற மேற்படி கரேஜே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட பொருளை அதிகாரமற்ற உபயோகத்திற்கு பயன்படுத்துதல் கூடாது (Not to make unauthorised use of the goods bailed) (பிரிவுகள் 153, 154) : ஒப்படைவு செய்யப்பட்ட பொருளை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி பயன்படுத்த வேண்டும். ஒப்படைவு பெறுபவர் ஒப்பந்த சரத்துக்களுக்கு முரணான வழியில் அவற்றைப் பயன் படுத்தினால் அதனால் ஏற்படும் இழப்பிற்கு பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

எடுத்துக்காட்டு : A தன் குதிரையை B என்பவர் சவாரி செய்யும் பொருட்டு அளித்தார். B அக்குதிரையின் மேல் சவாரி செய்ய C–யை அனுமதிக்

1. AIR 1964 Cal. 374

கிறார். C கவனமாக சவாரி செய்தும் விபத்து நேர்ந்தது. இதனால் குதிரைக்கு ஊறு விளைகிறது. இதற்கு B–தாம் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர்.

3. ஒப்படைவு செய்யப்பட்ட பொருளை தன்னுடைய சொந்தப் பொருட்களுடன் கலக்கக்கூடாது (Not to mix the goods bailed with his own goods) : ஒப்படைவு செய்யப்பட்ட பொருள்களை தன்னுடைய சொந்தப் பொருள்களுடன் கலக்காமல் ஒப்படைவு பெறுபவர் தனியாக வைத்திருக்க வேண்டும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **155, 156 மற்றும் 157–வது பிரிவுகள்** ஒப்படைவு பெறுபவர், ஒப்படைவு பெற்ற பொருளை தன்னுடைய பொருள்களுடன் கலந்துவிட்டால், அதை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்பது பற்றிக் கூறுகிறது.

4. பொருட்களைத் திரும்பத் தருதல் (To return the goods) (பிரிவுகள் 160, 161) : ஒப்படைவின் நோக்கம் நிறைவேறியதும் ஒப்படைவு பெறுபவர், ஒப்படைவு செய்தவருக்கு பொருள்களைத் திரும்ப அளிக்க வேண்டும். இல்லை எனில், தாமதத்தினால் ஏற்படும் நட்டத்திற்கு இழப்பீடு கொடுக்க அவர் கடமைப் பட்டராவார் **(பிரிவு 160).** அதுபோல் ஒப்படைவு பெறுபவரின் தவறுகையால் (default of the bailee), பொருள்கள் சரியான நேரத்தில் திரும்ப அளிக்கப்பட வில்லை எனில் அல்லது திரும்ப அளிக்க முனைவு செய்யப்படவில்லை எனில், அப்பொழுது ஏற்படும் இழப்பு, அழிவு, தரங்குறைவு ஆகியவற்றுக்கு, ஒப்படைவு பெறுபவர் நியாயமான கவனத்துடன் நடந்து கொண்டிருந்தாலுமே கூட, அவர் ஒப்படைவு செய்தவருக்கு பொறுப்பாகிறார் **(பிரிவு 161).**

5. எதிர்நிலை உரிமைமூலத்தை தோற்றுவித்தல் கூடாது (Not to set up adverse title) (இந்திய சாட்சிய சட்டத்தின் 117–வது பிரிவு) : இந்திய சாட்சியச் சட்டப்படி ஒப்படைவு செய்தவருக்கு ஒப்படைவுப் பொருளின் மீதுள்ள உரிமைமூலத்தை ஒப்படைவு பெறுபவர் மறுக்கக்கூடாது. மேலும், ஒப்படைவு செய்தவருக்கு எதிரான உரிமைமூலத்தை ஒப்படைவு பெறுபவர் தோற்றுவித்தல் கூடாது.

6. ஒப்படைவுப் பொருளில் ஏற்படும் கூடுதலை ஒப்படைவு செய்தவருக்கு அளிக்க வேண்டும் (To return any accretion to the goods) (பிரிவு 163): ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு உயர்வையும் அல்லது பெருக்கத்தையும் ஒப்படைவு செய்தவருக்கு ஒப்படைவு பெறுபவர் அளிக்க வேண்டும்.

3. 'A bailee is bound to take reasonable care and nothing more' Elucidate. What is the scope of the bailee's duty to return the goods ? ('ஓர் ஒப்படைவு பெறுபவர் நியாயமான கவனம் எடுத்துக் கொள்ள கடமைப்பட்டவர். வேறொன்றும் இல்லை'. விளக்குக. சரக்குகளைத் திருப்பி அளிப்பதில் ஒப்படைவு பெறுபவரின் கடமையின் நோக்கெல்லை யாது ?)

(அல்லது)

"A bailee is bound to take reasonable care and nothing more". Elucidate. ("ஒப்படைவு பெறுபவர் நியாயமான கவனம் கொண்டிருக்க வேண்டும். வேறொன்றுமில்லை" – விளக்குக.)

(முந்திய வினாவின் விடையில் பொருத்தமான பத்தியில் காண்க.)

4. Define 'Lien'. Distinguish particular lien and general lien. ('பற்றுரிமை' வரையறை செய்க. தனிப் பற்றுரிமை மற்றும் பொதுப் பற்றுரிமை வேறுபடுத்துக.)

(அல்லது)

Distinguish between Particular Lien and General Lien?

வேறுபடுத்துக
குறிப்பிட்ட பற்றுரிமை மற்றும் பொதுப் பற்றுரிமை

(அல்லது)

What do you mean by Bailee's Lien ? (ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமை என்பதால் நீர் அறிவது என்ன ?)

(அல்லது)

Bailee's Lien - Write Short Notes. (ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Nature of Bailee's Lien - Write Short Notes. (ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமையின் தன்மை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Lien - Write Short Notes. (பற்றுரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

பற்றுரிமை (Lien) - விளக்கம் :

ஒப்படைவுக்கான சட்ட முறையான செலவுகள் செலுத்தப்படவில்லை எனில், ஒப்படைவு பெறுபவர் (Bailee) பொருள்களை திரும்பத் தராமல் தன்னிடமே இருத்திக் கொள்ள உரிமையுண்டு. அதாவது, பிறிதொருவரின் பொருள்களைத் தன்னிடத்தே வைத்துள்ள நபர் ஒருவர், அவரிடமிருந்து வரவேண்டிய கடனையோ, உரிமைக் கோரலையோ திரும்பப் பெறும் வரை, அவற்றைத் தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளும் உரிமை, **'பற்றுரிமை' (Lien)** எனப்படும். இதனையே, **'உடைமைப் பற்றுரிமை' (Possessory Lien)** என்றும், 'ஒப்படைவு பெறுபவரின்

பற்றுரிமை' (Bailee's Lien) என்றும் அழைக்கிறோம். உதாரணமாக, ஒருவர் தனது 'பல்சர்' மோட்டார் சைக்கிளை பழுது பார்ப்பதற்காக மற்றொருவரிடம் ஒப்படைக்கிறார். அவர் அதனைப் பழுது பார்த்ததற்கான கூலியை பெறும் வரை, அம்மோட்டார் சைக்கிளை தன்னிடம் இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை உடையவர். இதுவே 'பற்றுரிமை' எனப்படுகிறது.

இவ்வித பற்றுரிமையைப் பெற, பொருட்களின் உடைமை சரியானதாகவும், தொடர்ந்தும் இருத்தல் அவசியம். பற்றுரிமை சட்டத்தாலோ, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தத்தாலோ அல்லது தரப்பினர்களின் வணிக நடவடிக்கைகளினாலோ ஏற்படலாம்.

பற்றுரிமை - இரு வகைகள் :

பற்றுரிமை இரு வகைப்படும். அவை : (1) குறிப்பிட்ட பற்றுரிமை (Particular Lien), (2) பொதுப் பற்றுரிமை (General Lien). இவை குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவுகள் **170** மற்றும் **171** முறையே பின்வருமாறு விளக்குகிறது.

1. குறிப்பிட்ட பற்றுரிமை (Particular Lien) (பிரிவு 170):

தன்னுடைய உழைப்பையும், திறமையையும் பயன்படுத்தி பணிபுரிந்த பொருள் மீது மட்டும் **'குறிப்பிட்ட பற்றுரிமை'** ஒப்படைவு பெறுபவருக்கு கிடைக்கும்.

எடுத்துக்காட்டு : A என்பவர் கடினமான வைரக்கல் ஒன்றை பட்டை தீட்டி மெருகூட்ட B என்பவரிடம் அளிக்கிறார். இது செய்து முடிக்கப்படுகிறது. இதற்கான கூலியைப் பெறும் வரை அவ்வைரக்கல்லை B தன்னிடமே தக்க வைத்திருக்கலாம்.

ஆனால் ஒப்படைவு பெறுபவர், குறிப்பிட்ட காலத்துக்குள் வேலையை முடிக்காவிட்டால் மேற்கண்ட பற்றுரிமையைச் செயல்படுத்த முடியாது. மேலும் பணம் பெறாமல், தானாகவே பொருள்களைத் திருப்பித் தந்து விட்டாலும், இவ்வுரிமையைப் பயன்படுத்த முடியாது. அதுபோன்றே கூலியைக் கடனாக அளித்துவிட்டாலும் இவ்வுரிமை கிடையாது.

மேற்படி குறிப்பிட்ட பற்றுரிமையானது, பொருளைக் கண்டெடுத்தவர், அடகு பெற்றவர் (Pawnee), முகவர், செலுத்தப்படாத விற்பனையாளர் (Unpaid Vendor) ஆகியவர்களுக்கும் கிடைக்கத் தக்கதாகும்.

2. பொதுப் பற்றுரிமை (General Lien) (பிரிவு 171):

தன்னிடமுள்ள மற்றவரின் பொருட்களுக்காகச் செலவழிக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட கடன் அல்லது கடப்பாடுகளுக்கு மட்டுமின்றி, பொதுவாகப் பொருட்களின் உரிமையாளருக்கும் பொருள்களைத் தன்னிடமே தக்க வைத்துக் கொண்டிருக்கும் நபருக்குமிடையே உள்ள கணக்கு பாக்கிக்காகவும், அவற்றைத் தக்க வைத்துக் (இருத்திக்) கொள்ளும் உரிமை, 'பொதுப் பற்றுரிமை' எனப்படுகிறது.

பொதுப் பற்றுரிமையானது, எல்லாப் பொருள்களையும் தக்க வைத்துக் கொள்ளும் ஒரு உரிமையாகும்.

பொதுப் பற்றுரிமையை பெற்றுள்ள நபர்கள் :

இவ்வுரிமை வங்கியர், சரக்குடை முகவர் (Factor), கப்பல் துறை மேடை உரிமையாளர் (Wharfinger), உயர் நீதிமன்ற வழக்குரைஞர்கள் (Attorneys of High Court) ஆகியோர்களுக்கு மட்டுமே எதிரிடையான ஒப்பந்தமில்லை எனில் கிட்டும். மற்றவர்களுக்கு வெளிப்படையான ஒப்பந்தமிருந்தாலொழிய கிட்டாது. இவ்வுரிமை உடையவர்கள் தங்களிடம் பிணையாக வைக்கப்பட்ட பொருட்களை, கடன் தொகையை திரும்பப் பெறும் வரை வைத்துக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு : A என்பவர் ஒரு வங்கியில் தனது நகையை அடகு வைத்து கடன் பெற்றார். அக்கடனை திருப்பிச் செலுத்திவிட்டு நகையை திரும்பத் தரக் கோரினார். அவர் வேறு கணக்குகளில் அதே வங்கிக்கு பணம் தர வேண்டியுள்ளது. இங்கு அவ்வங்கி நகையைத் தர மறுக்கலாம். ஏனெனில், அவ்வங்கிக்கு தன்னிடம் அடகு வைக்கப்பட்ட (ஒப்படைக்கப்பட்ட) அந்நகையின் மீது பொதுப் பற்றுரிமை உண்டு.

குறிப்பிட்ட பற்றுரிமை மற்றும் பொதுப் பற்றுரிமை - வேறுபாடுகள் :

குறிப்பிட்ட பற்றுரிமை [Particular Lien]	பொதுப் பற்றுரிமை [General Lien]
1. ஒப்படைவு பெறுபவர், தனது திறமையையும் உழைப்பையும் பயன் படுத்தி பணிபுரிந்த பொருள்களின் மீது மட்டுமே இவ்வுரிமை கிட்டும்.	சட்டப்படியான எல்லா பாக்கித் தொகை களுக்கும் இவ்வுரிமை கிட்டும். ஆனால் அப்பொருள் இவ்வுரிமை கோருபவரின் உடைமையில் இருக்க வேண்டும்.
2. உழைப்புக்கும், அப்பொருளின் மேல் செலவழிக்கப்பட்ட செலவுக்கு மட்டுமே இவ்வுரிமை உண்டு.	ஒப்படைவு செய்பவரின் வேறு கணக்கில் உள்ள பொதுவான பாக்கிக்கும் இவ்வுரிமை உண்டு.
3. ஒப்படைவு பெறுபவர் எவருக்கும் இவ்வுரிமை கிட்டும்.	குறிப்பிட்டவர்களுக்கு (வங்கியாளர் முதலியோர்) மட்டுமே, எதிரிடையான ஒப்பந்தம் இல்லையெனில் கிட்டும். மற்றவர்களுக்கு வெளிப்படையான ஒப்பந்தம் இருந்தால் மட்டுமே கிட்டும்.

பற்றுரிமை அழிதல் (Extinguishment of Lien) :

இவ்வுரிமையானது, (1) கைவிட்டுவிடுதல் (Abandonment); (2) பணத்தை செலுத்துதல் அல்லது செலுத்த முனைதல்; (3) பொருட்களை இழத்தல், சரண் செய்தல் ஆகியவற்றினால் அழிந்து விடுகிறது (அதாவது மறைந்துவிடுகிறது).

5. State the rights of a finder of lost goods. Under what circumstances is he entitled to sell the goods found by him? (தொலைந்த பொருட்களைக் கண்டெடுத்தவரின் உரிமைகளைக் குறிப்பிடுக. தம்மால் கண்டெடுக்கப்பட்ட பொருட்களை விற்பதற்கு எச்சந்தர்ப்பங்களின் கீழ் அவர் உரிமை பெறுகிறார் ?)

(அல்லது)

What are the rights and duties of a finder of lost goods? (தொலைந்துவிட்ட சரக்குகளை கண்டு எடுப்பவரின் உரிமைகளும் பொறுப்பு நிலைகளும் யாவை?)

(அல்லது)

Finder of lost goods - Write short notes. (தொலைந்த பொருட்களை கண்டெடுத்தவர் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Rights of finder of lost goods - Write short notes. (காணமற் போன பொருட்களை கண்டெடுத்தவரின் உரிமைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவர் - விளக்கம் :

ஒரு நபர் மற்றொருவருக்கு உரிய பொருளை கண்டெடுத்து அதைத் தன் பொறுப்பில் வைத்திருந்தால், அவர் **'தொலைந்து போன பொருளை கண்டெடுத்தவர்'** எனப்படுகிறார். பொதுவாக ஒருவர் மற்றவரின் பொருளை எடுத்து பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஒருவர் அப்பொருட்களை எடுத்து தன் உடைமையில் வைத்துக் கொண்டால் அவர் அவற்றை ஒப்படைவு பெற்ற நிலையைப் பெறுகிறார்.

சட்டப் பிரிவு கூறுவதாவது :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **71–வது பிரிவு,** தொலைந்து போன பொருளைக் கண்டெடுத்தவரின் பொறுப்பைப் பற்றி பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, 'ஒரு நபர் மற்றொரு நபருக்குச் சொந்தமான பொருட்களை கண்டெடுத்து அவரது பாதுகாப்பில் வைத்துக் கொண்டால், அவர் ஒப்படைவு பெறுபவரின் பொறுப்புகளையே பெறுகிறார்.' (இதனை **'இந்திய ஒப்பந்தச் சட்டம் – I'** என்ற நூலில் 'ஒப்பந்தப் போல்வுகள்' எனும் அத்தியாயத்தில் நாம் கண்டுள்ளோம்.)

தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவரின் உரிமைகள் (Rights of Finder of lost goods) :

1. பற்றுரிமை (Right of Lien) (பிரிவு 168) : பொருளைப் பாதுகாத்து, அதை பராமரித்ததற்கான செலவைப் பெறும் வரை, அப்பொருளின் மீது அவருக்கு பற்றுரிமை உண்டு. தன்னிடமே அப்பொருளை இருத்தி வைத்துக் கொள்ளலாம்.

2. சன்மானம் பெற வழக்காடும் உரிமை (Right to sue for reward) (பிரிவு 168) : பொருளின் உரிமையாளர் அப்பொருளைக் கண்டுபிடித்துத் தருபவருக்கு உரிய சன்மானம் அளிக்க முனைவு செய்திருந்தால், அச்சன்மானத்திற்காக வழக்காடும் உரிமை அப்பொருளைக் கண்டெடுத்தவருக்கு உண்டு. சன்மானம் பெறும் வரை அப்பொருளை அவர் தன்னிடமே வைத்திருக்கலாம்.

3. விற்பனை உரிமை (Right of Sale) (பிரிவு 169) : தொலைந்து போன பொருளைக் கண்டெடுத்தவர், பின்வரும் சூழல்களில் அதனை விற்பனை செய்யலாம்.

(அ) பொருளின் உரிமையாளரை தேடும் முயற்சி எடுத்தும் கண்டுபிடிக்க முடியாமல் போனால்;

(ஆ) அழுகும் தன்மையுடைய பொருளாக இருந்தால்;

(இ) பொருளின் உரிமையாளர் அதைக் கண்டுபிடிப்பதற்கான சட்டப் படியான செலவுகளைத் தர மறுத்தால்;

(ஈ) சட்டப்படியான செலவினங்கள் பொருளின் மதிப்பில் மூன்றில் இரண்டு பங்காக இருந்தால்.

தொலைந்த பொருளைக் கண்டெடுத்தவரின் பொறுப்புகள் (அல்லது) கடப்பாடுகள் [Liabilities (or) Obligations of Finder of lost goods] :

1. பொருளின் மீது நியாயமான கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொண்டும் இழப்பு ஏற்பட்டால், அதற்கு அவர் பொறுப்பல்ல.

2. பொருளை தன் சொந்த நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.

3. கண்டெடுத்த பொருளைத் தன் சொந்தப் பொருளுடன் கலக்கக் கூடாது.

4. பொருளின் உரிமையாளரை கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

6. Write a note on termination of Bailment. (ஒப்படைவின் முடிவு குறித்து குறிப்பொன்றை வரைக.)

1. **காலக்கெடு முடிந்தவுடன் (On the expiry of stipulated period):** ஒரு ஒப்படைவின் கெடு தேதி முடிவடைந்தவவுடன் ஒப்படைவும் முடிவுக்கு வருகிறது.

2. **நோக்கம் நிறைவேறியவுடன் (On fulfilment of the purpose):** எந்த நோக்கத்திற்காக ஒப்படைவு செய்யப்பட்டதோ, அந்நோக்கம் நிறைவேறியவுடன் ஒப்படைவு முடிவுக்கு வருகிறது.

3. **முரணாகப் பயன்படுத்துதல் (Inconsistent use of goods):** ஒப்படைவு நிபந்தனைகளுக்கு ஒப்படைவு பெறுபவர் மாறுபட்டு நடந்தாலும் அல்லது பொருளை முரணான வழியில் பயன்டுத்தினாலும் ஒப்படைவு முடிவுக்கு வருகிறது. **(பிரிவு 153).**

4. **கருப்பொருள் சிதைவு (Destruction of the subjet matter):** ஒப்படைவின் கருப்பொருள் சிதைவடைந்தால் ஒப்படைவு முடிவுக்கு வருகிறது.

5. **நன்கொடையான ஒப்படைவு (Gratuitous Bailment) (பிரிவு 159):** நன்கொடையான ஒப்படைவு கெடு தேதிக்கு முன் எந்த நேரத்திலும் முடிவடையலாம். ஆனால் நட்டம் ஏற்பட்டால் அதனை ஒப்படைவு பெற்றவர் ஈடு செய்ய வேண்டும்.

6. **மரணம் (By Death) (பிரிவு 162) :** நன்கொடையான ஒப்படைவானது, ஒப்படைவு செய்பவர் அல்லது ஒப்படைவு பெறுபவர் இறப்பதால் முடிவுக்கு வருகிறது.

அடகு
[Pledge]

7. What is a Pledge ? What are the rights of a Pawnor and a Pawnee? (அடகு என்றால் என்ன? அடகு வைத்தவர் மற்றும் அடகு பெறுபவரின் உரிமைகள் யாவை ?)

(அல்லது)

Pledge - Write Short Notes. (அடகு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"Pledge is a form of bailment". Discuss. ("அடகு என்பது ஒரு வகை ஒப்படைப்பே ஆகும்" – ஆராய்க.)

(அல்லது)

Distinguish between: Pledge and Bailment. (வேறுபடுத்துக. – அடகு மற்றும் ஒப்படைவு.)

(அல்லது)

In what kind of bailment is the bailee called a Pawnee ? What are his rights ? (எந்தவிதமான ஒப்படைவில் ஒப்படைவு பெறுபவர் அடகு பெறுபவர் என்று அழைக்கப்படுகிறார் ? அவருடைய உரிமைகள் யாவை ?)

அடகு - வரையறை (Definition) :

அடகு என்பது ஒரு வகை ஒப்படை வாகும். ஒரு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது உறுதியுரை ஒன்றை நிறைவேற்றுவதற்கு பிணையமாக (Security) ஒரு அசையும் பொருளை ஒப்படைப்பது 'அடகு', என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **172–வது பிரிவு**[1] கூறுகிறது. இதில் ஒப்படைவு செய்பவர், **'அடகு வைப்பவர்' (Pawnor or Pledger)** என்றும், ஒப்படைவு பெறுநர், **'அடகு பெறுபவர்' (Pawnee or Pledgee)** என்றும் அழைக்கப்படுவர்.

எடுத்துக்காட்டு:

A என்பவர் ரூ. 10,000/–த்தை B என்பவரிடமிருந்து கடனாகப் பெறுகிறார். அக்கடனை திரும்பச் செலுத்துவதற்கு பிணையமாக A தனது தங்கச் சங்கிலியை B-யிடம் ஒப்படைக்கிறார். இந்த ஒப்படைவு 'அடகு' எனப்படும்.

'அடகு என்பது ஒருவகை ஒப்படைவே ஆகும்' - எவ்வாறு? (அல்லது) அடகிற்கும் ஒப்படைவிற்கும் உள்ள ஒற்றுமைகள் (Similarities) :

1. அடகு, ஒப்படைவு ஆகிய இரண்டும் தரப்பினர்களின் ஒப்பந்தம் மூலம் உருவாகின்றன.

2. மேற்கண்ட இரண்டிலும் ஒருவர் தனது பொருளை மற்றொருவரிடம் ஒப்படைக்கிறார்.

3. இரண்டிலும் பொருளின் உடைமை மட்டுந்தான் மாற்றம் செய்யப்படுகிறது. அதன் உரிமைமூலம் (title or ownership) மாற்றித்தரப்படுவதில்லை.

4. இரண்டிலும் அசையும் பொருள் (movable property) மட்டுமே ஒப்பந்தத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளன.

5. இரண்டிலுமே குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறியதும், அதற்குரிய பொருள் திரும்ப அளிக்கப்பட வேண்டும்.

எனவே **'அடகு என்பதும் ஒருவகை ஒப்படைவே ஆகும்'** எனப்படுகிறது. எனினும் இவையிரண்டிற்குமிடையே பின்வரும் **சில வேற்றுமைகளும்** உண்டு.

---

1. The bailment of goods as security for payment of a debt or performance of a promise is called "pledge". - **Section 172 of the Indian Contract Act, 1872.**

அடகிற்கும் ஒப்படைவிற்கும் உள்ள வேற்றுமைகள் (அல்லது) வேறுபாடுகள் (Dissimilarities or Distinctions):

அடகு [Pledge]	ஒப்படைவு [Bailment]
1. நோக்கம் : கடனைத் திரும்பச் செலுத்தல் அல்லது உறுதியுரை ஒன்றை நிறைவேற்றுதல் மட்டுமே இங்கு நோக்கமாக இருக்க வேண்டும்.	எந்த நோக்கமாகவும் இருக்கலாம். (பழுது பார்த்தல், ஏவலுக்கினங்க செய்து முடித்தல், பயன்படுத்தல் போன்று)
2. பயன்படுத்தும் உரிமை: அடகு பெறுபவர் அடகுப் பொருளை பயன் படுத்த முடியாது.	ஒப்படைவு பெறுபவர், ஒப்படைவுப் பொருளை பயன்படுத்தும் உரிமை பெற்றுள்ளார்.
3. விற்கும் உரிமை: அடகு வைப்பவர் கடனைத் திரும்பச் செலுத்தத் தவறினால், அவருக்கு நியாயமான அறிவிப்பு கொடுத்த பிறகு, அப் பொருளை விற்றுவிடலாம்.	ஒப்படைவு பெறுபவர், தன்னுடைய சட்ட ரீதியான செலவுகளுக்காக, ஒப்படைவு செய்யப்பட்ட பொருளை தன்னிடம் இருத்திக் கொள்ளும் பற்றுரிமை (Lein) பெற்றவர் அல்லது அச்செலவுகளைப் பெற வழக்குரைக்கலாம்.

அடகு வைப்பவர் மற்றும் பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் (Rights and Duties of Pawnor and Pawnee):

அடகு வைப்பவர் மற்றும் அடகு பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் பெரும்பாலும் ஒப்படைவு செய்பவர் (Bailor) மற்றும் ஒப்படைவு பெறுபவர் (Bailee) ஆகியோரின் உரிமைகளையும் கடமைகளையும் ஒத்ததாகும். இருந்தபோதிலும் அடகு வைப்பவர் மற்றும் அடகு பெறுபவரின் உரிமைகளும் கடமைகளும் வேறு சில சிறப்பம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அவை வருமாறு :

அடகு வைப்பவரின் உரிமைகளும் கடமைகளும் (Rights and Duties of Pawnor or Pledger) :

1. அடகுக் கடனை மீட்கும் உரிமை (Right to redeem debt) (பிரிவு 177): அடகு கடனைச் செலுத்தவோ அல்லது உறுதியுரையை நிறைவேற்றவோ காலம் குறிப்பிடப்பட்டிருந்தால், அக்காலக் கெடுவிற்குள் கடனைத் தீர்த்து அடகுப் பொருளை மீட்க அடகு வைத்தவருக்கு உரிமையுண்டு. ஆனால் மேற்படி காலக் கெடுவிற்குள் கடனைச் செலுத்தத் தவறினால், அடகு பெற்றவர், அடகுப்

பொருளை விற்பனை செய்வதற்கு முன்னர் ஏதேனும் ஒரு நாளில் கடனைச் செலுத்தி அடகுப் பொருளை மீட்கலாம். அதாவது விற்பனை நடைபெறாத வரை அடகு வைப்பவர் அடகுப் பொருள்களை மீட்க உரிமையுடையவர். கடன் கொடுத்த பணத்தை திரும்பச் செலுத்துவதன் மூலம், அடகுப் பொருட்களை மீட்பது அடகு வைப்பவரின் முழுமையான உரிமையாகும்.

2. அடகுப் பொருளின் அதிகரித்த மதிப்பைப் பெறும் உரிமை (Right to get accretion to the goods) : அடகு வைத்த பொருளின் மதிப்பு அதிகரித்தால், அடகு வைத்தவர் அதையும் திரும்பப் பெற உரிமையுடையவர் ஆவார்.

M.R. Dhawan v. Madan Mohan[1] – இவ்வழக்கில் ஒரு நிறுவனத்தின் பங்குகள் அடகு வைக்கப்பட்டன. அடகுக் காலத்தில் அப்பங்குகளின் பங்காதாயம் (Dividend) அதிகரித்தது. அதைப் பெற அடகு வைத்தவருக்கு உரிமை உண்டு எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

3. அடகுப் பொருளை பாதுகாக்கவும், பராமரிக்கவும் வேண்டுமெனக் கோரும் உரிமை : அடகு வைப்பவர், அடகுப் பொருளைப் பாதுகாக்கும்படியும் பராமரிக்கும்படியும் அடகு பெறுபவரைக் கட்டாயப்படுத்தலாம்.

4. கடனைத் திரும்பச் செலுத்தும் கடமை (Duty to repay the debt): அடகு வைப்பவர் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் கடனைத் திரும்பச் செலுத்தி, அடகுப் பொருள்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அடகு பெறுபவரின் உரிமைகளும், கடமைகளும் (Right and Duties of Pawnee or Pledgee) :

1. இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை (Right to retain) : இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 173–வது பிரிவின்படி கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு மட்டுமன்றி, அக்கடனுக்குரிய வட்டிக்காகவும், அடகு வைக்கப்பட்ட பொருளை பாதுகாத்து வைத்திருந்ததற்கு ஏற்பட்ட செலவினங்களுக்காகவும், அவ்வடகுப் பொருளை அடகு பெறுபவர் தன்னிடமே இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை உடையவர் ஆவார். அடகு பெறுபவர் குறிப்பிட்ட பற்றுரிமையைத்தான் அடகுப் பொருள் மீது செயல்படுத்த முடியும் (Right to particular lien).

2. பின்னிட்டு எழுந்த கடன்களுக்காக இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை (Right to retain for subsequent advance) : 174–வது பிரிவின்படி எந்தக் கடனுக்காக ஒரு பொருள் அடகு வைக்கப்பட்டதோ, அக்கடன் தவிர மற்ற கடன்களுக்காக அப்பொருளை அடகு பெறுபவர் தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ள முடியாது. அடகு பெறுபவர், அடகு வைப்பவருக்கு ஒரு கடன் தீர்ந்த பிறகு, மேலும் கடன் அளித்தால் அவர் தம்மிடம் ஏற்கனவே அடகு வைக்கப்பட்ட பொருளை தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ள அவருக்கு உரிமையுண்டு.

1. A.I.R. 1969 Del. 313

3. அசாதாரண செலவுக்கான உரிமை (Right to extraordinary expenses) : 175–வது பிரிவின்படி அடகுப் பொருட்களை பாதுகாத்துப் பராமரிக்க, அடகு பெறுபவர் செய்த அசாதாரணச் செலவுகளை அடகு வைப்பவரிடம் இருந்து பெறும் உரிமை உடையவர். இச்செலவுகளுக்காக அடகு பெறுபவர் வழக்காடலாமே தவிர பொருட்களை தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ள முடியாது.

4. அடகு வைப்பவர் தவறு புரிந்தால் அடகு பெறுபவரின் உரிமை (Pawnee's right where pawnor makes default) : 176–வது பிரிவின்படி அடகு வைத்தவர் அடகுக் கடனைக் குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்பச் செலுத்த தவறினால், அடகு பெறுபவர் பின்வரும் உரிமைகளை செயல்படுத்தலாம்.

(அ) அடகு பெற்றவர் அக்கடனுக்காக அடகு வைத்தவர் மீது வழக்கு தொடரலாம்.

(ஆ) அடகு வைத்த பொருளை இணைப் பிணையமாக (Collateral Security) தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ளலாம்.

(இ) அடகு வைத்தவருக்கு நியாயமான அறிவிப்பு செய்தபின் அடகு வைத்த பொருளை விற்பனை செய்யலாம். அத்தகைய விற்பனையால், கடனைவிட குறைந்த பணமே கிடைத்திருப்பின், அடகு வைத்தவர் மீதித் தொகையை செலுத்த வேண்டியவராகிறார் அல்லது அத்தகைய பணம் கடனுக்கதிகமாக இருப்பின், அடகு பெறுபவர் கூடுதலாக வந்த விற்பனைத் தொகையை அடகு வைத்தவருக்குச் செலுத்த வேண்டும்.

Lallan Prasad v. Rahmat All[1]

கடனை மீட்க, அடகு பெறுபவர் வழக்கிடும்போது அடகுப் பொருள்களைத் தம்மிடமே வைத்திருக்கலாம். ஆனால் அடகு வைப்பவர் கடன் தொகையைச் செலுத்திய உடன் பொருள்களை மீட்க உரிமை படைத்தவர் என்பதால், கடன் செலுத்தப் பட்டவுடன் அவற்றைத் திருப்பித் தருதல் வேண்டும். கடன் தொகையை விட அடகுப் பொருளின் மதிப்பு குறைவாக இருக்கும்போது, அடகு பெறுபவர் அப்பொருளின் மதிப்பளவிற்கு பற்று வரவு வைத்துக் கொண்டு, மீதமுள்ள தொகையினைப் பெற உரிமை படைத்தவராவார், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

5. அடகுப் பொருட்களை பயன்படுத்தக் கூடாது : அடகு பெறுபவர் அடகுப் பொருள்களைத் தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

முடிவுரை :

மேற்கூறிய உரிமைகள் மற்றும் கடமைகளுடன் ஒப்படைவு செய்பவர் மற்றும் ஒப்படைவு பெறுபவர்களின் உரிமைகளும், கடமைகளும் அடகு வைப்பவர் மற்றும் அடகு பெறுபவர்களுக்கு பொருந்தக் கூடியதாக உள்ளது.

1. A.I.R. 1967 SC. 1322

8. When is a pledge created by non-owners valid ? (உரிமையற்றவர்களால் உருவாக்கப்படும் ஒரு அடகு எப்பொழுது செல்லுபடியாகும்?)

(அல்லது)

Pledge by non-owners - Write short notes. (உரிமை அல்லாதோர் அடகு வைத்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

'அடகு' என்பது, அடகிற்குரிய பொருட்களின் உரிமையாளர்களால் செய்யப்படும் பொழுதுதான் செல்லத்தக்கதாகிறது. ஆனால் சில குழ்நிலைகளில் அப்பொருள்களுக்கு உரிமையற்றவர்களால் உருவாக்கப்படும் 'அடகும்' செல்லத் தக்கதாகிறது. அச்சூழ்நிலைகள் வருமாறு:

உரிமையற்றவர்களால் உருவாக்கப்படும் அடகு செல்லத் தக்கதாகும் சூழ்நிலைகள்:

1. வணிக முகவரால் அடகு (Pledge by Mercantile Agent) (பிரிவு 178) : வணிக முகவர் என்பவர் 'பொருட்களை விற்கவோ, விற்பதற்காக அனுப்பீடு செய்யவோ, பொருட்களை வாங்கவோ, பொருட்களை பிணையம் வைத்து கடன் பெறவோ அதிகாரம் பெற்ற நபர் ஆவார், என சரக்கு விற்பனைச் சட்டத்தின் பிரிவு 2(9) கூறுகிறது. எனவே வணிக முகவர் ஒருவர், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருள்களின் உரிமையாளரின் ஒப்புதல் பெற்று அடகு ஏற்படுத்தலாம்.

எனினும், வணிக முகவர் ஒருவர் செய்யும் அடகு செல்லத்தக்கதாக ஆவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(1) வணிக முகவர் பொருட்களின் உடைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) அந்த உடைமை, உரிமையாளரின் இசைவுடன் இருக்க வேண்டும்.

(3) அடகானது அவரது சாதாரண வணிக நடைமுறையில் வைக்கப்பட வேண்டும். வேறெந்த முறையில் வைத்தாலும் அந்த அடகு செல்லாது. எடுத்துக் காட்டாக, வணிக முகவர், ஒரு பொருளை, தானே அடகு வைப்பதற்கு பதிலாக, தனது நண்பனைக் கொண்டு அடகு வைத்தால் அது செல்லாது.

(4) அடகு பெறுபவர் நல்லெண்ணத்துடனும் நம்பிக்கையுடனும் செயல்பட்டிருக்க வேண்டும்.

2. தவிர்தகு ஒப்பந்தத்தின் கீழ் பொருளின் உடைமையை பெற்றவரின் அடகு (Pledge by person in possession under a voidable contract) (பிரிவு 178A) : ஒரு பொருளின் உடைமையானது வலுக்கட்டாயம், மோசடி, தகாத

செல்வாக்கு ஆகியவற்றின் வாயிலாக பெறப்பட்ட இசைவினால் தோன்றிய தவிர்தகு ஒப்பந்தமொன்றின் கீழ் பெறப்பட்டிருந்து, அவ்வொப்பந்தத்தை நீக்கும் (தவிர்க்கும்) உரிமை கொண்டவர், அவ்வாறு நீக்காமல் இருப்பின், அப்பொருளின் உடைமையைப் பெற்றுள்ளவர், ஒரு செல்லத்தக்க அடகை உருவாக்கலாம். ஆனால் இதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அதாவது முன்கண்டபடி,

(1) உண்மையான உரிமையாளர் ஒப்பந்தத்தை நீக்கும்முன் அடகு வைத்திருத்தல் வேண்டும்;

(2) அடகு பெறுபவர் நல்லெண்ணத்துடனும், அடகு வைப்பவருடைய உரிமை குறைபாடுடையது என்பதை அறியாமலும் செயல்பட்டிருக்க வேண்டும்.

3. பொருட்களின் உடைமையை விற்பனைக்குப் பின்னும் வைத்திருக்கும் விற்பனையாளர் (Pledge by seller in possession after sale) (சரக்கு விற்பனைச் சட்டத்தின் 30–வது பிரிவு) : பொருட்களை விற்பனை செய்தவர். விற்பனைக்குப் பின் அப்பொருள்களின் உரிமையாளர் அல்ல. எனினும் அவர் அப் பொருள்களை அடகு வைக்கலாம். ஆனால்,

(1) அடகு பெறுபவர் நல்லெண்ணத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும்.

(2) அவர் அப்பொருளின் விற்பனை பற்றி அறிந்திருத்தல் கூடாது.

4. வரம்புடைய நலனைக் கொண்ட அடகு வைப்பவர் (Pledger having limited interest) (பிரிவு 179) : பொருளின் மீது உரிமை இல்லாவிட்டாலும் அடகு வைப்பவர், அப்பொருளின் மீது குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட அக்கறையுடையவராக (நலன் கொண்டவராக) இருப்பின், அவ்வரம்பின் அளவிற்கு அடகு வைக்கலாம். அதாவது அடகு பெற்றவர் தான் அடகாக பெற்ற பொருளை, மீண்டும் அடகு வைக்கலாம்.

5. உடைமை கொண்டுள்ள இணை உரிமையாளர் வைக்கும் அடகு (Pledge by co-owners in possession) : ஒரு பொருளின் உடைமையை கூட்டாக கொண்டுள்ள இணை உரிமையாளர்களில் ஒருவர் அப்பொருளை மற்ற இணை உரிமையாளர்களின் இசைவுடன் அடகு வைக்கலாம். இது ஒரு செல்லத் தக்க அடகாகும்.

-oOo-

முகவரியம்
[Agency]

1. What is an Agency? Explain the essentials of the Contract of Agency. (முகவரியம் என்றால் என்ன? முகவரிய ஒப்பந்தத்தின் சிறப்புக் கூறுகளை விளக்குக.)

(அல்லது)

'Consideration is not necessary in contract of agency'- Comment. ('முகவரிய ஒப்பந்தம் ஏற்பட மறுபயன் தேவையில்லை' – விமர்சிக்க.)

(அல்லது)

'Knowledge of the Agent is the knowledge of the Principal'- Discuss. ('முகவர் அறிந்தமை முதல்வர் அறிந்தமையாகும்'–திறனுரைக்க.)

முகவரியம் (Agency) - விளக்கம் :

வியாபாரம், தொழில் ஆகியவை வேகமாக வளர்ந்து வரும் இன்றைய உலகில் ஒரு வியாபாரி தானே நேரடியாக எல்லாச் செயல்களிலும் ஈடுபட்டு அவற்றை நிறைவேற்ற முடிவதில்லை. அதற்காக அவ்வியாபாரி மற்றொரு நபரின் துணையை நாடுகிறான். அவரிடம் அச்செயல்களில் சிலவற்றை ஒப்படைத்து நிறைவேற்றச் செய்கிறான். அந்த நபர்தான் இங்கு 'முகவர்' (Agent) என்று அழைக்கப்படுகிறார். அவரை நியமிக்கும் மேற்படி வியாபாரி 'முதல்வர்' (Principal) என்றழைக்கப்படுகிறார். எந்த ஒப்பந்தத்தின் மூலம் அவர் நியமிக்கப்படுகிறாரோ அந்த ஒப்பந்தத்தை 'முகவரியம்' (Agency) என்று குறிப்பிடலாம். முகவரியச் சட்டமென்பது, 'பிறர் வழிச் செய்தலும் தானே செய்தலாம்' (Quit facit per aluim facit per se) எனும் இலத்தீன் முதுமொழியை அடிப்படையாகக் கொண்டது. அதாவது பிறர்வழி ஒன்றைச் செய்பவன் தானே அதைச் செய்பவனாகக் கருதப்

படுகிறான் என்பதாகும். முகவரியம் குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 182 முதல் 238 வரை உள்ள பிரிவுகள் விளக்குகின்றன.

முகவரும் முதல்வரும் (Agent and Principal) - வரையறை:

இந்திய ஒப்பந்த சட்டத்தின் 182–வது பிரிவு முகவருக்கும் முதல்வருக்கும் பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி, 'முகவர்' (Agent) என்பவர் "மற்றொருவருக்காக ஏதேனும் செயல் புரிய அல்லது மூன்றாம் நபர்களுடன் மற்றொருவர் சார்பில் செயல்பட அமர்த்தப்படும் ஒரு நபர் ஆவார்". எவருக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ அல்லது எவரது சார்பில் செயல்படப்படுகிறதோ, அந்நபர் 'முதல்வர்' (Principal) என்றழைக்கப்படுவார். மேற்கண்ட முதல்வருக்கும் முகவருக்கும் இடையே சட்ட உறவை உண்டாக்கும் ஒப்பந்தம் 'முகவரிய ஒப்பந்தம்' (Contract of Agency) என்றழைக்கப்படுகிறது.

முகவரிய ஒப்பந்தத்தின் சிறப்புக் கூறுகள் (Essentials of the Contract of Agency):

முகவரியம் உருவாக்கப்படும் நோக்கம், முதல்வருக்கும் மூன்றாம் நபருக்கும் இடையில் சட்ட முறையான உறவை ஏற்படுத்துவதாகும். சாதாரணமாக, எல்லா ஒப்பந்தங்களுக்கும் தேவையான அடிப்படைக் கூறுகள் இதற்கும் தேவை. எனினும் பின்வருபவை முகவரியத்திற்கான சிறப்புக் கூறுகளாகும்.

1. யார் முகவரை நியமிக்கலாம்? (Who may employ Agent?) (பிரிவு 183) : முகவரை நியமிக்கும் முதல்வர் ஒப்பந்தம் செய்யும் தகுதியுடையவராக இருக்க வேண்டும். உரிமை வயதை அடைந்தவரும், நல்ல மனநிலை உடைய எவரும் முதல்வராக இருந்து முகவரை நியமிக்கலாம். எனவே இளவர், பித்து நிலையர், குடிகாரர் போன்றோர் தமக்குச் சார்பாக ஒரு முகவரை நியமிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

2. யார் முகவராக இருக்கலாம் ? (Who may be an Agent?) (பிரிவு 184): முதல்வருக்கும், மூன்றாம் நபர்களுக்குமிடையே எவர் வேண்டுமானாலும் ஒரு முகவராக இருக்கலாம். அவர் தனது செயல்களுக்கு தனது முதல்வரைப் பொறுப் பாக்கலாம். ஆனால் உரிமை வயதை அடையாதவர், பித்து நிலையர் ஆகியோர் ஒரு முகவராக இருக்க முடியாது. அத்தகு நபர்கள் தங்கள் முதல்வரைப் பொறுப் பாக்க முடியாது.

3. முகவரியத்தை உண்டாக்க மறுபயன் தேவையில்லை (No consideration is necessary to create an Agency) (பிரிவு 185) : ஒரு ஒப்பந்தம் செல்லத்தக்கதாக வேண்டுமெனில், அதற்கு 'மறுபயன்' அவசியம் தேவை. ஆனால் முகவரிய ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் மறுபயன் தேவையில்லை. ஏனெனில்

1. (1928) Lah. 854

ஒரு நபர் தனது வேலையை மற்றொரு நபரின் மூலமாகச் செய்வதால், அது அந்த நபருக்கு உள்ள ஒரு குறையாகவே (detriment) கருதப்படும். எந்த ஒரு வேலையையும் தானே நேரடியாக நின்று செய்தால், அதன் பலாபலன் நன்றாக இருக்கும். மற்றொருவர் மூலமாகச் செய்தால் பலன் சற்று குறைவாகவே இருக்கும். இந்தக் 'குறையே' முகவரிய ஒப்பந்தத்தில் மறுபயனாகக் கருதப்படுகிறது. எனவே மறுபயன் என்பது, முகவர் பெறுகின்ற ஊதியம் (Remuneration) என்ற வடிவில் தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. **உதாரணமாக,** A மற்றும் B-க்கு இடையேயுள்ள முகவரிய ஒப்பந்தத்தில் மேற்படி A என்பவர் B-க்கு தரகுத் தொகை கொடுப்பதாக எவ்வித நிபந்தனையும் (condition) இல்லை. எனினும், மேற்படி B அவ்வொப்பந்தத்திற்கு கட்டுப்பட்டவராகிறார். இது பிரிவு 185–ல் மேற்கண்டவாறு விரிவாக கூறப்படாவிட்டாலும், **'முகவரிய ஒப்பந்தம் ஏற்பட மறுபயன் தேவையில்லை'** என்று பொதுப்படையாக கூறப்பட்டுள்ளது.

4. நன்னம்பிக்கை (Good faith): முகவரிய ஒப்பந்தம் முழு நம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தமாகும். எனவே அந்த ஒப்பந்தம் ஏற்படுவதில் முதல்வரைப் பாதிக்கின்ற வகையிலான விவரம் எதுவும் முகவருக்கு தெரிந்தால், அதை முதல்வரிடம் முகவர் வெளிப்படுத்திவிட வேண்டும்.

5. **விருப்பம் (Will):** முதல்வர் சார்பில் முகவராகச் செயல்பட அம்முகவருக்கு விருப்பம் இருக்க வேண்டும்.

2. 'Delegatus non-potest delegare' - Explain. (**'அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது'–விளக்குக.**)

(அல்லது)

Delegatus non - potest delegare - Write short Notes. (**'அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது'– சிறு குறிப்பு எழுதுக.**)

(அல்லது)

Distinguish between Sub-agent and Substituted agent. (துணை முகவரை மாற்று முகவரிடமிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

Sub Agent – Write Short Notes. (துணை முகவர் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain substituted agent. (பகர முகவருக்கு விளக்கவுரை தருக).

(அல்லது)

Substituted Agent – Write Short Notes. (மாற்று முகவர் – சிறு குறிப்பு எழுதுக.)

அளிப்படைவு பெற்றவர் மேலும் அளிப்படைவு செய்ய முடியாது (Delegatus non-potest delegare - A Delegate cannot further delegate) (பிரிவு 190) :

பொதுவாக, ஒரு முகவர், தன் முகவரியப் பணியை, தானாகவே செய்தாக வேண்டும். ஒரு முகவர் என்பவரே, முதல்வரிடமிருந்து அதிகார அளிப்படைவு பெற்றவர்தான். எனவே அவர் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் மற்றொருவருக்கு அளிப்படைவு செய்ய முடியாது. ஒரு முதல்வர், முகவரின் திறமையில் நம்பிக்கை வைத்து அவரை முகவராக அமர்த்துகிறார். அவ்வாறு அவர் அளித்த அதிகாரத்தை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுப்பது, முதல்வருக்கு நியாயமற்றதாகவும், ஊறு விளைவிப்பதாகவும் அமையும்.

இக்கோட்பாடு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **190–வது பிரிவில்** வலியுறுத்தப்பட்டுள்ளது. அஃதாவது, 'ஒரு முகவர் ஒரு செயலை தானாகவே செய்து முடிப்பதாக வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அச்செயலைச் செய்ய மற்றொருவரை முகவராக சட்டத்துக்குகந்த முறையில் அமர்த்த முடியாது.' ஆனால் இதற்கு மேற்படி 190–வது பிரிவே இரண்டு விதிவிலக்குகளைக் கூறுகிறது. அதன்படி ஒரு முகவர் சில தருணங்களில் துணை முகவரை (Sub-Agent) அமர்த்தலாம்.

துணை முகவர் (Sub-Agent) (பிரிவு 191) :

முகவரிய அலுவலில் (in the business of agency), முதல் முகவரின் (Original Agent) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பொருட்டு, அவரால் அமர்த்தப் படும் ஒரு நபர், **'துணை முகவர்' (Sub-Agent)** ஆவார் என்று **பிரிவு 191** கூறுகிறது. அதாவது, இவர் முகவரால் அமர்த்தப்படும் முகவர். முதல்வருக்கும் துணை முகவருக்குமுள்ள உறவு, முதல் முகவருக்கும் முதல்வருக்கும் உள்ள உறவைப் போன்றதே.

மேற்படி பிரிவு 190–ன்படி ஒரு முகவர் தனக்கொரு துணை முகவரை அமர்த்த முடியாதென்றாலும், பின்வரும் இரு விதிவிலக்கான சூழ்நிலைகளில் அவ்வாறு அமர்த்தலாம். அவை (1) பொதுவான வணிக வழக்காற்றின்படி துணை முகவர் அமர்த்தப்படல் (Ordinary Custom and Trade); அல்லது (2) முகவரியத்தின் தன்மைப்படி துணை முகவர் அமர்த்தப்படல் (Nature of the Agency).

துணை முகவர் இரு விதங்களில் அமர்த்தப்படலாம் :

ஒரு துணை முகவர் (1) பிரிவு 192–ன்படி தக்க முறையில் அமர்த்தப்படும் துணை முகவராகவோ; (2) பிரிவு 193–ன்படி தகாத முறையில் அமர்த்தப்படும் துணை முகவராகவோ இருக்கலாம்.

தக்க முறையில் அமர்த்தப்படும் துணை முகவர் (Properly appointed Sub-Agent) (பிரிவு 192) :

பின்வரும் தருணங்களில் ஒரு துணை முகவர் தக்க முறையில் அமர்த்தப் பட்டவராகிறார். (1) ஒரு முதல்வர், வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ துணை முகவரை அமர்த்த அதிகாரம் வழங்கியிருந்தால்; (2) வணிக வழக்காறு அல்லது பழக்கம் அத்தகு அளிப்படைவை அனுமதித்தால், (3) துணை முகவரை அமர்த்தும் முகவரின் எண்ணத்தை முதல்வர் அறிந்திருந்தால்; (4) வணிகத்தின் தன்மை அளிப்படைவை இன்றியமையாததாக்கினால்; (5) எதிர்பாராத நெருக்கடி நிலை ஏற்பட்டு, அது துணை முகவரை அமர்த்துவதை அவசியமாக்கி விட்டால்; (6) திறமை, நம்பிக்கை, விருப்புரிமை இவற்றைப் பயன்படுத்த தேவையில்லாத எழுத்துப் பணி சார்ந்த அல்லது செயலர் பணி சார்ந்த கடமை மட்டுமே அளிப்படைவு செய்யப்பட்டால்; (7) தரப்பினர்களின் நடத்தையிலிருந்து துணை முகவரை அமர்த்தும் முகவரின் அதிகாரத்தை ஊகிக்க முடிந்தால்.

தக்க முறையில் துணை முகவர் அமர்த்தப்பட்டால், அவர் மூன்றாம் நபர்களைப் பொறுத்த வரையில் முதல்வரின் சார்பாளராக செயல்படுகிறார் என்றே பொருள். முதல்வர் அவரது செயல்களுக்கு கட்டுப்பட்டவராகவும், பொறுப்பாள ராகவும் ஆகிறார். அதே சமயத்தில் முகவர், துணை முகவரின் செயல்களுக்கு முதல்வருக்குப் பொறுப்பாளராகிறார். ஆனால் மோசடி மற்றும் வேண்டுமென்றே செய்த தவறு தவிர, வேறெதற்கும் துணை முகவர் முதல்வருக்குப் பொறுப்பானவர் அல்ல **(பிரிவு 192).**

தகாத முறையில் (அதிகாரமின்றி) அமர்த்தப்பட்ட துணை முகவர் (Improperty appointed Sub-Agent (or) Sub-Agent appointed without authority) (பிரிவு 193) :

ஒரு முகவர், முதல்வரின் அதிகாரமின்றி, தனது உரிமையை மற்றொருவருக்கு அளிப்படைவு செய்தாலும் அல்லது மேற்கூறிய எந்தக் காரணமுமின்றி ஒரு துணை முகவரை அமர்த்தினாலும், அங்கு தகாத முறையில் துணை முகவர் அமர்த்தப் பட்டுள்ளார் என்றே கருதப்படும். அவ்வாறு ஒரு துணை முகவரை அமர்த்தினால், அங்கு அவரை அமர்த்திய முதல் முகவர், அத்துணை முகவருக்கு முதல்வராகிறார். இதனால் துணை முகவரின் செயல்களுக்கு, முதல் முகவரானவர், முதல்வருக்கும் மூன்றாம் நபர்களுக்கும் பொறுப்பாகிறார். இங்கு அவ்வாறு அமர்த்தப்படுபவர் முதல்வரின் சார்பில் செயல்படவில்லை; மாறாக முதல் முகவரின் சார்பாக செயல் படுகிறார். எனவே, முதல்வர் அவருடைய செயல்களுக்கு பொறுப்பல்ல. அவரும் முதல்வருக்குப் பொறுப்பாகமாட்டார்.

துணை முகவரின் அதிகார முடிவு (Termination of Sub-Agent's Authority) (பிரிவு 210) :

முகவரின் அதிகாரம் முடிவுற்றவுடன், அவரால் அமர்த்தப்பட்ட எல்லாத் துணை முகவாகளின் அதிகாரமும் முடிவுறும் என்று பிரிவு 210 கூறுகிறது.

மாற்று முகவர் (Substitued Agent) (பிரிவு 194) :

முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க முகவரால் பெயர் கூறப்படும் நபர் 'மாற்று முகவர்' (Substituted Agent) ஆவார். ஒரு முகவர், முகவரிய அலுவலுக்கு முதல்வருக்காகச் செயல்பட வேறொரு நபரின் பெயரைக் கூற வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரம் பெற்று, அவ்வாறு மற்றொரு நபரின் பெயரை முறையோடு கூறியிருந்தால் அந்த நபர் துணை முகவராக மாட்டார்; மாறாக 'மாற்று முகவர்' என்றே அழைக்கப்படுவார். முகவரிய அலுவலின் ஒரு குறிப்பிட்ட பகுதி, மாற்று முகவர் ஒருவரிடம் அளிக்கப்பட்டால், அவ்வாறு அளிக்கப்பட்ட பகுதியளவிற்கு அவர் முதல்வரின் முகவராவார்.

உதாரணமாக, கடனை வசூல் செய்ய ஒரு முகவருக்கு அதிகாரம் அளித்து, அம்முகவர், இந்நோக்கத்திற்காக வழக்குரைஞர் ஒருவரை மாற்று முகவராக அமர்த்தியிருந்தால், அவ்வழக்குரைஞர் இந்நோக்கத்திற்கு மட்டிலும் மாற்று முகவராவார். மாற்று முகவருக்கும், முதல்வருக்கும் இடையே சட்டப்படியான ஒப்பந்த உறவு ஏற்படுகிறது. எனவே மாற்று முகவரால் ஏற்படும் இழப்புகளுக்கு அவர் மேல் முதல்வர் வழக்குரைக்கலாம். இது போன்றே மாற்று முகவர் தனது ஊதியத்திற்கு முதல்வர் மேல் வழக்குரைக்கலாம்.

துணை முகவருக்கும், மாற்று முகவருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் (Distinctions between a Sub-Agent and a Substituted Agent):

துணை முகவர் [Sub-Agent]	மாற்று முகவர் [Substituted Agent]
1. அமர்த்தப்படும் முறை : வணிக வழக்காறு, முகவரியத்தின் தன்மை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட சூழ்நிலைகளில் முகவரால் அமர்த்தப்படுகிறார்.	முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க முகவரால் பெயர் கூறப்பட்டு அமர்த்தப் படும் நபர் 'மாற்று முகவர்' (Substituted Agent) ஆவார்.
2. ஏவலும் கட்டுப்பாடும் : முகவரின் ஏவலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் இவர் உட்பட்டவர்.	முதல்வரின் ஏவல் மற்றும் கட்டுப் பாட்டின் கீழ் இவர் பணியாற்றுவார்.

துணை முகவர் [Sub-Agent]	மாற்று முகவர் [Substituted Agent]
3. சட்டப்படியான ஒப்பந்த உறவு : முதல்வருக்கும் துணை முகவருக்கும் இடையில் ஒப்பந்த உறவு இல்லை. முதல்வர் துணை முகவர் மீதும், துணை முகவர் முதல்வர் மீதும் வழக்காற்ற முடியாது.	முதல்வருக்கும் மாற்று முகவருக்கும் இடையே சட்டப்படியான ஒப்பந்த உறவு உண்டு. அவர்களிருவரும் ஒருவருக்கு எதிராக மற்றவர் வழக்காற்றலாம்.
4. பொறுப்பு : துணை முகவரின் செயல்களுக்கு முகவரே முதல்வருக்கு பொறுப்பாவார்.	தவறுகளுக்கு அல்லது மாற்று முகவரின் செயல்களுக்கு முகவர், முதல்வருக்குப் பொறுப்பாக மாட்டார்.

3. Explain the different types of agents. (முகவர்களின் பல்வேறு வகைகளை விளக்குக.)

(அல்லது)

Classify the different types of agents based on their functions. (முகவர்களின் பணிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களை பல்வேறு வகைகளாக வகைப்படுத்துக.)

(அல்லது)

Kinds of agents - Write short notes. (முகவர்களின் வகைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Mercantile Agent - Write short notes. (வணிக முகவர் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Del credere agent - Write short notes. (பிணை முகவர் – சிறு குறிப்பு எழுதுக.)

முகவர்களின் வகைகள்:

முகவர்களை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் (Authority) அடிப்படையிலும், அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பணியின் (Functions) அடிப்படையிலும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அதிகாரத்தின் அடிப்படையில் (Based on Authority) :

1. பொது முகவர் (General Agent) : ஒரு குறிப்பிட்ட வாணிபம் முழுவதையும் அல்லது தொழில் சம்பந்தப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் செய்ய முழு அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர், 'பொது முகவர்' ஆவார்.

2. சிறப்பு முகவர் (Special Agent) : ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அல்லது ஒரு குறிப்பிட்ட செயலை செய்வதற்காக நியமிக்கப்படுபவர் 'சிறப்பு முகவர்' ஆவார். உதாரணமாக, ஒரு வீட்டை விற்பனை செய்ய அல்லது வாங்க நியமிக்கப் படுபவர் 'சிறப்பு முகவர்' ஆவார்.

3. முழு முகவர் (Universal Agent): வரம்பற்ற அதிகாரத்துடன் ஆனால் அதே சமயத்தில் சட்டப்படியான செயல்களை மட்டும் முதல்வருக்காகச் செய்பவர் 'முழு முகவர்' ஆவார்.

பணியின் அடிப்படையில் (Based on Functions) :

1. வணிக முகவர் (Commercial or Mercantile Agent) : 1930-ஆம் ஆண்டு சரக்கு விற்பனைச் சட்டத்தின் பிரிவு 2(9)-ஆனது **'வணிக முகவர்'** என்பதற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி, வணிக வழக்காற்று நடைமுறையின்படி பொருள்களை விற்கவோ, அனுப்பீடு செய்யவோ, பொருள்களை வாங்கவோ, பொருள்களைப் பிணையம் வைத்துக் கடன் பெறவோ அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு நபரே, 'வணிக முகவர்' ஆவார். ஆனால் இந்த வரையறை முழுமையானதல்ல. இது எல்லா வணிக முகவர்களையும் குறிப்பிடுவதாக இல்லை. எனினும், மேற்கண்ட வரையறையின் அடிப்படையில் அமைந்த பின்வரும் முகவர்கள், வணிக முகவர்களாக கருதப்படுகிறார்கள்.

(i) சரக்குடை முகவர் (Factor) : விற்பனை செய்யும் நோக்கத்துடன், பொருள்களின் அல்லது சரக்கு உரிமைப் பத்திரத்தின் உடைமை ஒப்படைக்கப் பட்டிருக்கும் ஒரு வணிக முகவரே **'சரக்குடை முகவர்'** ஆவார். அவர் முதல்வரின் பொருள்களை வாங்கவோ, விற்கவோ, வேறுவிதமாக ஈடுபடுத்தவோ, அவற்றைப் பிணையம் வைத்துக் கடன் பெறவோ அதிகாரம் பெற்றவர். அவர் தன் பெயரிலோ, முதல்வர் பெயரிலோ அவ்வாறு செயல்படலாம். அவருக்கு பொருள்களின் விலையைப் பெற அதிகாரம் உண்டு. அவர் முதல்வருக்காக செய்த செலவுகளைப் பெறும் பொருட்டு, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சரக்குகளின் மேல் பொதுப் பற்றுரிமையுண்டு (General Lien) **(பிரிவு 171).**

(ii) தரகு முகவர் (Commission Agent) : 'தரகு' என்றழைக்கப்படும் ஊதியத்திற்காக, முதல்வரின் சார்பில் வணிக நடவடிக்கை மேற்கொள்ளும் நபர் **'தரகு வணிகர்'** அல்லது **'தரகு முகவர்'** ஆவார். இவர் பொதுவாக முதல்வருக்காக பொருள்களை வாங்க, விற்க, வணிக நடவடிக்கைகளில் ஈடுபட நியமிக்கப்படுவார்.

(iii) பிணைய முகவர் (Del Credere Agent): இம்முகவரை சென்னை வட்டார பேச்சு வழக்கின்படி 'துபாஷ்' (Dubash) என்றும், வட இந்திய பேச்சு வழக்கின்படி 'பனியன்' (Banian) என்றும் அழைப்பர். அதிகப்படியான தரகுத் தொகைக்காக (Extra Commission), இவர் தரப்பினர்களின் செல்வநிலைக்கு (Solvency) பிணையம் அளித்து, அவர்களை முதல்வரிடம் ஒப்பந்தம் கொள்ள அழைத்து வருகிறார். அவர்கள் அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றாது போனால், அதனால் முதல்வருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஈடு செய்ய பொறுப்பேற்கிறார். எனவே இவர் ஒரு **'பிணையாளராக' (Surety)** செயல்படுகிறார் என்றே கூற வேண்டும். இதனால் இவரை 'பிணைய முகவர்' என்று அழைக்கிறோம்.

(iv) இடையீட்டாளர் (Broker) : முதல்வரின் சார்பில் பொருள்களை வாங்க, விற்க, ஒப்பந்த ஏற்பாடு செய்ய அமர்த்தப்பட்டிருக்கும் முகவர் 'இடையீட்டாளர்' (Broker) எனப்படுவார். பொதுவாக, பொருள்களின் உடைமை இவரிடம் தரப்படுவதில்லை. பெரும்பாலும், முதல்வரையும் மூன்றாம் நபரையும் தொடர்புறச் செய்வதே இவரது கடமையாகும். இவர் தன் பணிக்கு **இடையீட்டுத் தரகு (Brokerage)** பெறுவார். இவர் 'விற்பனைக் குறிப்பு' (Sold Notes) அல்லது 'கொள்முதல் குறிப்பு' (Bought Notes) மூலம் ஒப்பந்த ஏற்பாடு செய்வார்.

(v) ஏலவிற்பனையாளர் (Auctioneer): பொது ஏலத்தில் தரகுத் தொகை வடிவிலான ஊயதியத்திற்காக, தனது முதல்வரின் பொருள்களை விற்பனை செய்ய அமர்த்தப்படும் முகவர், **'ஏல விற்பனையாளர்'** ஆவார். இவர் பொருள்களை விற்கும் வரை விற்பனையாளருக்கு முகவராகவும், விற்ற பின் வாங்குபவரின் முகவராகவும் செயல்படுகிறார். விற்பனைப் பணம் பெறாமல் வாங்கியவருக்கு பொருள்களை அளிக்க இவருக்கு அதிகாரம் இல்லை.

(v) வங்கியர் (Banker) : ஒரு வங்கியருக்கும், வாடிக்கையாளருக்கும் உள்ள சாதாரண உறவு, கடனாளிக்கும் கடனீந்தவருக்கும் உள்ள உறவாகும். இருப்பினும் வங்கியர், வாடிக்கையாளருக்காக பின்வருமாறு முகவரியப் பணி புரிகிறார். அவை பிணைப் பத்திரங்கள் வாங்க, விற்க, காசோலைகளுக்கு பணம் வசூல் செய்து தர, வரிகள், உரிமக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்த என சொல்லிக் கொண்டே போகலாம்.

(vi) கூட்டு முகவர் (Co-Agent) : இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூட்டாக, முதல்வருக்காக செயல்பட அமர்த்தப்பட்டால், அவர்கள் **'கூட்டு முகவர்கள்'** ஆவர்.

(vii) துணை முகவர் (Sub-Agent) : ஒரு முதல் முகவரால் தன்னுடைய கட்டுப்பாட்டிலும் ஏவலின் கீழும் இயங்கி, முகவரியத்திற்காக செயல்பட அமர்த்தப்படும் நபர் **'துணை முகவர்'** ஆவார்.

4. What are the different ways by which an agency is created?
(ஒரு முகவரியம் உருவாக்கப்படும் பல்வேறு வழிகள் யாவை?)

(அல்லது)

What are the kinds of Agency? Explain each of them in detail. (முகவரியத்தின் பல்வேறு வகைகள் யாவை? அவை ஒவ்வொன்றையும் விரிவாக விளக்குக.)

(அல்லது)

Briefly explain the various modes by which an agency may be created. (பல்வேறு வகைகளில் ஓர் முகவரியம் தோற்றுவிக்கப்படும் வழிமுறைகளை சுருக்கமாக விளக்கவும்.)

(அல்லது)

What is a contract of agency? Briefly explain the various modes by which an agency may be created. (முகவரிய ஒப்பந்தம் என்றால் என்ன? வெவ்வேறு வழிகளில் முகவரிய ஒப்பந்தமொன்றை உருவாக்க லாம் என்பதனைப் பற்றி சுருங்க விளக்கவும்.)

(அல்லது)

Agency by Estoppal – Write Short Notes. (தடையினால் முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is meant by Agency by holding out? (உரிமைப் போலி முகவரியம் என்றால் என்ன?)

(அல்லது)

Agency by necessity – Write short notes. (தேவையினால் எழும் முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is meant by Agency by ratification? What are its essentials ? (ஏற்புறுதியினால் முகவரியம் என்பதினால் அறியப்படுவது யாது? அதன் இன்றியமையாத கூறுகள் யாவை?)

(அல்லது)

What is meant by agency by ratification? Explain the essentials and effects of ratification. (ஏற்புறுதி முகவரியம் என்பது யாது? ஏற்புறுதியின் முக்கிய அம்சங்களை மற்றும் விளைவுகளை விளக்குக.)

(அல்லது)

What is meant by ratification? Explain the effects of ratification with case laws. ('பின் ஏற்பு' என்றால் என்ன? அதன் முக்கிய தன்மைகளை முடிவுற்ற வழக்குகளுடன் விவரி.)

(அல்லது)

What is "Agency by ratification"? What are the requisites of a valid ratification? ("பின் ஏற்பு முகவரியம்" என்றால் என்ன? பின் ஏற்பு முகவரியத்தினைச் சட்டப்படி செல்லத்தக்கதொன்றாக ஆக்குவதற்கு தேவையான கூறுகளை எடுத்துரைக்கவும்.)

(அல்லது)

Under what circumstances can a Principal ratify contracts entered into by his agent without authority ? (எச்சூழ்நிலைகளின் கீழ் ஒரு முதல்வர் தனது முகவரால் அதிகாரமில்லாமல் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை ஏற்புறுதி செய்யலாம்?)

(அல்லது)

Agency by Ratification – Write Short Notes. (பின் ஏற்பு முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Ratification – Write Short Notes. (ஏற்புறுதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

State the essential ingredients of ratification. What is the legal effect of ratification? (ஏற்புறுதியின் முக்கியக் கூறுகளை குறிப்பிடுக. ஏற்புறுதியின் சட்ட விளைவு யாது?)

(அல்லது)

Write short notes on Agency by Subsequent Authority. (பின் பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் குறித்து சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What do you mean by 'Ex Post Facto Agency' (பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் என்றால் என்ன?)

(அல்லது)

What is the nature of 'Ex Post Facto Agency'? (பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் என்பதன் தன்மையை விவரி.)

(அல்லது)

What is meant by expost facto agency? What are its essentials? (பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் என்றால் என்ன? அதன் முக்கியக் கூறுகள் யாவை?)

(அல்லது)

What is 'expost facto agency'? State the requisites for ratification of the acts of an agent. ('பின் ஏற்பு முகவரியம்' என்றால் என்ன? ஒரு முகவரின் செயல்களை ஏற்புறுதியாக்குவதற்கான இன்றியமையாக் கூறுகளை எடுத்துரைக்கவும்.)

(அல்லது)

Expost facto agency - Write short notes. (பின்னர் பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

முகவரியம், பல்வகைப்படும். அவ்வகைகளில் ஏதேனுமொன்றின்படி ஒரு முகவரியம் உருவாக்கப்படலாம். அவற்றை பின்வருமாறு காண்போமா?

முகவரியத்தின் பல்வேறு வகைகள் (அல்லது) முகவரியம் உருவாக்கப்படும் பல்வேறு வழிகள்:

(1) வெளிப்படையான அதிகாரத்தால் உருவாகும் முகவரியம் (Agency by Express Authority) (பிரிவு 187) :

வாய்ச் சொல் அல்லது எழுத்து மூலமாக, ஒரு முகவர் நியமிக்கப்பட்டால் அது 'வெளிப்படையான உடன்பாட்டால் உருவாக்கப்படும் முகவரியம்' எனப்படும். பொதுவாக, வெளிப்படையான முகவரியம் என்பது பகர ஆள் செயலுரிமைப் பத்திரம் (Power of Attorney deed) மூலம் அதிகாரம் அளிப்பதால் உருவாகிறது.

(2) உட்கிடையான அதிகாரத்தால் உருவாகும் முகவரியம் (Agency by Implied Authority) (பிரிவு 187) :

ஒப்பந்த நபர்களின் நடத்தை, அவர்கள் கொண்டுள்ள உறவு, சூழ்நிலை ஆகியவற்றால் உட்கிடை முகவரியம் உருவாகிறது. வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் பேசப்படும் அல்லது எழுதப்படும் விஷயங்களிலிருந்து முகவரிய அதிகாரம் ஏதும் அங்கு உட்கிடையாக உள்ளதா என்பது அனுமானித்து அறியப்படுகிறது. இந்த உட்கிடை முகவரியம் பின்வரும் இரண்டு வழிகளில் எழலாம்.

(i) முரண்தடையால் ஏற்படும் முகவரியம் (Agency by Estoppel)

(பிரிவு 237) : ஒரு முதல்வர் தன் நடத்தையாலோ அல்லது கூற்றினாலோ ஒரு குறிப்பிட்ட நபரை தன்னுடைய முகவர் என மற்றொருவர் நம்பும்படி நடந்து கொண்டு, பின்னர் அவரை தன் முகவரல்ல என மறுத்துக் கூற முடியாது. இவ்வாறு முரண்பட்டு கூறுவதற்கு மேற்படி முதல்வர் தடை செய்யப்பட்டுள்ளார். எனவே, இது 'முரண்தடையால் ஏற்படும் முகவரியம்' எனப்படுகிறது. இங்கு முகவரியம் உட்கிடையாக உள்ளது என்பது அனுமானிக்கப்படுகிறது.

(ii) உரிமைப் போலி அதிகாரத்தால் ஏற்படும் முகவரியம் (Agency by Holding out) : இது முரண்தடை முகவரியத்தின் ஒரு பிரிவேயாகும். ஒரு நபர் தன் சொல்லாலோ அல்லது நடத்தையாலோ மற்றொருவரை தனது முகவராக நடத்தியிருந்தால், அந்த மற்றொருவரின் செயல்களுக்கு அவர் கட்டுப்பட்டவராகிறார். இங்கு பின்னவர், முன்னவரின் முகவராகவே கருதப்படுகிறார். ஒருவரின் மனைவி அல்லது பணியாள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். அதாவது, இங்கு முதல்வர் உண்மையாக அதிகாரம் செலுத்தி ஒருவரை முகவராக்குவதில்லை. போலியான அதிகாரத்தின் மூலம் ஒருவரை தனது முகவராக்குகிறார். எனவே, இது **'உரிமைப் போலி அதிகாரத்தால் எழும் முகவரியம்'** எனப்படுகிறது. இங்கும் முகவரியம் உட்கிடையாக உள்ளதென அனுமானிக்கப்படுகிறது.

முரண்தடை முகவரியத்திற்கும் உரிமைப் போலி முகவரியத்திற்கும் உள்ள வேறுபாடு : முரண்தடை முகவரியத்தில் முதல்வர் மறுத்துரைக்காமல் (பேசாமல்) இருந்து, மற்றொருவரை தனது முகவராக நடந்து கொள்ள அனுமதிக்கிறார். உரிமைப் போலி முகவரியத்தில் முதல்வர் மற்றொருவரைத் தன் முகவராக நடத்தி உலகிற்கு உணர்த்துகிறார். இதில் முதல்வரின் உறுதி கூறும் செய்கை உள்ளது.

(iii) தேவையின் அடிப்படையில் எழும் முகவரியம் (Agency by Necessity) :

முகவரிய ஒப்பந்தம் சில சமயங்களில் நெருக்கடியான சூழ்நிலையில் (emergency), தேவையின் அடிப்படையில் ஏற்படுவதுண்டு. ஒருவர் உண்மையில் மற்றவரது முகவராக இல்லாதிருந்த போதிலும், இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக அம்மற்றவரது முகவராகப் பணியாற்ற வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற்படுகிறது. இவ்வித முகவரியம் பின்வரும் சூழ்நிலைகளில் ஏற்படுகிறது.

(அ) ஒரு முகவர் மிக நெருக்கடியான சூழ்நிலையில் (emergency), தன் முதல்வருக்கு ஏற்படவிருக்கும் இழப்பை தடுக்கும் பொருட்டு தனக்களிக்கப் பட்டுள்ள அதிகாரத்தை மீறிச் செயல் புரிந்தாலும், அவர் முகவராகவே கருதப் படுவார் **(பிரிவு 189).** ஆனால் இதற்கு கீழ்க்கண்ட வரம்புகள் உள்ளன. அவை **(1)** முகவர் உண்மையில் முதல்வரின் நலனுக்காக செயல்பட்டிருக்க வேண்டும்; **(2)** முகவர் முதல்வரை தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை இருக்க வேண்டும்; **(3)** சம்பந்தப்பட்ட தேவையானது உண்மையானதாகவும், தெளிவானதாகவும்

இருந்திருக்க வேண்டும்; (4) முகவர், முதல்வரின் நலனைக் காக்க தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்திருக்க வேண்டும்.

(ஆ) ஒருவரிடம் மற்றவரது சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தால், இவ்வகை முகவரியம் உருவாகலாம். வெளிப்படையான அதிகாரம் இல்லை எனினும், அவற்றைப் பாதுகாக்கும் உட்கிடை அதிகாரம் அவருக்கு உண்டு.

எடுத்துக்காட்டுகள்: (1) குதிரை ஒன்று புகை வண்டி மூலம் ஓர் குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பப்பட்டது. அக்குதிரையின் உரிமையாளர் அதனை அங்கு வந்து பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் அப்புகைவண்டி நிலைய அதிகாரிக்கு அக்குதிரையின் தீவனத்திற்காகப் பணம் செலவிட நேர்ந்தது. இச்செலவினைப் பெற நீதிமன்றத்தில் வழக்குக் தொடர்ந்தார். அவ்வழக்கில் தேவையின் அடிப்படையில் புகை வண்டி நிலைய அதிகாரி முகவரானார் என்றும், அவருக்கு ஏற்பட்ட செலவை குதிரை உரிமையாளர் கொடுக்கக் கடமைப்பட்டவர் என்றும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

(2) ஒரு கப்பலிலுள்ள சரக்குகள் கெட்டுப் போய்க் கொண்டிருந்தன. அதனைக் கண்ட அக்கப்பலின் தலைவர், அச்சரக்குகளை அருகிலுள்ள துறை முகத்தில் நல்ல விலைக்கு விற்றுவிட்டார். இதனால் அச்சரக்குகளின் உரிமை யாளர் அவ்விற்பனை செல்லாது என்று வழக்கிட்டார். ஆனால் அவ்வாறு அவற்றை விற்றது செல்லும் என்றும், அவ்விற்பனை அச்சரக்கு உரிமையாளரை கட்டுப் படுத்தும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

(3) சரக்குகளை விற்பனை செய்வதற்காக அமர்த்தப்பட்ட முகவர், தேவை ஏற்பட்டால் அச்சரக்குகளை பழுது நீக்கச் செய்யும் அதிகாரமும் பெற்றவராவார்.

(இ) கணவன் – மனைவி உறவு : கணவன், மனைவியின் முகவரல்ல. அதுபோல் மனைவி, கணவனின் முகவரல்ல. இது பொது விதி. எனினும், நெருக் கடியான சூழ்நிலையில் தேவை ஏற்பட்டால், ஒருவர் மற்றொருவரின் முகவராகலாம். ஆனால் திருமண பந்தம் ஒன்றே முகவரிய உறவை உண்டாக்காது. எனவே இதற்கு இரு வகையில் விலக்களிக்கலாம். அவை வருமாறு.

(a) கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் பொழுது : கணவனும், மனைவியும் சேர்ந்து வாழும்பொழுது, மனைவி வீடு தொடர்பான செயல்களை தேவையின்பாற் கவனிக்கும் பொருட்டு செய்தால் அம்மனைவி, கணவனது முகவராக செயல்பட்டாள் என்று துணிபு (Presumption) கொள்ளப்படும். எனினும் பின்வரும் சூழ்நிலைகளில் இத்துணிபு மறுக்கப்படலாம் (rebuttable). அவை,

(1) பொருள்களை கடனுக்கு வாங்கவோ அல்லது பணம் கடன் வாங்கவோ கூடாது என கணவன், மனைவியை வெளிப்படையாக தடை செய்திருந் தால்; (2) மனைவி வாங்கும் பொருள் அவசரத் தேவைக்குட்படாததாக இருப்பின். (எ.கா.) தன் வேலைக்காரனுக்காக ஒரு 'ஏர்–கூலர்' வாங்குவது; (3) மனைவிக்கு

கடன் கொடுக்கக் கூடாது என்று வித்தனையாளரிடம் கணவன் வெளிப்படையாக எச்சரித்திருந்தால், அதற்கு கணவன் ஒரு முதல்வராகப் பொறுப்பாக முடியாது.

(b) கணவனைப் பிரிந்து மனைவி வாழ்ந்தால் : ஒரு மனைவி தன் கணவரிடமிருந்து நியாயமான குழ்நிலையில் பிரிந்து வாழ்ந்தால் தன் கணவன் மேல் தேவையான (அவசியமான) பொருள்களுக்கான கடனை ஏற்படுத்த முடியும். ஏனெனில் கணவன் மனைவியைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாட்டில் இருக்கிறான். ஆனால் அம்மனைவி நியாயமற்ற காரணத்துடன் தனித்து வாழ்ந்தால், அவசியப் பொருட்களுக்குக் கூட தன் கணவன் மேல் கடன் ஏற்படுத்த முடியாது.

3. ஏற்புறுதி மூலம் முகவரியம் (Agency by Ratification) (அல்லது) பின் பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் (Expost Facto Agency or Agency by Subsequent Authority) (பிரிவு 196) :

ஏற்புறுதி (அல்லது) பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம் [Ratification (or) Expost facto agency]:

அதிகாரமின்றி முன்பே செய்யப்பட்ட ஒரு செயலை பின்பு ஏற்புச் செய்தால், அது 'ஏற்புறுதி' ஆகும். முகவர் தனது அதிகாரத்திற்கு உட்படாத ஒரு செயலை செய்த பின்னர், அதனை முதல்வர் ஏற்புறுதி செய்தால் இவ்வகை முகரியம் உண்டாகிறது. இந்நிலைப்பாட்டைத்தான் பிரிவு 196–ஆனது, 'மற்றொருவருக்குத் தெரியாமல் அல்லது அவரது அதிகாரமின்றி ஒருவர், அவருக்காக சில செயல்களை செய்தால், அம்மற்றொருவர் ஒன்று அச்செயல்களை ஏற்புறுதி செய்யலாம் அல்லது மறுக்கலாம். இங்கு அவ்வாறு மறுக்காமல், அச்செயல்களை ஏற்புறுதி செய்தால், அச்செயல்கள் அவரது அதிகாரத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்' என்று கூறுகிறது. இது 'பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம்' (Expost facto agency by Subsequent Authority) என்றும் அழைக்கப்படுகிறது.

இத்தகு ஏற்புறுதி வெளிப்படையானதாக அல்லது உட்கிடையானதாக இருக்கலாம் என்று பிரிவு 197 கூறுகிறது.

எடுத்துக்காட்டுகள் :

(a) A என்பவர் B என்பவருக்காக அவருடைய அனுமதியின்றி 11–7–1988–ல் நிலம் வாங்கினார். B என்பவருக்கு இந்நடவடிக்கை 13–9–1988–ல் தெரிய வந்தது. அவரும் அதை ஏற்றுக்கொண்டார். இது வெளிப்படையான ஏற்புறுதியாகும்.

(b) A என்பவர் அதிகாரமேதுமின்றி B-க்காக சில பொருள்களை வாங்குகிறார். அவற்றை B பின்பு C-க்கு விற்றால், B-யின் இந்த நடவடிக்கை உட்கிடையான ஏற்புறுதியாக விளங்குகிறது.

(c) A என்பவர் B–யின் அதிகாரமின்றி, B–யின் பணத்தை C–க்கு கடனாகக் கொடுக்கிறார். பின்னிட்டு, C–யிடமிருந்து அக்கடன் தொகை மீதான

வட்டியை B பெற்றுக் கொள்கிறார். இங்கு அக்கடனை ஏற்புறுதி செய்வதாக B-யின் நடத்தை அமைந்துள்ளது. எனவே இது உட்கிடை ஏற்புறுதி ஆகும்.

ஏற்புறுதியின் இன்றியமையாத கூறுகள் [Essential Ingredients (requisites) of ratification] :

(1) முகவர், தான் எண்ணிய முதல்வரின் முகவராக நடந்திருக்க வேண்டும். அதாவது யார் ஏற்புறுதி செய்கிறாரோ அவருக்காக முகவர் ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் (The Contract must be made on behalf of the person who subsequently ratifies). இதையொட்டி பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

Keighley v. Durant[1] – எனும் வழக்கில் ஒரு குறிப்பிட்ட விலைக்கு கோதுமை வாங்க A (முகவர்) என்பவருக்கு P (முதல்வர்) என்பவர் அதிகாரமளித்திருந்தார். ஆனால் அவ்விலைக்கு கோதுமை கிடைக்கவில்லை. எனவே அதை விட அதிகமான விலைக்கு கோதுமை வாங்க மேற்படி P என்பவர் X என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இங்கு P–க்காக கோதுமை வாங்குவதாக A என்பவர் வெளிப்படையாக புலப்படுத்தவில்லை. இந்நிலையில் அந்த ஒப்பந்தத்தை P ஏற்புறுதி செய்கிறார். ஆனால் அவர் பின்னிட்டு X–யிடமிருந்து கோதுமை மூட்டைகளை பெற்றுக் கொள்ள மறுக்கிறார். எனவே X என்பவர் P மீது மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கிடுகிறார். அப்பொழுது, P–க்காக ஒப்பந்தம் செய்து கொள்ள A எண்ணியிருக்கவில்லை என்றும், எனவே மேற்படி P அவ்வொப்பந்தத்தை ஏற்புறுதி செய்யவியலாது என்றும் நீதிமன்றம் கருத்துரைத்து, X–ன் மேற்படி வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

(2) ஒப்பந்தம் ஏற்படும் போது, முதல்வர் இருந்திருக்க வேண்டும் (The principal must be in existence at the time of contract). எடுத்துக் காட்டு வழக்கு வருமாறு.

Kelner v. Baxter[2] – இவ்வழக்கில், பாக்ஸ்டர் என்பவர், எதிர் காலத்தில் நிறுவப்படவுள்ள ஒரு நிறுவனத்தின் முகவராவார். அவர் அந்நிறுவனத்திற்காக உணவகம் ஒன்றை விலைக்கு வாங்குவதற்காக கெல்நர் என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தை அந்நிறுவனம் ஏற்புறுதி செய்ய முடியாது என்றும், அவ்வொப்பந்தத்திற்கு மேற்படி பாக்ஸ்டர் என்பவரே தனிப்பட்ட முறையில் கெல்நர் என்பவருக்கு பொறுப்பாவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில் ஒப்பந்தம் உருவாகிய பொழுது முதல்வர், அதாவது மேற்படி நிறுவனம் இருந்திருக்கவில்லை (existence) எனப்பட்டது.

1. 1901 AC 240
2. (1866) 2 C.P. 174

(3) ஒப்பந்தம் உருவாகும் பொழுதும், ஏற்புறுதி செய்யப்படும் பொழுதும், முதல்வரானவர் ஒப்பந்தம் செய்யும் தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும் (The principal must be competent to contract at the time of contract and ratification). எடுத்துக்காட்டு வழக்கு வருமாறு.

Mauji Rama v. Tara Singh[1] – எனும் வழக்கில் உரிமை வயதடையாத இளவர் (minor) ஒருவர் தனது காப்பாளரால் செய்யப்பட்ட தனது சொத்தின் அடைமானத்தை நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் ஏற்புறுதி செய்ய வியலாது என்று கூறப்பட்டது.

(4) ஏற்புறுதி வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ இருக்கலாம் (Ratification may be expressed or implied) **(பிரிவு 197).**

(5) எல்லாப் பொருண்மைகள் பற்றியும் தெரிந்திருந்தாலே ஏற்புறுதி செய்ய முடியும் **(பிரிவு 198).** முதல்வர் ஒருவர் தான் அறிந்த பொருண்மைகளில் அடிப்படைக் கூறான தவறு இருந்தால், அவர் செல்லத்தக்க ஏற்புறுதி செய்ய முடியாது. எனவே முதல்வர் ஒருவர் செல்லத்தக்க முறையில் ஏற்புறுதி செய்வதற்கு, அவர் சம்பந்தப்பட்ட பொருண்மைகள் குறித்து முழுமையாக அறிந்தவராக இருத்தல் வேண்டும் (The principal should have full knowledge of the facts to make a valid ratification). வழக்கு வருமாறு.

Damodar v. Sheoram[2] – எனும் வழக்கில், வெளிச் சந்தையில் பொருட்களை வாங்க ஒரு முகவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதிக விலைக்கு அப்பொருட்களை வாங்கிவிட்டார். இதை முதல்வரும் ஏற்புறுதி செய்தார். ஆனால் அம்முகவர் வெளிச் சந்தையில் அப்பொருட்களை வாங்குவதற்குப் பதிலாக, தனக்குச் சொந்தமான பொருட்களை தனக்கே விற்றுக் கொண்டுள்ளார் எனும் பொருண்மை முதல்வருக்கு பின்னிட்டுதான் தெரியும். எனவே பொருண்மைகளை முழுமையாக அறியாமல், முதல்வர் செய்த ஏற்புறுதி செல்லாது என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

(6) செயல் நிகழ்ந்தால், அது நியாயமான காலத்துக்குள் ஏற்புறுதி செய்யப் பட வேண்டும் (Ratification must be made within a reasonable time).

(7) ஏற்புறுதி செய்யப்படும் செயல், சட்டத்திற்குகந்ததாக இருக்க வேண்டும். அதாவது இல்லாநிலை ஒப்பந்தங்களை ஏற்புறுதி செய்தல் இயலாது (Void contracts cannot be ratified). பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

Brook v. Hook[3] – எனும் வழக்கில் குற்றச் செயல் ஒன்றை ஏற்புறுதி

1. (1881) 3 All. 852
2. A.I.R. 29 All. 730
3. (1871) C Ex 89

செய்தல் இயலாது என்று கூறப்பட்டது. A என்பவர் ஒரு ஆவணத்தில் B–யின் கையொப்பத்தை போலியாகச் செய்தால், அதனை B ஏற்புறுதி செய்தல் இயலாது.

(8) முதல்வர் நடவடிக்கை முழுமைக்கும் ஏற்புறுதி அளிக்க வேண்டும். பகுதியாக ஏற்புறுதி செய்ய முடியாது (Ratification must be of the entire transaction) **(பிரிவு 199).** அதாவது சம்பந்தப்பட்ட செயலை, முதல்வர் ஒன்று முழுமையாக ஏற்றுக் கொள்ள (ratify intoto) வேண்டும் அல்லது முழுமையாக ஏற்க மறுக்க (reject intoto) வேண்டும்.

(9) ஏற்புறுதி அறிவிப்பு செய்யப்பட வேண்டும் .

(10) முதல்வர், ஏற்புறுதி செய்யும் அதிகாரம் பெற்றவராக இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தின் வரம்பைக் கடந்த செயல்களை அதன் இயக்குனர்கள் செய்திருந்தால், அதை நிறுவனம் ஏற்புறுதி செய்ய முடியாது.

(11) ஏற்புறுதி மூன்றாம் நபருக்கு பாதிப்பு எதையும் ஏற்படுத்தல் கூடாது. (There should be no prejudice to third parties as a result of ratification) **(பிரிவு 200).**

(12) ஏற்புறுதி, முகவர் செயல்பட்ட நாளுக்கு தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும்.

ஏற்புறுதியின் விளைவுகள் [Effects of ratification] :

முதல்வர், தனது முகவரின் அதிகாரவரம்பு மீறிய செயலை ஏற்புறுதி செய்தால், அது அதன் தரப்பினர்களை, அம்முகவர் தனது முதல்வரின் அதிகாரத்துடன் செயல்பட்டிருந்தால், அவர்கள் எந்நிலையில் இருந்திருப்பார்களோ, அதே நிலைக்கு கொண்டு செல்கிறது. இது **'முந்தைய நிலைக்கு கொண்டு செல்லல்' (relation back)** எனப்படும். அதாவது ஒரு குறிப்பிட்ட தேதியில் முகவர் செய்த செயலை, பிந்தைய தேதியில் முதல்வர் ஏற்புறுதி செய்தாலும், முகவர் எந்த தேதியில் அச்செயலைச் செய்தாரோ, அந்த தேதியில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ, அதே நிலைக்கு அவர்களை கொண்டு சென்று வைத்தல் ஆகும். ஒருக்கால், முகவரின் அதிகாரவரம்பு மீறிய செயலை முதல்வர் ஏற்க மறுத்தால், அங்கு இவ்வகை முகவரியம் எழுவதில்லை.

4. சட்டச் செயல்பாட்டால் உருவாகும் முகவரியம் (Agency by Operation of Law) :

சட்டச் செயல்பாட்டால் சில சமயங்களில் முகவரியம் உருவாகும். ஒரு நிறுவனம் உருவாக்கப்படும்போது, அதன் தோற்றுவிப்பாளர்கள் (Promoters) சட்டச் செயல்பாட்டால் அதன் முகவர்களாகிறார்கள். ஒரு கூட்டாண்மை நிறுமத்தின் கூட்டாளி ஒருவர், மற்ற கூட்டாளிகளின் முகவராகிறார். இது போன்ற சூழ்நிலைகளில் சட்டமே முகவரியத்தை உருவாக்குகிறது.

5. Enumerate the rights, duties and liabilities of an agent. (முகவர் ஒருவரின் உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் ஆகியவைகளை எடுத்துரைக்க.)

(அல்லது)

Explain the personal liability of agents to third parties. (மூன்றாம் நபர்களுக்கு முகவரின் தனிப்பட்ட பொறுப்பை விளக்குக.)

முகவரின் உரிமைகள் (Rights of an Agent) :

1. ஊதியம் பெறும் உரிமை (Right to receive Remuneration) (பிரிவு 219) : கொடை நோக்கத்தின் அடிப்படையில் இலவசமாகப் பணிபுரியும் முகவரியத்தைத் தவிர, பிற பணிகளுக்கு ஊதியம் பெறும் உரிமை முகவருக்கு உண்டு. பொதுவாக முகவர் தன் பணியை முடித்துவிட்டுத்தான் ஊதியம் கோர வேண்டும். முகவரின் பணி எப்பொழுது முடிவடைகிறது என்பது ஒப்பந்தத்தின் நிபந்தனையைப் பொறுத்தது. ஒரு முகவர் துர்நடத்தையுடன் (misconduct) பணியாற்றினால், அவர் ஊதியம் பெற உரிமையற்றவர் என்று பிரிவு 220 கூறுகிறது.

2. இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை (Right to Retain) (பிரிவு 217) : ஒரு முகவர் முதல்வருக்காகப் பெற்ற பணத்தை, தனக்கு வரவேண்டிய ஊதியம் முதலியவற்றைப் பெறும் வரை, தன்னிடமே இருத்தி வைத்துக் கொள்ள உரிமை பெற்றவர்.

3. பற்றுரிமைக்கான உரிமை (Right of Lien) (பிரிவு 221) : முகவருக்கு முதல்வரிடமிருந்து பணம் ஏதும் வரவேண்டியிருப்பின், அதற்காக முதல்வரின் பொருட்களை தன்னிடமே இருத்தி வைத்துக் கொண்டு, தனது பாக்கியை வசூலித்துக் கொள்ளலாம். முதல்வர் நொடிந்தராகிவிட்டாலும் முகவருக்கு இவ்வுரிமை உண்டு. பொதுவாக முகவருக்கு குறிப்பிட்ட பற்றுரிமைதான் (particular lien) உண்டு.

4. ஈட்டுறுதி பெறும் உரிமை (Right to be Indemnified) (பிரிவுகள் 222, 223 & 224) : முகவர் செய்யும் சட்டப்பூர்வமான செயல்கள் அனைத்திற்கும் முதல்வரிடமிருந்து ஈட்டுறுதி கோர முகவருக்கு உரிமையுண்டு (பிரிவு 222). நன்னம்பிக்கையுடன் செய்த செயல்களுக்கு, அவை மூன்றாம் நபருக்கு தீங்கிழைப்பதாக இருந்தாலும், ஒரு முகவர் முதல்வரால் ஈட்டுறுதி செய்யப்பட உரிமை பெற்றுள்ளார் (பிரிவு 223). ஆனால், சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் முகவர் ஈடுபட்டு, அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவருக்கு ஈட்டுறுதியளிக்க முதல்வர் கடமைப்பட்டவரல்ல (பிரிவு 224).

5. இழப்பீடு பெறும் உரிமை (Right to Compensation) (பிரிவு 225): முதல்வரின் திறமையின்மையினாலும், கவனமின்மையினாலும் முகவருக்கு தீங்கு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு பெறும் உரிமை முகவருக்கு உண்டு.

6. செல்லுகையில் நிறுத்த உரிமை (Right of Stoppage in Transit): ஒரு முகவர் மேற்கண்ட உரிமையைப் பின்வரும் இரு நிலைகளில் பெறுகிறார். அவை (அ) முதல்வருக்காக, தன் பணத்தைக் கொடுத்தோ, அல்லது தன் பேரில் கடனாகவோ, பொருள்கள் வாங்கி இருந்தால், அதற்குரிய பணத்தைக் கொடுக்காமல் முதல்வர் அப்பொருட்களை எடுத்துச் செல்கையில், அதனைத் தடுத்த நிறுத்த முகவர் உரிமை பெற்றிருக்கிறார். இவ்வுரிமை செலுத்தப் பெறா விற்பனையாளரின் உரிமையைப் போன்றதே; (ஆ) விற்கப்ப. . பொருளுக்கு முகவர் சொந்தப் பொறுப்பேற்றிருந்து வாங்கியவர் நொடிந்தவராயிருந்தால், அப் பொருளை கொண்டு செல்கையில் அதை நிறுத்தும் உரிமை முகவருக்கு உண்டு.

முகவரின் கடமைகள் (Duties of Agent) :

1. முதல்வரின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் (Duty to follow Principal's Directions) (பிரிவு 211) : முதல்வர் இட்ட கட்டளைகளைப் பின்பற்றி நடக்க வேண்டியது முகவரின் முக்கியமான கடமையாகும். சில சமயங்களில் முதல்வரிடமிருந்து எவ்வித கட்டளையும் இருக்காது. அப்பொழுது, அதுபோன்ற பணியைச் செய்ய, முகவர் தனது பணியைச் செய்யும் இடத்தில் கடைப் பிடிக்கப்படும் வணிக வழக்காறுகளைப் பின்பற்றக் கடமைப்பட்டவராவார். முதல்வரின் கட்டளைகளைப் பின்பற்றவில்லையெனில், அதனால் முதல்வருக்கு ஏற்படும் நட்டத்திற்கு அம்முகவரே பொறுப்பாவார்.

எடுத்துக்காட்டு: பொருட்களை காப்பீடு (insurance) செய்யும்படி முகவர் ஒருவருக்கு முதல்வர் அறிவுறுத்தினார். ஆனால் அவ்வாறு அவர் காப்பீடு செய்ய வில்லை. இதனால் ஏற்பட்ட நட்டத்திற்கு அம்முகவரே பொறுப்பேற்க வேண்டும்.

Lilley v. Doubleday[1] – இதில் ஒரு குறிப்பிட்ட கிடங்கில் பொருட்களை சேகரித்து வைக்க முகவருக்கு கட்டளையிடப்பட்டது. அதன்படி முகவர் செய்யாமல் வேறு இடத்தில் சரக்குகளை வைத்திருந்தார். சரக்கு தீயினால் சேதமடைந்தது. இதனால் ஏற்பட்ட நட்டத்திற்கு முகவரே பொறுப்பாளியாவார் எனப்பட்டது.

2. தகுந்த கவனம் செலுத்தும் கடமை (Duty to show proper skill and care) (பிரிவு 212) : ஒத்த பணியில் ஈடுபட்டுள்ள ஒருவர் எத்தகு திறமை மற்றும் கவனத்துடன் அப்பணியை மேற்கொள்வாரோ, அவ்வாறே ஒரு முகவரும் தனக்குரிய பணியை அதே திறமை மற்றும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

3. சரியான கணக்கைத் தரும் கடமை (Duty to render accounts) (பிரிவு 213) : ஒரு முகவர், தனது முதல்வர் கேட்கும்போது சரியான கணக்கைத் தர வேண்டிய கடமை உடையவர்.

4. நெருக்கடியான சூழ்நிலையில் முதல்வருடன் தொடர்பு கொள்ளுதல்

1. (1881) 7 Q.B.D. 570

(Duty to communicate with Principal) (பிரிவு 214): நெருக்கடியான சூழ்நிலையில், முகவர் ஒருவர் நியாயமான கவனத்தைச் செலுத்தி, அது குறித்து முதல்வரைத் தொடர்பு கொண்டு, அவருடைய அறிவுறுத்தல்களைப் பெற கடமைப்பட்டவர்.

5. முகவர் தன் சொந்தப் பொறுப்பில் செயல்படக் கூடாது (Duty not to deal on his own account) (பிரிவுகள் 215 & 216) : முதல்வரின் முன் அனுமதியின்றி, முகவர் தன் சொந்தப் பொறுப்பில் செயல்படக் கூடாது. அவ்வாறு செயல்பட்டிருப்பின், (அ) முதல்வர் அச்செயலை ஏற்க மறுக்கலாம். (Repudiate) (ஆ) அச்செயலால் முகவருக்கு கிடைத்த ஆதாயத்தை உரிமை கோரலாம்.

6. முதல்வருக்காக பெற்ற தொகையை செலுத்துதல் (Duty to pay sums received for Principal) (பிரிவுகள் 217 & 218) : முகவர் முதல்வருக்காகப் பெற்ற எல்லாத் தொகைகள்ளையும் அவரிடம் செலுத்த முகவர் கடமைப்பட்டவர் **(பிரிவு 218).** அதுபோல், முகவர், முதல்வருக்காகப் பெற்ற தொகையில் தனக்குச் சேர வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அவற்றைப் பிடித்துக் கொண்டு மீதியைச் செலுத்தக் கடமைப்பட்டவர் **(பிரிவு 217).**

7. முதல்வர் இறந்தால் அல்லது பித்து நிலையரானால், அவரது நலன்களைப் பாதுகாக்க வேண்டும் (To protect the interest of the Principal, in case of his death or unsound mind) (பிரிவு 219) : முதல்வர் இறந்தாலோ அல்லது பித்து நிலை அடைந்தாலோ முகவரியம் முடிவுக்கு வரும். இத்தருணத்தில் முகவர், முதல்வரின் வாரிசுதாரர்களுக்காக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நலன்களைப் பாதுகாக்கவும், பேணவும், நியாயமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்திடவும் கடமைப்பட்டிருக்கிறார்.

8. முகவரியப் பணியின்போது கிடைத்த தகவல்களை முதல்வருக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது (Not to use information obtained in the course of the Agency against the Principal) : முகவரியப் பணியின் போது தனக்குக் கிடைத்த தகவல்களை முகவர், முதல்வருக்குத் தெரிவிக்க கடமைப்பட்டவர். அத்தகவல்களை முதல்வரின் நலனிற்கெதிராகப் பயன்படுத்தி, அதன் விளைவாக முதல்வருக்கு நட்டமேதும் ஏற்பட்டால், அவருக்கு முகவர் இழப்பீடு கொடுக்க வேண்டும்.

9. முகவரியம் மூலம் இரகசிய ஆதாயம் பெறக்கூடாது (Not to make secret profit from Agency) : ஒரு முகவர், பொறுப்பாண்மை சார்ந்த நிலையிலிருக்கிறார். முதல்வருக்குத் தெரிந்து அவரது அனுமதி பெற்றிருந்தாலன்றி, தான் உடன்பட்ட தரகு அல்லது ஊதியத்திற்கு அதிகமாக இரகசியமான ஆதாயம் எதையும் பெறக் கூடாது.

10. முகவர் தனது அதிகாரத்தை மீறி செயல்படக்கூடாது (பிரிவு 222) :

ஒரு முகவர் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை மீறி செயல்பட்டிருந்தால், அந்த நடவடிக்கையை ஏற்பிசைவு (recognise) செய்ய முதல்வர் கடமைப்பட்டவரல்ல.

11. முதல்வருக்கு எதிரான உரிமைமூலத்தைத் தோற்றுவித்தல் கூடாது (Not to set up an adverse title) : முகவர் எனும் தகுதியில் பெற்ற அல்லது மூன்றாம் நபர்களிடமிருந்து பெற்ற முதல்வரின் பொருட்களுக்கும், சொத்துக்களுக்கும் எதிரான உரிமைமூலம் எதையும் முகவர் தோற்றுவித்தல் கூடாது. அதாவது முதல்வருக்குச் சொந்தமான பொருட்களை தன்னுடையதென முகவர் உரிமை கொண்டாடக் கூடாது.

12. அதிகாரத்தை அளிப்படைவு செய்தல் கூடாது (Not to delegate authority) (பிரிவு 190) : முதல்வர் ஒருவர் அளித்த அதிகாரத்தை, முகவர் பிற நபர்களுக்கு அளிப்படைவு செய்தல் கூடாது. (எனினும், இதற்கு இரு விதி விலக்குகள் உண்டு. அவற்றை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்).

13. நலனும், கடமையும் முரண்படும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. (Not to put himself in a position where interest and duty conflict): எல்லாத் தருணங்களிலும், முகவர் ஒருவர் முதல்வரின் நலனுக்காக செயலாற்றக் கடமைப்பட்டவர். எனவே அவர் முதல்வரிடம் தனக்குள்ள கடமையும், தனது சொந்த நலனும் ஒன்றுக்கொன்று முரண்படும் சூழ்நிலையை உருவாக்குதல் கூடாது. ஆனால் முதல்வரிடம் தனக்கு அம்முகவரியத்தில் உள்ள நலன்களையும், அவற்றின் தன்மைகளையும் கூறி அவரது இசைவைப் பெற்றால், அத்தகு சூழ்நிலையை ஏற்படுத்தலாம்.

மூன்றாம் நபருக்கு முகவரின் தனிப்பட்ட பொறுப்பு (Personal Liability of Agent to Third Parties) :

சாதாரணமாக, முகவர் ஒருவர், மூன்றாம் நபருக்கு பொறுப்பாளியல்ல. முகவர் என்பவர் தனக்காக ஒப்பந்தம் செய்து கொள்பவர் அல்ல; முதல்வருக்காக மூன்றாம் நபர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்பவர். எனவே மூன்றாம் நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் முகவர் எப்பொறுப்பையும் ஏற்க வேண்டியதில்லை.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **230–வது பிரிவின்படி,** "முகவர் தனிப்பட்ட முறையில் கட்டுப்பட்டவர் என ஒப்பந்தத்தில் இல்லாத பொழுது, முதல்வருக்காக அவர் செய்த ஒப்பந்தங்களுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாவதில்லை." ஆனால் இதற்கு சில விதிவிலக்குகள் உண்டு. பின்வரும் நிலைகளில் முகவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

1. ஒப்பந்தத்தில் வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருக்கும்போது (When the contract expressly provides) : மூன்றாம் நபர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது ஒப்பந்த மீறுகைக்கு சொந்த பொறுப்பேற்பதாக

குறிப்பிட்டிருந்தால், அங்கு முகவர் தனிப்பட்ட முறையில் அம்மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பாகிறார்.

2. முகவர் அயல்நாட்டு முதல்வருக்காக செயல்படும்போது (When the Agent acts for an Foreign Principal) : அயல் நாட்டில் வசிக்கும் வணிகருக்காக சரக்குகள் வாங்க, விற்க ஒரு முகவர் ஒப்பந்தம் செய்து கொண்டால், முகவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டியவராவார்.

3. வெளிப்படுத்தப்படாத முதல்வருக்காக முகவர் செயல்படும்போது (When the Agent acts for an Un-disclosed Principal) : வெளிப்படுத்தப்படாத முதல்வருக்காக முகவர் செயல்பட்டால் அதற்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார். முதல்வர் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அம்மூன்றாம் நபர்கள் விரும்பினால், அவர் (முதல்வர்) மீது நடவடிக்கை எடுக்கலாம்.

4. வழக்கு தொடரப்பட முடியாத முதல்வருக்காக முகவர் செயல்படும்போது (When Agent acts for a Principal who cannot be sued): ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதி முதல்வருக்கில்லாத பொழுது (உரிமை வயதடையாத இளவர் நிலை, பித்து நிலை போன்ற தகுதியின்மைகளின் பொழுது), அம்முதல்வர் மீது வழக்கிட முடியாது. எனவே அப்பொழுது, முகவர் மூன்றாம் நபருக்கு பொறுப்பாகிறார்.

5. ஒப்பந்தத்தில் முகவர் தனது சொந்தப் பெயரில் கையொப்பமிடுமிடத்து (Where Agent signs a contract in his own name) : ஒரு முகவர் தன் முதல்வருக்காக கையொப்பமிடுவதாக குறிப்பிடாமல் தன் பெயரிலேயே கையொப்பமிட்டால், அங்கு அவர் ஒரு முகவராக இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தாலுமே, அவர் தன் சொந்தப் பெயரில் ஒப்பந்தம் செய்து கொள்வதாகக் கருதப்படும். இந்நிலையில் முகவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாகிறார்.

6. இல்லாத முதல்வருக்காக செயல்படும்போது (When Agent acts for a Principal not in existence) : ஒரு நிறுவனத்தின் தோற்றுவிப்பாளர்கள் (Promoters), அந்நிறுவனம் உருவாக்கப்படுவதற்கு முன்னரே அதன் சார்பில் ஒப்பந்தங்களில் முகவராக ஈடுபடலாம். அங்கு அவர்களுடன் ஒப்பந்தத்தில் ஈடுபடும் மூன்றாம் நபர்களுக்கு அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவர்.

7. அதிகாரவரம்பு மீறுகை ஏற்படும்போது (Breach of Warranty of Authority) : போதிய அதிகாரம் முகவருக்கு இல்லாத பொழுது, அவர் முதல்வருக்காக செயலாற்றினால் அங்கு அதிகாரவரம்பு மீறுகை ஏற்படுகிறது. முகவரின் அத்தகு செயலை முதல்வர் உறுதி செய்யாவிட்டால், அவர் மூன்றாம் நபருக்கு பொறுப்பாளியாவார்.

8. தவறுதலாக அல்லது மோசடியாக பணம் பெறும்போது (Money received by Mistake or Fraud) : முகவர் தவறுதலாக அல்லது மோசடியாக

மூன்றாம் நபரிடமிருந்து பணம் பெற்றால் அதற்கு முகவரே சொந்தப் பொறுப்பேற்க வேண்டும். அதேபோன்று, முகவர் தவறுதலாக அல்லது மோசடியினால் மூன்றாம் நபருக்குப் பணம் செலுத்தியிருந்தால், அதனைத் திரும்பப் பெற முகவரே அம்மூன்றாம் நபர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும்.

9. முகவரின் அதிகாரம் நலனுடன் இணைந்ததாக இருக்கும்போது (When authority is coupled with interost) : முகவர் மூன்றாவது நபருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதில், அவருக்கு அதில் தனிப்பட்ட நலன் ஏதும் இருப்பின், அவ்வதிகாரம் 'நலன் இணைந்த அதிகாரம்' எனப்படுகிறது. இந்நிலையில் முகவர் தனக்குள்ள நலனின் அளவுக்கு வழக்குரைக்கவோ அல்லது வழக்குரைக்கப் படவோ (To sue or to be sued) முடியும்.

10. வணிக வழக்கங்கள் முகவரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கும் போது (When trade custom makes an Agent personally liable): வணிக வழக்கங்கள் ஒரு முகவரை தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவர் ஆக்குகிறது. உதாரணமாக, ஏலமிடுபவரே பொருட்களை விற்றல். இங்கு ஏலமிடுபவர் மற்றவர் மீதும், மற்றவர் ஏலம் இடுபவர் மீதும் வழக்கிட்டு அவரைப் பொறுப்புடைய வராக்கலாம்.

6. What are the rights and duties of a principal? (முதல்வரின் உரிமைகளும் கடமைகளும் யாவை ?)

(அல்லது)

"The duties of agent are the rights of principal" - Explain. ("முகவரின் கடமைகள் முதல்வரின் உரிமைகளாகும்" – விளக்குக.)

முகவரின் உரிமைகள் முதல்வரின் கடமைகளாகவும், முகவரின் கடமைகள் முதல்வரின் உரிமைகளாகவும் கருதப்படும். எனவே முன்கண்ட வினாவின் விடையில் பொருத்தமான தலைப்புகளின் கீழ் காணவும்.

7. Irrevocable Agency - Write Short Notes. (திரும்பப் பெற இயலாத முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Agency coupled with interest - Write Short Notes. (நலன் இணைந்த முகவரியம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is an agency coupled with interest? When it can be terminated? (பயன் இணைந்த முகவரியம் என்றால் என்ன? அதை எப்போது முடிவுக்கு கொண்டு வரலாம்?)

முன்னுரை:

முடிவுக்கு கொண்டு வரப்பட முடியாத முகவரியம், திரும்பப் பெற இயலாத முகவரியமாகிறது. பின்வரும் சூழல்களில் முகவரியத்தை திரும்பப் பெறவியலாது.

1. நலன் இணைந்த முகவரியம் (Agency coupled with interest) (பிரிவு 202) :

முகவரியத்தின் மூலக்கூறான (கருப்) பொருளில் முகவருக்கு நலன் (அக்கறை) இருந்தால், அது 'நலன் இணைந்த முகவரியம்' எனப்படும். இவ்வித முகவரியத்தை முகவருக்கெதிராகத் திரும்பப் பெற முடியாது. எனவே இம்முகவரியம், முகவரின் நலன் காக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறலாம். இருப்பினும். தரப்பினர்கள் இதற்கு மாறுபட்ட விதத்திலும் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

நலனிணைந்த முகவரியத்திற்கு எடுத்துக்காட்டுகள் :

1. முதல்வர் தனது சொத்தை விற்பனை செய்ய முகவருக்கு அளித்து, அவர் அம்முகவருக்கு செலுத்த வேண்டிய கடனை அவ்விற்பனைத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ள அதிகாரம் அளித்திருப்பின்,

2. முதல்வர் தன் சொத்திலிருந்து வரும் வாடகைப் பணத்தை முகவருக்குத் தான் செலுத்த வேண்டிய கடனுக்கு ஈடு செய்ய அதிகாரம் அளித்திருந்தால்,

முதல்வரிடமிருந்து, அம்முகவருக்கு வர வேண்டிய கடன் பாக்கிக்கு, அம்முகவரியமே அவருக்கு (முகவருக்கு) பிணையமாக (Security) உள்ளது. ஆகவே இது 'நலன் இணைந்த முகவரியம்' ஆகும். மேலும், இவ்வகை முகவரியத்தை முதல்வரின் இறப்பாலோ அல்லது திடமற்ற மனத்தாலோ கூட திரும்பப் பெற முடியாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Corporation Bank, Banglore v. Lalitha H. Holla[1] – எனும் வழக்கில் முதல்வர் தனது சொத்தை வங்கியிடம் அடைமானம் செய்து கடன் பெறுகிறார். மேலும் அவர் தன்னுடைய வாடகைதாரர்களிடமிருந்து வாடகைத் தொகைகளை வசூல் செய்து அவற்றை அந்த அடைமானக் கடனுக்கு வரவு வைத்துக் கொள்ளும்படி அவ்வங்கிக்கு அதிகாரமளிக்கிறார். இது 'நலன் இணைந்த முகவரியம்' ஆகும் என்றும், எனவே இதனை திரும்பப் பெறவியலாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. (இங்கு 'வங்கி' அவரது முகவராக உள்ளது.)

2. முகவர் சொந்தப் பொறுப்படைந்திருந்தால் :

முதல்வருக்காக செயல்பட்டு, முகவர் ஒருவர் அதனால் சொந்தப் பொறுப்பு

1. A.I.R. 1994 Kant. 139

எதையும் அடைந்திருந்தால், அம்முகவரியத்தை திரும்பப் பெறுதல் இயலாது. அதாவது முதல்வருக்காக செயல்படும் பொழுது, முகவருக்கு நீங்கு, இழப்பு அல்லது பொறுப்பு ஏற்பட்ட பின்னர், முதல்வர் அம்முகவரியத்தைத் திரும்பப் பெற முடியாது.

3. முகவர் பகுதியாகத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி இருந்தால் (பிரிவு 204) :

முதல்வர் அளித்த அதிகாரத்தை முகவர் பகுதியளவு பயன்படுத்திய பின், அம்முகவரியத்தில் எற்கனவே செய்யப்பட்ட செயல்களிலிருந்து எழும் அத்தகு செயல் மற்றும் கடப்பாடுகளைப் பொறுத்தவரை, முதல்வர் அவ்வதிகாரத்தை திரும்பப் பெறவியலாது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் 1,000 பருத்தி மூட்டைகளை வாங்க B–க்கு அதிகாரமளிக்கிறார். மேலும் அதற்குரிய தொகையை B–யின் வசமிருக்கும் தனது பணத்திலிருந்து செலுத்தவும் A அதிகாரமளிக்கிறார். இந்நிலையில் B என்பவர் தன்னை அப்பருத்தி மூட்டைகளின் விலையை செலுத்துவதற்கு தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவராக்கிக் கொள்ளும் பொருட்டு, தனது சொந்தப் பெயரில் 1,000 பருத்தி மூட்டைகளை வாங்குகிறார். இங்கு அப்பருத்தி மூட்டைகளுக்கான விலையைச் செலுத்துவதைப் பொறுத்து, A என்பவர் B–க்கு அளித்த அதிகாரத்தை திரும்பப் பெறவியலாது.

8. What are the various modes of termination of agency? (முகவர் நிலையை முடிவுறச் செய்யும் பல்வேறு வகைகள் யாவை ?)

(அல்லது)

What are the several ways in which an agency may be terminated ? (ஒரு முகவரியம் எவ்வகை வழிகளில் முடிவு பெறலாம் ?)

(அல்லது)

Discuss the various methods by which an agency may be terminated. (முகவர் நிலையை முடிவுறச் செய்யும் பல்வேறு வழிமுறைகளை விவாதிக்க.)

(அல்லது)

How is an agency terminated by the act of parties and operation of law? (தரப்பினர்களின் செயல்களாலும் சட்டத்தின் செயலாலும் முகவர் நிலை எவ்வாறு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது ?)

(அல்லது)

Termination of agency - Write short notes. (முகவர் நிலை முடிவுறச் செய்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Termination of Agency by operation of Law. - Write short notes. (சட்டத்தின்படி முகவரியம் முடிவுறுதல் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **201–வது பிரிவு** முகவரியம் முடிவுறுதலின் பல்வேறு வழிமுறைகளை விளக்குகிறது. ஒப்பந்தத் தரப்பினர்களின் செயலாலும், சட்டச் செயல்பாட்டாலும் முகவரியம் முடிவு பெறுகிறது. அவற்றைப் பின்வருமாறு விரிவாகக் காண்போமா?

I. ஒப்பந்தத் தரப்பினர்களின் செயலால் முகவரியம் முடிவுறுதல் (Termination of Agency by the Act of Parties):

1. உடன்பாட்டின் மூலம் (Agreement): முதல்வருக்கும் முகவருக்கும் இடையிலான முகவரிய உறவு எந்நேரத்திலும் எந்நிலையிலும் அவர்களுக் கிடையிலான பரஸ்பர உடன்பாட்டால் முடிவுறலாம்.

2. முதல்வர் திரும்பப் பெறுதல் மூலம் (Revocation by Principal) (பிரிவுகள் 201 & 203): முதல்வர் எந்த நேரத்திலும், முகவரின் அதிகாரத்தைத் திரும்பப் பெறலாம் **(பிரிவு 201).** ஆனால் திரும்பப் பெற முடியாத முகவரியமாக (Irrevocable Agency) இருப்பின், முகவர் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு முன்பு அதை முதல்வர் திரும்பப் பெற வேண்டும் **(பிரிவு 203).**

3. முகவர் திரும்பப் பெறுதல் மூலம் (Revocation by Agent): முகவர் நியாயமான அறிவிப்பு தந்து முகவரியத்தை முடிவுக்குக் கொண்டு வரலாம். குறிப்பிட்ட காலத்திற்கு முன் முகவரியத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கூடாதென இருந்து, அக்காலத்திற்கு முன் முகவரியத்தைத் துறந்த (renunciation) முகவர், முதல்வருக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் **(பிரிவு 205).** இது முதல்வருக்கும் பொருந்தும். இவ்வாறு முகவரியத்தை துறப்பதற்கு முகவர் நியாயமான அறிவிப்பை முதல்வருக்கு கொடுக்க வேண்டும் **(பிரிவு 206).** இது வெளிப்படையாகவோ அல்லது தரப்பாளர்களின் நடத்தை மூலம் அறியப்படக் கூடிய வகையில் உட்கிடையானதாகவோ இருக்கலாம் **(பிரிவு 207).**

II. சட்டச் செயல்பாட்டால் முகவரியம் முடிவுறுதல் (Termination of Agency by Operation of Law) :

1. ஒப்பந்த நிறைவேற்றத்தினால் (By performance of the contract): முகவர் தனது முகவரிய ஒப்பந்தப்படி செய்ய மேற்கொண்டதை செய்து முடித்து விட்டால் முகவரியம் முடிவுக்கு வரும். முகவரியம் ஒரு குறிப்பிட்ட நோக்கத் திற்காக இருந்தால், அந்நோக்கம் நிறைவேறியதும் முடிவுக்கு வரும்.

2. காலம் முடிவதால் (By expiry of time) : முகவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென நியமிக்கப்பட்டிருந்தால், அக்காலத்திற்குள் முகவரியப் பணி முடிந்தாலும், முடியாவிட்டாலும் கால முடிவால் முகவரியம் முடிவுக்கு வரும்.

3. இறப்பு மற்றும் திடமற்ற மனநிலையால் (By Death or Insanity): முதல்வர் அல்லது முகவர் இறந்தால் அல்லது திடமற்ற மனநிலை அடைந்தால், முகவரியம் முடிவுக்கு வருகிறது.

4. நொடிப்பால் (By Insolvency) : முகவர் நொடிந்தவரானால், முகவரியம் முடிவுக்கு வருகிறது.

5. மூலக்கூறு அழிவதால் (By Destruction of subject): ஒப்பந்தத்தின் மூலக்கூறு அழிந்தால், முகவரியம் முடிவுக்கு வரும். உதாரணமாக, ஒரு வீட்டை விற்பதற்கு முகவர் நியமிக்கப்பட்டிருந்து, அவ்வீடு தீயால் எரிந்து விட்டால் முகவரியம் முடிவு பெறுகிறது.

6. முதல்வர் பகை நாட்டினரானால் (Principal becoming an Alien): முதல்வரும் முகவரும் வெவ்வேறு நாட்டு குடிமக்களாக இருந்து அந்நாடுகளுக்கு இடையே போர் மூண்டால், முகவரியம் முடிவுக்கு வரும்.

7. நிறுவனம் கலைக்கப்படுதல் (By Dissolution of a Company): ஒரு நிறுவனம் கலைக்கப்பட்டால் முகவரிய ஒப்பந்தம் தானாகவே முடிவுக்கு வரும்.

8. துணை முகவரின் அதிகாரம் முடிவுக்கு வருதல் (Termination of Sub-Agent's Authority): துணை முகவரின் அதிகாரம் நீக்கப்பட்டால் முகவரியம் முடிவுக்கு வருகிறது.

முகவரியம் முடிவுறுதல் எப்பொழுது நிறைவேறுகிறது ?

இது குறித்து பிரிவு 208 கூறுகிறது. அதன்படி, முகவரைப் பொறுத்த அளவில் முகவரியத்தின் முடிவு அவருக்குத் தெரிந்ததும் நிறைவேறுகிறது. மூன்றாம் நபர்களை பொறுத்த வரையில் அதை அவர்கள் அறிந்ததும் நிறை வேறுகிறது. முகவரியம் முடிவுறுவதை முகவருக்கும், மூன்றாம் நபருக்கும் அறிவிக்க வேண்டும். பொதுவாக இது பொது அறிவிப்பு மூலம் செய்யப்படுகிறது.

9. Discuss the liability of principal towards third parties. (மூன்றாம் தரப்பாளர்களுக்கு முதல்வருக்குள்ள பொறுப்பினை விவாதிக்க.)

(அல்லது)

What are the rights and liabilities of undisclosed principal under contracts made by his agent with third parties? (தன்னுடைய முகவர் மூன்றாம் நபர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களில் தெரியப் படுத்தக்கூடாத முதல்வரின் உரிமைகளையும் கடப்பாடுகளையும் விளக்குக.)

(அல்லது)

Explain the doctrine of undisclosed principal. What are the rights and liabilities of an undisclosed principal. (வெளிப்படுத்தப் படாத முதல்வர் என்ற கோட்பாட்டை விளக்குக. வெளிப்படுத்தாத முதல்வரின் உரிமைகளும் பொறுப்பு நிலைகளும் யாவை?)

(அல்லது)

Undisclosed Principal – Write Short Notes. (வெளிப்படுத்தப்படாத முதல்வர் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

In what circumstances is a principal not liable to third parties for the acts of his agent? (ஒரு முதல்வர் தனது முகவரின் செயல்களுக் காக மூன்றாம் நபர்களுக்கு எச்சூழ்நிலைகளில் பொறுப்பாக மாட்டார்?)

மூன்றாம் தரப்பினர்களுக்கு முதல்வரின் பொறுப்பு :

ஒரு முகவர் மூன்றாம் தரப்பினர்களுடன் கொண்ட ஒப்பந்தங்களில், முதல்வரின் பொறுப்பை பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

I. பெயர் கூறப்பட்ட முதல்வரின் பொறுப்பு (The liability of Disclosed Principal) (226) :

1. முகவரின் ஒப்பந்தங்களை செயலாக்குதல் (Enforcement of agent's contracts) (பிரிவு 226) : முகவரின் வாயிலாக செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் முகவரால் செய்யப்பட்ட செயல்களிலிருந்து எழும் கடப்பாடுகளானது, முதல்வர் ஒருவர் நேர்முகமாக நின்று அவ்வொப்பந்தங்களில் ஈடுபட்டால் அல்லது அச்செயல்களைச் செய்தால் எந்த முறையில் மூன்றாம் நபர்களுக்கெதிராக அவ்வொப்பந்தங்கள் செயலாக்கப்படுமோ அல்லது அச்செயல்களுக்கு எத்தகு சட்ட விளைவுகள் இருக்குமோ அதே முறையில் செயலாக்கப்படும் அல்லது சட்ட விளைவை உடையதாக இருக்கும். அதாவது முகவர் ஈடுபட்ட ஒப்பந்தங்களும் செய்த செயல்களும், முதல்வரே நேர்முகமாக (in person) நின்று ஈடுபட்டதைப் போன்றதாகும் அல்லது செய்ததைப் போன்றதாகும். இங்கு பெயர் கூறப்பட்ட (அதாவது வெளிப்படுத்தப்பட்ட) முதல்வராக ஒரு நபர் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் நேர்முகமாக நின்று செயல்படும் வாய்ப்பு ஏற்படுகிறது.

2. முகவர் தனது அதிகார வரம்பை மீறினால் : ஒரு செயலைச் செய்ய முதல்வர், முகவரை அனுமதித்து, ஆனால் அதே சமயத்தில் அதற்கு ஒரு வரையறை நிருணயித்து இருப்பின், அம்முகவர் அவ்வரையறையை மீறி அச்செயலைச் செய்தால், அங்கு மூன்றாம் நபர்களுக்கு அம்முதல்வரே பொறுப்பாவார்.

முகவரின் செயல்கள் பிரிக்கக் கூடியதாக இருந்தால், முகவரின் அதிகாரத்திற்குட்பட்ட செயல் வரைதான் முதல்வர் பொறுப்பாவார். பிரிக்க முடியாத தாக இருந்தால், அச்செயல் முழுவதும் முதல்வருக்கு எதிராக செல்லாத ஒன்றாகும். அதற்கு முதல்வர் பொறுப்பாளியாக மாட்டார் **(பிரிவுகள் 227 & 228).**

3. முகவரின் திரித்துக்காட்டலுக்கும், மோசடிக்கும் முதல்வர் கட்டுப் படுதல் (பிரிவு 238) : ஒருவர் முகவராகப் பணியாற்றும் போது செய்த திரித்துக் காட்டல்களுக்கும், மோசடிகளுக்கும் முதல்வரே மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பாவார். இவை முதல்வரால் செய்யப்பட்டதைப் போன்ற விளைவுகளையே பெறும். எனினும் முகவர் தன் அதிகாரவரம்பை மீறிய நிலையில் செய்த திரித்துக் காட்டலுக்கும், மோசடிக்கும் முதல்வர் பொறுப்பாக மாட்டார்.

4. முகவருக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பு முதல்வரைக் கட்டுப்படுத்தும் (பிரிவு 229) : முகவரியத் தொழிலில் முகவருக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பிற்கும், அவரால் பெறப்பட்ட தகவலுக்கும் முதல்வர் கட்டுப்பட்டவராவார். இவை முதல்வருக்கு அளிக்கப்பட்ட அறிவிப்பு அல்லது தகவலைப் போன்ற சட்ட விளைவையே ஏற்படுத்தும். எனவே மூன்றாம் நபர் ஒருவர், முகவரியப் பணியின் பொழுது, முகவருக்கு அளித்த அறிவிப்பை, முதல்வர் தனக்குத் தெரியாது என்று வாதிட முடியாது.

5. முகவர் ஒப்புக் கொண்டவற்றிற்கு முதல்வர் பொறுப்பாதல் : முகவரின் செயல்கள் முதல்வரின் செயல்களாகும். எனவே முகவர், மூன்றாம் நபர்களிடம் தனது முகவரியப் பணியின் பொழுது எவ்விஷயத்தையாவது ஒப்புக் கொண்டிருப்பின், அது முதல்வரே ஒப்புக் கொண்டதைப் போன்றதாகும்.

II. பெயர் கூறப்படாத முதல்வரின் பொறுப்பு:

முதல்வர் ஒருவருக்கு முகவராகச் செயல்பட செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அம்முதல்வரின் பெயர் வெளிப்படுத்தப்படவில்லையானால், அங்கு செய்யப்படும் செயல்களுக்கு அம்முகவரே சொந்தப் பொறுப்பேற்க வேண்டும் எனும் வெளிப் படையான அல்லது உட்கிடையான வரம்போ அல்லது வணிக வழக்காறோ இல்லாத அளவில் அவ்வொப்பந்தத்திற்கு முதல்வர் பொறுப்பாவார். மூன்றாம் நபர் ஒருவர், முதல்வரின் பெயர் கூறப்படவில்லை என்பதை அறிந்தே ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பின், அது தொடர்பாக அவர், முகவர் மீது வழக்குத் தொடர முடியாது. அச்சமயத்தில் முதல்வர் யார் என்று அறிந்து அவர் மீது அம்மூன்றாம் நபர் வழக்கிட வேண்டும். ஆனால் முதல்வரின் பெயரைக் கூற முகவர் மறுத்தால், அம்முகவர் மீதே வழக்குரைக்கலாம். ஏனெனில் அதற்கு முகவரே சொந்தப் பொறுப்புடையவர்.

III. முதல்வர் இருந்தும், அவரது பெயர் மறைக்கப் பட்டிருப்பின், அவர் மறைக்கப்பட்ட முதல்வர் ஆவார்.

அவரது பொறுப்பு (Liability of Undisclosed Principal) (பிரிவு 231):

மறைக்கப்பட்ட முதல்வர் யார் ?

ஒரு சில தருணங்களில் முகவர், முதல்வர் யார் என்பதை மறைப்பதோடு மட்டுமின்றி, தன்னை அவரது முகவர் என்ற பொருண்மையையும் மறைத்து விடுவார். அவ்வித முதல்வர் **'மறைக்கப்பட்ட முதல்வர்'** என்று அழைக்கப்படுவார். முகவர் இத்தருணங்களில் தன் சொந்தப் பொறுப்பில் ஒப்பந்தம் செய்து கொள்வதாக மூன்றாம் நபர்களுக்குக் காட்டிக் கொள்வார். இவரைக் குறித்து **பிரிவு 231** பின்வரும் விதிகளைக் கூறுகிறது.

மறைக்கப்பட்ட முதல்வரின் பொறுப்பு :

1. முதல்வரின் நிலை : ஒரு முகவர், அவர் முகவர் என அறியாத அல்லது முகவர் என்று அய்யுற காரணம் பெறாத ஒரு நபருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அவரது முதல்வர் அவ்வொப்பந்த நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம்.

2. ஒரு மூன்றாம் தரப்பினரின் நிலை : (அ) ஒப்பந்தம் முடிவுறும் முன்னர், முதல்வர் தன்னை வெளிப்படுத்திக் கொள்வாரானால், அவ்வொப்பந்தத்தின் மறு (மூன்றாம்) தரப்பினர், அவ்வொப்பந்தத்தில் முதல்வர் யார் என்பதை அல்லது அம்முகவர் ஒரு முதல்வரல்ல என்பதை தாம் அறிந்திருந்திருப்பின், அவ்வொப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கவே மாட்டேன் என்று காட்ட முடியுமானால், அவர் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்ய மறுக்கலாம் **(பிரிவு 231–ன் கீழான இரண்டாம் பத்தி).**

(ஆ) முதல்வர் ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு உரிமை கோரினால், அங்கு முகவர் முதல்வராயிருப்பின், எத்தகு உரிமைகளை முகவருக்கு எதிராக அவ்வொப்பந்தத்தின் மறு (மூன்றாம்) தரப்பினர் பெறுவாரோ, அதே உரிமைகளைப் முதல்வருக்கு எதிராகவும் பெறுவார் **(பிரிவு 232).**

(இ) மூன்றாம் தரப்பினர், முகவரை முதல்வரென நம்பாவிடில், முகவருக்கு எதிராகத் தனக்குள்ள உரிமைக் கோரிக்கைகளை முதல்வருக்கெதிராக சரி எதிரீடு (Set off) செய்யலாம்.

(ஈ) மறைக்கப்பட்ட முதல்வரின் முகவரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், முதல்வர், முகவர் ஆகியோர்களில் யார் மீது வழக்கிடுவது என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள மூன்றாம் தரப்பினருக்கு உரிமையுண்டு.

3. முகவரின் நிலை : மறைக்கப்பட்ட முதல்வருக்காக ஒரு முகவர் செயல்படும் பொழுது, அதனால் பாதிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினர் ஒருவர் அம்முகவர் மீது வழக்கிட முடிவு செய்துவிட்டால், அந்த வழக்கின் முடிவிற்கு அவர்தான் (முகவர்தான்) சொந்தப் பொறுப்பேற்க வேண்டி வரும்.

5

1930-ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம் [The Sale of Goods Act, 1930]

1. Define Sale and distinguish it from an agreement to sell. (விற்பனையை வரையறை செய்து அதனை விற்பனை உடன்பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

How will you distinguish a sale from an agreement to sell? Describe the legal consequences following from each. (ஒரு விற்பனையை விற்பனை உடன்படிக்கையிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவீர்? ஒவ்வொன்றிலிருந்து தொடரும் சட்டமுறையான விளைவுகளை விவரிக்க.)

(அல்லது)

Distinguish between sale and agreement to sell. (விற்பனையையும் விற்பனை உடன்பாட்டையும் வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

State the essentials of a contract of sale of goods. How is a contract of sale of goods made? (சரக்கு விற்பனை ஒப்பந்தமொன்றின் முக்கியக் கூறுகளை குறிப்பிடுக. எவ்வாறு ஒரு சரக்கு விற்பனை ஒப்பந்தம் செய்யப்படுகிறது?)

(அல்லது)

Agreement to sell – Write short notes. (விற்பதற்கான உடன்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Sale and agreement to sell – Write short notes. (விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Define sale and distinquish it from (a) an agreement to sell and (b) hire purchase agreement. (விற்பனையை வரையறை செய்க. அதனை (அ) விற்பனைக்கான உடன்பாட்டிலிருந்தும் (ஆ) தவணை முறை விற்பனையில் இருந்தும் வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Distinquish between Sale and Hire purchase agreement. (விற்பனைக்கும் தவணை முறை உடன்பாட்டிற்கும் உள்ள வேறுபாட்டை கூறுக.)

முன்னுரை :

அனைத்து வணிக ஒப்பந்தங்களிலும் மிகவும் பொதுவானது சரக்கு விற்பனையாகும். இச்சரக்கு விற்பனை பற்றி 1930–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட **'சரக்கு விற்பனைச் சட்டமானது' (Sale of Goods Act, 1930)** விளக்குகிறது. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் ஏழாவது அத்தியாயம் மேற்படி சரக்கு விற்பனைச் சட்டத்தை உள்ளடக்கியிருந்தது. பின்னிட்டு இச்சட்டம், இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, மேற்கண்ட வாறு தனிச் சட்டமாக இயற்றப்பட்டது.

விற்பனை (Sale) (அல்லது) விற்பனை ஒப்பந்தம் (Contract of Sale) - வரையறை:

சரக்கு விற்பனைச் சட்டத்தின் **4(1)–வது பிரிவு,** 'விற்பனை ஒப்பந்தம்' என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி, ஓர் ஒப்பந்தத்தின் மூலம் விற்பவர் வாங்குபவருக்கு ஒரு விலைக்கு சரக்கின் உரிமையை மாற்றினால் அல்லது மாற்றித் தருவதாக உடன்பட்டால் அந்த ஒப்பந்தம், சரக்கு விற்பனை ஒப்பந்தம் எனப்படும்.

இத்தகு விற்பனை ஒப்பந்தமொன்று முழுமையானதாக (alsolute) அல்லது நிபந்தனையுடன் (conditional) கூடியதாக இருக்கலாம் என்று **பிரிவு 4(2)** கூறுகிறது.

சரக்கை விற்பவர் அல்லது விற்க உடன்படுபவர், **பிரிவு 2(13)–ன்படி விற்பனையாளர் (Seller or Vendor)** எனப்படுகிறார். சரக்கை வாங்குபவர் அல்லது வாங்க உடன்படுபவர், **பிரிவு 2(1)–ன்படி வாங்குபவர் (Buyer)** எனப் படுகிறார்.

சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் (Essential Elements of a Sale) :

1. இரு தரப்பினர்கள் (Two parties): விற்பனைக்கு, விற்பவர் மற்றும் வாங்குபவர் எனும் இரு தரப்பினர்கள் தேவை. ஒரே நபர் விற்பவராகவும், வாங்கு பவராகவும் இருக்க முடியாது.

2. சரக்கு (Goods) : விற்பனை ஒப்பந்தம் ஒன்றிற்கு 'சரக்கு' என்பது தான் கருப்பொருள் (subject matter) ஆகும். அச்சரக்கும் அசையும் சொத்தாக (movable property) இருக்க வேண்டும். அசையா சொத்துகள் சரக்கு விற்பனைச் சட்டத்திற்கு உட்பட்டதல்ல. அதுபோல் பணமும், வழக்கு தொடர்தகு பாத்தியமும் சரக்கல்ல. **[பிரிவு 2(7)]**.

3. விலை (Price): ஒரு குறிப்பிட்ட விலைக்காக சரக்கு விற்கப் படுகிறது. இங்கு வரும் 'விலை' என்பது, விற்பனை ஒப்பந்தத்தின் மறுபயனாக (Consideration) கருதப்படுகிறது **[பிரிவு 2(10)]**. சரக்குகளை சரக்குகளுக்காக பரிவர்த்தனைச் செய்து கொள்வது, விற்பனை ஒப்பந்தம் ஆகாது; அது பண்டமாற்று முறையாகும்.

4. உரிமை மாற்றம் (Transfer of Ownership) : இது சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் ஓர் அடிப்படைக் கூறாகும். ஒரு விற்பனையில், சம்பந்தப்பட்ட சரக்கின் மீதான உரிமை விற்பவரிடமிருந்து வாங்குபவருக்கு மாற வேண்டும். அப்படி மாறவிட்டால், அங்கு விற்பனையும் கிடையாது.

5. சரக்கின் உடைமை ஒப்படைப்பு (Delivery of Goods): சரக்கின் மீதான உரிமை மட்டும் மாறினால் போதாது. விற்பவர் அச்சரக்கின் உடைமையை தன்னிச்சையாக வாங்குபவரிடம் ஒப்படைத்தல் வேண்டும் **[பிரிவு 2(2)]**.

6. செல்லத்தகு ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் பொருந்தியிருக்க வேண்டும் (Presence of essential elements of a valid contract): சரக்கு விற்பனை ஒப்பந்தம் ஒன்று எழுத்து மூலமாகவோ, வாய் மொழியானதாகவோ அல்லது பகுதி எழுத்திலும் பகுதி வாய் மொழியானதாகவும் இருக்கலாம். மேலும் அவ்வொப்பந்தம் வெளிப்படையானதாகவோ, உட்கிடையானதாகவோ இருக்கலாம். இங்கு முக்கியமானது யாதெனில் அவ்வொப்பந்தம், செல்லத்தகு ஒப்பந்தம் ஒன்றிற்கு தேவையான அடிப்படைக் கூறுகள் அனைத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்பாடு (Sale and Agreement to Sell) :

விற்பனைக்கும் விற்பனைக்கான உடன்பாட்டிற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. சரக்கு விற்பனைச் சட்டத்தின் **பிரிவு 4 (3)**–ஆனது இவ்வேறுபாட்டை பின்வருமாறு கூறுகிறது.

"சரக்கு விற்பனை ஒப்பந்தமொன்றில், சரக்கின் உரிமையானது, விற்பவரிடமிருந்து வாங்குபவருக்கு மாற்றப்பட்டால் அது விற்பனையாகும். ஆனால் அதே சமயத்தில், அச்சரக்கின் உரிமை வருங்காலத்தில் மாற்றப்படுவதாக அல்லது சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதன் பேரில் மாற்றப்பட வேண்டியதாக இருப்பின், அது விற்பனைக்கான உடன்பாடாகும்." எனவே 'விற்பனை' என்பது நிறைவேறிய ஒப்பந்தமாகும் (Executed contract). 'விற்பனைக்கான உடன்பாடு' என்பது நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தமாகும் (Executory contract).

விற்பனைக்கும் விற்பனைக்கான உடன்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் (Distinctions between Sale and Agreement to Sell) :

விற்பனை [Sale]	விற்பனைக்கான உடன்பாடு [Agreement to sell]
1. **தன்மை :** இது ஒரு நிறைவேற்றப் பட்ட ஒப்பந்தமாகும் (Executed Contract).	இது ஒரு நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும் (Executory Contract).
2. **உரிமை மாற்றம் :** விற்பனையில் சரக்கின் உரிமை உடனடியாக மாற்றப் படுகிறது (Ownership is transferred immediately).	உரிமை மாற்றம் எதிர்காலத்தில் அல்லது நிபந்தனைகள் நிறைவேறிய உடன் நிகழ்கிறது.
3. **உரிமையின் தன்மை :** வாங்குபவர் பொருள் சார்ந்த உரிமை (right in rem) பெறுகிறார். விற்பவர் பொருளைத் தர மறுத்தால் அதே பொருளைப் பெற குறித்த வகை நிறைவேற்றத்திற்கு (Specific Performance) வழக்குரைக்கலாம்.	வாங்குபவர் ஆள் சார்ந்த உரிமை (right in personam) பெறுகிறார். விற்பவர் பொருளைத் தர மறுத்தால் இழப்பீடு கோரலாம். அதே பொருளைப் பெற முடியாது.
4. **இழப்பிற்கான இடர் (Risk of loss) :** சரக்கின் உடைமை விற்றவரிடமே இருந்தலும், அச்சரக்கு அழிந்தால், அதற்கான இழப்பு, அச் சரக்கினை வாங்கியவரே சாரும்.	இங்கு சரக்கின் உடைமை அதனை வாங்கியவரிடம் சென்றடைந்தாலும், அது அழிந்தால், அதற்கான இழப்பு, அச்சரக்கை விற்றவரையே சாரும்.

விற்பனை [Sale]	விற்பனைக்கான உடன்பாடு [Agreement to sell]
5. வாங்கியவர் நொடிந்தவரானால் (Insolvent) : சரக்கை வாங்கியவர் விலையை செலுத்துவதற்கு முன் நொடிந்தவரானால், விற்றவர் அச் சரக்கை சொத்தாட்சி அதிகாரியிடம் (Official Receiver) ஒப்படைக்க வேண்டும்.	சரக்கை வாங்க உடன்பட்டவர் பணம் செலுத்தாமலேயே நொடிந்தவரானால், விற்றவர் பணம் பெறாமல் சரக்கை யாரிடமும் ஒப்படைக்க வேண்டியதில்லை.
6. விற்றவர் நொடிந்தவரானால்: வாங்கியவர் சொத்தாட்சி அதிகாரியிடமிருந்து சரக்கை கோரிப் பெறலாம்.	வாங்கியவர் விலை முழுவதையும் செலுத்தி சரக்கைப் பெறாவிட்டாலும், விற்றவர் சொத்திலிருந்து விகிதப்பங்கு மட்டுமே பெற முடியும்.
7. வாங்கியவர் விலை கொடுக்க மறுத்தால் : விற்பனை முடிந்த பின் வாங்கியவர் சரக்குகளுக்கான பணத்தை விற்றவருக்குக் கொடுக்கத் தவறினால் விற்றவர் சரக்குகளின் விலையைப் பெறுவதற்காக வழக்காடலாம். இழப்பீடு கோரி வழக்காட முடியாது.	விற்பனை உடன்பாட்டில், வாங்கியவர் சரக்கிற்கான பணத்தைக் கொடுக்கத் தவறினால், அல்லது சரக்கை ஏற்றுக் கொள்ள மறுத்தால் விற்றவர் இழப்பீடு கோரி வழக்காடலாம். விலைக்காக வழக்காட முடியாது.
8. மறு விற்பனை உரிமை : விற்றவர் சரக்கினை ஒருவருக்கு விற்ற பின் அதை மீண்டும் மூன்றாம் நபருக்கு விற்க முடியாது. அவ்வாறு செய்தால் முதலில் வாங்கியவருக்கு அதே போன்ற பொருளை திரும்பப் பெறவும், இழப்பீடு கோரி வழக்கு தொடரவும் உரிமை உண்டு.	விற்றவர் மறு விற்பனை செய்யலாம். வாங்கியவர் ஒப்பந்த மீறுகைக்காக மட்டுமே வழக்காற்றலாம்.
9. வரி : இது, வரி விதிப்பிற்குட்பட்டது.	இது, வரி விதிப்பிற்குட்பட்டதல்ல.

விற்பனை மற்றும் தவணை கொள்முதல் உடன்பாடு (Sale and Hire Purchase Agreement) :

தவணை கொள்முதல் முறையில், சரக்கை வாங்கியர், அதன் விலையை தவணைகளில் செலுத்துவார். இறுதித் தவணை செலுத்தப்படும் வரை, அத் தவணைகள் சரக்கினை பயன்படுத்தியதற்கு வாடகையாகக் (Hire) கருதப்படும். இவ்வாறு இறுதித் தவணை செலுத்திய பிறகுதான், அச்சரக்கின் மீது விற்றவருக்கு இருந்த உரிமை, வாங்கியவருக்கு மாறும். எனவே இங்கு விற்பவர் அச்சாக்கின் உடைமையை மட்டுமே வாங்குபவருக்கு மாற்றுகிறார்; இறுதித் தவணை செலுத்தி யதும் அச்சரக்கை விற்பதற்கு இசைகிறார். எனவே இதனை 'ஒப்படைவுடன் கூடிய விற்பனைக்கான உடன்பாடு' (Bailment coupled with agreement to sell) என்றும் கூறலாம். இவையெல்லாம் ஒரு விற்பனைக்கு பொருந்தாது. சரக்கிற்குரிய விலையானது வாங்குபவரால் கொடுக்கப்படுவதன் பேரில், அதன் உரிமையையும் உடைமையையும் விற்பவர் உடன் மாற்றிக் கொடுத்தால், அது விற்பனையாகும். எனவே இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்டது. அவ்வேறுபாடுகள் வருமாறு.

விற்பனைக்கும் தவணை கொள்முதல் உடன்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் (Distinctions between Sale and Hire Purchase Agreement) :

விற்பனை [Sale]	தவணை கொள்முதல் உடன்பாடு [Hire Purchase Agreement]
1. உரிமை : சரக்கின் மீதான உரிமை அதன் விலை செலுத்தப்பட்டவுடன் வாங்குபவருக்கு மாறி விடுகிறது.	இங்கு இறுதித் தவணை செலுத்தப் பட்டவுடன்தான், சரக்கின் மீதான உரிமை மாறுகிறது.
2. வாங்குபவரின் நிலை: சரக்கை வாங்கியவுடன், அதனை வாங்கியவர் அதன் உரிமையாளர் ஆகிறார்.	இங்கு வாங்குபவர், அச்சரக்கின் ஒப்படைப்பை பெற்றவர் (Bailee) நிலையில் உள்ளார்.
3. ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருதல்: ஒரு விற்பனை ஒப்பந்தமே முடிவுற்ற அதாவது நிறைவேறிய ஒப்பந்தமாகும். எனவே விற்பனை முடிந்த பின், வாங்குபவர் விற்பனை ஒப்பந்தத்தை முடிவுக்கு வருதல் என்பதற்கு இங்கு இடமில்லை.	சரக்கை வாங்கியர் எந்நிலையிலும் தவணை கொள்முதல் ஒப்பந்தத்தை இறுதித் தவணை செலுத்தி முடிவுக்கு கொண்டு வரலாம்.

தவணை கொள்முதல் உடன்பாடு என்பது, நாம் சென்ற பக்கத்தில் கண்டவாறு ஒரு விற்பனைக்கான உடன்பாடேயாகும். எனவே விற்பனைக்கும், விற்பனை உடன்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் இதற்கும் பொருந்தும்.

2. State the ingredients of 'Sale' under the Sale of Goods Act. Distinguish between contract of sale and contract for work and labour. (சரக்கு விற்பனைச் சட்டத்தில் கூறியிருக்கும் 'விற்பனை' என்பதற்கான இன்றியமையாதக் கூறுகளை சுட்டிக் காட்டுக. விற்பனை ஒப்பந்தத்தினை தொழில் மற்றும் சேவை புரிவதற்கான ஒப்பந்தத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக).

விற்பனை - இன்றியமையாக் கூறுகள் :

(முந்தைய வினாவின் விடையில் காண்க)

விற்பனை ஒப்பந்தம் மற்றும் தொழில் அல்லது சேவை புரிவதற்கான ஒப்பந்தம் - வேறுபாடுகள்:

திறமையைப் பயன்படுத்தி தொழில் அல்லது சேவை புரிவதன் மூலம் சரக்குகளை அளிப்பதற்கு சில சமயங்களில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் படலாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவ்வொப்பந்தம் சரக்கு விற்பனை ஒப்பந்தமா அல்லது தொழில் அல்லது சேவை புரிவதற்கான ஒப்பந்தமா என்று தீர்மானிப்பதில் சற்று குழப்பம் ஏற்படலாம். உதாரணமாக, ஒருவரின் ஓவியத்தை வரைந்து கொடுப்பது, புகைப்படம் எடுத்து வாடிக்கையாளருக்கு வழங்குவது, பல் மருத்துவர் செயற்கை பல் மாதிரியை வழங்குவது, உணவகத்தில் சாதம் வடித்து பரிமாறுவது போன்று. மேற்கண்டவற்றை ஒரு விற்பனை ஒப்பந்தமா அல்லது வேலை அல்லது தொழில் ஒப்பந்தமா என்று தீர்மானிப்பதற்கு எளிதான ஒரு வழியைக் கையாளலாம். அஃதாவது, பொருளின் மீது விற்பனை வரி (Sales Tax) விதிக்கப் படுதல். அவ்வாறு விதிக்கப்பட்டால் அது விற்பனை ஒப்பந்தமென்றும், அப்படி விதிக்கப் படாத பொழுது, அது வேலை அல்லது தொழில் குறித்த ஒப்பந்தமென்றும் கூறப்படும். ஆனால் இது சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடவும் வாய்ப்புண்டு.

மேற்படி இரண்டு ஒப்பந்தங்களையும் மற்றொரு விதத்திலும், வேறுபடுத்திக் காட்டலாம். அதாவது, விற்பனை ஒப்பந்தத்தில் சரக்கு ஒப்படைக்கப்படுதல் (Delivery of goods) முக்கியக் கூறாகும். ஆனால் வேலை ஒப்பந்தத்தில், வேலை செய்பவரின் அறிவு நுட்பமும் தொழிலுமே (Skill and labour) அடிப்படையாகும். சரக்கு ஒப்படைக்கப்படுதல் முக்கியக் கூறன்று. சில வழக்குகளைக் காண்போமா?

Robinson v. Greaves[1] - ஒருவர் ஓவியரிடம் வரை பொருட்களும், வரை துணியும் (Canvas and Painting Materials) கொடுப்பதாக இசைந்து

1. (1935) 1 K.B. 579

குறிப்பிட்ட தொகைக்கு ஓவியம் வரைந்து கொடுக்க வேண்டிச் செய்து கொண்ட ஒப்பந்தம், வேலை அல்லது தொழில் ஒப்பந்தம் என்று மேற்படி வழக்கில் கூறப் பட்டது. ஆனால் ஏற்கனவே வரைந்து வைக்கப்பட்டுள்ள ஓவியங்களை வாங்கி விற்பவரிடம் ஓவியங்களை வாங்குவதற்கு செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் விற்பனை ஒப்பந்தமாகும்.

Grafton v. Armitage[1] எனும் வழக்கில் கூறப்பட்டபடி, வழக்குரைஞர் ஒருவரிடம் ஆவணம் ஒன்றை தயாரிக்கும்படி பணிக்கும் ஒப்பந்தம் அல்லது பொறியாளர் ஒருவரிடம் கட்டிட வரைபடம் தயாரிக்கும்படி பணிக்கும் ஒப்பந்தம் அல்லது **Dodd v.Wilson**[2] வழக்கில் கூறப்பட்டபடி மருத்துவர் ஒருவரிடம் மருந்துகளை அளிக்கும்படி கோரும் ஒப்பந்தம் ஆகியவை தொழில் அல்லது சேவை குறித்த ஒப்பந்தமாகும்.

ஆனால் **R. v. Wood Green Profiteering Committee**[3] வழக்கில் கூறப்பட்டபடி மருந்து கலக்கித் தருபவரிடம் (Chemist) மருந்துகளை அளிக்கும் படி கோரும் ஒப்பந்தம் விற்பனை ஒப்பந்தமாகும் எனப்பட்டது.

Asst. Sales Tax Officer v. B.C. Kame[4] – இவ்வழக்கில், புகைப் பட கலைஞர் ஒருவர் புகைப்படங்களை எடுத்து அதன் 'நெகடிவ்களை டெவலப்' செய்து அல்லது பிற புகைப்பட பணிகளை செய்து, இறுதியாக அதன் 'பிரிண்டுகளை' தனது வாடிக்கையாளருக்கு தரும் ஒப்பந்தம் திறமையின் அடிப்படையில் அமைந்த தொழில் அல்லது சேவை ஒப்பந்தமே என்றும், விற்பனை ஒப்பந்தமல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

3. Is a contract to take and supply photographs are of sale of goods? Explain with reasons. (புகைப்படம் எடுத்து வழங்குவதற்கான ஒப்பந்தமொன்று சரக்கு விற்பனை என்கிற பதத்தின் கீழ் அடங்குமா? காரணங்களுடன் விளக்கம் செய்யவும்.)

(முந்தைய வினாவின் விடையிலேயே இக்கேள்வியின் விடையும் அடங்கும்).

4. Explain 'Condition' and 'Warranty' in a contract for the sale of goods and state the consequences of the breach of each of them. (ஒரு சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் 'கட்டுவரம்பு', 'நம்புறுதி' என்பதை விளக்கி அவை ஒவ்வொன்றின் மீறுகையில் ஏற்படும் விளைவுகளை எடுத்து கூறுக.)

(அல்லது)

1. (1845) 2 C.B. 336
2. (1946) 2 All E.R. 691
3. (1920) 89 L.J.K.B. 55
4. A.I.R. 1977 S.C. 1642

Distinguish between Conditions and Warranties. (கட்டுவரம்புகள் மற்றும் நம்புறுதிகள் – வேறுபடுத்துக)

(அல்லது)

Conditions and Warranties - Write short notes. (நிபந்தனைகள் மற்றும் நம்புறுதிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

நிபந்தனைகளும், நம்புறுதிகளும் - எளிய விளக்கம்:

ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் சில விதிமுறைகளும் (Terms), வரைவுரைகளும் (Stipulations) காணப்படும். அதுபோல் விற்பனை ஒப்பந்தமும் சில வரைவுரைகளைக் கொண்டது. இவை ஒப்பந்தத்தின் கருப்பொருளான சரக்கைப் பற்றியதாக உள்ளன. உதாரணமாக, சரக்கின் தன்மை, தரம், விலை, தொகை செலுத்தும் முறை, சரக்கு வழங்கல், காலம், இடம் போன்றவை தொடர்பாக வரைவுரைகள் கூறப்பட்டிருக்கும். இவ்வரைவுரைகளில் சில நிறைவு செய்யப் படாவிடில், அது ஒப்பந்தத்தின் அடிப்படைத் தன்மையையே நிலைகுலையச் செய்யும். இவை ஒப்பந்தத்திற்கு உயிர் நிலையாக உள்ளன. இவற்றின் மீறுகை, ஒப்பந்தம் முழுவதுமான மீறுகையாக கருதப்படும். இவை விற்பனை ஒப்பந்தத்தின் **'நிபந்தனைகள்' (Conditions)** எனப்படும். இவற்றை **'கட்டுவரம்புகள்'** என்றும் அழைக்கலாம்.

இங்கு, சில வரைவுரைகள் உயிர் நிலையதாக இல்லாமல் இருக்கும். இவற்றின் மீறுகை, ஒப்பந்தம் முழுவதுமான மீறுகையாக கருதப்படாது. இவை விற்பனை ஒப்பந்தத்தின் **'நம்புறுதிகள் (Warranties)** எனப்படும். சுருக்கமாக, அதிக அளவு இன்றியமையாத வரைவுரைகள் **'நிபந்தனைகளாகவும்'**, குறைந்த அளவு இன்றியமையாத வரைவுரைகள் **'நம்புறுதிகளாகவும்'** உள்ளன.

இதனை சரக்கு விற்பனை சட்டத்தின் **12(1) பிரிவானது**, 'வரைவுரைகள் நிபந்தனைகளாகவோ அல்லது நம்புறுதிகளாகவோ இருக்கலாம்' என்று பொதுவாகக் கூறுகிறது.

நிபந்தனை (Condition) - பிரிவு 12(2) கூறும் வரையறை:

ஒப்பந்தத்தின் முதன்மையான நோக்கத்திற்கு ஒரு இன்றியமையாத வரைவுரை 'நிபந்தனையாகும்' என்றும், இதன் மீறுகை ஒப்பந்தத்தையே தள்ளுபடி (மறுத்தல்) (Repudiated) செய்ததாகக் கருதப்படும் என்றும் **பிரிவு 12(2)** கூறுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினர், சரக்கின் விலையைத் தர மறுக்கலாம் அல்லது பொருள்களை ஏற்க மறுக்கலாம் அல்லது ஒப்பந்தம் முழுவதையுமே மறுக்கலாம்.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B-யிடம் 'மாருதி 800' வாகனத்தை விலைக்குக் கொடுக்கக் கோருகிறார். ஆனால் B 'மாருதி 1000' வாகனத்தை

A-க்கு கொடுக்கிறார். இது மேற்படி சரக்கு விற்பனை ஒப்பந்த நிபந்தனையை மீறுதலாகும். இதனால் A அதற்கான விலையைக் கொடுக்க மறுக்கலாம். மேலும் ஒப்பந்ததைத் தள்ளுபடி செய்யலாம்.

Baldry v. Marshall[1]

இவ்வழக்கில் ஒருவர், கார் உற்பத்தியாளரிடம். தான் 'உல்லாசப் பயணம் செய்யத் தகுதியான' கார் வேண்டுமென்று கேட்டார். கார் உற்பத்தியாளர், 'புகட்டி' என்னும் காரை அவருக்கு விற்றார். அக்கார் உல்லாசப் பயணத்திற்கு தகுதியற்ற தாக இருந்தது. இங்கு 'உல்லாசப் பயணம் செய்யத் தகுதி' எனும் நிபந்தனை மீறப்பட்டதாகக் கூறி அக்காரை ஏற்றுக் கொள்ள மறுத்தார். இவ்வாறு செய்தது சரியே என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நம்புறுதி (Warranty) - பிரிவு 12 (3) கூறும் வரையறை:

ஒப்பந்தத்தின் முதன்மையான நோக்கத்திற்கு துணை நிற்கும் ஒரு வரைவுரை, 'நம்புறுதியாகும்' என்றும், இதன் மீறுகை, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு கோரி வழக்குரைக்கும் உரிமையை மட்டுமே அளிக்கும் என்றும் ஒப்பந்தத்தையே மறுக்கும் உரிமையை அளிக்காது என்றும் **பிரிவு 12(3)** கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவரிடம் சிகப்பு நிற 'குவாலிஸ்' வாகனத்தை விலைக்கு கோருகிறார். ஆனால் B வெள்ளை நிற 'குவாலிஸ்' வாகனத்தைக் கொடுக்கிறார். இது நம்புறுதி மீறுதலாகும். இதனால் பாதிக்கப்பட்ட மேற்படி A நட்டஈடு கோரி மட்டுமே வழக்குரைக்கலாம். மாறாக ஒப்பந்தத்தை மறுக்க (தள்ளுபடி செய்ய) முடியாது.

நிபந்தனையும் நம்புறுதியும் வேறுபடும் விதம் :

நிபந்தனையும், நம்புறுதியும் எவ்வாறு வேறுபட்டவை என்று **பிரிவு 12(4)** கூறுகிறது. அதன்படி (1) ஒப்பந்தத்தின் வரைவுரை (Stipulation) ஒன்று, நிபந்தனையா அல்லது நம்புறுதியா என்பது அவ்வொப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ள விதத்தைப் பொறுத்தே அமையும். (2) ஒரு வரைவுரை, நம்புறுதி என்று கூறப் பட்டிருந்தாலும், அது நிபந்தனையாகக் கூட இருக்கலாம். ஒப்பந்தச் சரத்துக்கள் கூறும் சான்றின் மூலமாக அறியப்படும் தரப்பினர்களின் எண்ணத்தை அடிப்படை யாகக் கொண்டு மட்டுமே ஒரு வரைவுரை நிபந்தனையா அல்லது நம்புறுதியா என்பது தீர்மானிக்கப்படும். இந்த நோக்கத்துக்காக ஒப்பந்தத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் பெயர் ஒரு பொருட்டல்ல.

வேறுபாட்டை சுட்டிக்காட்டும் **இரண்டு முக்கியமான வழக்குகள்** அடுத்து பக்கத்தில் வருமாறு.

---

1. (1925) 1 K.B. 260

Behn v. Burness[1]

இவ்வழக்கில், சரக்கு அனுப்புபவரும், கப்பல் உரிமையாளரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது கப்பல் ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்தில் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் உண்மையில் ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்தில் அப்பொழுது அக்கப்பல் இல்லை. பிறகுதான் அங்கு கொண்டு வரப் பட்டது. சரக்கை அனுப்புபவர் அக்கப்பலில் சரக்கை ஏற்ற மறுத்தார். கப்பல் உரிமை யாளர் சரக்கினை ஏற்ற ஒப்பந்தம் செய்து கொண்டவர் மீது வழக்குத் தொடர்ந்தார். அவ்வழக்கில் கப்பல் ஆம்ஸ்டர்டாம் துறைமுகத்தில் உள்ளது எனக் கூறியது நம்புறுதியாகும்; நிபந்தனையல்ல எனக் கூறி ஒப்பந்தத்தை நிறைவேற்ற சரக்கு அனுப்புபவருக்கு உத்தரவிடும்படி, கப்பல் உரிமையாளர் கேட்டுக் கொண்டார். ஆனால் நீதிமன்றமானது, கப்பல் இருக்குமிடம் பற்றிக் கூறியது ஒரு நிபந்தனையே; நம்புறுதியல்ல எனக் கூறி அவரது வழக்கைத் தள்ளுபடி செய்தது.

Bettini v. Gye[2]

இதில், பாடகர் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து கச்சேரி செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார். கச்சேரி ஆரம்பமாவதற்கு 6 நாட்களுக்கு முன்னதாக இலண்டனில் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால் பாடகர் இரண்டு நாட்களுக்கு முன்னதாகத்தான் இலண்டன் வந்து சேர்ந்தார். எனவே கச்சேரி இரத்து செய்யப்பட்டது. எனவே, பாடகர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம், ஆறு நாட்கள் முன்னதாக இலண்டனில் இருக்க வேண்டும் என்பது நம்புறுதியாகும். குறிப்பிட்ட நாளில் பாட வேண்டும் என்பதுதான் நிபந்தனை எனக் கூறி, கச்சேரியை இரத்து செய்தது செல்லாது என்று தீர்ப்பளித்தது.

வேறுபடுத்திக் காட்டும் அட்டவணை :

நிபந்தனை [Condition]	நம்புறுதி [Warranty]
1. தன்மை : ஒப்பந்தத்தின் முதன்மை யான நோக்கத்திற்கு இன்றியமை யாத வரைவுரை.	முதன்மையான நோக்கத்திற்கு துணை நிற்கும் வரைவுரை.
2. நிறைவேற்றம்: நிபந்தனை நிறை வேற்றப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் முதன்மையான நோக்கத்தையே	இங்கு ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல், நம்புறுதியை நிறைவேற்றுவதை சார்ந்திருப்பதில்லை.

1. (1863) 122 E.R. 281 : 124 R.R. 787
2. (1876) 1 Q.B. 183

நிபந்தனை [Condition]	நம்புறுதி [Warranty]
நிறைவேற்ற முடியாது. அதாவது ஒப்பந்தமே நிறைவேறாது.	
3. மீறுகை: நிபந்தனை ஒன்றின் மீறுகை, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஒப்பந்தத்தை மறுக்கும் உரிமையைத் தருகிறது. அவர் ஒப்பந்தத்தைத் தள்ளுபடி செய்து விடலாம்.	இதன் மீறுகை, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடு கோரும் உரிமையை மட்டும் தருகிறது. அவர் ஒப்பந்தத்தையே மறுக்க முடியாது.
4. கருதுதல்: ஒப்பந்தத் தரப்பினர், நிபந்தனை மீறுகையை, நம்புறுதி மீறுகையாகக் கருதினால், அவர் இழப்பீடு பெறுவதுடன் மனநிறைவு அடைய வேண்டும்.	இங்கு நம்புறுதி மீறுகையை, நிபந்தனை மீறுகையாகக் கருத வாய்ப்பில்லை.

5. Distinguish a condition from a warranty. What are the implied conditions and warranties in a contract of sale of goods? (ஒரு நிபந்தனையிலிருந்து நம்புறுதியை வேறுபடுத்துக. சரக்குகள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் உட்கிடையான நிபந்தனைகளும் நம்புறுதிகளும் யாவை?)

(அல்லது)

Point out how a condition differs from a warranty and state the implied conditions and warranties in a sale of goods. (ஒரு நிபந்தனை எவ்வாறு ஒரு நம்புறுதியிலிருந்து வேறுபடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, சரக்குகள் விற்பனை ஒன்றில் இருக்கும் உட்கிடை நிபந்தனைகளையும் நம்புறுதிகளையும் எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Explain with case laws, the implied conditions and warranties in the Sale of Goods Act. (சரக்கு விற்பனை சட்டத்தில் உள்ள உட்கிடையான நிபந்தனைகளையும், நம்புறுதிகளையும் முடிவுற்ற வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

State the implied conditions and warranties in a sale of goods. (சரக்குகள் விற்பனை ஒன்றில் இருக்கும் உட்கிடை நிபந்தனைகளையும் நம்புறுதிகளையும் எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Explain the implied conditions in a contract for the sale of goods. (சரக்குகள் விற்பனைக்காக ஒரு ஒப்பந்தத்தில் உட்கிடையாகவுள்ள கட்டு வரம்புகளை விளக்குக.)

(அல்லது)

Implied conditions in a contract of sale of goods - Write short notes. (சரக்குகள் விற்பனை ஒப்பந்தம் சார்ந்த உட்கிடையான நிபந்தனைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What are the implied warranties in a contract of sale of goods - Write short notes. (ஒரு சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள உட்கிடை நம்புறுதிகள் யாவை?)

(அல்லது)

Implied Conditions – Write short notes. (உட்கிடை நிபந்தனைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

நிபந்தனை மற்றும் நம்புறுதி - வேறுபாடுகள் :

(முந்தைய வினாவின் விடையில் காண்க.)

வெளிப்படையான மற்றும் உட்கிடையான நிபந்தனைகளும் நம்புறுதிகளும் (Express and Implied Conditions and Warranties) :

விற்பனை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளும், நம்புறுதிகளும் வெளிப்படையானவையாகவோ அல்லது உட்கிடையானவையாகவோ இருக்கலாம். ஒப்பந்தத்தில் வெளிப்படையாக எழுத்து மூலம் கூறப்பட்டிருப்பவை, 'வெளிப்படையானவை' (Express) என்றும், சட்டத்தாலும் வாணிக வழக்காறுகளாலும் ஊகித்து அறிந்து கொள்ளப்படுபவை, 'உட்கிடையானவை' (Implied) என்றும் கருதப்படும்.

உட்கிடையான நிபந்தனைகள் (Implied Conditions) (பிரிவுகள் 14 முதல் 17 வரை) :

1. சட்டப்படியான உரிமைக்கான நிபந்தனை (Condition as to title of goods) [பிரிவு 14 (a)] :

ஒரு விற்பனை ஒப்பந்தத்தில் பின்வரும் உட்கிடையான நிபந்தனைகள்

இருப்பதாகக் கருதப்படும். அவை (அ) விற்பனை என்றால், விற்பவர் சரக்கை விற்க உரிமை பெற்றிருக்கிறார்; (ஆ) விற்பனைக்கான உடன்பாடு என்றால், விற்க உடன்படுபவர் சரக்கின் உரிமை கைமாற வேண்டிய தருணத்தில் அதனை விற்கும் உரிமையைப் பெற்றிருப்பார்.

Rowland v. Divall[1]

இவ்வழக்கில் ரோலண்டு என்பவர் திவாலிடமிருந்து கார் வாங்கினார். அக்கார் திவாலுக்கு உரிமையானதல்ல என்பதை ரோலண்டு சில மாதங்கள் அக்காரை பயன்படுத்திய பிறகு அறிந்து கொண்டார். இந்நிலையில், அக்காரின் உண்மையான உரிமையாளர் அதனை எடுத்துச் சென்றார். எனவே காரின் விலையைத் திருப்பித் தரக் கோரி ரோலண்டு, திவால் மீது வழக்குத் தொடுத்தார். ரோலண்டு சில மாதங்கள் காரைப் பயன்படுத்தியிருந்தாலும், காரின் விலையை அவருக்குத் திவால் திரும்பக் கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

2. அளிக்கப்பட்ட சரக்கு குறித்துரைக்கப்பட்டவற்றுடன் ஒத்திருக்க வேண்டும் எனும் நிபந்தனை (Condition that the goods supplied shall correspond with its description) (பிரிவு 15-ன் முற்பகுதி) :

விற்கப்படுகிற சரக்குகள் விற்பனை ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறித்துரைக்கு (விபரத்திற்கு) (Description) ஒத்ததாக இருக்க வேண்டும் என்பது ஒரு உட்கிடையான நிபந்தனையாகும்.

உதாரணமாக, ஒப்பந்தத்தில் 'சேகர் பிராண்டு சம்பா ரவை' என்று குறித்துரை செய்யப்பட்டிருப்பின், ஒப்படைக்கப்படும் சரக்கும் அக்குறித்துரைக்கு ஒத்ததாகவே இருக்க வேண்டும். மாறாக, 'சாகர் பிராண்டு சம்பா ரவையை' எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தக் கூடாது. இது **'குறித்துரை மூலமான விற்பனை' (Sale by Description)** எனப்படுகிறது.

Wallis v. Pratt[2]

இவ்வழக்கில் A என்பவர் 'இங்கிலாந்து நாட்டு விலங்கு தீவனச் செடிக்கான' (English sainfoin) விதைகள் என்று குறித்துரைத்து, அவற்றை B–க்கு விற்றார். ஆனால் அங்கு அளிக்கப்பட்ட விதைகள் உண்மையில், 'பெரும் விலங்கு தீவனச் செடிக்கான விதைகள்' (giant sainfoin) ஆகும். இது ஒரு உட்கிடை நிபந்தனை மீறுகை என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Andrews v. Singar Company Ltd.[3]

இவ்வழக்கில் புதிய சிங்கர் கார் வாங்குவதற்கு 'ஆர்டர்' கொடுக்கப்

1. (1923) 2 K.B. 500
2. (1911) A.C. 394
3. (1934) 1 K.B. 17

பட்டது. ஆனால் ஏற்கனவே ஓடிய கார்கள் புதியதென்று சொல்லித் தரப்பட்டன. எனவே ஒப்பந்தம் தள்ளுபடி செய்யப்பட்டு, வாங்கியோருக்கு இழப்பீடு வழங்குதல் வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Pinnock v. Lewis[1]

இவ்வழக்கில் 'கொப்பரை தேங்காய் பிண்ணாக்கு' (Copra cake) விற்கப்பட்டது. ஆனால் அதனை அவ்வாறு குறிப்பிட முடியாதவாறு அதில் கலப்படம் இருந்து காணப்பட்டது. எனவே குறித்துரைக்கப்பட்ட சரக்குடன், விற்கப் பட்ட சரக்கு ஒத்திருக்காததால், இது ஒரு உட்கிடையான நிபந்தனை மீறுகை என்று கூறி, அதனை வாங்கியவர்களுக்கு இழப்பீடு அளிக்க நீதிமன்றம் ஆணையிட்டது.

குறித்துரை வாயிலான விற்பனை ஒப்பந்தம் இருப்பதாகக் கருதப்படும் சூழ்நிலைகள் :

(அ) வாங்குவோர் சரக்கைப் பார்க்காமல் விற்பவர் தந்த அதன் குறித்துரையை நம்பியிருந்தால்; (ஆ) வாங்குவோர் சரக்கைப் பார்த்திருந்தாலும், தான் பார்த்ததன் மீது நம்பிக்கை வைக்காமல், தனக்கு கூறப்பட்டவற்றில் நம்பிக்கை வைத்து வாங்கியிருந்து, அவ்வாறு குறித்துரைக்கப்பட்டதிலிருந்து அச்சரக்கு விலகிச் சென்றிருப்பது வெளிப்படையாகத் தெரியாதிருந்தால், அங்கு குறித்துரை வாயிலான விற்பனை ஒப்பந்தம் இருப்பதாகக் கருதப்படும். மேலும் (இ) ஒரு சரக்கு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேருவது, ஒரு குறிப்பிட்ட முறையில் பார்சலை கட்டுவது ஆகியவையும், சில சமயங்களில் குறித்துரை மூலமான விற்பனையாகக் கருதப்படும்.

3. அளிக்கப்பட்ட சரக்கு, அதன் மாதிரியுடன் ஒத்திருக்க வேண்டும் எனும் நிபந்தனை (Condition that the goods supplied shall correspond with its sample) (பிரிவு 17) :

மாதிரி மூலமான விற்பனை (Sale by sample) ஒப்பந்தத்தில் பின்வருவன உட்கிடை நிபந்தனைகளாகும். அவை (அ) சரக்கு முழுவதும், மாதிரியின் தரத்தை ஒத்திருக்க வேண்டும்; (ஆ) வாங்கியவர் மொத்தச் சரக்கையும் மாதிரியோடு ஒப்பிட்டுப் பார்க்க நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்; (இ) அச்சரக்கை விற்க முடியாத அளவிற்கு அதில் குறைபாடு ஏதும் இருத்தல் கூடாது. மேலும் அக்குறைபாடு, அம்மாதிரியை உரிய முறையில் ஆராயும் பொழுது வெளிப்படையாகத் (apparent) தெரியக் கூடாது.

Heibutt v. Hickson[2]

இவ்வழக்கில், காலணிகள், மாதிரி விற்பனை மூலம் கூபிரருக்குப் போர்

1. (1923) 1 K.B. 690
2. (1872) 7 C.P. 438

வீரர்களுக்கு விற்கப்பட்டன. ஆனால், காலணிகளுக்கு அடிப்பாகத்தில் காகிதம் வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. இது பின்னால் தெரியவந்தது. இக்குறைபாடு முதலில் பரிசோதிக்கும் போது தெரியாமல் உள்ளுக்குள் இருந்தது. எனவே, போர் வீரர்கள் அக்காலணியை வாங்க வேண்டியதில்லை என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

4. குறிப்புரை மற்றும் மாதிரி இரண்டின் மூலமுமான விற்பனையில், அளிக்கப்பட்ட சரக்கு அவை இரண்டையும் ஒத்திருக்க வேண்டும் எனும் நிபந்தனை (Condition that the goods supplied shall correspond with its description as well as sample) (பிரிவு 15-ன் பிற்பகுதி):

இவ்வாறான விற்பனையில் அளிக்கப்பட்ட சரக்கு, குறிப்புரையையும் மாதிரியையும் ஒத்திருக்க வேண்டும் என்பது உட்கிடையான நிபந்தனையாகும். அளிக்கப்பட்ட சரக்கு முழுவதும், குறித்துரைக்கப்பட்ட விபரத்துடன் ஒத்திருக்க வில்லையெனில், அது மாதிரியை ஒத்துள்ளது என்பது மட்டும் போதுமானதல்ல. அதாவது அச்சரக்கு, அதன் மாதிரியுடன் மட்டும் ஒத்திருந்தால் போதாது. சரக்கின் குறித்துரைக்கப்பட்ட விபரத்துடனும் ஒத்திருக்க வேண்டும்.

Nichol v. Godts[1]

இவ்வழக்கில், 'சுத்திகரிக்கப்பட்ட வெளிநாட்டு கடுகு எண்ணெய்' (Foreign refined rape oil) என்று குறித்துரைக்கப்பட்டு, ஒரு வகை எண்ணெயின் மாதிரி காட்டப்பட்டு, அந்த எண்ணெய் விற்கப்பட்டது. ஆனால் அந்த மாதிரியும், விற்கப்பட்ட எண்ணெயும் கலப்படமானதாக இருந்தது. எனவே விற்பனை செல்லாது என்றும், விற்கப்பட்ட எண்ணெய், குறித்துரைக்கப்பட்ட எண்ணெயுடன் ஒத்தது என்பதை விற்பவரே மெய்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியது.

5. தரம் அல்லது தகுதி குறித்த உட்கிடை நிபந்தனை (Condition as to Quality or Fitness) (பிரிவு 16) :

பொதுவாக விற்கப்படும் சரக்கின் தரம் அல்லது தகுதி பற்றி உட்கிடையான நிபந்தனை ஏதும் இல்லை. ஆனால் சில சூழ்நிலைகளில் சரக்கு விற்கப்படும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தைப் பொறுத்து சில நிபந்தனைகள் உட்கிடையாக உள்ளன.

சரக்கை வாங்குவோர் தாம் வாங்கும் நோக்கத்தை விற்பனையாளரிடம் சொன்னால், அப்பொழுது சரக்கின் தரம் பற்றிய உட்கிடையான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். வாங்கப்பட்ட சரக்கு அந்நோக்கத்திற்கு தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்பது அங்கு உட்கிடை நிபந்தனையாகும் **[பிரிவு 16(1)]**.

அதுபோல், குறித்துரை மூலமான விற்பனையில் (sale by description), அளிக்கப்பட்ட சரக்கு வணிகத் தரம் (அதாவது விற்கத்தக்க நிலை) கொண்டதாக இருக்க வேண்டும், என்று **பிரிவு 16(2)** கூறுகிறது.

1. (1854) 156 E.R. 410

மேலும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக வாங்கப்படும் சரக்கின் தரம் அல்லது தகுதியானது, அதற்குரிய வணிக வழக்காறுடன் இணைந்ததாக இருக்க வேண்டும், என்று **பிரிவு 16(3)** கூறுகிறது.

Priest v. Last[1]

இவ்வழக்கில் வெந்நீர் அடங்கிய புட்டி (hot water bottle) விற்கப் பட்டது. ஆனால் கொதிக்கும் வெந்நீரை அப்புட்டி தாங்காமல் வெடித்து ஒருவரைக் காயப்படுத்திவிட்டது. எனவே அதனை வாங்கியவருக்கு நட்டஈடு தரக்கோரி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஏனெனில் அவர் வெந்நீரை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும் எனும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவ்வெந்நீர் புட்டியை வாங்கினார். ஆனால் அந்நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

Bombay Trading Corporation v. Aga Mohamed[2]

இரயில் நிறுவனம், சில மரங்களை 'ஸ்லிப்பர்களாகப்' பயன்படுத்துவதற்கு வாங்கியது. ஆனால் அந்நோக்கத்திற்கு அம்மரங்கள் தகுதியுடையவையாக இல்லை. எனவே இரயில் நிறுவனம், மரங்களை வேண்டாமென்று ஒதுக்குவதற்கு உரிமை உண்டென நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

ஏனெனில் அம்மரங்களை வாங்கும் போது அவை எந்த நோக்கத்திற்காக வாங்கப்படுகின்றன என்பதை இரயில் நிறுவனம் கூறியும், அந்நோக்கத்திற்கு தகுதியற்ற (பொருந்தாத) மரங்களை அளித்தது உட்கிடை நிபந்தனை மீறலாகும்.

6. வாணிகத்திற்கு உகந்தவையாக சரக்கு இருத்தல் வேண்டும் எனும் நிபந்தனை (Condition as to Merchantability) [பிரிவு 16 (2)] :

நாம் சென்ற பக்கத்தில் கண்ட **பிரிவு 16(2)–ன்படி,** விற்கப்படும் சரக்கு, சந்தையில் விலை போகக் கூடியதாக இருக்க வேண்டும். அதாவது, சந்தையில் விற்பதற்கு ஏற்ற வகையில் அச்சரக்கு வணிகத் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பது ஒரு உட்கிடையான நிபந்தனையாகும்.

Peer Muhammed v. Dalooram[3]

இவ்வழக்கில், கறுப்பு நூல் (Black yarn) வாங்கப்பட்டது. ஆனால் அவற்றை கரையான் அரித்துவிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, இங்கு வணிகத் தரம், அதாவது அச்சரக்கு விற்கும் தன்மையற்றதாகிவிட்டபடியால், அவ்விற்பனை தள்ளுபடி செய்யப்பட்டது.

---

1. (1903) 2 K.B. 148
2. (1911) 34 Mad. 453
3. (1918) 35 M.L.J. 180

Jones v. Just[1]

இவ்வழக்கில் விற்கப்பட்ட மணிலா பாபிறு வகை (Manila hemp) சேதமடைந்த நிலையில் வழங்கப்பட்டது. எனவே அது வணிகத் தரம் அற்றது என்றும், அதற்கு விற்றவரே பொறுப்பு என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

7. துய்ப்பதற்கு ஏற்றதாகப் சரக்கு இருக்க வேண்டும் எனும் நிபந்தனை (Condition as to Wholesomeness) :

விற்கப்படும் சரக்கு, மனிதர்கள் துய்ப்பதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இந்நிபந்தனை, உணவுப் பண்டங்கள் வகையில் பெரும்பாலும் பின் பற்றப்படுகிறது. அதாவது அப்பண்டங்கள் சுகாதாரமாகவும், நுகரக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

Frost v. Aylesbury Dairy Company[2]

இவ்வழக்கில் பால் வாங்கியவர் அதனை அருந்தியதால் டைபாய்டு காய்ச்சல் கண்டு காலமாகிவிட்டார். அப்பாலில் டைஃபாய்டைப் பரப்பும் கிருமிகள் அடங்கியுள்ளன என்று பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அப்பாலை விற்பனை செய்த நிறுவனம் நட்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டது.

8. வணிக வழக்காறு ஏற்படுத்தும் உட்கிடை நிபந்தனை (Condition implied by Trade Usage) [பிரிவு 16 (3)] :

நாம் ஏற்கனவே கண்ட பிரிவு 16(3)–ன்படி, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற் காக வாங்கப்படும் சரக்கின் தரம் அல்லது தகுதியானது, அதற்குரிய வணிக வழக்காறுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். அதாவது சரக்கொன்றின் தரம் அல்லது தகுதியானது, வணிக வழக்காறு கூறும் நிபந்தனைகளுக்கு முரண்பட்ட தாக இருத்தல் கூடாது.

உட்கிடையான நம்புறுதிகள் (Implied Warranties):

விற்பனை ஒப்பந்தம் ஒவ்வொன்றிலும், மாறான ஒப்பந்தம் இல்லாத நிலையில், பின்வரும் 'உட்கிடையான நம்புறுதிகள்' அமைந்துள்ளதாக கருதப்படும்.

1. அமைதியான உடைமை குறித்த நம்புறுதி (Warranty of Quiet Possession) [பிரிவு 14 (b)]:

ஒரு விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் சரக்கின் அமைதியான உடைமையைப் பெற்று அதனை அனுபவிக்க விற்பவர் வகை செய்திருக்க வேண்டும் என்பது உட்கிடை நம்புறுதியாக உள்ளது. சரக்கை விற்றவருக்கு அதன் மீதான உரிமையில் குறைபாடு இருப்பதாக அல்லது அச்சரக்கை அமைதியான முறையில்

1. (1868) 3 Q.B. 197
2. (1905) 1 K.B. 608

அனுபவிப்பதில் ஏதேனும் இடையூறு இருப்பதாக வாங்கியவர் கருதினால், அதற்காக விற்றவரிடமிருந்து அவர் நட்டாடு கோரலாம்.

2. வில்லங்கத்திலிருந்து விடுபடும் நம்புறுதி (Warranty of freedom from encumbrance) [பிரிவு 14 (c)]:

விற்கப்படும் சரக்கின் மீது, மூன்றாம் நபர்களுக்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்றும், அத்தகு மூன்றாம் நபர்களால் எவ்வித வில்லங்கமும் செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் விற்பவர் வகை செய்திருக்க வேண்டியது உட்கிடை நம்புறுதியாகும். மேலும் மேற்கண்ட வில்லங்கங்களை வாங்குபவர் அறியாதிருக்க வேண்டும். அப்பொழுதுதான், பின்னிட்டு வில்லங்கம் ஏதும் இருப்பதாக அறிந்து கொண்டால், அதற்காக விற்பவரிடமிருந்து நட்டாடு கோர முடியும்.

3. சரக்கின் ஆபத்தான தன்மையை வெளிப்படுத்தும் நம்புறுதி (Warranty to disclose dangerous nature of goods):

ஆபத்தை ஏற்படுத்தும் சரக்கினை விற்பவர், அந்த ஆபத்தைப் பற்றி எச்சரிக்கை கொடுத்து விற்க வேண்டும் என்னும் உட்கிடையான நம்புறுதி உள்ளது. அவ்வாறு இல்லையெனில் விற்பவர் வாங்குபவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு பொறுப்பாவார்.

6. What are the conditions implied by law when goods are sold by description and by sample? (வருணனை மூலமும் மாதிரி மூலமும் சரக்குகள் விற்கப்படும்போது, சட்டத்தால் குறிப்பாக சுட்டப்படுகின்ற நிபந்தனைகள் யாவை ?)

(அல்லது)

Explain with illustration 'Sale by sample' and 'Sale by description' (மாதிரி அடிப்படை விற்பனையையும் குறித்துரை அடிப்படை விற்பனையையும் உதாரணங்களோடு விவரிக்க.)

(அல்லது)

Distinquish between sale by sample and sale by description. (மாதிரி அடிப்படை விற்பனையிலிருந்து குறித்துரை அடிப்படை விற்பனையை வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Sale by sample - Write short notes. (மாதிரி மூலம் விற்பனை - சிறு குறிப்பு எழுதுக.)

(முந்தைய வினாவின் விடையில் 'உட்கிடையான நிபந்தனைகள்' எனும் தலைப்பின் கீழ் 2 மற்றும் 3–ஆம் எண் கொண்ட பத்திகளில் காண்க.)

7. State the doctrine of 'Caveat emptor' and explain the exceptions to it. ('வாங்குபவனே விழித்திரு' என்கிற கோட்பாட்டினை குறிப்பிட்டு, அதற்குரிய விலக்குகளை விளக்கம் செய்யவும்.)

(அல்லது)

Explain 'Caveat emptor' and state its exceptions ('வாங்குபவனே எச்சரிக்கையாயிரு' என்பதனை விளக்கி, அதன் விதிவிலக்குகளை குறிப்பிடவும்).

(அல்லது)

How far is the doctrine of Caveat emptor recognised in English law? Examine as to what extent it has been adopted in the Indian Sale of Goods Act. ('வாங்குபவனே விழித்திரு' என்ற கோட்பாடு ஆங்கிலச் சட்டத்தில் எவ்வளவு தூரம் அங்கீகரிக்கப்படுகிறது? அக்கோட்பாடு இந்திய சரக்கு விற்பனைச் சட்டத்தில் எவ்வாறு எடுத்தாட் கொள்ளப்பட்டுள்ளது?)

(அல்லது)

How far the doctrine of 'caveat emptor' is recognised under the Sale of Goods Act. ('வாங்குபவனே விழித்திரு' என்ற கோட்பாடு சரக்கு விற்பனைச் சட்டத்தில் எவ்வாறு எடுத்தாட் கொள்ளப்பட்டுள்ளது?)

(அல்லது)

'Law finds duty on buyer to examine goods' - Explain. ('சரக்கை பரிசோதிக்கும் கடமையை சட்டம் வாங்குபவருக்கு விதிக்கிறது' – விளக்குக.)

(அல்லது)

Caveat emptor - Write short notes. (வாங்குபவனே விழித்திரு – சிறு குறிப்பு எழுதுக.).

(அல்லது)

Doctrine of caveat emptor - Write short notes. ('வாங்குபவனே விழித்திரு' எனும் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

வாங்குபவனே விழித்திரு (Caveat Emptor) - விளக்கம் :

'Caveat Emptor' எனும் பதம் இலத்தீன் மொழியிலிருந்து பிறந்ததாகும். பொதுவாக சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் 'வாங்குபவர் விழித்திருந்து, சரக்குகளை கவனமுடன் வாங்க வேண்டும்' என்பது விதியாகும். இதைத்தான் 'வாங்குபவனே விழித்திரு' (Purchaser, beware!) என்று கூறுகிறோம்.

விற்பவர், தான் விற்கும் சரக்குகளில் உள்ள குறைகளை எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. வாங்குபவர்தான், தான் வாங்குகிற சரக்குகள் நல்ல

தரம் உடையதாக இருக்கிறதா என்பதை சரிபார்த்து வாங்க வேண்டும். வாங்கிய பிறகு விற்பனையாளரை குறை கூறவோ அல்லது அவரிடம் இழப்பீடு கோரவோ முடியாது. ஆராய்ந்து கூறின், விழிப்புடன் இருந்து சரக்குகளை வாங்காமல், பின்னிட்டு அவை குறைபாடுள்ளவையாக இருப்பது கண்டறியப்பட்டால், அதற்கு விற்றவர் பொறுப்பாக மாட்டார்.

அதுபோல், பலவித நோக்கத்திற்கு ஒரு சரக்கு பயன்பட்டால், வாங்கியவர் தேர்வு செய்த சரக்கு அவரது நோக்கத்தை பூர்த்தி செய்யலாம் அல்லது செய்யாமலும் போகலாம். வாங்குபவரின் நோக்கம் விற்பவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. எனவே, வாங்கியவர் தவறாகத் தேர்ந்தெடுத்தால் அதற்கு அவரே பொறுப்பாவார்; விற்பவர் அல்ல.

Smith v. Hughes[1]

இவ்வழக்கில் ஒருவருக்கு 'பார்லி'-யின் (oats) மாதிரி காண்பிக்கப்பட்டது. அவர் அதை பழைய பார்லி (old oats) என்று கருதினார். ஆனால் அவர் வாங்கியதோ 'புதிய பார்லியாகும்'. அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டதற்கு, விற்றவரைப் பொறுப்பாக்க முடியாது என்றும், அவ்விற்பனை ஒப்பந்தம் செல்லத்தக்கதே என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இந்தியச் சட்டம் :

சரக்கு விற்பனைச் சட்டத்தின் **16-வது பிரிவு** 'வாங்குபவரே விழித்திரு' எனும் கோட்பாட்டை அங்கீகரிக்கிறது.

(1) முதற்கண் **பிரிவு 16(1)-ன் கீழான முதற் பத்தியானது,** சரக்கை வாங்குவோர், விற்பவரின் திறமை அல்லது கணிப்பின் மீது நம்பிக்கை வைத்துள்ளதாகக் காட்டி, அச்சரக்கு எதற்காக தேவைப்படுகிறது என்பதற்குண்டான தமது குறிப்பிட்ட நோக்கத்தை (particular purpose) அவரிடம் வெளிப்படையாகச் சொன்னால் அல்லது குறிப்பால் உணர்த்தினால், அச்சரக்கு அந்நோக்கத்திற்கு உரிய தகுதியுடையதாக இருக்க வேண்டும் என்பது அங்கு உட்கிடை நிபந்தனையாகும் என்று கூறுகிறது. எனவே இப்பிரிவின்படி வாங்குபவர் விழித்திருக்க வேண்டியதில்லை.

ஆனால் அதே **பிரிவு 16(1)-ன் கீழான இரண்டாவது பத்தியானது,** ஒரு குறிப்பிட்ட பொருளை அதன் சிறப்புச் சின்னம் (patent) அல்லது வணிகப் பெயரின் கீழ் விற்பதற்கான ஒப்பந்தமொன்றில், அதை வாங்குவதற்கான குறிப்பிட்ட நோக்கம் எதற்கும் அதன் தகுதி குறித்து உட்கிடையான நிபந்தனை ஏதும் இல்லை, என்று கூறுகிறது. இங்குதான் வாங்குபவர் விழித்திருந்து, கவனமாக அத்தகு பொருளை வாங்குதல் வேண்டும். தவறினால் விற்றவரைப் பொறுப்பாக்க முடியாது.

1. (1871) 6 Q.B. 597

எடுத்துக்காட்டாக, ஒருவர் தனக்கு 'புலி மார்க் சீயக்காய் தூள்' வேண்டும் என்று கூறுகிறார். மற்றொருவர் தனது 'எச்.எம்.டி. கடிகாரம்' வேண்டும் என்று கூறுகிறார். இங்கு விற்பவர் 'புலி மார்க்' எனும் சிறப்புச் சின்னம் பொறித்த சியக்காய் தூளை விற்றவுடனும், 'எச்.எம்.டி.' எனும் வணிகப் பெயர் கொண்ட கடிகாரத்தையும் கொடுத்தவுடன், அதை வாங்குவதற்கான குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறிவிடுகிறது. அதாவது புலி மார்க் சீயக்காய் தூள், தலைக் குளிக்கும் நோக்கத்திற்கு பயன்படுகிறது. 'எச்.எம்.டி.' கடிகாரம் நேரத்தைப் பார்க்கும் நோக்கத்திற்கு பயனா கிறது. இந்த நோக்கங்கள் அங்கு வெளிப்படையாக உள்ளன. எனவே அவற்றை வாங்கியவர் தனது வேறு நோக்கங்களுக்கு அவை தகுதியுடையதாக இல்லை என்று வழக்காட வழியில்லை. பாத்திரம் விளக்கும் சீயக்காய் தூள் வேண்டும் என்றால், அதை அவர் குறிப்பிட்டு அத்தகு தூளை தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும். அதுபோல் நிறுத்தற் கடிகாரம் வேண்டுமெனில், அந்நோக்கத்தைக் குறிப்பிட்டு, அவர் அத்தகு கடிகாரத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். எனவே வாங்குபவர் தனது தேர்வை வெளிப்படுத்தி வாங்க வேண்டும். மாறாக ஒரு பொருளின் சிறப்புச் சின்னம் அல்லது வணிகப் பெயரின் மீது நம்பிக்கை வைத்து வாங்கினால், அதற்குரிய நோக்கத்தைத்தான் அவை பூர்த்தி செய்யும். மாறாக வாங்கியவர் கருதிய வேறு நோக்கங்களை அவை பூர்த்தி செய்யா. அதற்கு விற்றவர் பொறுப்பாகார்.

(2) பிரிவு 16(2)–ன் கீழான முதற் பத்தியானது. குறித்துரையின்படி (description) சரக்கு விற்கும் விற்பனையாளர் ஒருவரிடமிருந்து அக்குறித்துரையின்படியிலான சரக்கு வாங்கப்பட்டால், அச்சரக்கு வணிகத் தரம் (அதாவது விற்கத்தக்க நிலை) வாய்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பது உட்கிடை நிபந்தனையாகும் என்று கூறுகிறது. அதாவது சரக்கின் விபரம் ஏற்கனவே குறித்துரைக்கப் பட்டிருந்து, அதன்படி சரக்கு விற்கப்பட்டால், அது மீண்டும் சந்தையில் விற்கப் படத்தக்க தரத்தை கொண்டதாகவே இருக்கும் என்பது உட்கிடையாகும். எனவே இது சரக்கு வாங்குபவருக்கு பாதுகாப்பளிக்கிறது.

ஆனால் அதே பிரிவு 16(2)–ன் கீழான இரண்டாவது பத்தியானது, சரக்கை வாங்குபவர் பரிசோதித்து வாங்கியிருப்பின், அத்தகு பரிசோதனை வெளிப் படுத்தியிருக்கக் கூடிய குறைபாடுகளைப் பொறுத்த வரை உட்கிடை நிபந்தனை ஏதும் கிடையாது. அதாவது சோதனை செய்து வாங்கிய சரக்கில், குறைபாடு உள்ளது என்று வாங்குபவர் பின்னிட்டு குறை கூற முடியாது; விற்றவரை பொறுப்பாக்க முடியாது. எனவே வாங்குபவர் விழிப்புடன் இருக்க வேண்டும்.

இங்கிலாந்து சட்டம் :

'வாங்குபவனே விழித்திரு' என்ற கோட்பாடு இங்கிலாந்து நாட்டிற்கு பொருந்தாது. இங்கிலாந்தில் **'Market Overt'** எனும் சந்தையின் வேலை நேரத்தில் செய்யப்படும் விற்பனையில் விற்பவரின் உரிமை எவ்வளவு

குறைபாடுடையதாக இருந்தாலும், வாங்குபவர் நல்ல உரிமை மூலம் பெறுகிறார். ஆகவே, இங்கு வாங்குபவர் விழித்திருக்கத் தேவையில்லை.

'வாங்குபவனே விழித்திரு' - விதிவிலக்குகள் :

'வாங்குபவனே விழித்திரு' எனும் கோட்பாட்டிற்கு விதிவிலக்குகள் இருக்க வேண்டியது பின்வரும் காரணங்களால் அவசியமாயின. அதாவது நேரடியாக வாங்கவும் விற்கவும் நேர்ந்த காலத்தில், இவ்விதி முழுவதும் பொருந்தியதாக இருந்தது. ஆனால் பின்னிட்டு வணிகம் என்பது உலகமெங்கும் விரிந்து பரவத் தொடங்கியது. அப்பொழுது, வாங்குபவர் சரக்கைப் பார்த்து தேர்ந்தெடுத்தல் என்பது இயலாத செயலாகிவிட்டது. மேலும் அஞ்சல் வழி விற்பனை (Sale by Mail Order) பெருகியது. எனவே இக்கோட்பாட்டின் செயலை விதிவிலக்குகள் மூலம் குறுகச் செய்வது தேவையான ஒன்றாகியது. இவ்விதிவிலக்குகள் யாவும் உட்கிடையான நிபந்தனைகளாக உள்ளன. அவை வருமாறு.

1. விற்பவரின் திரித்துக்காட்டல் (Misrepresentation) : விற்பவர் திரித்துக்காட்டல் புரிந்திருந்து, அதை வாங்கியவர் நம்பியிருந்தால், இக்கோட்பாடு பொருந்தாது. இத்தருணத்தில் வாங்கியவர் அவ்விற்பனை ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்யலாம்.

2. விற்பவரின் மோசடி (Fraud) : விற்பவர் மோசடி புரிந்து அதை வாங்கியவர் நம்பியிருந்தாலோ அல்லது' விற்பவர் வேண்டுமென்றே சரக்கிலுள்ள குறைபாட்டை மறைந்திருந்தாலோ இக்கோட்பாடு பொருந்தாது. வாங்கியவர் ஒப்பந்தத்தை மறுக்கலாம்.

3. சரக்கின் தரம் அல்லது தகுதி (Qulity or fitness of goods): சரக்கொன்றின் தரம் அல்லது தகுதியைப் பொறுத்து, (அ) வாங்குபவர் விற்பவரிடம் எந்த நோக்கத்திற்காக சரக்கு தேவை என்பதை தெரிவித்தல்; (ஆ) வாங்குபவர் விற்பவரின் திறமையிலும், கணிப்பிலும் (பகுத்துணர் தன்மையிலும்) நம்பிக்கை கொண்டிருத்தல் (இ) சரக்கின் விற்கத்தக்க தன்மை (Merchanta-bility), ஆகியவை ஒரு உட்கிடை நிபந்தனையாக இருக்கும்பொழுது மேற்படி கோட்பாடு பொருந்தாது (பிரிவு 16).

4. வணிகப் பெயரின் கீழான - விற்பனை : ஒருவர் ஒரு குறிப்பட்ட வாணிகப் பெயருடைய சரக்கைக் கேட்டு. விற்பவர் அதற்கு மாறான ஒரு பொருளை கொடுத்திருந்து, இவ்விபரம் வாங்கியவருக்கு பின்னர் தெரியவரும் போது, அவர் அவ்விற்பனை ஒப்பந்தத்தை தவிர்க்கலாம்.

உதாரணமாக, A என்பவர் 'ரின்' சோப் கொடுக்குமாறு B எனும் கடைக் காரரிடம் கேட்கிறார். ஆனால் B 'வீல்' சோப்பை A-க்கு கொடுத்து, அவர் அதை கவனமில்லாமல் ஏற்றுக் கொண்டிருந்தாலும், பின்னர் தெரிய வரும் போது அவ்விற்பனையை A தவிர்க்கலாம். இங்கு எந்த வணிகப் பெயருடன் பொருள்

கேட்கப்படுகிறதோ அதே பொருளை விற்பவர் அளிக்க வேண்டும் என்பது உட்கிடை நிபந்தனையாக உள்ளது. எனவே மேற்படி கோட்பாடு இங்கு பொருந்தாது.

5. வணிக வழக்காறு : வாணிக வழக்காறானது பொருளின் தரம் அல்லது தகுதி பற்றிய உட்கிடையான நிபந்தனை எதையும் ஏற்படுத்தியிருந்தால் மேற்படி கோட்பாடு பொருந்தாது. விற்பவர் இழப்பீடுகளுக்குப் பொறுப்பாவார்.

6. சட்டம் வகுத்துள்ள உட்கிடையான நிபந்தனைகளையும், நம்புறுதி களையும் நம்பி வாங்குபவர்களுக்கு, இக்கோட்பாடு பொருந்தாது. அவர்கள், விற்பவர் மீது தக்க நிவாரணம் கோரி வழக்குரைக்கலாம்.

8. Discuss the various rules relating to passing of property between buyer and seller. (விற்பவர் வாங்குபவர் ஆகியவர்களிடையே சொத்து உரிமை மாறிச் செல்லுதல் சம்மந்தமாக கூறப்படும் பலவகை விதிகளை விவாதிக்கவும்.)

(அல்லது)

What are the various rules of passing of property under the Sale of Goods Act? (சொத்து உரிமை செல்லுதல் சம்பந்தமாக, சரக்கு விற்பனை சட்டத்தில் கூறப்படும் விதிகளை கூறவும்.)

(அல்லது)

Passing of property in the goods under the Sale of Goods Act - Write short notes. (சரக்குகள் விற்பனை சட்டத்தின் கீழ் சரக்குகளின் உரிமை மாற்றம் – சிறு குறிப்பு எழுதுக.)

சொத்துரிமை மாறுதல் அல்லது சரக்குரிமை மாறுதல் (Passing of Property) :

விற்ற சரக்கில் உள்ள உரிமை விற்பனையாளரிடம் இருந்து வாங்குபவருக்கு மாறிச் செல்ல வேண்டியது, சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். சொத்துரிமை மாற்றம் நிகழ்வதை ஒப்பந்த நபர்களின் எண்ணத்தில் இருந்துதான் அறிந்து கொள்ள வேண்டுமென சரக்கு விற்பனைச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. ஒப்பந்த நபர்கள் எப்பொழுது, எந்நிலையில் சொத்துரிமை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதை தாங்களாகவே நிருணயித்துக் கொள்ளலாம் என்று சரக்கு விற்பனைச் சட்டம் 19(1)–வது பிரிவில் கூறப்பட்டுள்ளது.

எப்பொழுது சொத்துரிமை மாறிச் (கடந்து) செல்கிறது?

எப்பொழுது சொத்தின் (சரக்கின்) உரிமை வாங்குவோருக்கு மாறிச் செல்கிறது என்பதை பின்வரும் சில அடிப்படை விதிகள் உறுதிப்படுத்துகின்றன.

1. சரக்குகள் உறுதிப்படும்போது (Goods must be ascertained) (பிரிவு 18) : உறுதிப்படுத்தப்படாத சரக்குகளுக்கான விற்பனை ஒப்பந்தத்தில், சரக்குகள் உறுதிப்படுத்தப்பட்டாலொழிய, உரிமை வாங்குபவரிடம் செல்வதில்லை.

2. ஒப்பந்த நபர்களின் எண்ணப்படி (Intention of the parties): குறிப்பிட்ட அல்லது உறுதிப்படுத்தப்பட்ட சரக்குகளின் விற்பனை ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை, அவற்றின் உரிமை ஒப்பந்த நபர்களின் எண்ணப்படி (விருப்பப்படி) மாறுகிறது என சரக்கு விற்பனைச் சட்டம் **பிரிவு 19(1)** கூறுகிறது.

ஒப்பந்த நபர்களின் எண்ணத்தை உறுதிப்படுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள், ஒப்பந்த நபர்களின் நடத்தை, சூழ்நிலைகள் ஆகியவை கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என **பிரிவு 19(2)** கூறுகிறது.

எப்பொழுது சரக்கின் உரிமை மாற வேண்டும் என்பதற்கான ஒப்பந்த நபர்களின் எண்ணத்தை, ஒப்பந்தத்திலிருந்து உறுதிப்படுத்த இயலவில்லை என்றால் சரக்கு விற்பனைச் சட்டத்திடன் 20 முதல் 24 வரையிலான பிரிவுகளில் அடங்கியுள்ள விதிகள் கடைபிடிக்கப்பட வேண்டும் என **பிரிவு 19(3)** கூறுகிறது.

மேற்கூறிய பிரிவுகளின்படி சொத்துரிமை மாறுதல் தொடர்பான விதிகள் பின்வருவனவாகும்.

சொத்துரிமை மாறிச்செல்லுதல் தொடர்பான விதிகள் (Rules relating to Passing of Property):

பொதுவாக, சரக்குகள் (1) உறுதி செய்யப்பட்ட சரக்குகள், (2) உறுதி செய்யப்படாத சரக்குகள் என இரு வகைப்படும். இச்சரக்குகளில் சொத்துரிமை மாற்றம் பின்வருமாறு நிகழ்கிறது.

1. உறுதி செய்யப்பட்ட அல்லது குறிப்பிட்ட சரக்குகள் (Ascertained or specific goods):

உறுதி செய்யப்பட்ட அல்லது குறிப்பிட்ட சரக்குகளைப் பொறுத்தமட்டில், எப்பொழுது சொத்துரிமை மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று ஒப்பந்த நபர்கள் எண்ணுகிறார்களோ, அப்பொழுது சொத்துரிமை மாற்றம் செய்யப்படுகிறது. ஒப்பந்த நபர்களின் எண்ணத்தை அறிந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் பின்வருமாறு சொத்துரிமை மாற்றம் ஏற்படுகிறது.

(a) வழங்கத்தகு நிலையிலுள்ள சரக்கு (Goods in deliverable state) (பிரிவு 20) : வழங்கத்தகு நிலையில் உள்ள குறிப்பிட்ட சரக்கை விற்பதற்காக நிபந்தனையற்ற ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருப்பின், ஒப்பந்தம் செய்து கொண்டவுடன் அச்சரக்கில் உள்ள சொத்துரிமை வாங்குபவருக்கு மாறுகிறது. விலையைச் செலுத்தும் காலம் அல்லது சரக்கை ஒப்படைக்கும் காலம்

அல்லது இரண்டும் ஒத்தி வைக்கப்பட்டிருப்பினும், சரக்கின் சொத்துரிமை மாற்றம் தடைபடுவதில்லை.

Rugg v. Minnett[1]

இவ்வழக்கில் 24 புட்டிகள் டர்பன்டைன் மருந்தை விற்பதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. இவற்றில் 22 புட்டிகள் டர்பன்டைன் மட்டும் வழங்கத்தகு நிலையில் இருந்தன. மற்ற 2 புட்டிகள் டர்பன்டைன் வழங்கத்தக்க நிலையில் இல்லை. இவ்வழக்கில் வழங்கத்தகு நிலையிலிருந்த டர்பன்டைன் புட்டிகளின் மீதான சொத்துரிமை வாங்கியவருக்கு மாறிவிட்டது என்றும், வழக்கத்தக்க நிலையில் இல்லாத புட்டிகளின் மீதான சொத்துரிமை விற்பவரிடமே உள்ளது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(b) வழங்கத்தகு நிலையில் சரக்கு இல்லாதபோது (Goods not in deliverable state) (பிரிவு 21): குறிப்பிட்ட சரக்கை விற்பதற்கான ஒப்பந்தம் ஒன்றில், அச்சரக்கை வழங்குத்தகு நிலையில் வைக்கும் நோக்கத்திற்காக அதில் விற்பவர் ஏதேனும் செய்யக் கடமைப்பட்டிருப்பின், அத்தகு செயல் செய்யப்படும் வரையும், அது குறித்து வாங்குபவர் அறிவிக்கப்படும் வரையும் அச்சரக்கின் மீதான சொத்துரிமை மாறுவதில்லை.

(c) சரக்கின் விலையை நிருணயிப்பதற்கு விற்பவர் செயல் எதையும் செய்ய வேண்டியிருப்பின் (When the seller has to do anything thereto in order to ascertain price) (பிரிவு 22): வழங்கத்தகு நிலையில் உள்ள குறிப்பிட்ட சரக்கை விற்பதற்கான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்து, அச்சரக்கின் விலையை நிருணயிக்கும் நோக்கத்திற்காக அதனை விற்பவர் எடை போட, அளவிட, பரிசோதிக்க அல்லது அது குறித்து வேறு சில செயல்களைச் செய்யக் கடமைப்பட்டிருப்பின், அவ்வாறு செய்யும் வரையும், அது குறித்து வாங்குபவர் அறிவிக்கப்படும் வரையும் அச்சரக்கின் மீதான சொத்துரிமை மாறுவதில்லை.

2. உறுதி செய்யப்படாத சரக்கு (Unascertained goods) (பிரிவு 23)

உறுதி செய்யப்படாத சரக்கு, உறுதி செய்யப்படும் வரை அவற்றின் உரிமை மாறுவதில்லை. சரக்கு எப்பொழுது உறுதி செய்யப்படுகிறது என்று தெரிய வேண்டிய அவசியம் இங்குள்ளது. உறுதி செய்தல் என்பது சரக்கை தரம் பிரித்து ஒதுக்கீடு (appropriation) செய்தலாகும். அப்பொழுதுதான் வாங்குவோர் அவற்றை எளிதில் புரிந்து கொண்டு எடுத்துச் செல்லலாம். இதனால் சரக்கின் சொத்துரிமை மாறுகிறது. ஒதுக்கீட்டை பின்வருமாறு செய்யலாம்.

(a) விற்பனையாளர் இசைவுடன் வாங்குபவர் ஒதுக்கீடு செய்யலாம்; (b) சரக்கு வைப்புப் பெட்டகங்களில் (container) சரக்கைத் தகுந்த முறையில்

1. (1809) 103 E.R. 985 : 10 R.R. 475

வைக்கலாம்; (c) வாங்குவோரின் இசைவோடு விற்பவர் ஒதுக்கீடு செய்யலாம்; (d) போக்குவரத்திற்காக பொது சரக்கேற்றியிடம் (common carrier) சரக்கை ஒப்படைக்கலாம்.

Atkinson v. Bell[1]

இவ்வழக்கில் சரக்கு (இயந்திரம்) ஒதுக்கீட்டை விற்பனையாளர் செய்து விட்டு வாங்குபவருக்குப் அதனை எந்தப் போக்குவரத்து மூலம் அனுப்பலாம் எனக் கடிதம் எழுதியதற்கு, வாங்குபவர் பதில் ஏதும் எழுதாமல் பேசாமல் இருந்துவிட்டார். எனவே அச்சரக்கின் (இயந்திரத்தின்) உரிமை வாங்குபவருக்கு மாறிச் செல்லவில்லை.

3. 'ஏற்றுக் கொண்டால் விற்பனை' அல்லது 'விற்பனை அல்லது திருப்புதல்' எனும் அடிப்படையில் சரக்குகளை ஒப்படைத்தல் (Goods delivered on 'Sale on Approval' or 'Sale or Return').

'ஏற்றுக் கொண்டால் விற்பனை' அல்லது 'விற்பனை அல்லது திருப்புதல்' எனும் நிபந்தனையின் பேரில் குறிப்பிட்ட சரக்கு விற்கப்படும் போது, அவற்றில் உள்ள சொத்துரிமை எப்பொழுது மாறுகிறது என்பது பற்றி சரக்கு விற்பனைச் சட்டத்தின் 24–வது பிரிவு கூறுகிறது. அதன்படி சரக்கை 'ஏற்றுக் கொண்டால் விற்பனை' அல்லது 'விற்பனை அல்லது திருப்பி அனுப்புதல்' எனும் அடிப்படையில் அச்சரக்கின் மீதான உரிமை பின்வரும் சூழ்நிலைகளில் மாறுகிறது.

(a) வாங்குபவர் அச்சரக்கின் ஏற்பை விற்பவருக்கு தெரியப்படுத்தினால் அல்லது அவ்விற்பனை நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் செயல் எதையும் செய்தால், அச்சரக்கின் மீதான சொத்துரிமை அவருக்கு மாறுகிறது.

(b) வாங்குபவர் அச்சரக்கின் ஏற்பை விற்பவருக்கு தெரியப்படுத்தாமல் இருந்து ஆனால், அச்சரக்கை திருப்பி அனுப்புதலுக்கான அறிவிப்பு எதையும் கொடுக்காமல் அதனை தன்னுடனே இருத்திக் கொண்டிருந்து, அங்கு அச்சரக்கை திருப்பி அனுப்புவதற்காக காலம் ஏதும் நிருணயிக்கப்பட்டிருப்பின், அக்காலம் முடிந்தவுடன் அல்லது அவ்வாறு காலம் ஏதும் நிருணயிக்கப்படாதிருப்பின், ஒரு நியாயமான காலம் முடிவுற்ற பின், அச்சரக்கின் மீதான சொத்துரிமை வாங்குபவருக்கு மாறுகிறது.

Elphick v. Barnes[1]

இவ்வழக்கில் குதிரையொன்று, 'விற்பனை அல்லது திருப்புதல்' எனும் அடிப்படையில் (Sale or return basis) வாங்குபவருக்கு அளிக்கப்பட்டது.

1. (1828) 108 E.R. 1046
2. (1880) 5 C.P.D. 321

வாங்குவோர் தன் விருப்பத்தை, அதாவது குதிரையை வைத்துக் கொள்வதா, அல்லது திருப்பித் கொடுத்து விடுவதா என்பது பற்றி 8 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று காலம் நிருணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் வாங்குபவர் குதிரையைப் பெற்றுக் கொண்ட 4 நாட்களுக்குள் அது இறந்தவிட்டது. இங்கு சொத்துரிமை வாங்குபவருக்கு மாறாததால், அவ்விழப்பை, குதிரையை விற்றவரே ஏற்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

முடிவுரை :

மேற்கண்டவை யாவும், சரக்கு விற்பனை ஒன்றில், சொத்துரிமை மாற்றம் ஏற்படுவது தொடர்பான விதிகள் ஆகும். சரக்குரிமை மாற்றப்பட்டால்தான் வாங்குவோர் பொருளின் மீது தனி உரிமை பெறுகிறார். எனவே ஒரு சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் 'சரக்குரிமை மாற்றம்' (Passing of property in the goods) மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

9. 'Risk prima facie passes with property'. Explain the statement with reference to cases. ('சொத்துடன் இடரும் முதற் தோற்றத்திலேயே கடந்து செல்கிறது.' இக்கூற்றினை வழக்குகளைக் குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

"Risk prima facie passes with ownership" - Write short notes. ("உடைமையோடு சேர்ந்து முதல் தோற்றத்திலேயே வருநிலை இழப்பு கடந்து செல்கிறது" – சிறு குறிப்பு எழுதுக.)

பொது விதி:

'சொத்துடன் இடரும் முதற் தோற்றத்திலேயே கடந்து செல்கிறது', என்பது ஒரு பொது விதி. இவ்விதியின் பொருளை நாம் இங்கு காண வேண்டியது அவசியமாகும். 'சரக்கு விற்பனை' என்பது, ஓர் ஒப்பந்தத்தின் மூலம் விற்பவர் வாங்குபவருக்கு ஒரு விலைக்கு சரக்கின் சொத்துரிமையை மாற்றுதலாகும். இங்கு 'இடர்' என்பதை 'பொறுப்பு' என்றும், சரக்கின் மீதான சொத்துரிமை (the property in the goods) என்பதை, அச்சரக்கின் மீதான 'உடைமையுரிமை' (ownership) என்றும் கூறலாம். இதன்படி, ஒரு சரக்கின் மீதான உடைமையுரிமை வாங்குபவருக்கு மாறும் வரை, அது அதன் உரிமையாளர் (விற்பவர்) வசமே இருக்கும். எனவே அச்சரக்கிற்குரிய பொறுப்பும் அதன் உரிமையாளரிடமே தங்கியிருக்கும். இந்த உடைமையுரிமை வாங்குபவருக்கு மாறும் பொழுது, அச்சரக்கின் பொறுப்பும் சேர்ந்தே வாங்குபவருக்கு செல்வதாக சட்டம் அனுமானிக்கிறது. இதைத்தான் மேற்படி **'சொத்துடன் இடரும் முதற் தோற்றத்திலேயே கடந்து செல்கிறது'** எனும் பொது விதி உணர்த்துகிறது. சுருங்கக் கூறின், சரக்கின் மீதான உடைமையுரிமை வாங்குபவருக்கு மாறும் வரை, அதற்கு விற்பவரே பொறுப்பு; மாறிய பின், வாங்குபவரே பொறுப்பு.

பிரிவு 26 கூறுவதாவது:

மேற்கண்ட பொது விதிக்கு அடிப்படையாக 26–வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, 'வேறுவிதமாக உடன்பாடு கொள்ளவில்லையெனில், சரக்கின் உடைமையுரிமை வாங்குபவருக்கு மாற்றப்படும் வரை, அச்சரக்கிற்குரிய பொறுப்பு விற்பவர் வசமே இருக்கும். ஆனால் அவ்வுடைமையுரிமை எப்பொழுது வாங்குபவருக்கு மாறிவிடுகிறதோ, அப்பொழுதே அச்சரக்கிற்குரிய பொறுப்பும் வாங்குபவருக்கு மாறிவிடுகிறது. இங்கு அச்சரக்கு வாங்குபவரிடம் வழங்கப் பட்டுவிட்டதா, இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல".

விதிவிலக்குகள் :

சரக்கும், அதற்குரிய பொறுப்பும் சேர்ந்தே செல்வன என்பதால் அவை பிரிக்க முடியாதவை (inseperable) ஆகும். எனினும், சில சமயங்களில் 'இடர்' (risk) ஒருவரிடம் ஏற்பட்டிருக்க, 'உடைமையுரிமை' (சரக்குரிமை) வேறு ஒருவரிடம் இருப்பதுண்டு. எனவே மேற்கண்ட பொது விதிக்கு பின்வரும் விதிவிலக்குகள் உண்டு.

1. சரக்கை வழங்குதல் (delivery of goods), வாங்குபவர் அல்லது விற்பவரின் தவறுகையால் தாமதமானால், அதனால் ஏற்பட்ட இழப்பிற்கு யார் தவறுகை புரிந்தாரோ அவரே பொறுப்பாவார். மாறாக, சரக்குரிமை வைத்திருப் பவரை மட்டும் குறை கூற முடியாது.

2. மேற்கூறிய விதி, மற்றொரு தரப்பினரின் சரக்கை ஒப்படைவு பெற்றுள்ளவர் எனும் நிலையில், விற்பவர் அல்லது வாங்குபவரின் கடமைகள் அல்லது பொறுப்புகள் எதையும் பாதிக்காது.

3. பிரிவு 26–ன் ஆரம்பமே, 'வேறுவிதமாக உடன்பாடு கொள்ளவில்லை எனில்' என்று தொடங்குகிறது. எனவே தரப்பினர்கள் (விற்பவர்–வாங்குபவர்) வேறுவிதமாக ஒரு தனி உடன்பாடு செய்து கொள்வதன் வாயிலாக, சரக்குரிமை மாறுவதற்கு முன்பு அல்லது பின்பு, அதற்குரிய பொறுப்பு மாறிச் செல்லும் என ஒப்புக் கொள்ளலாம்; அல்லது எப்பொழுது சரக்கிற்குரிய பொறுப்பு மாறும் என்றும் உடன்பாடு செய்து கொள்ளலாம்.

10. 'No one can convey a better title than what he himself has'. Discuss this proposition with reference to its exception, if any mentioned in the Sale of Goods Act, 1930. ('தான் பெற்றிருக்கும் உரிமை மூலத்தை விட அதிகமான உரிமை மூலத்தை ஒருவர் மற்றவருக்கு அளிக்க இயலாது.' இக்கூற்றினை 1930–ம் ஆண்டு சரக்குகள் விற்பனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகள் ஏதேனுமிருப்பின் அவைகளைக் குறிப்பிட்டு கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Explain the maxim, "Nemo dat quod non habet" with exceptions under the Sale of Goods Act. ("தான் கொண்டுள்ள உரிமைக்கு மேலான உரிமையை மாற்றம் செய்ய முடியாது" என்பதை சரக்கு விற்பனை சட்டத்தின் கீழ் விதிவிலக்குகளுடன் எழுதுக.)

(அல்லது)

State the exceptions to the maxim 'nemo dat quod non habet' ('ஒருவர் தாம் பெற்ற உரிமையை விட மிதப்படியான உரிமையை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது" என்ற சால்புரையின் விதிவிலக்குகளை கூறுக.)

(அல்லது)

'No one can transfer a better title than what he himself possesses'. Explain and state the exceptions to this rule. ('ஒருவர் தான் பெற்ற உரிமையைவிட மேம்பட்ட உரிமையை மற்றவருக்கு மாற்றியளிக்க இயலாது'. இவ்விதியினை விளக்கி அதன் விதிவிலக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Discuss the law of a sale made by a person who is not the owner of goods. (உரிமையாளர் அல்லாத ஒருவர் செய்யும் சரக்கு விற்பனை குறித்த சட்ட விதியை விவாதிக்க.)

முன்னுரை :

பொதுவாக விற்பனை ஒப்பந்தத்தில் விற்பவர், சரக்கின் முழு உரிமையாளராக (Full owner) அனுமானிக்கப்படுகிறார். அச்சரக்கு, அவரிடமிருந்து வாங்குபவருக்கு மாறுவதால், வாங்குபவர் முழு உரிமையாளராகிறார் என்றும் அனுமானிக்கப்படுகிறது. ஆனால் இது உரிமைமூல மாற்றத்திலிருந்து (title) மாறுபட்டதாகும். 'உரிமைமூலம்' என்பது சரக்கின் மீதான சொந்த உரிமையின் பாற்பட்டதாகும். விற்பவர் சில காரணங்களுக்காக முழு உரிமையாளராக இல்லாமல், வரம்புடைய உரிமையாளராக (Qualified owner) இருக்கும் பொழுது, அவரிடமிருந்து மற்றவருக்கு சரக்கு மாற்றமடைந்தால், மாற்றம் பெறுபவர் எத்தகைய உரிமைமூலம் பெறுகிறார் எனும் வினா எழுகிறது. சரக்கு விற்பனைச் சட்டத்தின் 27 முதல் 30 வரையுள்ள பிரிவுகள், அத்தகைய மாற்றம் பெறுபவர் வரம்புடைய உரிமையாளராகிறாரா அல்லது முழு உரிமையாளராகிறாரா என்பது குறித்து விளக்குகிறது.

உரிமைமூல மாற்றம் குறித்த பொது விதி :

ஒரு நபர் தன்னிடமிருப்பதை விடச் சிறந்த உரிமை மூலத்தை மற்றவருக்கு

அளிக்க முடியாது' என்பது பொதுவிதி. இவ்விதி **'Nemo dat quod non habet' (No one can convey a better title than what he has)** என்ற இலத்தீன் முதுமொழியிலிருந்து தோன்றியதாகும். இவ்விதியின்படி ஒரு நபர் உரிமை மூலம் இல்லாமலோ அல்லது குறைபாடுள்ள உரிமை மூலத்தை கொண்டோ ஒரு சரக்கை விற்பனை செய்தால், வாங்குபவருக்கும் அவ்வாறே அப்பொருளின் மீது உரிமை மூலம் இல்லாமல் போகிறது அல்லது அவர் அத்தகு குறைபாடுள்ள உரிமை மூலம் கொண்டவராகிறார். அச்சரக்கை அதற்கடுத்து வாங்குபவருக்கும் அதே உரிமை மூலமே நீடிக்கிறது. இதனையே **பிரிவு 27** ஆனது, 'உரிமையாளராக இல்லாதவரால் சரக்கு விற்கப்பட்டால் அல்லது உரிமையாளரின் அதிகாரம் பெறாமல் அல்லது அவரது இசைவு பெறாமல் விற்கப்பட்டால், வாங்குபவர் விற்றவரிடமுள்ளதை விட சிறந்த உரிமை மூலத்தைப் பெற முடியாது' என்று கூறுகிறது. எனவே, இவ்விதி சரக்கின் உண்மையான உரிமையாளரைக் காக்கிறது.

உதாரணமாக, A என்பவர் B என்பவரிடமிருந்து ஒரு சரக்கைத் திருடி, அதை C என்பவருக்கு விற்றால், அப்பொருளுக்கு C உரிமையாளராக முடியாது. எனவே இங்கு அச்சரக்கின் உண்மையான உரிமையாளரான B காக்கப்படுகிறார்.

இவ்விதியின் விலக்குகள் :

உரிமைமூலம் பற்றிய இவ்விதி, சரக்கின் உண்மையான உரிமை மூலத்தைப் பற்றி அறியாமல், அதனை வாங்கியவர்களுக்கெதிராக மிகக் கடுமை யாக செயல்படுகிறது. எனவே, நல்லெண்ணத்துடன் செய்யப்படும் வியாபார நடவடிக்கைகளை பாதுகாக்கும் பொருட்டு, மேற்படி விதிக்கு, சில விதிவிலக்குகள் உள்ளன. அதாவது, விற்பவருக்கு பொருளின் மீது உரிமை இல்லாவிட்டாலும், வாங்கியவருக்கு அப்பொருளின் மீது உரிமை ஏற்படுகிறது. இவ்விதிவிலக்குகள் சரக்கு விற்பனை சட்டத்தின் **27 முதல் 30 வரையுள்ள பிரிவுகளில்** கூறப் பட்டுள்ளன. அவை வருமாறு.

1. முரண்தடையால் உரிமை மூலம் (Title by Estoppel) (பிரிவு 27): ஒரு சரக்கின் உண்மையான உரிமையாளர் ஒருவர், தனது செய்கையால் விற்பவருக்கு அச்சரக்கை விற்க அதிகாரம் உண்டு என்று வாங்குபவரை நம்பச் செய்தால், அவர் விற்பவரின் விற்பனை உரிமையை பின்னர் மறுக்க முரண்தடை செய்யப்படுகிறார். இந்நிலையில் வாங்குபவர் விற்பவரிடம் இருந்ததைவிட சிறந்த உரிமை மூலத்தைப் பெற முடிகிறது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B-யின் பொருட்களை C-க்கு விற்கிறார். இது B-க்குத் தெரிந்தும் மறுக்கவில்லை. எனவே மேற்படி C என்பவர் A-யிடம் இருந்ததைவிட நல்ல உரிமை மூலம் பெறுகிறார்.

2. வணிக முகவர் மூலமாக விற்பனை (Sale by a Mercantile Agent) (பிரிவு 27–ன் கீழான வரம்புரை வாசகம் – Provisio to Sec. 27):

முதல்வரின் சரக்கைப் பெற்ற ஒரு முகவர், அச்சரக்கை மற்றொருவருக்கு விற்றால் வாங்குபவருக்கு சிறந்த உரிமை மூலம் உண்டு. ஆனால் இதற்கு பின்வரும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்; (1) விற்பவர் ஒரு வணிக முகவராக இருக்க வேண்டும் அல்லது சரக்கின் உரிமைப் பத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டும்; (3) உரிமையாளரின் இசைவுடன் விற்க வேண்டும்; (4) நடைமுறையில் அவர் ஒரு வணிக முகவர் என்ற முறையில் விற்பனை செய்திருக்க வேண்டும்; (5) வாங்குபவர் விற்பவருக்கு விற்கும் அதிகாரம் இல்லை என அறிந்திருக்கக் கூடாது.

3. கூட்டு உரிமையாளர்களில் ஒருவரின் விற்பனை (Sale by Joint owners) (பிரிவு 28) : ஒரு சரக்கிற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு உரிமையாளர்கள் இருக்கலாம். அவர்களில் ஒருவர், பிற உரிமையாளரின் ஒப்புதல் பெற்று அச்சரக்கை விற்பனை செய்யலாம். இங்கு அதனை வாங்குபவர் சிறந்த உரிமை மூலம் பெறுகிறார்.

4. தவிர்தகு ஒப்பந்ததின் கீழ் சரக்கின் உடைமையைப் பெற்றிருப்பவரால் விற்பனை (Sale by a person in possession under a voidable contract) (பிரிவு 29) : தவிர்தகு ஒப்பந்தம் ஒன்றின் கீழ் சரக்கின் விற்பனையாளர் அவற்றின் உடைமையைப் பெற்று விற்பனை செய்யும்போது, அந்த ஒப்பந்தம் திரும்பப் பெறப் படாவிட்டால், வாங்கியவர் அச்சரக்கின் மீது சிறந்த உரிமை மூலத்தைப் பெறுகிறார். இல்லா நிலை ஒப்பந்தத்தில் (Void contract) பெற்ற சரக்கிற்கு இது பொருந்தாது.

5. விற்பனைக்குப் பின்னர் சரக்கின் உடைமையை வைத்திருக்கும் விற்பவரின் விற்பனை (Sale by seller in possession after sale) [பிரிவு 30(1)]: ஒரு சரக்கை விற்றவர் விற்பனைக்குப் பிறகும் அச்சரக்கை அல்லது அச்சரக்கிற்கான ஆவணங்களை தன்னிடம் வைத்திருந்து அதை மற்றொருவருக்கு விற்றால், வாங்கியவர் அச்சரக்கின் மீது சிறந்த உரிமை மூலத்தைப் பெறுகிறார்.

6. விற்பனைக்குப் பின்னர் உடைமையை வைத்திருக்கும் வாங்குபவரின் விற்பனை (Sale by buyer in possession after sale) [பிரிவு 30(2)]: சரக்கை வாங்கியவர் அல்லது வாங்குவதற்கு உடன்பாடு செய்து கொண்டவர், அச்சரக்கை தன்னிடம் வைத்திருந்து, விற்றவர் அச்சரக்கின் மீது பற்றுரிமையைப் (lien) பெற்றிருக்கின்றபோது, வாங்கியவர் அதனை விற்றால், அங்கு அதனை வாங்கியவர் சிறந்த உரிமை மூலத்தைப் பெறுகிறார்.

7. விலை செலுத்தப்படாத விற்பனையாளரின் விற்பனை (Sale by unpaid sellter) [பிரிவு 54(3)]: விலை செலுத்தப்படாதிருக்கும் பொழுது, ஒரு சரக்கினை விற்பவர், தனது பற்றுரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி (Right of lien) அல்லது சரக்கு செல்லுகையில் நிறுத்தி (Stoppage in transit) அச்சரக்கை மறு விற்பனை செய்தால், அதை வாங்கியவருக்கு சிறந்த உரிமை மூலம் கிடைக்கிறது.

8. காணாமல் போன பொருட்களைக் கண்டு எடுத்தவரின் விற்பனை (Sale by finder or lost goods) (இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 169) : சில சூழ்நிலைகளில் காணாமல் போன பொருட்களை கண்டெடுத்தவர், அதை விற்றால் அதை வாங்கியவருக்கு சிறந்த உரிமை மூலம் உண்டு.

9. அடகு பெற்றவரின் விற்பனை (Sale by a Pawnee or pledgee) (இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 176) : அடகு வைத்தவர் பணம் செலுத்தத் தவறியபோது, அடகு பெற்றவர் அப்பொருட்களை விற்றால், அதை வாங்கியவருக்கு சிறந்த உரிமை மூலம் உண்டு.

10. இங்கிலாந்தில் 'Market Overt' எனும் சந்தையில் விற்பனை (Sale in Market Overt) : 'Market overt' என்பது சட்டப்படி அமைக்கப்பட்ட பொதுச் சந்தையாகும். இவ்வித சந்தைகள் இங்கிலாந்தில் குறிப்பிட்ட இடங்களில் அரசாணைப்படியோ அல்லது பழக்கவழக்கத்தின்படியோ அமைக்கப்பட்டுள்ளன. இங்கு வேலை நேரத்தில் செய்யப்படும் விற்பனையில் வாங்குபவர், விற்பவரின் உரிமை எவ்வாறிருந்தாலும், நல்ல உரிமை மூலம் பெறுகிறார். ஆனால் இவ்விதி இந்தியாவிற்குப் பொருந்தாது. ஏனெனில் 'வாங்குபவரே விழித்திரு' (Caveat Emptor) எனும் விதி இந்தியாவில் பின்பற்றப்பட்டு வருகிறது.

முடிவுரை :

மேற்கண்ட விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஒரு விற்பனையில் விற்பவர் சரக்கின் சொந்த உரிமையாளராக இல்லாமலிருந்தாலும், வாங்கியவர் சிறந்த மற்றும் செல்லத்தக்க உரிமை மூலம் பெறுகிறார்.

11. Market Overt - Write Short Notes. (மார்க்கெட் ஓவர்ட் – சிறு குறிப்பு எழுதுக.)

(முந்தைய வினாவின் விடையின் இறுதியில் காண்க.)

12. Define 'Unpaid Seller'. What are his rights under the Sale of Goods Act? ('விலை பெறா விற்பனையாளர்' என்பவர் யார்? சரக்கு விற்பனை சட்டத்தின்படி அவருக்குரிய உரிமைகள் யாவை?)

(அல்லது)

Describe the rights of an unpaid seller of goods. (விலை கொடுக்கப் பெறாத விற்பனையாளர் ஒருவரின் உரிமைகளை விவரிக்க.)

(அல்லது)

Who is an unpaid seller? What are the rights of an unpaid seller? (விலை பெறாத விற்பனையாளர் என்பவர் யார்? விலை பெறாத விற்பனையாளரின் உரிமைகள் யாவை?)

(அல்லது)

Who is an unpaid Seller? State his rights over the goods and against the buyer personally. (விலைபெறா விற்பனையாளர் என்பவர் யார்? பொருட்களின் மீதும் வாங்குபவருக்கு எதிராகவும் அவரது உரிமைகள் என்னவென்று கூறுக.)

(அல்லது)

Who is an unpaid vendor? Discuss his rights against (i) the goods sold, and (ii) the buyer personally. (விலை செலுத்தப் பெற விற்பனையாளர் என்பவர் யார்? (அ) விற்கப்பட்ட சரக்கிற்கு எதிராக மற்றும் (ஆ) தனிப்பட்ட முறையில் வாங்கியவருக்கு எதிராக அவரது உரிமைகளை விவாதிக்க.)

(அல்லது)

Explain the rights of unpaid vendor. (விலை பெறா விற்பனையாளரின் உரிமைகளை விளக்குக.)

(அல்லது)

State clearly the special rights given to an unpaid seller of goods, property in which property has passed to the buyer. (வாங்குபவருக்கு சொத்துரிமை மாறிய சரக்குகளை பொறுத்து விலை பெறாத விற்றவருக்கு அளிக்கப்பட்டுள்ள தனி உரிமைகளை தெளிவாக எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What is vendor's lien? When does it arise? What are its limitations? (விற்பவரின் பற்றுரிமை என்றால் என்ன? எப்பொழுது அது எழுகிறது? அதன் கட்டுப்பாடுகள் யாவை?)

(அல்லது)

Compare and contrast the unpaid seller's lien and the right stoppage in transit. (விலை செலுத்தப் பெறா விற்பனையாளரின் பற்றுரிமை மற்றும் செல்கையில் நிறுத்தம் ஆகியவற்றை ஒப்பிட்டு, வேறுபடுத்துக.)

(அல்லது)

Unpaid seller - Write short notes. (விலை பெறா விற்பனையாளர் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Unpaid vendor's remedies - Write short notes. (விலை பெறா விற்பனையாளருக்குரிய தீர்வழிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Rights of unpaid vendor - Write short notes. (விலை பெறா விற்பனையாளரின் உரிமைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Stoppage in transit - Write short notes. (செல்லுகையில் நிறுத்தம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Right of Stoppage in transit - Write short notes. (செல்லுகையில் நிறுத்தம் செய்ய உரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is meant by right of stoppage in transit? ("செல்லுகையில் நிறுத்த உரிமை" என்பது யாது?)

(அல்லது)

What are the remedies open to an aggrieved party in case of breach of contract of sale of goods. (சரக்கு விற்பனை ஒப்பந்த மீறுகை ஏற்படும் நேர்வில் அதனால் பாதிக்கப்படும் தரப்பினருக்கு உள்ள தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

Right of resale - Write short notes. (மறு விற்பனை உரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

விலை பெறாத விற்பனையாளர் (Unpaid Seller or Vendor):

'விலை பெறாத விற்பனையாளர்' என்பவர், பொருளை விற்றதற்கு அதன் விலையைப் பெறாதவர் அல்லது விலைக்குரிய மாற்றுமுறை ஆவணங்கள் (Negotiable Instruments) கொடுக்கப்பட்டு, அவற்றின் மதிப்பு மறுக்கப்பட்டு விலையைப் பெற முடியாதவர் ஆவார்.

சட்டம் கூறும் வரையறை:

சரக்கு விற்பனைச் சட்டத்தின் 45(1)–வது பிரிவு விலை பெறாத விற்பனையாளரை பின்வருமாறு வரையறுக்கிறது. அதன்படி,

1. விற்ற சரக்குகளுக்கான விலை முழுவதும் செலுத்தப்படாத அல்லது செலுத்த முனைவு செய்யப்படாத விற்பனையாளர் விலை பெறாத விற்பனையாளர் ஆவார்.

2. விற்பனையாளருக்கு மாற்றுச் சீட்டோ அல்லது காசோலையோ அளிக்கப்பட்டு அவை ஏற்கப்படாமல் அவற்றின் மதிப்பு மறுக்கப்பட்டால் (Dishonoured), அவர் விலை பெறாத விற்பனையாளர் ஆவார்.

விலை பெறாத விற்பனையாளரின் உரிமைகள் (Rights of an Unpaid seller or vendor) :

சரக்கின் உரிமை வாங்குபவருக்குச் சென்று, வாங்கியவர் விலையைச் செலுத்தத் தவறினால் அல்லது மறுத்தால், அச்சரக்கை விற்ற விற்பனையாளர் விலையைப் பெற, சட்டம் சில உரிமைகளை விற்பனையாளருக்குக் கொடுத்துள்ளது. இந்த உரிமைகள் விலை பெறாத விற்பனையாளரின் உரிமைகள் எனப்படுகின்றன.

விலை பெறாத விற்பனையாளரின் உரிமைகள் (1) சரக்குகளுக்கு எதிரான உரிமைகள் என்றும்; (2) வாங்குபவருக்கு எதிரான தனிப்பட்ட உரிமைகள் என்றும் இரண்டு பிரிவுகளாக உள்ளன. அவை வருமாறு :

1. சரக்குகளுக்கு எதிரான உரிமைகள் (Rights of an unpaid seller against the goods) :

(a) பற்றுரிமை (Right of lien) (பிரிவுகள் 47 முதல் 49 வரை): தனக்கு ஒரு சரக்கு தொடர்பாக நியாயமாக வந்தடைய வேண்டிய தொகை வரும் வரை, அச்சரக்கை தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளும் உரிமை 'பற்றுரிமை' (lien) எனப்படும். இங்கு விலை பெறாத விற்பனையாளருக்கு சரக்கின் விலையைப் பெறும் வரை, அதனை தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளும் உரிமையுண்டு.

பின்வரும் தருணங்களில்தான் மேற்படி உரிமையை விலை பெறாத விற்பனையாளர் செயல்படுத்த முடியும். அவை, (i) கடன் குறித்த வரைவுரை (stipulation) ஏதும் இல்லாமல் சரக்கு விற்கப்பட்டிருந்தால்; (ii) சரக்கு கடனுக்கு விற்கப்பட்டு கடன் கெடு முடிவடைந்ததும் விலை பெறாமல் இருந்தால்; (iii) வாங்கியவர் நொடிந்தவரானால்.

(b) சரக்கு செல்லுகையில் நிறுத்தம் (Right of Stoppage of goods in transit) (பிரிவுகள் 50 முதல் 52 வரை) : விற்பனையாளர், வாங்குவோருக்குச் சரக்குகளை அனுப்புவதற்காக சரக்கேற்றி (லாரி, ரெயில், கப்பல், பார்சல் சர்வீஸ் போன்றவை) ஒருவரிடம் ஒப்படைத்து அவை செல்லும் போது தடுத்து, அச்சரக்கிற்கான விலை செலுத்தப் பெறும் வரை, அவற்றை தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளலாம். இதனை மேலே கண்ட பற்றுரிமைக்கான கோட்பாட்டின் ஒரு விரிவாக்கம் என்றே கூறலாம்.

ஆனால் பிரிவு 50–ன்படி, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான், இவ்வுரிமை விற்பனையாளருக்குக் கிடைக்கும். அவை, (i) அச்சரக்கின் விலை முழுவதுமாக செலுத்தப்படாதவராக அல்லது செலுத்த முனைவு

செய்யப்படாதவராக அவ்விற்பனையாளர் இருக்க வேண்டும்; (ii) அவர் சரக்கின் உடைமையை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும்; (iii) சரக்குகள் செல்லுகையின் பொருட்டு சரக்கேற்றி ஒருவரிடம் இருக்க வேண்டும். அதாவது சரக்குகள் வாங்கியவரை சென்றடைந்திருக்கக் கூடாது; (iv) வாங்கியவர் நொடிந்தவராகி யிருக்க இருக்க வேண்டும்.

வாங்கியவருக்கு சரக்கு வழங்கப்படாத வரை, சரக்கு செல்லுகையில் இருப்பதாக பொருளாகும். ஆனால் சரக்குகள் வாங்கியவரையோ அல்லது அவரது முகவரையோ சென்றடைந்துவிட்டால், 'சரக்கு செல்லுகையில் நிறுத்தம்' எனும் உரிமை முடிவிற்கு வருகிறது. இதனை பின்வரும் வழக்கு விளக்கும்.

G.I.P. Railway Company v. Hanumandas[1]

இவ்வழக்கில், சரக்குகள் இரயில் மூலம் அனுப்பப்பட்டன. யாருக்கு சரக்கு அனுப்பப்பட்டதோ, அவர் உரிய இரசீதைக் கொடுத்து சரக்கை எடுத்துச் சென்றார். அவர் இரயில் நிலையத்தை விட்டுப் போவதற்குள், சரக்கை ஒப்படைக்க வேண்டாமென, விலை பெறாத விற்பனையாளரிடமிருந்து தந்தி வந்தது. இரயில் அதிகாரிகள் சரக்கை எடுத்துச் செல்வதை தடுத்து விட்டார்கள். எனினும், சரக்கின் ஒப்படைவு நடந்துவிட்டபடியால் அவ்வதிகாரிகள் செய்தது முறையல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

(c) மறு விற்பனை உரிமை (Right of Re-Sale) (பிரிவு 54): விலை பெறாத விற்பனையாளர், பின்வரும் சூழ்நிலைகளில் சரக்கினை மறு விற்பனை செய்ய உரிமை படைத்தவர்.

(i) சரக்குகள் அழுகக் கூடியதாக மற்றும் கெட்டுப் போகக் கூடியதாக இருக்கும் போது;

(ii) பற்றுரிமை அல்லது செல்லுகையில் நிறுத்தும் உரிமை ஆகியவற்றை செயல்படுத்திய விலை பெறா விற்பனையாளர், அச்சரக்கை தாம் மறு–விற்பனை செய்யவிருப்பதாக வாங்குபவருக்கு அறிவிப்பு அனுப்பி, அவ்வாறு அனுப்பியதிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வாங்கியவர் அச்சரக்கின் விலையை செலுத்த வில்லையானால் அல்லது செலுத்த முனைவு செய்யவில்லையானால்;

(iii) ஒப்பந்தத்தில் வாங்கியவர் தவறிழைத்தால், விற்றவருக்கு மறு விற்பனை செய்யும் உரிமை உண்டு என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டிருக்கும் போது,

(iv) சரக்கின் சந்தை விலை குறையும் போது,

மேற்கூறிய சூழ்நிலைகளில் விலை பெறாத விற்பனையாளர், தான் விற்ற சரக்குகளை வேறொரு நபருக்கு மறு விற்பனை செய்யும் உரிமை உண்டு. அவ்வாறு

1. (1889) 14 Bom. 57

மறு விற்பனை செய்யும் போது மறு விற்பனையில் குறைவான விலை கிடைத்தால், அவ்வாறு குறைந்த தொகையை அச்சரக்கை முதலில் வாங்க விழைந்து விலை செலுத்தத் தவறியவரிடமிருந்து பெறுவதற்கு விற்றவருக்கு உரிமை உண்டு. மறு விற்பனையில் மிகுதியான ஆதாயம் கிடைத்தால், அதை விற்றவரே வைத்துக் கொள்ளலாம்.

2. வாங்குபவருக்கு எதிரான தனிப்பட்ட உரிமைகள் (Rights of unpaid seller against the buyer personally) :

(a) விலையைப் பெற வழக்கிடும் உரிமை (Suit to price) : சரக்கு விற்பனைச் சட்டம் பிரிவு 55(1)–ன்படி சரக்கின் மீதான சொத்துரிமை வாங்குபவருக்கு மாறி இருந்து, வாங்குபவர் விலையைச் செலுத்த மறுத்தால் விற்றவர் விலையைப் பெற வழக்காடும் உரிமை உடையவர். பிரிவு 55(2)–ன்படி சரக்கின் விலை ஒரு குறிப்பிட்ட நாளில் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருந்து, வாங்குபவர் அந்நாளில் விலையைத் தர மறுத்தாலும் அவர் மீது வழக்குத் தொடர விற்றவருக்கு உரிமை உண்டு.

(b) ஏற்றுக் கொள்ளாததற்கு இழப்பீடு கோரி வழக்கிடும் உரிமை (Suit for damages for non-acceptance) (பிரிவு 56) : சரக்கு விற்பனைச் சட்டம் பிரிவு 56–ன்படி, வாங்கியவர் சரக்குகளை ஏற்றுக் கொள்ள மறுத்தால் அல்லது அதன் விலையைச் செலுத்த மறுத்தால், விற்றவர் இழப்பீடு பெற வழக்காடும் உரிமை உடையவர். இழப்பீட்டின் அளவு இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவுகள் 73 & 74-ன்படி தீர்மானிக்கப்படுகிறது.

(c) ஒப்பந்த நீக்கம் (Reputation of contract) (பிரிவு 60): சரக்கை வாங்குபவர் வழங்கல் தேதிக்கு முன்னர் ஒப்பந்தத்தை நீக்கம் செய்தால், அவ்வொப்பந்தத்தை அமலிலேயே உள்ளதாகப் பாவித்து, சரக்கு வழங்கப்பட வேண்டிய தேதி வரை காத்திருந்து, அதன் பின்னிட்டு அதன் மீறுகைக்கு இழப்பீடு கோரி வழக்கிடலாம் அல்லது அவ்வொப்பந்தம் நீக்கம் செய்யப்பட்டதாகப் பாவித்து, உடன் இழப்பீடு கோரி வழக்கு தொடர உரிமை படைத்தவர்.

(d) வட்டிக்காக வழக்கு (Suit for interest) (பிரிவு 61): செலுத்தப் படாத விலைக்கு வட்டி செலுத்தப்பட வேண்டும் என்ற ஒப்பந்தம் இருந்தால், விற்றவர் வட்டியை வசூல் செய்ய வாங்கியவர் மீது வழக்குத் தொடர உரிமை உடையவர்.

13. Explain C.I.F. Contracts. (விலை காப்பீடு, ஏற்றிச் செல்லும் கட்டண ஒப்பந்தங்களை விளக்குக.)

தற்கால வணிக நடவடிக்கைகளில், விற்பனை ஒப்பந்தத்தின் இரு தரப் பினர்களின் நலனைக் காக்கும் பொருட்டு C.I.F. ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ளன. **'C.I.F.'** என்ற மூன்றெழுத்துகளும் முறையே பொருளின் **'விலை**

(Cost), காப்பீட்டுத் தொகை (Insurance), சரக்குகளுக்கான கட்டணம் (Freight)' எனும் மூன்று சொற்களைக் குறிப்பிடுகின்றன.

C.I.F. ஒப்பந்தத்தில் விற்பவரின் இடத்திலிருந்து வாங்குபவரின் இடத்திற்குச் சரக்குகளை எடுத்துச் செல்வதற்கான சரக்குக் கட்டணத் தொகையும், வாங்குபவர் சம்மதித்த விலையிலேயே அடங்கி இருக்கும். C.I.F. ஒப்பந்தத்தில் விற்பவர் சரக்கை காப்பீடு செய்து அதற்கான காப்பீட்டுப் பத்திரத்தினைப் (Policy) பெறுகிறார். விற்பவரே பொதுச் சரக்கேற்றியிடம் (Public Carrier) சரக்கை ஒப்படைத்து, கப்பலேற்றிச் சீட்டு (Bill of Lading) அல்லது இரயில் இரசீது (Railway Receipt) அல்லது சுமைவழிச் சீட்டு (Way Bill) ஆகிய சரக்கேற்றி இரசீதுகளில் எவற்றையேனும் அவற்றின் நேர்விற்கேற்ப பெறுகிறார். பின்னரே வாங்குபவரிமிருந்து பெற வேண்டிய தொகைகளுக்கு சரக்கின் விலைப்பட்டியலை (Invoice) விற்பவர் தயாரிப்பார். மேலும் அவர் பொதுச் சரக்கேற்றியிடம் சரக்கை ஒப்படைக்கும் போது அதற்கான பற்று–வரவு வைத்திடுவார். விலைப்பட்டியல் (Invoice), காப்பீட்டுப் பத்திரம் (Policy), சரக்கேற்றி இரசீது ஆகிய மேற்சொன்ன மூன்று ஆவணங்களுடன், வாங்குபவர் மீதான வரைவு (Draft) ஏதேனும் இருப்பின் அதனையும் சேர்த்து விற்பவர், தன்னுடைய வங்கியின் வழியாக, வாங்குபவர் இடத்தில் உள்ள ஏதேனும் ஒரு வங்கிக்கு வழக்கமாக அனுப்பி வைப்பார். வாங்குபவர் இடத்திலுள்ள வங்கியானது, வாங்குபவரிடம், விலைப்பட்டியலில் கண்ட தொகையினைப் பெற்றுக் கொண்டு அல்லது வரைவு ஏதேனும் இருப்பின் அத்தகைய வரைவினில் ஏற்பினைப் பெற்று மேற்குறிப்பிட்ட ஆவணங்களை ஒப்படைக்கும். அப்போதுதான் அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட சரக்கிற்கு, வாங்குபவர் சொத்துரிமை பெற்றவராகிறார்.

C.I.F. ஒப்பந்தத்தில், விற்பவர் பாதுகாக்கப்படுகிறார். வாங்குபவர் சரக்கிற்கான பணம் செலுத்துகிற வரையில், அது தொடர்ந்து விற்பவரின் சொத்துரிமையின்பாற்படும். வாங்குபவரும் அதே போன்று பாதுகாக்கப்படுகிறார். ஆவணங்களுக்கெதிரானப் பணம் செலுத்தியவுடன் வாங்குபவர் சொத்துரிமை யாளராகிச் சரக்கினை ஒப்படைப்புப் பெற உரிமை படைத்தவராகிறார். ஆனால் இதற்கிடையில் சரக்கு செல்கையில் அவை தொலைந்துவிட்டால், இருவருமே நட்டமடைய மாட்டார்கள். விற்பவர் அல்லது வாங்குபவர் இருவரில் எவரொருவர் சொத்துரிமையாளரானாலும், காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டினைப் பெறலாம். பணம் செலுத்துவதற்கு முன்பாக, வாங்குபவர் நொடிப்பு நிலைக்குள்ளானால் பணம் செலுத்தப்படும் வரையில் சரக்குகளின் சொத்துரிமை விற்பவரிடமே இருப்பதால், விற்பவர் பாதிக்கப்படுவதில்லை. அதேபோன்று விற்பவர் நொடிப்பு நிலைக்குள்ளானால் பணம் செலுத்தியவுடன் வாங்குபவர், ஆவணங்களைப் பெற்று சொத்துரிமையாளராவதால் அவரும் (வாங்குபவரும்) பாதிப்புக்குள்ளாவதில்லை.

14. F.O.B. Contracts – Write short notes. (F.O.B. ஒப்பந்தங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

'F.O.B.' என்பதில் உள்ள மூன்று எழுத்துக்கள் 'Free on Board' என்னும் சொற்களையும், 'F.O.R.' ஒப்பந்தத்தில் உள்ள எழுத்துக்கள் 'Free on Rail' என்னும் சொற்களையும் குறிக்கின்றன. சரக்கு விற்பவர் தம்முடைய செலவில் கப்பலில் அல்லது இரயிலில் சரக்குகளை ஏற்றி அனுப்புவார். பொதுச் சரக்கேற்றியிடம் சரக்குகள் சேர்க்கப்பட்ட பின்னர் அவை வாங்குபவரின் பொறுப்புக்கு மாற்றப்பட்டு விடுகின்றன. வாங்குபவருக்கு சொத்துரிமை சேர்வதால் விற்பவர், அச்சரக்கை வேறுவிதத்தில் வகை செய்யும் உரிமையை (Right of disposal) மட்டும் அவர் தம்மிடம் வைத்துக் கொண்டுள்ளாரே தவிர, சரக்கை அவர் காப்பீடு செய்வதில்லை. வாங்குபவர் விரும்பினால் சரக்கைக் காப்பீடு செய்து கொள்ளலாம். அவர் சரக்குக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய கடப்பாட்டில் உள்ளார். விற்பவர் சரக்குகளைக் கப்பலில் அல்லது இரயிலில் ஏற்றி அனுப்புவது பற்றி வாங்குபவருக்கு அறிவிப்பு ஒன்று கொடுக்க வேண்டும். F.O.R. என்பது விலை, ஒப்படைப்புச் செய்ய வேண்டிய இடம், ஒப்படைப்பு போன்றவற்றை விளக்கும் ஆங்கிலச் சுருக்கமாகும்.

F.O.B. ஒப்பந்தங்களில் சரக்கு எப்பெயருடைய கப்பலில் அனுப்பப் படவுள்ளது எனும் விபரத்தை விற்பவர் குறிப்பிட வேண்டும். ஆனால் F.O.R. ஒப்பந்தங்களில், தனியான உடன்பாடு ஏற்பட்டிருந்தாலொழிய, அவ்வாறு இரயில் நிலையத்தின் பெயரைக் குறிப்பிடத் தேவையில்லை.

15. Auction Sale – Write short notes. (ஏல விற்பனை – சிறு குறிப்பு எழுதுக.)

ஏல விற்பனை (Auction sale) – விளக்கம்:

'ஏல விற்பனை' என்பது ஒரு பொது விற்பனையாகும். இதில் ஏலமிடுபவர் சரக்கை அதிக விலைக்கு கேட்பவருக்கு விற்கிறார். ஏல விற்பனை குறித்து சரக்கு விற்பனைச் சட்டத்தின் 64–வது பிரிவு விளக்குகிறது.

ஏல விற்பனையின் விதிகள் (Rules of Auction sale) :

1. **தொகுதியாக விற்றல் (Sale in Lots) [பிரிவு 64(1)] :** சரக்குகள் தொகுதியாக விற்கப்பட்டால், ஒவ்வொரு தொகுதியும் ஒரு தனிப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தின் கருப்பொருளாக கருதப்படும்.

2. **ஏல விற்பனை முடிதல் (Completion of Auction sale) [பிரிவு 64(2)] :** ஏலமிடுபவர் சுத்தியால் (Hammer) தட்டி அல்லது மணி அடித்து அல்லது பிற வணிக வழக்கப்படி அறிவிக்கும் போது விற்பனை முடிவடைகிறது.

3. ஏலம் கேட்டும் உரிமை (Right to bid) [பிரிவு 64 (3)] : ஏலம் கேட்கும் உரிமையை விற்பனையாளரோ அல்லது அவரது சார்பில் மற்றொருவரோ தன்னிடம் வெளிப்படையாக ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம். அவ்வாறு வெளிப்படையாக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பின், விற்பனையாளரோ அல்லது அவரது சார்பில் மற்றொருவரோ ஏலம் கேட்கலாம்.

4. மோசடியாக ஏலம் கேட்டல் (Fraudulent bid) [பிரிவு 64 (4)]: விற்பவருக்கு ஏலம் கேட்கும் உரிமை ஒதுக்கி வைக்கப்படாத நிலையில், அவர் தனக்காக தானே அல்லது தான் சார்பில் மற்றொரு நபரை நியமித்து அவர் வாயிலாக ஏலம் கேட்பது, ஒரு மோசடியாக கருதப்படும்.

5. உயர்ந்தபட்ச அல்லது ஒதுக்கப்பட்ட விலையைக் குறித்தல் (Upset price or Reseved price) [பிரிவு 64 (5)]: ஏலமிடப்படும் சரக்கின் உயர்ந்தபட்ச அல்லது ஒதுக்கப்பட்ட விலையை ஏலமிடுவர் குறிப்பிட்டு, அதனை ஏலம் கோருபவர் களுக்கு அறிவிக்கலாம். இவ்விலைக்குக் கீழ் ஏலம் கோருபவர்களுக்கு அச்சரக்கை ஏலமிடுபவர் விற்கமாட்டார்.

6. விற்பவர் போலியாக ஏலம் கேட்டல் (Seller's pretended bid [64 (6)] : விற்பவர் விலையை உயர்த்துவதற்காக வேண்டுமென்றே போலியாக ஏலம் கேட்டல் அவ்விற்பனை செல்லத்தக்கதல்ல. சரக்கை வாங்குபவர் அந்த ஏலத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

7. குறைந்த விலை உடன்பாடு (Knock-out Agreement) : ஏலம் கேட்பவர்கள் ஒன்று சேர்ந்து விலையைக் குறைப்பதற்கு ஒருவருக்கு எதிராக மற்றொருவர் ஏலம் கேட்காமல் இருப்பது சட்ட விரோதமானதல்ல **Jyoti Prokash v. Jhowmull**[1] என்று எனும் வழக்கில் கூறப்பட்டது.

8. ஊக்கத்தை தளர்த்துதல் (Damping) : ஏலம் கேட்க நினைப்பவரை ஏலத்தில் பங்கு கொள்ளாதபடி செய்தல் ஊக்கத்தை தளர்த்துதலாகும். ஏலமிடப் படும் சரக்கில் இல்லாத குறைபாடுகளை எடுத்துக்கூறி ஏலம் கேட்பவரின் ஊக்கத்தை குறைக்கலாம். இச்செயல் சட்ட விரோதமானதாகும். எனவே இந்நிலையில் ஏலமிடுபவர் ஏலமிடுவதை நிறுத்திவிடுவார்.

-oOo-

1. (1909) 36 Cal. 134 : 13 C.W.N. 87 : 1 I.C. 784

6

1932-ஆம் ஆண்டின் இந்திய கூட்டாண்மைச் சட்டம் [The Indian Partnership Act, 1932]

1. Define a Partnership. What are the tests of a true Partnership ? (கூட்டாண்மை வரையறுக்க. ஒரு உண்மையான கூட்டாண்மையின் இருப்பை தெரிவிக்கும் சோதனைகள் யாவை ?)

(அல்லது)

Define Partnership. Discuss the modes of determing the existence of partnership. (கூட்டாண்மை என்றால் என்ன என்று வரைவுரை செய்யவும். கூட்டாண்மை இருப்பதை உறுதி செய்யும் முறையை ஆய்க.)

(அல்லது)

What tests would you apply in order to find out whether a Partnership exists ? (கூட்டாண்மை ஒன்று இருக்கிறதா என்று கண்டுபிடிக்க என்ன சோதனைகளை நீர் கையாளுவீர் ?)

(அல்லது)

'Partnership is a result of contract and not that of status' Comment. ("கூட்டாண்மை என்பது ஒப்பந்தத்தின் விளைவானதே தவிர அந்தஸ்து வழியானதல்ல". விமர்சிக்க.)

(அல்லது)

'Partnership is a relation arising under a contract'. Explain. (கூட்டாண்மை என்பது ஒப்பந்தத்தின் கீழ் எழும் ஒரு உறவாகும்'. விளக்குக.)

(அல்லது)

'The true test of a partnership is whether there is a mutual

agency among the members of the association'. Discuss. ('குழு உறுப்பினர்களிடையே பரஸ்பர முகவரியம் நிலவுகிறதா என்பதே கூட்டாண்மையின் உண்மையான சோதனையாகும்'. விவாதிக்க.)

(அல்லது)

True test of partnership - Write short notes. (கூட்டாண்மையின் உண்மைச் சோதனை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Partnership - Write short notes. (கூட்டாண்மை – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

கூட்டாண்மை பற்றிய சட்டம், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 239 முதல் 266 வரை உள்ள பிரிவுகளில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இப்பிரிவுகள் பின்னர் நீக்கப் பெற்று 1932–ஆம் ஆண்டில் 'இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்' என்ற பெயரில் ஒரு தனிச் சட்டமாக இயற்றப்பட்டது.

கூட்டாண்மை – வரையறை :

இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் **4–வது பிரிவு** கூட்டாண்மைக்கு வரையறை (Definition) தருகிறது. அதன்படி "அனைவரும் அல்லது அனைவரின் சார்பாக அவர்களில் எவரேனும் ஒருவர் செயல்பட்டு, நடத்தும் ஒரு தொழிலில் (business) கிடைக்கும் இலாபங்களை (profits) பகிர்ந்து கொள்வதாக உடன்பட்ட நபர்களிடையே ஏற்பட்ட உறவே கூட்டாண்மை எனப்படும்".[1]

ஒருவர் மற்றொருவருடன் கொள்ளும் கூட்டாண்மையில் ஈடுபடும் நபர்கள் தனிப்பட்ட முறையில் 'கூட்டாளிகள்' (Partners) என்றும், கூட்டாக 'நிறுமம்' (Firm) என்றும், அவர்களது தொழில் எப்பெயரின் கீழ் நடத்தப்படுகிறதோ அது 'நிறுமத்தின் பெயர்' (Firm name) என்றும் அழைக்கப்படுகிறது.

கூட்டாண்மையின் இன்றியமையாத கூறுகள் (Essentials of Partnership) :

1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் கூட்டு (Association of two or more person) : கூட்டாண்மை அமைக்கக் குறைந்தது இருவர் வேண்டும். ஆனால் உயர்ந்த அளவைப் பொறுத்தமட்டில் நிறுவனச் சட்டத்தின் (Companies Act) 11–வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி வங்கித் தொழில் நடத்தும் நிறுமம் 10 கூட்டாளிகளையும், வேறு தொழில் நடத்தும் 20

1. "Partnership" is the relation between persons who have agreed to share the profits of a business carried on by all or any of them acting for all" - **First para of Section 4 of the Indian Partnership Act, 1932.**

கூட்டாளிகளையும் உயர்ந்த அளவாகப் பெற்றிருக்கலாம். இந்த உயர்ந்த அளவை மிஞ்சிய நிறுமம் 'சட்ட முரணான சேர்க்கை' (illegal Association) ஆகும். ஒரு நிறுமத்தில் கூட்டாளிகளின் எண்ணிக்கை இரண்டுக்கு குறைந்தால் (அதாவது ஒன்றானால்), அது அழிந்துவிடும்.

2. உடன்பாடு (Agreement) : கூட்டாண்மை என்பது ஒரு தொழிலை நடத்த எழுத்து மூலமாக அல்லது வாய்ச்சொல் மூலமாக கூட்டாளிகள் மேற் கொள்ளும் ஓர் உடன்பாடு ஆகும். எனவே கூட்டாண்மை ஒப்பந்தம் ஒன்று, செல்லத் தக்க ஒப்பந்தம் ஒன்றிற்கு தேவையான அனைத்து கூறுகளையும் கொண்டிருக்க வேண்டும்.

3. சட்டரீதியான தொழில் (Business): கூட்டாண்மை ஒரு சட்ட ரீதியான தொழிலை மேற்கொள்ளவே அமைக்கப்பட வேண்டும். தொழில் என்பது வியாபாரத்தையும் (trade), பணியையும் (occupation) உள்ளடக்கியதாகும். **[பிரிவு 2(b)].**

4. இலாப – நட்டத்தில் பங்கேற்பு (Sharing of profit or loss): கூட்டாண்மையின் நோக்கம் இலாபத்தை ஏற்படுத்தி அதனை பகிர்ந்து கொள்வதாகும். இலாபத்தில் பங்கேற்பது போல் நட்டத்திலும் பங்கேற்க வேண்டும்.

5. கூட்டு நிருவாகம் (Business carried by all or any of them acting for all) : எல்லா கூட்டாளிகளும் சேர்ந்து அல்லது எல்லா கூட்டாளிகளின் சார்பாக யாராவது ஒரு கூட்டாளி கூட்டாண்மையின் தொழிலை நடத்தலாம். நிருவாகத்தில் பங்கு கொள்ள அனைத்து கூட்டாளிகளுக்கும் உரிமை உண்டு. இருப்பினும் சில நடைமுறை வசதிகளுக்காக அவர்களில் யாராவது ஒரு சிலரே நிருவாகத்தை மேற்கொள்கின்றனர்.

6. பரஸ்பர முகவரியம் (Mutual Agency) : கூட்டாளிகள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு பரஸ்பரம் முகவர் என்ற நிலையில் பணி புரிகின்றனர். எனவே கூட்டாண்மையில் 'முகவரியம்' (Agency) என்பது ஒரு சிறப்பு அம்சமாக இருக்கிறது. நிறுமத்தின் நிருவாகத்தை நடத்துபவர் கூட்டாளிகளின் முகவராக இருந்து எல்லோருடைய நலனுக்காகவும் உழைக்க வேண்டும். **(விரிவாக வினா எண். 11–ல் காண்க).**

7. வரையறா பொறுப்பு (Unlimited Liability) : கூட்டாண்மையின் கடன்களைத் தீர்க்க அனைத்து கூட்டாளிகளும் தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் பொறுப்பாவார்கள். நிறுமத்தின் சொத்துக்கள் மட்டுமின்றி, கூட்டாளிகளின் சொந்தச் சொத்துக்களும் நிறுமத்தின் கடன்களுக்கு பொறுப்புடையதாகும். எனவே கூட்டாளிகளின் பொறுப்பு வரம்பற்றதாகும்.

கூட்டாண்மை ஒன்று இருக்கிறதா என்று கண்டறிவதற்கான சோதனைகள் (Tests of a Partnership) :

சில நபர்கள் அ ங்கிய குழுக்களிடையே கூட்டாண்மை உறவு நிலவுகிறதா என்பதை சோதித்தறிய பிரிவு 4–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கூட்டாண்மையின் வரையறை பயனாகிறது. ஒரு குழுவமைப்பு அப்பிரிவில் வரையறுக் கப்பட்டபடி, கூட்டாண்மைக்கான அடிப்படைத் தன்மைகள் அனைத்தையும் பெற்றிருந் தால் அது கூட்டாண்மையாகும். இல்லாவிடில் அது கூட்டாண்மையாகாது.

கூட்டாண்மை உருவாக ஒரு குறிப்பிட்ட உடன்பாடு இல்லாவிடில், அங்கு கூட்டாண் மையை அறிவதில் சிக்கல் எழுகிறது. இந்நிலையில் **பிரிவு 6–ன்** உதவியை நாடவேண்டியுள்ளது. ஒரு குழுவினர் கூட்டாண்மை ஆகின்றனரா என்பதைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டு நெறிகள் பிரிவு 6–ல் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

"ஒரு குழுவினர் நிறுமமா இல்லையா என்பதையும், ஒரு தனி நபர் ஒரு நிறுமத்தின் கூட்டாளியா இல்லையா என்பதையும் தீர்மானிக்க அதன் தரப்பினர் களுக்கிடையிலான உண்மையான உறவை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தரப்பினர்களின் உண்மையான உறவை தொடர்புடைய சங்கதிகள் அனைத்திலிருந்தும் தீர்மானிக்க வேண்டும்'. அதாவது எழுத்து மூலமான அல்லது வாய்ச் சொல் மூலமான உடன்பாடு ஏற்படும்போது இருந்த சுற்றுப்புற சூழ்நிலை, ஒப்பந்தத் தரப்பினர்களின் நடத்தை, தொடர்புடைய பிற சங்கதிகள் (உதாரணமாக, கணக்குப் புத்தகங்கள், கடிதத் தொடர்புகள், பணியாளர்களின் சான்றுரைகள்) ஆகிய அனைத்தையும் ஒட்டு மொத்தமாக கருத்தில் கொள்ள வேண்டும்."

இதிலிருந்து ஒரு ஒப்பந்தத்தில், அதன் தரப்பினர்கள் 'கூட்டாளிகள்' என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அவர்கள் சட்டப்படியான கூட்டாளிகளா என்பதை தீர்மானிக்கலாம். அதுபோல் அத்தரப்பினர்கள், கூட்டாளிகள் அல்ல என்று குறிப் பிடப்பட்டிருந்தால் அவர்கள் கூட்டாளிகளா, இல்லையா என்பதையும் தீர்மானிக்கலாம்.

கூட்டாண்மை உறவு எங்கெல்லாம் நிலவவில்லை என்பதற்கான சோதனை :

பிரிவு 6–ன் கீழ் வரும் விளக்கங்கள் I-ம் II-ம் (Explanation I and II of Section 6) கூட்டாண்மை உறவு எங்கெல்லாம் நிலவவில்லை என்பதைக் கூறுகின்றன. அவை,

1. கூட்டு உரிமையாளர்கள் (Joint Owners) : சொத்தின் கூட்டு உரிமையாளர்கள் சொத்திலிருந்து கிடைக்கும் இலாபத்தைப் பகிர்ந்து கொண்டால், அவர்கள் கூட்டாளிகள் ஆக மாட்டார்கள். **(பிரிவு 6–ன் கீழான விளக்கம் I).** ஆனால் அதே கூட்டாளிகள் தனியே ஒரு தொழிலைத் தொடங்கி அதன் இலாபத்தைப் பங்கு கொள்ள உடன்பட்டால் கூட்டாளிகளாகலாம்.

2. இலாபப் பகிர்வு (Sharing of Profit) : இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் கூட்டாண்மைக்கு வலுவான முதன்மைச் சான்றாகும் (*prima facie*

evidence). ஆனால், இலாபத்தைப் பகிர்ந்து கொள்வதால் மட்டும் சில நபர்கள் கூட்டாளிகளாக ஆக முடியாது. பின்வரும் நிலைகளில் கூட்டாண்மை நிலவவில்லை.

(அ) தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒருவருக்கு மற்றொருவர் கடன் கொடுத்து, அதற்கு அவருக்கு கூட்டாண்மையின் இலாப மாறுதலுக்கேற்ற அளவில் வட்டி வீதம் தரப்பட்டாலும், அவர் கூட்டாளியாக மாட்டார்.

(ஆ) ஒரு பணியாளர் அல்லது முகவர் செய்த பணிக்கு ஊதியமாக கூட்டாண்மையின் இலாபத்திலிருந்து பங்கு தரப்பட்டாலும், அவர் கூட்டாளியாக மாட்டார்.

(இ) மரணமடைந்த ஒரு கூட்டாளியின் மனைவி அல்லது குழந்தைக்கு ஆண்டுப் பணமாக (annuity), கூட்டாண்மையின் இலாபத்தில் ஒரு பங்கு அளிக்கப்பட்டாலும், அவர்கள் கூட்டாளிகள் ஆகமாட்டர்.

(ஈ) ஒருவர் தன் தொழிலை வாணிக நற்பெயருடன் (Goodwill) விற்று அதற்கு மறுபயனாக இலாபத்தில் ஒரு பங்கு பெற்றாலும் அவர் கூட்டாளியாக கருதப்படமாட்டார். **(பிரிவு 6–ன் கீழான விளக்கம் II).**

மேலும் கூட்டாண்மை என்பது ஒப்பந்தத்தின் விளைவானதே தவிர, அந்தஸ்து (Status) வழியானதல்ல என்று பிரிவு 5 கூறுகிறது. இதன்படி, பின்வரும் நபர்கள் கூட்டாளிகள் அல்லர். (அ) குடும்பத் தொழிலை மேற்கொள்ளும் இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் (Members of a Hindu undivided family); அல்லது (ஆ) அத்தகு குடும்பத் தொழிலை நடத்தும் பர்மிய, பௌத்த தம்பதிகள் (Barmese Buddist Couple).

முடிவுரை :

கூட்டாண்மையில் இலாபத்தைப் பகிர்ந்துகொள்வது ஒரு வலுவான சோதனையாக இருந்தாலும், ஒப்பந்தத் தரப்பினர்களின் விருப்பத்தையும் நடத்தையையும் பொறுத்தே கூட்டாண்மை உறவு நிலவுகிறதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும்.

2. 'Although sharing of profits is an essential element of partnership, it is not the sole test.' Comment. ("நலன்கள் பங்கீடு கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு என்றாலும் கூட அதுவே தனிப்பட்ட சோதனையாகாது" – விளக்கவுரை தருக.)

(முந்தய வினாவின் விடையில் "கூட்டாண்மை உறவு எங்கெல்லாம் நிலவவில்லை" எனும் தலைப்பின் கீழ் காண்க.)

3. Distinguish between Partnership and Hindu joint family business.

வேறுபடுத்திக் காட்டுக.
கூட்டாண்மையும் இந்து கூட்டுக் குடும்பம் நடத்தும் வியாபாரத்தையும்

கூட்டாண்மை [Partnership]	இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் [Hindu Joint Family Business]
1. கூட்டாண்மை என்பது உடன்பாட்டின் விளைவால் தோன்றும்.	கூட்டுக் குடும்ப உறுப்பினர் எனும் தகு நிலையால் (Status) இது தோன்றும்.
2. கூட்டாளிகள், பிறப்பால் கூட்டாண்மையின் நலனைப் பெறுவதில்லை.	இதன் உறுப்பினர்கள் பிறப்பால் மட்டுமே நலனைப் பெறுவர்.
3. மற்ற எல்லா கூட்டாளிகளின் இசைவுடன் புதிய கூட்டாளி ஒருவர் இங்கு சேர்க்கப்படலாம்.	ஒரு நபர் பிறப்பாலேயே, இங்கு புதிய உறுப்பினராகிறார்.
4. பெண்களும் கூட்டாளிகளாகலாம்.	பெண்கள் உறுப்பினராக முடியாது.
5. உரிமை வயது அடையாதவர் (Minor) கூட்டாண்மை நலனுக்கு மட்டுமே கூட்டாளியாக அனுமதிக்கப்படுவர்.	இங்கு உறுப்பினர் நிலை பிறப்பால் எழுகிறது. எனவே உரிமை வயது குறித்த வரையறை ஏதும் இங்கில்லை.
6. மாறுபட்ட உடன்பாடு ஏதும் இல்லை யென்றால், ஒரு கூட்டாளியின் இறப்பின் காரணமாக அக் கூட்டாண்மை கலைக்கப்படும் அல்லது புதிய கூட்டாளியைச் சேர்க்க எல்லாக் கூட்டாளிகளும் இசைய வேண்டும்.	இங்கு ஒருவரின் பிறப்பால் உறுப்பினர் எண்ணிக்கை தானாக கூடவும், இறப்பால் தானாக குறையவும் செய்யும்.
7. வங்கித் தொழில் செய்ய 10 கூட்டாளி களும் மற்ற தொழில் செய்ய 20 கூட்டாளிகளுமே இங்கு உயர்ந்த அளவு கூட்டாளிகளாக இருக்க முடியும்.	அளவே இல்லை.

கூட்டாண்மை [Partnership]	இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம் [Hindu Joint Family Business]
8. நிறுமத்தின் தொழில் சார்ந்த இயல்பான நடவடிக்கைகளில் ஒரு கூட்டாளி மற்ற கூட்டாளிகளின் சார்பில் நடந்து எல்லோரையும் கட்டுப் படுத்தும்அதிகாரம் பெற்றுள்ளார்.	இந்து கூட்டுக் குடும்பத்தின் மூத்த ஆண் மகன் "கர்த்தா" (Karta) எனப் படுவார். இவர் அக்குடும்ப வியாபாரத்தை மேலாளராக நின்று நிருவகிப்பார். எனவே இவருக்கு மட்டும்தான் அத்தகு அதிகாரம் உள்ளது.
9. கூட்டாளிகளின் பொறுப்பு வரம்பற்ற தாகும். கூட்டாண்மையின்கடன்களை தீர்க்க கூட்டாண்மையின் சொத்துக் களை பயன்படுத்திய பின் கூட்டாளி களின் சொந்தச் சொத்துக்களைப் பயன்படுத்த வேண்டும்.	கர்த்தா மட்டுமே கடன் ஒப்பந்தங்களில் சொந்த பொறுப்பேற்பார். அவருடன் சேர்ந்து பொறுப்பேற்ற மற்றவர்களும் சொந்த பொறுப்புடையவர்களாவர்.
10. கூட்டாளிகள் ஒவ்வொருவரும் கூட்டாண்மைக் கணக்குகளை சரி பார்த்து அதன் நகலை எடுத்துக் கொள்ளும் உரிமை படைத்தவர். இலாபத்திற்கும் நட்டத்திற்கும் கணக்கு கேட்கலாம்.	உறுப்பினர்கள் கர்த்தாவிடம் முன் செய்த தொழிலின் இலாப–நட்டக் கணக்கைக் கோர முடியாது.
11. கூட்டாண்மையை பதிவு செய்ய வேண்டியதில்லை. எனினும் பதிவு செய்வது மறைமுகமாக கட்டாய மாக்கப்பட்டுள்ளது.	இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை பதிவு செய்தல் எனும் வினாவே இங்கு எழுவதில்லை.

4. Distinguish between Partnership and Co-Ownership.

வேறுபடுத்துக.
கூட்டாண்மை மற்றும் கூட்டுச் சொத்துரிமை

கூட்டுச் சொத்துரிமை - விளக்கம் :

கூட்டுச் சொத்துரிமை அல்லது கூட்டுரிமை என்பது சில சொத்துக்களில்

சிலருக்குள்ள ஒன்று சேர்ந்து சொந்த உரிமையாகும். ஆனால் இது கூட்டாளிகளாக இருந்தாலே பெற முடியுமென்பதில்லை. அதாவது, கூட்டாண்மையைப் பொறுத்த வரையில், அதன் சொத்துக்களுக்கு கூட்டாளிகள் கூட்டுரிமை பெற்றவர் களாவார்கள். ஆனால் கூட்டுரிமையில் அவ்வுரிமையைப் பெற்றவர்கள் கூட்டாளி களாக இருக்க வேண்டுமென்பதில்லை. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும். அவ்வேறுபாடுகளை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

கூட்டாண்மை [Partnership]	கூட்டுரிமை [Co-ownership]
1. இது உடன்பாட்டால் உருவாகிறது.	இது உடன்பாட்டாலும், வேறுவிதமாகவும் உருவாகலாம்.
2. 'தொழில்' (Business) என்பது கூட்டாண்மையின் இன்றியமையாக் கூறாகும்.	இங்கு அத்தகு 'தொழில்' ஒன்று இருக்க வேண்டியதில்லை.
3. சொத்தைப் பொதுவாகக் கொண்டு பலன் பெறும் முறை இங்கு உண்டு.	இங்கு அது இல்லாமலும் இருக்கலாம்.
4. ஒரு கூட்டாளி தன் பங்கை மற்ற கூட்டாளிகளின் இசைவின்றி விற்க முடியாது.	கூட்டுரிமையர் ஒருவர் தன் உரிமையை மற்றவர்கள் இசைவின்றி விற்கலாம்.
5. கூட்டாளிகளின் உயர்ந்த அளவு எண்ணிக்கை சட்டத்தால் நிருணயிக்கப்பட்டுள்ளது.	அவ்வித உயர்ந்த அளவு எண்ணிக்கை இங்கு இல்லை.
6. ஒரு கூட்டாளி மற்ற கூட்டாளிகளின் முகவராவார்.	இங்கு அவ்வாறில்லை.
7. பாகப்பிரிவினைக்கு கூட்டாளிகள் உரிமை கோர முடியாது. ஆனால் கலைப்புக்கு உரிமை கோரலாம்.	கூட்டுரிமையர் கூட்டுச் சொத்தைப் பிரிக்க சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.
8. கூட்டாண்மை சொத்துக்களுக்கு செய்த செலவுகளுக்காக அவற்றின் மேல் கூட்டாளி ஒருவருக்கு பற்றுரிமை உண்டு	இங்கு அத்தகு உரிமையில்லை.

5. Distinguish between Partnership and Company.

வேறுபடுத்துக.
கூட்டாண்மை மற்றும் நிறுவனம்.

	கூட்டாண்மை [Partnership]	**நிறுவனம்** [Company]
1.	நிறுமமும் கூட்டாளிகளும் வேறல்ல. கூட்டாளிகளின் கூட்டுப் பெயரே நிறுமமாகும்.	நிறுவனம் என்பது அதன் உறுப்பினர் களினின்றும் வேறுபட்ட சட்டப் படியான தனித் தன்மை (Entity) கொண்டதொரு இயக்கமாகும்.
2.	நிறுமம், 1932–ஆம் ஆண்டின் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் கீழ் வரும்.	நிறுவனம், 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும்.
3.	வங்கித் தொழிலில் அதிகபட்சம் 10 நபர்களும் மற்ற தொழில்களில் அதிகபட்சம் 20 நபர்களும், ஒரு கூட்டாண்மை நிறுமத்தில் கூட்டாளி களாக இருக்கலாம்.	பொது நிறுவனத்திற்கு (Public Company) அதிகபட்ச உறுப்பினர் அளவே கிடையாது. தனியார் நிறுவனத்தில் அதிகபட்சம் 50 நபர்கள் உறுப்பினர் களாக இருக்க முடியும்.
4.	இங்கு குறைந்தது இருவர் கூட்டாளி களாக இருத்தல் வேண்டும்.	பொது நிறுவனத்தில் குறைந்த பட்சம் 7 நபர்களும், தனியார் நிறுவனத்தில் குறைந்தபட்சம் 2 நபர்களும் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.
5.	இங்கு பதிவு செய்தல் கட்டாயமல்ல.	இது கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.
6.	கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக் கப்படாததாகும்.	உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக் கப்பட்டதாகும். (வரையறுக்கப்படாத பொறுப்பாக இருந்தாலொழிய) [Limited].
7.	கூட்டாளிகள் அனைவரும் மற்ற கூட்டாளிகளின் முகவராக செயல் பட்டு, கூட்டாண்மையைக் கட்டுப் படுத்தலாம்.	ஒரு உறுப்பினர் மற்றொரு உறுப்பினரின் முகவராக (Agent) செயல்பட்டு நிறுவனத்தைக் கட்டுப் படுத்த முடியாது.

கூட்டாண்மை [Partnership]	நிறுவனம் [Company]
8. ஒரு கூட்டாளி மற்ற கூட்டாளி களுடன் ஒப்பந்தம் கொள்ளலாம். ஆனால் கூட்டாண்மை நிறுமத்துடன் அத்தகு ஒப்பந்தம் கொள்ள முடியாது.	ஒரு உறுப்பினர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கொள்ளலாம். நிறுவனத்தின் பணியாளாகவும் இருக்கலாம்.
9. விருப்பத்திலான கூட்டாண்மையை அறிவிப்பு மூலம் எந்நேரமும் கலைக் கலாம். கூட்டாளியின் இறப்பு, விலகல் ஆகியவையும் கலைப்பை உண்டாக்கும்.	உறுப்பினரின் இறப்பு, விலகல் ஆகியவை நிறுவனத்தைப் பாதிப்பதில்லை. நிறுவனம் தொடர்ச்சியான 'வாழ்வை' பெற்றதாகும்.
10. நிறுமத்திற்கு சட்டப்படியான கடப் பாடுகள் ஏதுமில்லை.	நிறுவனத்திற்கு குறிப்பிட்ட ஏடுகளை வைத்திருத்தல், இருப்பு நிலைக் குறிப்பை (Balance Sheet) அளித்தல் போன்ற பல சட்டக் கடப்பாடுகள் உண்டு.
11. நிறுமத்தின் மேலாண்மையில் பங்கு கொள்ள அனைத்து கூட்டாளிகளுக் கும் உரிமையுண்டு.	நிறுவனத்தின் மேலாண்மை, அதன் நிருவாகக் குழுவினரிடம் உள்ளது. உறுப்பினர் ஒருவர் நிறுவனத்தின் மேலாண்மையில் கலந்து கொள்ள முடியாது.
12. ஒரு கூட்டாளி, தன் கூட்டாண்மை உரிமையை மற்ற கூட்டாளிகளின் இசைவின்றி மாற்றியளிக்க முடியாது.	ஒரு உறுப்பினர் தன் பங்கினை எத் தடையுமின்றி விற்கலாம்.
13. கூட்டாளிகள் தங்களுக்குள் உடன் பாடு கொண்ட எச்செயலையும் செய்யலாம்.	நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் (Memorandum of Association) கூறப்பட்டுள்ள செயலைத் தவிர வேறு எதையும் செய்யவியலாது.
14. பொதுவாக நிறுமத்தின் நொடிப்பு கூட்டாளிகளின் நொடிப்பாகும்.	நொடிந்து போன நிறுவனத்தின் கலைப்பு, அதன் உறுப்பினர்களையும் நொடித்தவராக்குவதில்லை.
15. இங்கு தணிக்கை கட்டாயமல்ல.	தணிக்கை சட்டப்படியான தேவையாகும்.

6. Write a note on duration of partnership. (கூட்டாண்மையின் கால வரையறை குறித்து ஒரு குறிப்பு வரைக.)

(அல்லது)

What is a Partnership at will? How is it different from a Particular Partnership? (விருப்ப முறிவு கூட்டு என்றால் என்ன? அது எவ்வாறு 'தனியுறு கூட்டு'லிருந்து வேறுபடுகிறது?)

ஒரு கூட்டாண்மை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு செயல்படவோ அல்லது குறிப்பிட்ட ஒரு செயலை செய்து முடிக்கவோ உருவாக்கப்படலாம் அல்லது விருப்பு முறிவுக் கூட்டாண்மையாகவும் இருக்கலாம்.

1. குறிப்பிட்ட காலக் கூட்டாண்மை (Partnership for a fixed term): ஒரு கூட்டாண்மை குறிப்பிட்ட காலம் வரை செயல்பட மட்டுமே உருவாக்கப்பட்டால், அது குறிப்பிட்ட கால கூட்டாண்மை எனப்படும். அந்தக் குறிப்பிட்ட காலம் முடிந்த பின் அக்கூட்டாண்மை முடிவுறும்.

2. குறிப்பிட்ட ஒரு செயலை செய்ய கூட்டாண்மை (Particular partnership) (பிரிவு 8) : ஒரு நபர் மற்றொரு நபருடன் ஒரு குறிப்பிட்ட செயலையோ அல்லது பணியையோ செய்வதற்காக கூட்டாளியாகலாம். இவ்வித கூட்டாண்மை 'குறிப்பிட்ட கூட்டாண்மை' எனப்படும். அந்தக் குறிப்பிட்ட செயல் முடிந்ததும் அக்கூட்டாண்மை முடிவுறும்.

3. விருப்பு முறிவுக் கூட்டாண்மை (Partnership at will) (பிரிவு 7): கூட்டாண்மையின் காலக்கெடுவைப் பற்றி ஒப்பந்தத்தில் எதுவும் கூறப்படவில்லை யெனில் அல்லது அதைத் தீர்மானிக்க அங்கு எதுவும் வகை செய்யப்படவில்லை எனில், அது விருப்பு முறிவுக் கூட்டாண்மையாகும். இவ்வகையான கூட்டாண்மையில் எவரேனும் ஒரு கூட்டாளி, மற்ற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலமான கலைப்பு விருப்பத்தை தெரிவிக்கும் அறிவிப்பைச் செய்வதன் மூலம், அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் அக்கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

7. Explain the different kinds of partners. (கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விளக்குக.)

(அல்லது)

Partnership by Holding out – Write short notes. (உரிமைப் போலி கூட்டாண்மை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the doctrine of partnership by holding out. (உரிமைப் போலி கூட்டாண்மையின் கோட்பாட்டினை விளக்குக.)

(அல்லது)

Partnership by Estoppel – Write short notes. (முரண்தடை கூட்டாளி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Sleeping Partner – Write short notes. (உறங்கும் கூட்டாளி – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

கூட்டாண்மை நிறுமத்தில் கூட்டாளிகள் யார், என்பதை அறிய வெளியார் ஆர்வம் கொண்டிருப்பார்கள். கூட்டாளிகள் பல வகைகளில் அமைகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் கூட்டாண்மையில் வெவ்வேறு வகையில் பொறுப்பேற் கின்றனர். கூட்டாண்மையில் உள்ள பல்வேறு வகையான கூட்டாளிகளும் அவரது பொறுப்புகளும் பின்வருமாறு அமைகின்றன.

1. உழைக்கும் கூட்டாளி (Active or Actual or Ostensible Partner): கூட்டாண்மையின் தொழிலை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கூட்டாளி 'உழைக்கும் கூட்டாளி' எனப்படுவார். இவருக்கு மேலாண்மைக் கூட்டாளி (Management Partner), பணிபுரியும் கூட்டாளி (Working Partner) என்ற வேறு பெயர்களும் உண்டு. உடன்பாட்டின் அடிப்படையில் கூட்டாளியாகி தொழிலின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவோர் உழைக்கும் கூட்டாளி ஆவார். இவர் தன் செயலால் தன்னையும் பிற கூட்டாளிகளையும் கட்டுப்படுத்துவார். இவர் கூட்டாண்மையிலிருந்து விலகினால் பொது அறிக்கை மூலம், தான் விலகுவதை அறிவிக்க வேண்டும்.

2. உறங்கும் கூட்டாளி (அல்லது) உழையா கூட்டாளி (Sleeping or Dormant Partner) : வாணிபம் நடத்தத் தேவையான மூலதனத்தை வழங்கி விட்டு, அதன் நிருவாகத்தில் எவ்விதமான பங்கும் வகிக்காத கூட்டாளி, 'உழையாக் கூட்டாளி' அல்லது 'உறங்கும் கூட்டாளி' அல்லது 'செயலற்ற கூட்டாளி' என அழைக்கப்படுவார். இவரது பொறுப்பு வரையற்றதாக இருக்கிறது. இவர் விலகுவதற்கு பொது அறிவிப்பு செய்ய வேண்டியதில்லை.

3. பெயரளவுக் கூட்டாளி (Nominal Partner) : இக்கூட்டாளி மூலதனம் எதையும் செய்வதில்லை. கூட்டாண்மைத் தொழிலில் பங்கேற்பதுமில்லை. இவர் தனது பெயரையும் செல்வாக்கையும் மட்டும் கொடுத்து உதவுகிறார். இவருக்கு இலாபத்தில் பங்கு கிடையாது. ஆனால் பொறுப்புகளுக்குட்பட்டவர்.

4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி (Partner in profits only): கூட்டாண்மையில் நட்டம் ஏற்பட்டால் அதனை ஏற்காமல் இலாபத்தில் மட்டும் உரிய விகிதத்தில் பங்கு பெறும் கூட்டாளி 'இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி' எனப்படுகிறார். இவரும் கூட்டாண்மைப் பொறுப்புகளுக்குட்பட்டவர்.

5. துணைக் கூட்டாளி (Sub-Partner) : நிறுமத்திலிருந்து வரும் இலாபத்தை ஒரு கூட்டாளி மூன்றாம் நபருடன் பகிர்ந்துக் கொண்டால், அம் மூன்றாம் நபர் துணைக் கூட்டாளி ஆவார். இவர் கூட்டாண்மையின் கூட்டாளி அல்ல. இவருக்கு பிற கூட்டாளிகளுக்கு உள்ள எவ்வித உரிமையும் இல்லை.

6. முரண்தடைக் கூட்டாளி (Partner by Estoppel) : ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவரது நடத்தையின் மூலம் தானும் அத்தொழிலில் கூட்டாளி என்று வெளியாரை நம்பச் செய்யலாம். அவர் பின்னர் இதை மறுக்க தடை செய்யப்பட்டவராவார். இத்தகைய நபர் முரண்தடைக் கூட்டாளி எனப்படுகிறார். இவர் மூன்றாம் நபர்களுக்கு பொறுப்பாவார். ஆனால் இலாபத்தில் பங்கு கிடையாது.

7. உரிமைப் போலி கூட்டாளி (Partner by Holding Out) (பிரிவு 28): கூட்டாண்மையில் உண்மையான கூட்டாளியாக இல்லாத நபர் தன்னை அந் நிறுமத்தின் கூட்டாளி என பிறர் பேசுவதை அனுமதித்து அதனை மறுக்காமலிருந் தால் அவர் 'உரிமைப் போலி கூட்டாளி' எனப்படுவார். இவர் கூட்டாண்மை நிறுமத்தின் பொறுப்புகளை ஏற்க வேண்டியவர் ஆவார்.

மேலும், தன்னை ஒரு நிறுமத்தின் கூட்டாளியாக பேச அனுமதித்த ஒருவர் கூறியதன் அடிப்படையில் எவரேனும் அந்நிறுமத்திற்குக் கடன் கொடுத்தால், அக்கடனுக்கு அவர் ஒரு கூட்டாளியாக அந்நிறுமத்திற்கு பொறுப்புடையவர் ஆவார்.

வேறுபாடுகள்: முரண்தடைக் கூட்டாளி, உரிமைப் போலி கூட்டாளி ஆகிய இரண்டுமே, இந்திய சாட்சிய சட்டத்தின் **115–வது பிரிவின்** அடிப்படையில் எழும் ஒரு நிலைப்பாடாகும். அப்பிரிவு 'முரண்தடைக் கோட்பாடு' (Doctrine of Estoppel) குறித்து கூறுகிறது. இந்த இரண்டு கூட்டாளிகளுக்கும் இடையில் பெரிய அளவிலான வேறுபாடு ஏதும் இல்லை. எனினும், முன்னதில், ஒருவர் தன்னை ஒரு நிறுமத்தின் கூட்டாளியாக வெளியாரை நம்பச் செய்கிறார். பொறுப்புகள் ஏதேனும் எழுந்த பின்னர், தான் கூட்டாளியல்ல என்று அவர் மறுத்துக் கூறத் தடைச் செய்யப்படுகிறார். பின்னதில், ஒரு நிறுமம் மற்றொருவரை கூட்டாளியாகக் கூறுவதை அவர் அனுமதித்து, அதை மறுக்காமல் உள்ளார். எனவே அவருக்கு 'கூட்டாளி' எனும் உரிமை இங்கு போலியாக ஏற்படுகிறது. இங்கும் பொறுப்புகள் எழுந்த பின்னர், தான் கூட்டாளியல்ல என்று அவர் மறுக்க முடியாது. எனவே இரண்டிற்கும் மேற்கண்ட 'முரண்தடைக் கோட்பாடு' பொருந்தும்.

8. இளவர் கூட்டாளி (Minor as Partner) : 18 வயதுக்குக் கீழ் உள்ள எவரும் இளவர் ஆவார். சட்டப்படி இவர் கூட்டாளியாக ஆக முடியாது. ஆனால் அனைத்து கூட்டாளிகளும் உடன்பட்டால் இவர் கூட்டாளியாக சேர்க்கப்படலாம். இவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. (அடுத்து வரும் ஒரு தனி வினாவின் விடையில் விரிவாகக் காண உள்ளோம்.)

9. புதிய கூட்டாளி (New or Incoming Partnor) (பிரிவு 31) : செயல் பட்டு வருகின்ற ஒரு நிறுமத்தில் பிற கூட்டாளிகளின் இசைவுடன் அல்லது கூட்டாண்மை ஆவணத்தின் தன்மைப்படி புதிதாக அனுமதிக்கப்படுகின்ற கூட்டாளி, 'புதிய அல்லது உள் வரும் கூட்டாளி' எனப்படுகிறார். இவர் நிறுமத்தில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து பொறுப்புடையவர் ஆவார்.

10. ஓய்வு பெறும் அல்லது செல்லுகின்ற கூட்டாளி (Retiring or Outgoing Partner) (பிரிவு 32) : கூட்டாளி ஒருவர் நிறுமத்திலிருந்து வெளியேறி னால் அவர் 'ஓய்வு பெறும் அல்லது செல்லுகின்ற கூட்டாளி' எனப்படுகிறார். நிறுமம் பிற கூட்டாளிகளைக் கொண்டு தொடர்ந்து நடைபெறும்.

8. Can a minor be admitted to partnership? Explain the rights of a minor admitted to partnership during his minority and after attaining majority. (கூட்டாண்மையில் ஒரு இளவரைச் சேர்த்துக் கொள்ளலாமா ? இளவராக இருக்கும் போதும், உரிமை வயதை அடைந்த பிறகும் கூட்டாண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு இளவரின் உரிமைகள் பற்றி விளக்குக.)

(அல்லது)

Can there be a partnership with a minor? How if at all can a minor be associated in a partnership? (ஒரு இளவரோடு கூட்டாண்மை இருக்க இயலுமா ? ஒரு கூட்டாண்மையில் எந்த விதத்தில் ஒரு இளவர் சேர்த்துக் கொள்ளப்படலாம்?)

(அல்லது)

Can a minor become a partner? If so, state the relevant provisions under the Indian Partnership Act. (இளவர் ஒருவர் கூட்டாளியாக முடியுமா? முடியுமெனில் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் தொடர்புடைய சட்டப் பிரிவுகளை விளக்குக.)

(அல்லது)

"There cannot be a partnership between minors. The minors, however, may be admitted to the benefits of a partnership." Comment on the statement and state the rights and liabilities of such persons. (இளவர்களுக்கிடையில் கூட்டாண்மை இருக்கவியலாது. எனினும், கூட்டாண்மையின் நலன்களுக்காக அதில் இளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படலாம். இக்கூற்றினை விமர்சித்து, அத்தகு நபர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What are the rights and liabilities of a minor admitted to the benefits of partnership during his minority and after attaining majority ? (வயதுவரா நிலையிலும், வயது வந்த பிறகும் கூட்டாண்மையின் நற்பயன்களில் சேர்க்கப்பட்ட இளவர் ஒருவரின் உரிமைகளும், கடப்பாடுகளும் யாவை ?)

(அல்லது)

Discuss the rights and liabilities of a minor partner. (ஒரு வயது வராத இளவர் கூட்டாளியின் உரிமைகளையும், பொறுப்புகளையும் பற்றி விளக்குக.)

(அல்லது)

Examine the position of a minor in a partership. (ஒரு கூட்டாண்மையில் உரிமை வயதுறாதவர் நிலைமையை ஆராய்க.)

(அல்லது)

Minor's admission to Partnership firm - Write short notes. (கூட்டாண்மை நிறுமத்தில் இளவர் சேர்த்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Minor partner - Write short notes. (வயதுறா பங்குதாரர் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 11–வது பிரிவும், **Mohari Bibi v. Dharmadas Ghose**[1] வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பும், இளவர் செய்து கொள்ளும் உடன்பாடு இல்லாநிலையதென்றும் (void) அவ்வுடன்பாட்டை செயல்படுத்த முடியாதென்றும் தெளிவாக்கிவிட்டன. எனவே, ஒரு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டாண்மை நிறுமத்தில் ஒரு இளவர் கூட்டாளியாவது இயலாத ஒன்றாகும். மேலும் அவர் தனது காப்பாளர் (Guardian) மூலமாகவும் கூட்டாளி யாக முடியாது. எனினும், கூட்டாண்மைச் சட்டம் **பிரிவு 30(1)–ன்படி** எல்லா கூட்டாளிகளின் இசைவோடும், கூட்டாண்மையின் நலன்களுக்காக, ஒரு இளவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்படலாம் (Minor admitted to the benefits of Partnership). ஒரு இளவர் இவ்வாறு சேர்க்கப்படும் முன்னர், அக் கூட்டாண்மையில் இரண்டு வயதடைந்த கூட்டாளிகள் இருந்தாக வேண்டும்.

இளவரின் உரிமைகள் (Rights of Minor):

1. இலாபத்தில் பங்கு பெறும் உரிமை : கூட்டாண்மையின் நலனுக்காக

1. (1903) I.L.R. 30 Cal. 539. (P.C.) See also (1904) 20 L.Q.R. 8

சேர்க்கப்பட்டுள்ள இளவர், கூட்டாண்மையின் இலாபத்திலும் சொத்துக்களிலும் பங்கு பெற உரிமை பெற்றவராவார், என்று **பிரிவு 30(2)–ன் முற்பகுதி** கூறுகிறது.

2. கணக்குகளை பார்வையிடும் உரிமை : இளவர், கூட்டாண்மையின் கணக்கு புத்தகங்களை பார்வையிட்டு அவற்றின் படிகளை எடுத்துக் கொள்ள உரிமை பெற்றுள்ளார் என்று **பிரிவு 30(2)–ன் இரண்டாம் பகுதி** கூறுகிறது. ஆனால் இவை தவிர வேறு புத்தகங்களைக் காணும் உரிமை அவருக்கில்லை. ஏனெனில் அவற்றில் வணிக இரகசியங்கள் இருக்கலாம்.

3. வழக்குரைக்கும் உரிமை : இளவருக்கு இலாபத்தில் பங்கு கொடுக்கப் படவில்லையெனில் அவர், நிறுமத்தின் இலாபத்திலோ சொத்துக்களிலோ பங்கு கேட்டு வழக்குத் தொடரலாம். ஆனால் அவர் தன்னை நிறுமத்திலிருந்து பிரித்துக் கொள்ள எண்ணினாலே அவ்வாறு செய்ய முடியும்.

4. தேர்ந்தெடுக்கும் உரிமை : கூட்டாண்மையின் நலனுக்காகச் சேர்க்கப் பட்ட இளவர் உரிமை வயதெய்தியதும், ஒரு கூட்டாளியாவதா இல்லையா எனத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கிறார். தான் உரிமை வயதெய்திய நாளிலிருந்து ஆறு மாதங்களில் தன் தேர்வுரிமையைப் பயன்படுத்த வேண்டும்.

இளவரின் பொறுப்புகள் (Liabilities of Minor) :

1. பொறுப்பில் இளவரின் பங்கு : இளவருக்கு நிறுமத்திலுள்ள பங்கின் அளவே, அவருடைய பொறுப்பும் இருக்கும். **பிரிவு 30 (3)–ன்படி**, இளவரின் பங்கு, நிறுமத்தின் செயல்களுக்கு பொறுப்பானதாகும். ஆயினும் அவர் அவ்வித செயல் களுக்கு, சொந்தப் பொறுப்பு ஏற்க வேண்டியதில்லை. அவரது சொத்துக்களும் பொறுப்பேற்க வேண்டியதில்லை.

2. சொந்தப் பொறுப்புகள் : உரிமை வயதெய்தியதும், தான் ஒரு கூட்டாளியாவதாக முடிவு செய்தால், தான் அக்கூட்டாண்மையின் நலனுக்காக சேர்க்கப்பட்ட நாளிலிருந்து மற்றக் கூட்டாளிகள் போன்றே நிறுமத்தின் செயல்களுக்காக மூன்றாம் நபர்களுக்கு சொந்தப் பொறுப்புடையவராவார்.

3. உரிமைப் போலிக்கான பொறுப்பு : இளவர் உரிமை வயதடைந்த பின்னர், கூட்டாளியாக உரிமைத் தேர்வு செய்யும் முன்னர், நிறுமத்தின் கூட்டாளி யாகச் செயல்பட்டிருந்தாலோ அல்லது தெரிந்தே அவ்வாறு கருதப்பட இசைந்திருந் தாலோ, அவரைக் கூட்டாளி என நம்பி, அவரது கூற்றுகளின் அடிப்படையில் நிறுமத்திற்கு கடன் கொடுத்தவர்களுக்கு அவர் சொந்தப் பொறுப்புடையவராவார். இப்பொறுப்பு, உரிமைப் போலியின்பால் விளைவதாகும்.

4. நொடிந்தவர் என அறிவிப்புச் செய்ய முடியாமை : ஒரு இளவரை நொடிந்தவர் என அறிவிப்பு செய்ய முடியாது போனாலும், நிறுமம் நொடிந்ததாக அறிவிக்கப்பட்டுவிட்டால், நிறுமத்திலுள்ள இளவரின் பங்கு சொத்தாட்சி

அலுவலரையோ (Official Receiver), வழக்குறு சொத்துப் பேணுனரையோ (Official Assignee) சென்றடையும்.

இளவர் உரிமை வயதடைதலும், அதன் பின்னர் அவரது நிலையும் (Minor attaining majority and position thereafter):

இளவரின் தேர்வு (Election of Minor): உரிமை வயதடைந்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அல்லது தான் கூட்டாண்மையின் நலன்களுக்காக சேர்க்கப்பட்ட செய்தியை அறிந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் எது பிந்தி வருகிறதோ அன்று வரை எந்த நாளிலும் இளவர், தான் கூட்டாளியாகத் தேர்வு செய்ததை அல்லது கூட்டாளியாக விரும்பாததை தேர்வு செய்வதை ஒரு பொது அறிக்கை மூலம் வெளியிட வேண்டும். இவ்வித அறிவிப்பை அவர் தரத் தவறினால் ஆறு மாத காலத்துக்குப் பின் ஒரு கூட்டாளியாகக் கருதப்படுவார் [பிரிவு 30(5)]. அவர் அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளது குறித்து அவருக்குத் தெரியாது என்பதை மெய்ப்பிக்கும் சுமை (Burden of proving) அவ்வாறு கூறுபவரையேச் சாரும். [பிரிவு 30(6)].

கூட்டாளியானால் அல்லது கூட்டாளியாகத் தீர்மானித்து தேர்வு செய்தால், இளவரின் நிலை (அல்லது) இளவர் உரிமை வயதடைந்த பின்னர் அவரது உரிமைகளும் பொறுப்புகளும் :

1. அவரது உரிமைகளும் பொறுப்புகளும் ஒரு முழு உறுப்பினர் நிலையிலுள்ள கூட்டாளியைப் போன்றதாகும்; 2. கூட்டாண்மையின் நலனுக்காக ஆரம்பத்தில் சேர்க்கப்பட்ட நாளிலிருந்த நிறுமத்தின் செயல்களுக்கெல்லாம் அவர் சொந்தப் பொறுப்பேற்றவராவார்; 3. அவரது இலாபப் பகிர்வு விகிதம் மாற்றம் செய்யப்பட்டாலொழிய முன் போன்றே இருக்கும்; 4. ஒரு இளவராக அவர் நிறுமத்தின் சொத்திலும், இலாபத்திலும் எந்த அளவிற்கு பங்கைப் பெற்று வந்தாரோ அதே அளவிலான பங்கைப் பெற அவர் உரிமையுடையவர் [பிரிவு 30(7)].

கூட்டாளியாவதில்லை எனத் தேர்வு செய்தல், இளவரின் நிலை :

1. தான் ஒரு கூட்டாளியாக விரும்பவில்லை என்று பொது அறிவிப்பு செய்யும் தேதி வரை அவருடைய உரிமைகளும் பொறுப்புகளும் ஒரு இளவருடையதைப் போன்றே இருக்கும்; 2. பொது அறிவிப்பு செய்த தேதிக்குப் பின்னர் நிறுமத்தின் செயல்களுக்கு அவர் பொறுப்பாகமாட்டார்; 3. அவர் நிறுமத்திலுள்ள சொத்திலும் இலாபத்திலும் தனக்குரிய பங்கிற்கு வழக்காட உரிமை பெறுகிறார் [பிரிவு 30(8)].

9. (a) State whether registration of a firm is compulsory under the Indian Partnership Act.

(b) Discuss fully the effects of non-registration of a partnership.

(அ) இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் கீழ் ஒரு கூட்டாண்மை கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதை எடுத்துக் கூறுக.

(ஆ) பதிவு செய்யப்படாமையால் ஏற்படும் விளைவுகளை முழுமையாக ஆராய்க.

(அல்லது)

"The Indian Partnership Act has effectively ensured the registration of firms without making it compulsory" Comment. ("இந்தியக் கூட்டாண்மைச் சட்டமானது கூட்டாண்மையினை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தாமல் இருந்த போதிலும் கூட்டாண்மை நிறுமத்தினை பதிவு செய்வதை உறுதி செய்கிறது." – திறனாய்வு செய்க.)

(அல்லது)

'The Indian Partnership Act provides for registration of firms without making it compulsory.' Explain. ("கட்டாயமின்றி நிறுமங்களைப் பதிவு செய்தலுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் வகை செய்துள்ளது'. விளக்குக.)

(அல்லது)

Registration of firms – Write short notes. (கூட்டமைப்புகளை பதிவு செய்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Registration of partnership firms – Write short notes. (கூட்டாண்மை நிறுமம் பதிவு செய்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Effects of non-registration of a firm – Write short notes. (கூட்டமைப்புகளைப் பதிவு செய்யாததின் விளைவுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What are the consequences of non-registration of a firm? (கூட்டாண்மையை பதிவு செய்யாததின் விளைவுகள் யாவை?)

(அ) நிறுமங்களைப் பதிவு செய்தல் (Registration of firms) :

ஒரு கூட்டாண்மை நிறுமம் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டுமா ?

கூட்டாண்மை நிறுமம் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுவதாகும். எனினும், அதைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. ஏனெனில், பதிவு செய்வதன் மூலம் அது உருவாக்கப்படுவதில்லை. பதிவு செய்தல் ஒரு நிறுமத்திற்கு கட்டாய மானதல்ல. அது கூட்டாளிகளின் விருப்பத்தைப் பொருத்ததாகும். பதிவு செய்யாது இருப்பதற்கு தண்டனையேதுமில்லை. இருப்பினும் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் **69–வது பிரிவு** நிறுமம் பதிவு செய்யப்படுவதை மறைமுகமாக கட்டாயமாக்கி உள்ளது. (எவ்வாறு கட்டாயமாகிறது என்பதை இவ்விடையின் (ஆ) பகுதியில் காண உள்ளோம்.)

பதிவாளர்களை அமர்த்துதல் (Appointment of Registrar):

கூட்டாண்மைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாநில அரசு, நிறுமங்களின் பதிவாளர்களை அமர்த்தி, அவர்கள் தங்களது அதிகாரங்களை செயல்படுத்தக் கூடிய மற்றும் கடமைகளை நிறைவேற்றக் கூடிய பகுதிகளை வரையறுக்கலாம் என்று **பிரிவு 57** கூறுகிறது.

பதிவு செய்வதற்கான நடைமுறை (பிரிவுகள் 58 மற்றும் 59):

ஒரு கூட்டாண்மை நிறுமத்தை பதிவு செய்வதற்குண்டான விண்ணப்பத்தை நிறுமப் பதிவாளரிடம் சமர்ப்பிப்பதன் வாயிலாக, ஒரு நிறுமம் எந்நேரத்திலும் பதிவு செய்யப்படலாம். அவ்விண்ணப்பம் ஒரு குறிப்பிட்ட படிவத்தில் விவர அறிக்கையின் (statement) வடிவில் இருத்தல் வேண்டும். அதில் தேவையான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பத்திற்குரிய கட்டணமும் செலுத்தப் பட்டிருக்க வேண்டும். விண்ணப்பத்தில் பின்வரும் விவரங்கள் அவசியம் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும் என்று **பிரிவு 58(1)** கூறுகிறது. அவை,

(a) நிறுமத்தின் பெயர், (b) நிறுமத்தின் தொழில் நடைபெறும் முதன்மையான இடம், (c) நிறுமத்தின் தொழில் நடைபெறும் மற்ற இடங்களின் பெயர்கள், (d) ஒவ்வொரு கூட்டாளியும் நிறுமத்தில் சேர்ந்த தேதி, (e) கூட்டாளிகளின் முழுப் பெயர்களும் அவர்களின் நிலையான முகவரிகளும், மற்றும் (f) நிறுமத்தின் கால வரம்பு.

மேற்கண்ட விவரங்கள் அடங்கிய அறிக்கையானது, எல்லா கூட்டாளி களாலும் அல்லது இதற்காக அமர்த்தப்பட்ட அவரது முகவர்களாலும் கையொப்ப மிடப்பட வேண்டும்.

மேற்கண்ட விவர அறிக்கையில் கையொப்பமிடும் ஒவ்வொருவரும் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதனை சரிபார்க்க வேண்டும் என்று **பிரிவு 58(2)** கூறுகிறது. (அதாவது அதில் கண்டுள்ள விபரங்கள் சரியானவையாக உள்ளன என்று விளம்பி கையொப்பமிட வேண்டும்.)

நிறுமத்தின் பெயர் சட்டப்படியான வரையறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அதாவது நிறுமத்தில் பெயரில் 'முடியரசு', 'பேரரசர்', 'பேரரசி', 'பேரரசு', 'அரசர்', 'அரசி' ஆகிய பதங்கள் இடம் பெறல் கூடாது என்று **பிரிவு 58(3)** கூறுகிறது.

மேற்கண்ட 58–வது பிரிவில் கண்டுள்ள வகைமுறைகள், முறைப்படி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பதிவாளர் மனநிறைவடைந்தால், அவர் மேற்படி விவர அறிக்கையை 'நிறுமங்களின் பதிவேடு' எனும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு, அவ்வறிக்கையை கோப்பிலிடுவார் என்று **பிரிவு 59** குறிப்பிடுகிறது.

பின்பு அவர் தன் கையொப்பமிட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்றை வழங்குவார். இதுவே பதிவு செய்யும் நடைமுறையை முடிவுறச் செய்கிறது. இருப்பினும் அவ்வறிக்கையை உரிய கட்டணத்துடன் பதிவாளருக்கு அளித்து விட்டாலே பதிவு நிறைவடைகிறது. பதிவாளரின் பதிவு செய்யும் செயல், எழுத்தர் சார்ந்த செயலேயாகும் (Clerical act).

பதிவு செய்வதற்கான காலம்:

ஒரு நிறுமத்தை பதிவு செய்வதற்கான காலம் குறித்து இந்திய கூட்டாண்மை சட்டத்தில் எவ்வித விதியும் இல்லை. கூட்டாண்மை செயலிலிருக்கும் எந்நேரத்திலும் பதிவு செய்யலாம். அது தொடக்கத்திலேயே செய்யப்பட வேண்டுமெனும் கட்டாயமில்லை. ஒரு நிறுமம் நீதிமன்றத்தில் வழக்குகள் எதையும் தொடர வேண்டுமெனில், அது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இல்லாது போனால் நிறுமத்தின் வழக்கு தள்ளுபடியாகிவிடும்.

(ஆ) நிறுமத்தை (கூட்டாண்மையை) பதிவு செய்யாதால் ஏற்படும் விளைவுகள் (Effects of Non-registration of a firm) :

"இந்தியக் கூட்டாண்மைச் சட்டமானது கூட்டாண்மையினை பதிவு செய்வதை கட்டாயப்படுத்தாமல் இருந்த போதிலும், அதனைப் பதிவு செய்வதை உறுதி செய்கிறது," எனும் கூற்று உண்மைதான். ஏனெனில், ஒரு கூட்டாண்மையை பதிவு செய்யாமல் இருப்பின், அங்கு பின்வரும் கடும் விளைவுகள் ஏற்படுகின்றன. அத்தகு விளைவுகளிலிருந்து பாதுகாப்பு பெற வேண்டுமெனில், கூட்டாண்மையை பதிவு செய்வதுதான் சாலச் சிறந்தது. எனவே இந்தியக் கூட்டாண்மைச் சட்டமானது கூட்டாண்மையை பதிவு செய்வதை மறைமுகமாக கட்டாயமாக்குகிறது என்றே கூற வேண்டும்.

1. கூட்டாளிகள் வழக்காட இயலாமை (Partner cannot sue) : பதிவு செய்யப்படாத நிறுமத்தின் கூட்டாளிகள் நிறுமத்திற்கெதிராக அல்லது கூட்டாளி களுக்கு எதிராக கூட்டாண்மைச் சட்டத்தின் கீழான அவர்களுக்குண்டான உரிமையை பெற வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு வழக்குத் தொடர (1) நிறுமம் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்; (2) வழக்காடுபவர் நிறுமத்தின் கூட்டாளி என்று நிறுமப் பதிவேட்டில் குறிப்பிட்டிருக்க வேண்டும். **[பிரிவு 69 (1)].**

2. நிறுமம் மூன்றாம் நபர்களுக்கெதிராக வழக்கு தொடர இயலாது (Firm cannot sue against third parties) : பதிவு செய்யப்படாத நிறுமம், ஒப்பந்தத்தின் உரிமையை நிலை நாட்ட மூன்றாம் நபர் மீது வழக்காற்ற இயலாது. அவ்வாறு வழக்கு தொடர (1) அந்நிறுமம பதிவு செய்யப்படுதல் வேண்டும்; (2) நிறுமத்தின் சார்பாக வழக்கு தொடரும் நபர்களின் பெயர்கள் அந்நிறுமத்தின் கூட்டாளிகளாக நிறுமப் பதிவேட்டில் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். **[பிரிவு 69 (2)].**

3. சரிக்கட்டும் உரிமை இல்லாமை (No right of set off) : சரிக் கட்டுதல் என்றால், உரிமைக் கோரல் புரிபவரின் உரிமைப் பணத்தை குறைவு செய்யும் நிறுமத்தின் உரிமைக் கோரல் என்பதாகும். இவ்வுரிமை பதிவு செய்யப் படாத நிறுமத்திற்கோ அல்லது அதன் கூட்டாளிக்கோ கிடைக்காது **[பிரிவு 69 (3)]**. எனினும் ரூ. 100/–க்கு குறைவாகவுள்ள உரிமைக் கோரலுக்கு இவ்விதி பொருந்தாது. **[பிரிவு 69 (4)(b)]**.

விதிவிலக்குகள் (Exceptions) :

நிறுமம் பதிவு செய்யப்படாததால் (Non-registration) பின்வரும் உரிமைகள் பாதிக்கப்படாது.

1. நிறுமக் கலைப்பிற்கு வழக்கு தொடுக்கும் உரிமையும் (Dissolution of the firm), கலைக்கப்பட்ட நிறுமத்தின் கணக்குகளைக் கேட்டும் உரிமையும், அதன் சொத்துக்களை விற்பதற்கான உரிமையும் இதனால் பாதிக்கப்படாது.

2. நொடிந்த கூட்டாளியின் சொத்தை விற்பதற்கு சொத்தாட்சி அலுவலருக்கு அல்லது நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை அது பாதிக்காது.

3. அயல்நாட்டு நிறுமத்தையும் அதன் கூட்டாளிகளையும் இது பாதிக்காது. அதுபோல், இந்தியாவில் தொழிலில் ஈடுபடாத நிறுமம் மற்றும் அதன் கூட்டாளி களையும் இது பாதிக்காது.

4. ரூ. 100/–க்குக் குறைவான சரிக்கட்டும் உரிமையை பாதிக்காது.

5. மூன்றாம் நபர்கள் நிறுமம் மற்றும் அதன் கூட்டாளிகள் மீது வழக்காடும் உரிமையை பாதிக்காது.

6. ஒப்பந்தத்தால் அல்லாத வேறு வழியில் எழும் உரிமையை பாதிக்காது.

10. Explain the mutual rights and liabilities of Partners. **(கூட்டாளிகளுக்கு இடையே உள்ள உரிமைகளையும், பொறுப்புகளையும் விளக்குக.)**

(அல்லது)

Define Partnership. What are the rights and duties of a Partner. **(கூட்டாண்மையினை வரையறை செய்க. ஒரு கூட்டாளியின் உரிமைகளும் கடமைகளும் யாவை?)**

கூட்டாளியின் உரிமைகள் (Rights of Partners) :

1. தொழிலில் பங்கேற்கும் உரிமை (Right to take part in business) [பிரிவு 12 (a)] : கூட்டாளி ஒவ்வொருவருக்கும் தொழிலின் நிருவாகத்தில் பங்கேற்கும் உரிமை உண்டு. இவ்வுரிமையை ஏற்க மறுத்தால், அப்பணியை பிற கூட்டாளிகள் ஏற்க வேண்டும். அதற்கு ஈட்டுத் தொகையை கோர அவர்களுக்கு உரிமை உண்டு.

2. கலந்து ஆராயும் உரிமை (Right to be consulted) [பிரிவு 12 (c)]: நிறுமத்தின் அலுவல்கள் குறித்து ஒவ்வொரு கூட்டாளியும் கலந்தா லோசிக்கும் உரிமையைப் பெற்றுள்ளனர். சாதாரண விஷயங்கள் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பெரும்பான்மையோர் கருத்தை ஏற்க வேண்டும். முக்கியமான விஷயங்களில் எல்லா கூட்டாளிகளின் இசைவையும் பெற வேண்டும்.

3. பதிவேடுகளை பார்வையிடும் உரிமை (Right to access to books) [பிரிவு 12(d)] : நிறுமத்தின் பதிவேடுகளையும், பிற ஆவணங்களையும் பார்வையிடவும் அதன் நகலை எடுத்துக் கொள்ளவும் ஒவ்வொரு கூட்டாளிக்கும் உரிமை உண்டு. பிரிவு 30(2)–ன்படி இளவருக்கு கணக்கு ஏடுகளைத் தவிர பிற பதிவேடுகளைப் பார்க்கும் உரிமை இல்லை.

4. இலாபத்தில் பங்கு ஏற்கும் உரிமை (Right to share profits) [பிரிவு 13 (b)] : வேறு வகையான ஒப்பந்தம் இல்லாத நிலையில், கூட்டாளிகள் இலாப–நட்டங்களை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

5. மூலதனம் மீது வட்டி பெறும் உரிமை (Right to interest on capital) [பிரிவு 13 (c)] : கூட்டாளிகள் மூலதனத்தின் மீது வட்டி கோர உரிமை பெற்றவர்கள். வட்டி நிறுமத்தின் இலாபத்திலிருந்து வழங்கப்படுகிறது.

6. முன்பணத்தின் மீது வட்டி பெறும் உரிமை (Right to interest on advances) [பிரிவு 13 (d)] : கூட்டாளிகள் மூலதனத் தொகைக்கு அதிகமாக முன்பணம் கொடுத்து இருந்தால் அதற்காக 6% ஆண்டு வட்டி பெற உரிமை உண்டு.

7. ஈட்டுறுதி பெறும் உரிமை (Right to indemnified) [பிரிவு 13 (e)]: நிறுமத்தின் நன்மைக்காக தொழிலை நடத்த செய்த செலவுகளை திரும்பப் பெற

உரிமையுண்டு. அதாவது (1) ஒரு கூட்டாளி செலுத்திய தொகைக்கான அல்லது ஏற்ற பொறுப்புகளுக்கான ஈட்டுறுதியை நிறுமத்திடமிருந்து பெறும் உரிமை கூட்டாளிக்கு உண்டு; (2) நட்டத்திலிருந்து தொழிலைக் காக்க ஆற்றிய செயல் களுக்கான ஈட்டுறுதியைக் கோர கூட்டாளிக்கு உரிமையுண்டு. **[பிரிவு 13 (e) மற்றும் 21].**

8. கூட்டாண்மைச் சொத்துக்களை பயன்படுத்தும் உரிமை (Right to the use of partnership property) : மாறுபட்ட ஒப்பந்தம் இருந்தாலொழிய, கூட்டாண்மையின் சொத்துக்கள் தொழில் நோக்கத்திற்காக முழுமையாக பயன் படுத்தப்பட வேண்டும். எக்கூட்டாளியும் அவற்றை தன் சொந்த சொத்தாக கருத உரிமையில்லை **(பிரிவு 15).** ஒரு கூட்டாளி நிறுமத்தின் சொத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தன் சொந்தத்திற்குப் பயன்படுத்தினால், அதன் மூலம் ஈட்டிய இலாபத்தை நிறுமத்தில் சேர்க்க வேண்டும்.

9. முகவருக்குரிய உரிமை (Right of an agent) [பிரிவு 18 & 19]: ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுமத்தின் முகவராக செயல்படும் உரிமை உண்டு. கூட்டாண்மைச் சட்டத்திற்குட்பட்டு, கூட்டாளி நிறுமத்தின் முகவராக இருந்து நிறுமத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலாம்.

10. புதிய கூட்டாளி சேருவது (New Partner to be introduced): நிறுமக் கூட்டாளிகளின் இசைவின்றி புதுக் கூட்டாளி ஒருவரை நிறுமத்தில் சேர்த்துக் கொள்ள முடியாது **[பிரிவு 31(1)].**

11. சேருவதற்கு முன்பு பொறுப்பு இல்லை (No liability before joining) [பிரிவு 31(2)] : நிறுமத்தில் சேருவதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றிற்கு புதிய கூட்டாளி பொறுப்பாகமாட்டார். அவர் நிறுமத்தில் சேர்ந்த பிறகு நிகழ்ந்த செயல்களுக்குத்தாம் பொறுப்பாளியாவார்.

12. ஓய்வு பெறும் உரிமை (Right to retire) [பிரிவு 32 (1)] : ஒப்பந்தம் அனுமதித்தால் ஒரு கூட்டாளி, மற்ற கூட்டாளிகளின் அனுமதியின் பேரில் ஓய்வு பெறலாம் அல்லது கூட்டாளிகள் செய்து கொண்டுள்ள வெளிப்படையான உடன்பாட்டின்படியும் ஓய்வு பெறலாம். விருப்பக் கூட்டாண்மையில் (Partnership at Will) மற்ற கூட்டாளிகளுக்கு அறிக்கை விடுத்து, ஒரு கூட்டாளி எப்போது வேண்டுமானாலும் ஓய்வு பெறலாம்.

13. விலக்க முடியா உரிமை (Right not to be expelled) [பிரிவு 33 (1)] : கூட்டாண்மை நிறுமத்திலிருந்து தகுந்த காரணமில்லாமல் ஒரு கூட்டாளியை விலக்கிவிட முடியாது.

14. ஓய்வு பெறும் கூட்டாளியின் உரிமை (Right to retiring partner or outgoing partner) : ஓய்வு பெறும் கூட்டாளிக்கு இருவிதமான உரிமைகள் உள்ளன. அவை வருமாறு.

(அ) போட்டித் தொழில் நடத்தும் உரிமை (To carry on competing business) (பிரிவு 36) : ஒய்வு பெற்ற கூட்டாளி நிறுமத்தின் தொழிலுக்குப் போட்டியாக அதே போன்ற தொழிலைத் தொடங்கலாம். ஆனால் அவர் இதற்கு முன்பு கூட்டாளியாக இருந்த நிறுமத்தின் பெயரை பயன்படுத்தக் கூடாது அல்லது அந்நிறுமத்தின் வாடிக்கையாளர்களை தன்பக்கம் ஈர்த்துக் கொள்ளக் கூடாது.

(ஆ) பிந்தைய இலாபங்களில் பங்கு பெறும் உரிமை (To share subsequent profits): ஒய்வு பெற்ற அல்லது வெளிச்சென்ற கூட்டாளி தன்னுடைய கணக்குகள் தீர்த்து வைக்கப்படாத நிலையில், அவர் ஒய்வு பெற்றதற்கு பின்பு வந்த இலாபங்களில் பங்கு பெறும் உரிமை அவருக்குண்டு அல்லது தனது பங்கில் ஆண்டிற்கு 6% வட்டி பெற உரிமை உண்டு (பிரிவு 37).

கூட்டாளியின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் (Duties and Liabilities of Partner) :

கூட்டாண்மை நன்னம்பிக்கையில் எழும் ஒப்பந்தமாகும். எனவே கூட்டாளிகள் பரஸ்பர நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். கூட்டாளிகளின் பொதுவான கடமைகள் பிரிவு 9–ல் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர கூட்டாளிகளின் கடமைகளும் பொறுப்புகளும் (Duties and Liabilities) இந்திய கூட்டாண்மைச் சட்டத்தில் அங்காங்கே பரவலாக காணப்படுகின்றன.

1. பொது நன்மைக்காக தொழில் நடத்த வேண்டும் (To carry on business to the greatest common advantage) (பிரிவு 9) : கூட்டாளி பொது நலனுக்காக உழைக்க வேண்டும். அதாவது தொழிலுக்காக மேற்கொள்ளும் எத்தகு நடவடிக்கையும் நிறுமத்திற்கு நன்மை தருவதாக இருக்க வேண்டும்.

2. நன்னம்பிக்கையைக் கடைப்பிடித்தல் (To observe good faith): கூட்டாளி ஒவ்வொருவரும் மற்றொரு கூட்டாளிக்கு நியாயமாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். ஒரு கூட்டாளி நிறுமத்தின் செலவில் தனிப்பட்ட நன்மையை பெறக் கூடாது.

3. மோசடிக்கு ஈட்டுறுதி செய்தல் (To indemnify for fraud): தொழிலை நடத்தும்போது ஒவ்வொரு கூட்டாளியும் அவர் செய்யும் மோசடியால் ஏற்படும் நட்டத்தை ஈட்டுறுதி செய்வது அவரது கடமையாகும். இதனை கூட்டாளியின் அடிப்படைக் கடமை என்றும் கூறலாம் (பிரிவு 10).

4. தொழிலை அக்கறையுடன் கவனித்தல் (To attend diligently): கூட்டாளிகள், தொழில் நலனுக்காக கடின உழைப்பும் நேர்மையும் கலந்த தொண்டு செய்ய வேண்டும். தொழிலை நடத்துவதில் ஊக்கம் குறையாமல் செயல்படும் கடமையை கூட்டாளியொருவர் உடையவர் [பிரிவு 12 (b)].

5. ஊதியம் கோராமல் செயல்படும் உரிமை (Not to claim remune-

ration) : ஒவ்வொரு கூட்டாளியும் ஊதியத்தை எதிர்பார்க்காமல் தொழிலை அக்கறையுடன் கவனிக்க வேண்டும். எனினும் உழைக்கும் கூட்டாளிக்கு ஊதியமளிக்க உடன்பாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தால், அதற்கு வகை செய்து தர வேண்டும். [பிரிவு 13 (a)].

6. நட்டத்தில் பங்கு (To share losses) [பிரிவு 13 (b)] : கூட்டு வாணிகத்தில் ஈடுபடும் ஒவ்வொரு கூட்டாளியும் நிறுமத்திற்கு ஏற்படும் நட்டங்களையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய கடமையுடையவர்கள்.

7. வேண்டுமென்றே செய்த புறக்கணிப்புக்கு ஈட்டுறுதி (To indemnify for wilful neglect) [பிரிவு 13 (c)] : ஒவ்வொரு கூட்டாளியும் தான் வேண்டு மென்றே செய்த புறக்கணிப்பால் ஏற்பட்ட இழப்புகளுக்கு நிறுமத்திற்கும் மூன்றாம் நபருக்கும் ஈட்டுறுதி செய்ய கடமைப்பட்டவராவார்.

8. சொத்துக்களை நிறுமத்தின் நலனுக்காக பயன்படுத்துதல் (To use the property for the benefit of the firm) [பிரிவு 15]: கூட்டாளிகள் நிறுமத்தின் சொத்தை நிறுமத்தின் நலனுக்காக பாதுகாத்து, பயன்படுத்தும் கடமையுடையவர்கள்.

9. தனிப்பட்ட இலாபத்தை கணக்கில் சேர்த்தல் (To account for personal profit) [பிரிவு 16 (a)] : ஒரு கூட்டாளி தனிப்பட்ட முறையில் இலாபம் அடைந்திருந்தால் அதைக் கணக்கில் காட்டி நிறுமத்திற்கு செலுத்தும் கடமை உடையவர். இரகசிய இலாபம் (Secret Profit) பெற்றிருந்தாலும், அதை நிறுமத்திற்கு சேர்ப்பிக்க வேண்டும்.

10. போட்டித் தொழிலின் இலாபத்தை கணக்கில் சேர்த்தல் (To account for profits in competing business) [பிரிவு 16 (b)] : கூட்டாளி நடத்தும் போட்டித் தொழிலின் மூலம் கிடைக்கும் இலாபத்தினை கணக்கில் காட்டி நிறுமத்திற்கு செலுத்தும் கடமையுடையவர்.

11. அதிகாரத்திற்குட்பட்டு செயல்படுதல் (To act within authority) [பிரிவு 19(1)] : ஒவ்வொரு கூட்டாளியும் தனக்குரிய உண்மையான அல்லது உட்கிடையான அதிகாரத்திற்குட்பட்டு செயல்படும் கடமை உடையவர்கள். கூட்டாளிகள் அதிகாரத்தை மீறியிருந்தால், அதனால் ஏற்படும் நட்டத்திற்கு ஈடு செய்யும் பொறுப்புடையவர்கள்.

12. கூட்டான மற்றும் தனித்தனியான பொறுப்பு (Joint and several liability) [பிரிவு 25] : ஒவ்வொரு கூட்டாளியும் மற்ற கூட்டாளிகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் நிறுமத்தின் செயல்களுக்காக பொறுப்பாவார்கள்.

13. உரிமைகளை மாற்றதிருத்தல் (பிரிவு 29) : ஒரு கூட்டாளி நிறுமத்தில் அவருடைய உரிமையை பிறருக்கு மாற்றம் செய்து அவரை கூட்டாளியாக்க

முடியாது. ஆனால் அவரது இலாபத்தின் பங்கை மாற்றுரிமை செய்து கொடுக்கும் உரிமையுண்டு.

11. Discuss the scope and limits of the implied authority of a partner. (ஒரு கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்தின் நோக்கெல்லையும் வரம்பையும் கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Explain the implied authority of a partner. (கூட்டாளி ஒருவரின் உட்கிடை அதிகாரம் என்னும் சொற்றொடரை விளக்குக.)

(அல்லது)

Implied authority of a partner - Write short notes. (கூட்டாளியின் உட்கிடை அதிகாரம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the implied authority of a partner as agent of the firm. (ஒரு கூட்டாண்மையின் முகவர் என்ற முறையில் கூட்டாளி ஒருவரின் உட்கிடை அதிகாரத்தை விளக்குக.)

(அல்லது)

Discuss the nature and extent of the implied authority of a partner in his relations with third parties. (மூன்றாம் நபர்களுக்கிடையே ஒரு கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்தின் எல்லையையும் இயல்பையும் விவரி.)

(அல்லது)

"The law of partnership is a branch of the law of agency"- Comment. ("கூட்டாண்மைச் சட்டம் முகவர் சட்டத்தின் ஒரு பகுதியே" – விளக்குக.)

(அல்லது)

"The law of partnership is nothing but an extension of the law of principal and agent." Explain. ("கூட்டாண்மைச் சட்டமானது முதல்வர் மற்றும் முகவர் பற்றிய சட்டத்தின் ஒரு விரிவேயாகும்" – விளக்குக.)

(அல்லது)

"The law of Partnership is an extension of the law of agency" - Discuss. ("கூட்டாண்மை சட்டம், முகவரிய சட்டத்தின் நீடிப்பே ஆகும்" – விளக்குக.)

மூன்றாம் நபர்களுடன் கூட்டாளிகளின் உறவு (Relationship between the Partners and Third parties) :

கூட்டாண்மைத் தொழிலை நடத்தும் போது ஏற்படும் விளைவுகளுக்கு கூட்டாளிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும் (Joint and Several) மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பாவார்கள். கூட்டாண்மைச் சட்டத்தின் 18–வது பிரிவின்படி "ஒவ்வொரு கூட்டாளியும் நிறுமத்தின் தொழில் நோக்கத்திற்காக நிறுமத்தின் முகவராவார்" (A Partner is the agent of the firm). அதாவது ஒரு கூட்டாளியின் நிலை ஒரு முகவர்–முதல்வர் நிலை ஆகும். கூட்டாளி ஒவ்வொருவரும் முதல்வராகவும் அதே சமயத்தில் மற்ற கூட்டாளிகளுக்கு முகவராகவும் செயல்படுகின்றனர். இதனால்தான், **"கூட்டாண்மைச் சட்டமானது முதல்வர் – முகவர் பற்றிய சட்டத்தின் ஒரு விரிவேயாகும்"** என்று கூறப்படுகிறது.

கூட்டாளிகளுக்கும் மூன்றாம் நபர்களுக்கும் இடையே ஒவ்வொரு கூட்டாளியும் மற்றொருவருக்கு முகவராவார். அவரது செயல் நிறுமத்தின் கட்டுப் பாட்டிற்குரியது. ஒவ்வொரு கூட்டாளியும் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குள்தான் (Authority) செயல்பட வேண்டும்.

கூட்டாளியின் அதிகாரம் (Authority of Partners) :

கூட்டாளியின் செயலால் நிறுமத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளியின் திறன் கூட்டாளியின் அதிகாரமாகும். இந்த அதிகாரம் (1) வெளிப்படையான தாகவோ அல்லது (2) உட்கிடையானதாகவோ இருக்கலாம்.

1. வெளிப்படையான அதிகாரம் (Express Authority):

வாய்ச் சொல்லாலோ அல்லது எழுத்து மூலமாகவோ அளிக்கப்படும் அதிகாரம் வெளிப்படையான அதிகாரம் எனப்படுகிறது. இது கூட்டாளிகள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாட்டால் அமைகிறது. இந்நிலையில் கூட்டாளிகள் தங்களுக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குள் செயல்படுகின்றனர்.

2. உட்கிடையான அதிகாரம் (Implied Authority) :

ஒரு கூட்டாளியின் உட்கிடையான அதிகாரம் என்பது, அவரது 'வெளித் தோற்ற அதிகாரம்' (Ostensible or Apparent Authority) என்றும் அழைக்கப் படும். பிரிவு 19–ம், 22–ம் ஒரு கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்தைப் பற்றிக் கூறுகிறது. **பிரிவு 19–ன்படி,** "நிறுமம் நடத்தும் வகைக்குரிய தொழிலை நடத்து வதற்காக, கூட்டாளி ஒருவர் வழக்கமான வழியில் செய்யும் செயல், அந் நிறுமத்தைக் கட்டுப்படுத்தும்" என்று கூறுகிறது. இவ்வாறு நிறுமத்தைக் கட்டுப் படுத்தும் கூட்டாளியின் அதிகாரமே, உட்கிடை அதிகாரம் எனப்படுகிறது. எனினும் **இவ்வதிகாரம் பின்வரும் வரம்பிற்குட்பட்டது (limit).**

1. கூட்டாளியின் செயல், நிறுமத்தின் இயல்பான தொழில் (Normal business) குறித்ததாக இருக்க வேண்டும். உதாரணமாக, துணித் தொழில் நடத்தும் நிறுமத்தின் கூட்டாளி, கிழங்கு மாவு வாங்கினால் அதற்கு நிறுமம் பொறுப்பல்ல.

2. நிறுமத் தொழிலின் வரம்புக்குட்பட்டு வழக்கமான வழியில் அந்தச் செயல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. அச்செயல் நிறுமத்தின் பெயரில் செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது நிறுமத்தைக் கட்டுப்படுத்தும் எண்ணத்தை வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தெரிவிக்கும் வகையில் செய்யப்பட்டிருக்க வேண்டும் (பிரிவு 22).

கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்திற்குட்பட்ட செயல்கள் (Acts within the implied authority of a Partner) :

ஒரு நிறுமத்தின் கூட்டாளிக்கு பின்வரும் விஷயங்களில் உட்கிடை அதிகாரம் உள்ளதாகக் கருதப்படுகிறது.

1. நிறுமம் ஈடுபட்டிருக்கும் அல்லது நிறுமத்திற்குத் தேவைப்படும் அல்லது நிறுமம் வழக்கமாக விற்கும் பொருட்களை வாங்கிட, 2. நிறுமத்தின் அசையும் சொத்துக்களை அல்லது பொருட்களை விற்றிட அல்லது அடகு வைக்க, 3. நிறுமத்திற்காக பணியாட்களை அமர்த்திட, 4. நிறுமத்திற்கு வரவேண்டிய கடன் தொகைகளின் செலுத்தலைப் பெற்று செல்லத்தக்க இரசீது கொடுக்க, 5. நிறுமத்திற்காக கடன் பெற்று கடனைத் தீர்த்திட, 6. நிறுமத்துடன் ஈடுபாடு கொள்ளும் நபர்களின் கணக்கைத் தீர்வு செய்ய, 7. நிறுமத்தின் தொழில் நோக்கத் திற்காகப் பணம் கடன் பெற்றிட, 8. மாற்று முறையாவணங்களை நிறுமத்தின் பெயரில் கணக்கில் எழுதிட, ஏற்றிட, மேலெழுதிட, மாற்றிட, 9. நிறுமத்தின் சார்பில் நிறுமத்தின் பெயரில் வழக்குத் தொடர்ந்திட, நிறுமத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் எதிர்வாதம் புரிந்திட, அதற்காக வழக்குரைஞரை அமர்த்திட.

கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்திற்கு உட்படாத செயல்கள் (Acts outside the scope of the implied authority):

ஒரு கூட்டாளிக்கு பின்வரும் விஷயங்களில் உட்கிடை அதிகாரம் இல்லை [பிரிவு 19(2)]. 1. நிறுமத்தின் தொழில் சம்பந்தப்பட்ட தகராறுகளை இசைவுத் தீர்ப்புக்கு (Arbitration) விடுதல், 2. நிறுமத்திற்காக தன் பெயரில் வங்கியில் கணக்கு வைத்தல், 3. நிறுமத்தின் உரிமைக் கோரிக்கை முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை சமரசம் செய்து கொள்ளுதல் அல்லது கோரமல்

விட்டுவிடுதல், 4. நிறுமத்தின் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்கினைத் திரும்பப் பெறுதல், 5. நிறுமத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் எழும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல், 6. நிறுமத்திற்காக அசையாச் சொத்துக்களை வாங்குதல், 7. நிறுமத்திற்கு சொந்தமான அசையா சொத்துக்களை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுத்தல், 8. நிறுமத்தின் சார்பில் கூட்டாண்மையில் சேருதல்.

உட்கிடை அதிகாரமும் மூன்றாம் நபர்களும் (Implied Authority and Third Parties):

கூட்டாண்மைத் தொழிலை நடத்தும் போது, கூட்டாளிகள், தங்களது உட்கிடை அதிகாரத்திற்கு உட்பட்டுச் செய்த செயல்களுக்கு தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ பொறுப்பாவார்கள். கூட்டாளிகள் மூன்றாம் நபர்களுக்கு பின்வரும் வகையில் பொறுப்புடையவர்களாவார்கள்.

1. கூட்டாளியின் உட்கிடை அதிகார நீட்டிப்பும் கட்டுப்பாடும் (Extension and restriction of a partner's implied authority) (பிரிவு 20): கூட்டாளிகள் தங்களுக்கிடையே ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் ஒரு கூட்டாளியின் உட்கிடை அதிகாரத்தை நீட்டிப்பு செய்யலாம் அல்லது கட்டுப்படுத்த லாம். ஆனால், இவ்வித நீட்டிப்போ அல்லது கட்டுப்பாடோ மூன்றாம் நபர்களுக்குத் தெரிந்திருந்தால் மட்டுமே, அது அவர்களுக்கெதிரான விளைவுகளை ஏற்படுத்தும்.

2. கூட்டாளியின் ஒத்தேற்புரையின் விளைவு (Effect of admission by a partner) (பிரிவு 23): நிறுமத்தின் விவகாரங்கள் குறித்து அதன் ஒரு கூட்டாளி இயல்பான தொழில் நடைமுறையில் செய்யும் ஒத்தேற்புரைகள், அந் நிறுமத்திற்கெதிரான ஒரு சாட்சியமாகும். நிறுமம் அதற்கு பொறுப்பேற்க வேண்டும். ஆனால் கூட்டாளி ஒத்தேற்றுக் கொண்டது, அவரது அதிகாரத்தை மீறியதாக இருப்பின், அதற்கு நிறுமம் பொறுப்பாகாது.

3. உழைக்கும் கூட்டாளிக்கு தரப்பட்ட அறிவிப்பின் விளைவு (Effect of notice to acting partner) (பிரிவு 24) : நிறுமத்தின் உழைக்கும் கூட்டாளி களுக்கு, அதாவது, தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கூட்டாளிகளுக்கு தரப்படும் அறிவிப்பு, அனைத்து கூட்டாளிக்கும் தரப்பட்ட அறிவிப்பாகும்.

4. நிறுமத்தின் செயல்களுக்கு கூட்டாளியின் பொறுப்பு (Liability of a partner for acts of the firm) (பிரிவு 25) : ஒவ்வொரு கூட்டாளியும் மற்ற கூட்டாளிகளுடன் கூட்டாகவும் தனித்தனியாகவும், தான் கூட்டாளியாக இருக்கும் போது நிறுமம் செய்த அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவார்.

5. கூட்டாளியின் தவறான செயல்களுக்கு நிறுமத்தின் பொறுப்பு (Liability of the firm for wrongful acts of a partner) (பிரிவு 26): நிறுமத்தின் இயல்பான தொழில் நடைமுறையில் ஒரு கூட்டாளி செய்யும் தவறான செயல்களுக்கு நிறுமமே பொறுப்பாகும்.

6. கூட்டாளியின் தவறான பயன்படுத்தலுக்கு நிறுமத்தின் பொறுப்பு (Liability of firm for misapplication by partners) (பிரிவு 27) : நிறுமத்தின் கூட்டாளி ஒருவர், மூன்றாம் நபரின் பணத்தை நிறுமத்தின் சார்பில் பெற்று அதைத் தவறாக பயன்படுத்தியிருந்தால் நிறுமமே அதற்குப் பொறுப்பாகும்.

12. What are the rights and liabilities of an Incoming and Outgoing partner ? (கூட்டாண்மை நிறுமத்தில் சேரும் கூட்டாளிகளுக்கும் வெளிச் செல்லும் கூட்டாளிகளுக்கும் உள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் கூறுக.)

(அல்லது)

Incoming and Outgoing Partners – Write Short Notes. (உள் வரும் மற்றும் வெளிச் செல்லும் கூட்டாளிகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Rights and liabilities of an incoming partner – Write Short Notes. (உள் நுழையும் கூட்டாளியின் உரிமைகளும் பொறுப்புகளும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Liability of a retiring partner - Write Short Notes. (ஓய்வு பெறும் கூட்டாண்மையரின் பொறுப்பு நிலை – சிறு குறிப்பு எழுதுக.)

உள்வரும் கூட்டாளிகள் (Incoming Partners) :

'உள்வரும் கூட்டாளி' என்பவர் ஒரு நிறுமத்தில் புதிதாக சேர்க்கப்படும் கூட்டாளியாவார். கூட்டாண்மை என்பது ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுவதாகும். எனவே, எல்லா கூட்டாளிகளின் இசைவோடு மட்டுமே, புதிய கூட்டாளி ஒருவர் சேர்க்கப்படலாம். **பிரிவு 31(1)--ன்படி** ஒரு நபர் புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனில் அதற்கு (a) ஏற்கனவேயிருக்கும் எல்லாக் கூட்டாளிகளின் இசைவு வேண்டும்; அல்லது (b) புதிய கூட்டாளியை சேர்ப்பது பற்றி கூட்டாண்மை ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உள்வரும் கூட்டாளியின் பொறுப்பு (Liability) :

ஏற்கனவே நிறுமம் செய்த செயல்களுக்கு புதிதாக உள் நுழையும் கூட்டாளி பொறுப்பாக மாட்டார். உள்வரும் கூட்டாளியின் பொறுப்பு, இயல்பாக அவர் கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து தொடங்குகிறது. எனினும் புதிய கூட்டாளி, ஏற்கனவேயிருக்கும் நிறுமத்தின் கடன்களுக்கு, கடனீந்தவர்கள் பால், கீழ்க்காணும் தருணங்களில் பொறுப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். (1) மறுநிருமாணம் செய்யப்பட்ட நிறுமம் (Reconstituted Firm), பழைய நிறுமத்தின்

பொறுப்புகளை ஏற்றுக் கொண்டால்; (2) கடனீந்தோர்கள் புதிய நிறுமத்தை அவர்களின் கடன்பட்டவர்களாக ஏற்றுக் கொண்டு பழைய நிறுமத்தினை அதன் பொறுப்பிலிருந்து விடுவித்தால்.

வெளிச் செல்லும் கூட்டாளிகள் (Outgoing Partners) :

ஒரு நிறுமத்தில் ஏற்கனவே கூட்டாளியாக இருந்து, பின்னிட்டு கூட்டாளி எனும் தகுநிலையிலிருந்து வெளியேறுபவர் (அதாவது கூட்டாளியாக இல்லாதிருப்பவர்), 'வெளிச் செல்லும் கூட்டாளி' எனப்படுவார். ஒரு கூட்டாளி பின்வரும் தருணங்களில் 'வெளிச் செல்லும் கூட்டாளி' என அழைக்கப்படலாம்.

1. விலகும்போது (ஓய்வு பெறும்போது) (On Retirement) (பிரிவு 32);
2. விலக்கப்படும் போது (On Expulsion) (பிரிவு 33);
3. நொடிந்தவராகும் போது (On Insolvency) (பிரிவு 34);
4. இறக்கும்போது (On Death) (பிரிவு 35);
5. தன் பங்கை மாற்றியளிக்கும்போது.

(1) கூட்டாளியின் விலகல் (அல்லது) கூட்டாளி ஓய்வு பெறல் (On Retirement) (பிரிவு 32) :

பின்வரும் தருணங்களில் ஒரு கூட்டாளி நிறுமத்திலிருந்து ஓய்வு பெறலாம் (விலகலாம்). அவை, (a) மற்ற எல்லாக் கூட்டாளிகளின் இசைவுடன்; (b) கூட்டாளிகளுக்கிடையிலான வெளிப்படையான உடன்பாட்டின்படி; (c) விருப்பு முறிவுக் கூட்டாண்மையாக இருந்தால், மற்ற கூட்டாளிகளுக்கு தனது விலகும் எண்ணத்தை எழுத்து மூலம் அறிவிப்பதன் மூலம்.

விலகும் (ஓய்வு பெறும்) கூட்டாளியின் உரிமைகள் (Rights of retired partner):

1. **போட்டியான தொழில் நடத்தும் உரிமை (To carry on competing business):** விலகிய கூட்டாளி நிறுமத்தின் தொழிலுடன் போட்டியான தொழிலை நடத்துவதோடு, அந்தத் தொழில் பற்றி விளம்பரமும் செய்யலாம். ஆனால் அதற்கு எதிரிடையான ஒப்பந்தம் எதையும் அவர், தான் முன்பிருந்த கூட்டாண்மையுடன் செய்திருக்கக் கூடாது **(பிரிவு 36).**

(ஆ) பிந்தைய இலாபங்களில் பங்கு பெறும் உரிமை (To share subsequent profits): ஓய்வு பெற்ற அல்லது வெளிச்சென்ற கூட்டாளி தன்னுடைய கணக்குகள் தீர்த்து வைக்கப்படாத நிலையில், அவர் ஓய்வு பெற்றதற்கு பின்பு வந்த இலாபங்களில் பங்கு பெறும் உரிமை அவருக்குண்டு அல்லது தனது பங்கில் ஆண்டிற்கு 6% வட்டி பெற உரிமை உண்டு **(பிரிவு 37).**

விலகும் (ஓய்வு பெறும்) கூட்டாளியின் பொறுப்புகள் (Liabilities of the retired partner):

முந்தைய செயல்களுக்கான பொறுப்பு : விலகிய கூட்டாளி, பொதுவாக தான் விலகுவதற்கு முன் செய்யப்பட்ட செயல்களுக்கும், ஏற்பட்ட கடன்களுக்கும் அவர் அவற்றிலிருந்து விடுப்பு பெறும் வரையிலும் பொறுப்பாவார்.

பிந்தைய செயல்களுக்கான பொறுப்பு : விலகல் பற்றி பொது அறிவிப்பு செய்தாலொழிய விலகிய கூட்டாளி விலகும் தருவாயிலிருந்த மற்ற கூட்டாளி களுடன் சேர்ந்து அவர்களில் எவரேனும் செய்யும் செயல்களுக்கு மூன்றாம் நபர்களுக்கு பொறுப்பானவராகத் தொடர்ந்திருப்பார்.

(2) கூட்டாளி விலக்கப்படுதல் (Expulsion of Partner) (பிரிவு 33) :

பிரிவு 33–ல் கூறப்பட்டிருக்கும் விதிப்படி ஒரு கூட்டாளியை மற்ற உடன் கூட்டாளிகளால் விலக்க முடியாது. ஆனால் கீழ்க்கண்ட மூன்று வரம்புகளுக்குட் பட்டு அவரை விலக்கலாம். அவை, (a) ஒரு கூட்டாளியை விலக்கும் சட்டப்படியான உரிமை கூட்டாளிகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்; (b) பெரும்பான்மை கூட்டாளிகளால் இந்தச் சட்ட உரிமை பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்; (c) இவ்வுரிமை நல்லெண்ணத்தோடு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். பெரும்பான்மை மட்டும் போதாது **[பிரிவு 33 (2)]**.

நல்லெண்ணச் சோதனை : ஒரு கூட்டாளியை விலக்கும் உரிமை நல்லெண்ணத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மேலே கூறப்பட்டுள்ளது. அவ்வெண்ணத்தை பின்வரும் மூன்று சோதனைகள் மூலம் அறிந்து கொள்ளலாம். (அ) கூட்டாளியின் விலக்கல், கூட்டாண்மையின் நன்மைக்காக இருக்க வேண்டும்; (ஆ) விலக்கப்படவிருக்கும் கூட்டாளிகளுக்கு அறிவிப்புச் செய்யப்பட வேண்டும்; (இ) அவர் தனது தரப்பு நியாயத்தை எடுத்துக் கூற வாய்ப்பளித்திருக்க வேண்டும்.

ஒழுங்கற்ற விலகல் (Irregular Expulsion) : மேற்கூறிய நிபந்தனைப் படியல்லாமல் ஒரு கூட்டாளி விலக்கப்பட்டால் அது ஒழுங்கற்ற விலக்கலாகும். இது விலக்கப்பட்ட கூட்டாளியை கட்டுப்படுத்தாது. அவர் கூட்டாளியாக இல்லாமல் போவதில்லை. இவ்வாறு விலக்கப்பட்ட கூட்டாளி, (a) திரும்பவும் தன்னை ஒரு கூட்டாளியாக்கக் கோரியும், (b) நிறுமத்தில் தன்னுடைய மூலதனத்தின் மற்றும் இலாபத்தின் பங்கை திரும்ப அளிக்கக் கோரியும் வழக்காற்றலாம்.

ஒழுங்கான விலகல் (Regular Expulsion) : மேற்கூறிய நிபந்தனை களின்படி ஒரு கூட்டாளி விலக்கப்பட்டால் அது ஒழுங்கான விலகலாகும். அவ்வாறு விலக்கப்பட்ட கூட்டாளியின் உரிமைகளும், கடமைகளும் விலகிய கூட்டாளியின் உரிமைகள் மற்றும் கடமைகளைப் போன்றவையே.

(3) ஒரு கூட்டாளியின் நொடிப்பு (On Insolvency) (பிரிவு 34) :

ஒரு நிறுமத்தின் கூட்டாளி நொடிந்தவர் என அறிவிக்கப்பட்டு விட்டால், அவர் அவ்வாறு நொடிந்தவர் என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து கூட்டாளியாக இல்லாமல் போகிறார். நொடிந்த கூட்டாளியின் செயல்களுக்கு அவர் நொடிந்தவர் என அறிவிப்புச் செய்யப்பட்ட தேதியிலிருந்து நிறுமம் பொறுப்பாகாது.

(4) ஒரு கூட்டாளியின் இறப்பு (On Death) (பிரிவு 35) :

கூட்டாளிகளுக்கிடையிலான ஒப்பந்தத்துக்குட்பட்டு, ஒரு கூட்டாளியின் இறப்பால் நிறுமம் கலைப்புச் செய்யப்படும். இவ்வாறு கலைக்கப்படாவிட்டால், இறந்த கூட்டாளியின் சொத்து அவரது இறப்புக்குப் பின் நிறுமம் செய்யும் செயல் களுக்குப் பொறுப்பாகாது. ஒரு கூட்டாளியின் இறப்பு பற்றி பொது அறிவிப்புச் செய்யத் தேவையில்லை.

(5) ஒரு கூட்டாளியின் உரிமைப்பங்கை (நலனை) (interest) மாற்றியளித்தல் :

ஒரு கூட்டாளி, நிறுமத்தில் தனக்குள்ள உரிமைப் பங்கை (நலனை) விற்பனை அல்லது அடமானம் அல்லது வேறு விதமாக மாற்றியளிக்கலாம். அது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருக்கலாம். மாற்றுரிமை பெற்றவர், நிறுமத்தின் நடவடிக்கையில் பின்வரும் உரிமைகளைப் பெற முடியாது. (அ) நிறுமத்தின் தொழிலை நடத்துவதில் தலையிடும் உரிமை; (ஆ) நிறுமத்தின் கணக்குகளை கேட்கும் உரிமை; (இ) நிறுமத்தின் புத்தகங்களை பார்வையிடும் உரிமை; (ஈ) நிறுமத்தைக் கலைத்திடக் கோரும் உரிமை; (உ) மாற்றுரிமை அளித்த கூட்டாளியின் மற்ற உரிமைகள்.

அவருக்கு கீழ்க்காணும் உரிமைகள் மட்டும் உண்டு. (அ) மாற்றுரிமை அளித்தவரின் இலாபத்தில் பங்கு பெறும் உரிமை; (ஆ) நிறுமம் கலைக்கப்பட்டால், மாற்றுரிமை அளித்தவர் கூட்டாளியாக இல்லாமல் போவதால், மாற்றுரிமை பெற்றவர் நிறுமத்தின் சொத்துக்களில் மாற்றுரிமை அளித்தவரின் பங்கைப் பெற உரிமை பெறுகிறார்; (இ) நிறுமம் கலைக்கப்பட்டால், மாற்றுரிமை பெற்றவர் தனக்குள்ள பங்கைத் தீர்மானிக்கும் பொருட்டு, கலைப்பு தேதியிலிருந்து கணக்குகளை கேட்கும் உரிமை பெறுகிறார்.

13. Expulsion of a partner – Write short notes. (கூட்டாளி ஒருவரை நீக்குதல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Under what circumstances can a partner be expelled from the firm and with what legal consequences? (எச்சூழ்நிலைகளில்

ஒரு நிறுமத்தை விட்டு ஒரு கூட்டாளி எத்தகு சட்ட விளைவுகளுடன் விலக்கப் படலாம்?)

(முந்தைய வினாவின் விடையில் காண்க).

14. Explain the meaning and significance of goodwill of a partnership. (ஒரு கூட்டாண்மையின் வாணிக நற்பெயர் உரிமையின் முக்கியத் துவத்தையும் பொருளையும் விளக்குக).

(அல்லது)

Goodwill of a firm - Write short notes. (நிறுமத்தின் நற்பெயர் - சிறு குறிப்பு எழுதுக.)

வணிக நற்பெயர் (Goodwill) :

நிறுமத்தின் சொத்து, நிறுமத்தின் வணிக நற்பெயரையும் உள்ளடக்கிய தாகும். இது இந்திய கூட்டாண்மைச் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. இது ஒரு வணிகச் சொல்லேயன்றி சட்டச் சொல் அல்ல. ஒரு கூட்டாண்மை நிறுமம் தனது நாணயம், வாடிக்கையாளர்களுக்கு ஆற்றும் திறமையான பணி, தனது பொருள்களின் தரம் ஆகியவற்றால், அந்நிறுமம் நெடுங்காலமாக நிலை நிறுத்தும் பொது மதிப்பு, புகழ், தொழில் தொடர்பு முதலியவற்றின் மதிப்பே வணிக நற் பெயராகும். இப்பொது மதிப்பால் நிறுமம் கூடுதல் ஆதாயம் பெற முடியும்.

பெரும்பாலும் வணிக நற்பெயர், நிறுமம் கலைக்கப்படும் காலத்தில் மட்டுமே எழுகிறது. வழக்கமாக இது கடந்த மூன்று முதல் அய்ந்தாண்டு கால சராசரி அல்லது அதிக அளவு இலாபமாக (super profit) கணக்கிடப்படுகிறது.

வணிக நற்பெயரை விற்பனை செய்தல் :

ஒரு நிறுமத்தின் வணிக நற்பெயர் அந்நிறுமச் சொத்தின் ஒரு பகுதியாகும். அதைத் தனியாகவோ நிறுமத்தின் மற்ற சொத்துக்களுடனோ விற்பனை செய்யலாம் [பிரிவு 55(1)].

பிரிவு 55(2)-ன்படி நிறுமக் கலைப்புக்குப் பின்னர் வணிக நற்பெயர் விற்பனை செய்யப்படுமிடத்து, அதன் ஒரு கூட்டாளி வணிக நற்பெயரை வாங்கியவரின் தொழிலுக்கு போட்டியான தொழிலை நடத்தலாம். அதற்காக விளம்பரம் செய்யலாம். ஆனால் அந்தக் கூட்டாளிக்கும் வாங்கியவருக்கும் இடையில் ஏற்படும் உடன்பாட்டுக்கிணங்க, அந்தக் கூட்டாளி (1) நிறுமத்தின் பெயரை பயன்படுத்தலாகாது; (2) நிறுமத்தின் தொழிலையே நடத்துவதாக தன்னைக் காட்டிக் கொள்ளக் கூடாது; (3) கலைப்புக்கு முன் நிறுமத்துடன் ஈடுபாடு கொண்ட நபர்களின் வாடிக்கையைக் கோரக் கூடாது.

மேலும் வணிக நற்பெயரை விற்ற பின் ஒரு கூட்டாளி, அவ்வணிக

நற்பெயரை வாங்கியவருடன், தான் அந்நிறுமத்தைப் போன்ற எந்தத் தொழிலையும் குறிப்பிட்ட காலத்துக்கோ, குறிப்பிட்ட வட்டார வரம்புக்குள்ளோ செய்வதில்லை என்று உடன்பாடு செய்துகொள்ளலாம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 27–வது பிரிவில் யாது கூறப்பட்டிருப்பினும், இவ்வுடன்பாட்டால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு நியாயமானதாக இருப்பின், அது செல்லத்தக்கதாகவே இருக்கும் [பிரிவு 55(3)].

15. 'Contracts in restraint of trade are void.' State the extent to which exceptions have been recognised to this rule in the Indian Partnership Act. ("வணிகத்தை தடை செய்யும் ஒப்பந்தங்கள் இல்லா நிலையது." இந்திய கூட்டாண்மைச் சட்டம் இவ்விதிக்கு அங்கீகரித்துள்ள விதிவிலக்குகளின் அளாவுகையை ஆராய்க.)

முன்னுரை :

இவ்வினாவிற்கு விடையாக நாம் சென்ற வினாவின் விடையையே சற்று மாற்றி எழுத வேண்டியதுதான். அதாவது, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 27–வது பிரிவு, "வணிகத்தை தடை செய்யும் ஒப்பந்தங்கள் இல்லா நிலையது" எனக் கூறுகிறது. ஆனால் அதே சமயத்தில் இந்திய கூட்டாண்மைச் சட்டமானது, வணிகத்தை தடை செய்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லும் எனக் கூறுகிறது. அதாவது, மேற்படி விதிக்கு விதிவிலக்குகளைத் தருகிறது.

விதிவிலக்குகளின் அளாவுகை :

முந்தைய வினாவின் விடையில் "வாணிக நற்பெயர் விற்பனை செய்தல்" என்ற தலைப்பில் உள்ளவற்றை காணவும். பிரிவுகள் 55(2) மற்றும் (3)–ல் கூறப் பட்டிருப்பதே அவ்விதிவிலக்குகள் ஆகும்.

16. What do you understand by the term 'Dissolution of a firm'? Discuss the grounds on which a partnership firm may be dissolved by the court. (நிறுவனம் கலைத்தல் என்றால் என்ன? எச்சூழ்நிலைகளில் நீதிமன்றம் ஓர் கூட்டாண்மையினைக் கலைத்துவிடலாம் என்பதினைப் பற்றி விவாதிக்கவும்.)

(அல்லது)

Explain the different methods by which a partnership firm can be dissolved. (ஒரு கூட்டு நிறுமத்தைக் கலைப்பதற்கான வெவ்வேறு முறைகள் யாவை என்பதை விளக்கு.)

(அல்லது)

What are the various ways in which a firm can be dissolved? (கூட்டாண்மை நிறுமத்தை முடிவு செய்ய வழி வகைகள் யாவை?)

(அல்லது)

When can court order dissolution of a firm? Discuss. (நீதிமன்றம் நிறுமக் கலைப்பிற்கு உத்தரவிடலாம்? விவாதிக்க.)

நிறுமக் கலைப்பு - இரு வகைகள்:

ஒரு கூட்டாண்மை நிறுமக் கலைப்பென்பது, அனைத்து கூட்டாளிகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவின் முழுமையான முறிவாகும். இது இரு வகைகளில் ஏற்படுகிறது. அவை I. நீதிமன்ற ஆணை இல்லாத கலைப்பு; II. நீதிமன்ற ஆணையின் கீழான கலைப்பு.

I. நீதிமன்ற ஆணை இல்லாத கலைப்பு (Dissolution without the order of Court) (பிரிவு 40 முதல் 43 வரை) :

1. உடன்பாட்டால் கலைப்பு (By Agreement) (பிரிவு 40): கூட்டாளிகளின் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுமம் உருவாகிறது. எனவே, அதே போல் அனைத்துக் கூட்டாளிகளின் உடன்பாட்டால் நிறுமம் கலைக்கப்படலாம்.

2. கட்டாயமான கலைப்பு (Compulsory Dissolution) (பிரிவு 41): ஒரு நிறுமம் பின்வரும் தருணங்களில் கட்டாயமாகக் கலைப்பு செய்யப்படும்.

(i) எல்லாக் கூட்டாளிகளும் அல்லது ஒருவர் தவிர மற்றெல்லாக் கூட்டாளிகளும் நொடிந்தவராக தீர்ப்பளிக்கப்பட்டால், தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் அவர் கூட்டாளியாக இல்லாமல் போய்விடுகிறார். எனவே, எல்லா அல்லது ஒருவர் தவிர எல்லாக் கூட்டாளிகளும் நொடிந்தவர்களெனத் தீர்ப்பளிக்கப்பட்டால் நிறுமம் நீடித்திருக்க முடியாது. ஏனெனில் ஒரு கூட்டாண்மை நிறுமத்திற்கு குறைந்தபட்சம் இருவராவது கூட்டாளிகளாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் ஒரு நிறுமத்திற்கு உயிர் வருகிறது; நீடித்தும் இருக்கிறது.

(ii) நிறுமம் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாகிவிட்டால் நிறுமம் கலைக்கப்படலாம்.

3. குறிப்பிட்ட நிகழ்வுகள் நடைபெறுவதால் ஏற்படும் கலைப்பு (Dissolution on the happening of certain contingencies) (பிரிவு 42): கூட்டாளிகளுக்கிடையிலான ஒப்பந்தத்திற்குட்பட்டு ஒரு நிறுமம் பின்வரும் தருணங்களில் கலைக்கப்படும்.

(i) கூட்டாண்மை நிறுமம் அமைக்கப்பட்ட கால வரம்பு முடிவடைந்த பின்; (ii) கூட்டாண்மை நிறுமம் ஒரு குறிப்பிட்ட தொழிலை செய்ய மட்டுமே தொடங்கப் பட்டிருந்து, அத்தொழில் நிறைவு பெற்றவுடன்; (iii) ஒரு கூட்டாளி இறந்து விட்டால்; (iv) ஒரு கூட்டாளி நொடிந்தவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்.

4. அறிவிப்பு மூலம் கலைப்பு (Dissolution by Notice) (பிரிவு 43) : விருப்பு முறிவுக் கூட்டாண்மையில் எந்த ஒரு கூட்டாளியாவது நிறுமத்தைக் கலைக்க வேண்டும் என்று தன் விருப்பத்தை பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்தால் நிறுமம் கலைக்கப்படலாம். அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து நிறுமம் கலைக்கப்பட்டதாகும் [பிரிவு 43 (1)]. அறிவிப்பில் தேதி கொடுக்கப்படாவிட்டால் அவ்வறிவிப்பு சார்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து கூட்டாண்மை நிறுமம் கலைக்கப்பட்டதாகும் [பிரிவு 43 (2)].

மேற்கூறிய வகைகளில் ஒரு கூட்டாண்மை நிறுமம் கலைக்கப்படுகிறது. எனினும் பின்வரும் சூழல்களில் நீதிமன்றத்தின் ஆணையின் கீழ் ஒரு நிறுமம் கலைக்கப்படுகிறது.

II. நீதிமன்ற ஆணையின் கீழ் கலைப்பு (Dissolution with the order of Court) (பிரிவு 44) :

இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் 44–வது பிரிவின்படி, ஒரு நிறுமத்தின் கூட்டாளி எவரும் பின்வரும் அடிப்படைகளில் ஏதேனுமொன்றின் கீழ் வழக்கு தொடர்ந்தால், அங்கு அந்நிறுமத்தைக் கலைக்க நீதிமன்றம் ஆணையிடுகிறது.

1. கூட்டாளி ஒருவர் பித்துநிலை அடைந்தால் (Insanity) : கூட்டாளி ஒருவர் பித்துநிலையை அடைந்துவிட்டால் நிறுமம் கலைக்கப்படும். இதற்கு மற்ற கூட்டாளிகள் நீதிமன்றத்தில் வழக்கிட வேண்டும்.

2. நிரந்தர இயலாமை (Permanent Disability) : கூட்டாளி ஒருவர் கூட்டாளியாக செயலாற்றும் தகுதியை நிரந்தரமாக இழந்துவிட்டால், நிறுமத்தைக் கலைக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கலாம்.

3. தவறான நடத்தை (Misconduct) : கூட்டாளி ஒருவர் தவறான நடத்தை என்னும் குற்றத்திற்கு ஆளாகிவிட்டால், நிறுமத்தை கலைக்க நீதிமன்றம் ஆணையிடலாம்.

4. உடன்பாட்டு மீறுகை (Breach of Agreement) : கூட்டாளி ஒருவர் உடன்பாடுகளை வேண்டுமென்றே அல்லது தொடர்ந்து மீறினால், அங்கு கூட்டாண்மைத் தொழிலை நடத்த முடியாது. இந்நிலையில் நிறுவனக் கலைப்பிற்கு மற்ற கூட்டாளிகள் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

5. உரிமையை (நலனை) மாற்றியளித்தல் (Transfer of Interest) : கூட்டாளி ஒருவர் தனது உரிமையை மூன்றாம் நபருக்கு பிற கூட்டாளிகளின் ஒப்புதலின்றி மாற்றியளித்தால், அங்கு நீதிமன்றத்தின் மூலம் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

6. தொழிலில் நட்டம் (Business running at loss) : நிறுமத்தின்

தொழிலை நட்டத்தில்தான் நடத்தவியலும் என்ற நிலை ஏற்பட்டால், கூட்டாளியின் விருப்பத்திற்கேற்ப நிறுமத்தைக் கலைக்க நீதிமன்றம் ஆணையிடலாம்.

7. பிற காரணங்கள் : நிறுமத்தைக் கலைப்பது 'நீதியும் நேர்மையுமான தாக' (Just and Equitable) உள்ளது எனும் காரணங்களின் அடிப்படையில், நீதிமன்றம், அந்நிறுமக் கலைப்பிற்கு ஆணையிடலாம். 'நீதியும் நேர்மையுமான தாக' என்ற பதங்களில் கருத்தாழம் மிகுந்த பொருள் பொதிந்து இருப்பதால், மிகவும் எச்சரிக்கையுடன் நிறுமக் கலைப்பிற்கு நீதிமன்றம் ஆணையிட வேண்டும்.

17. State briefly the rights and obligations of a partner after dissolution of a partnership firm. (கூட்டாண்மை நிறுமம் ஒன்றின் கலைப்பிற்கு பிறகு கூட்டாளி ஒருவரது உரிமைகளையும் கடப்பாடுகளையும் சுருக்கமாக கூறுக.)

கலைப்பிற்குப் பின் கூட்டாளிகளின் உரிமைகள் (Rights of partners on dissolution) :

1. தொழிலை முடிவிற்கு கொண்டு வரும் உரிமை (Right to have business wound up) (பிரிவு 46) : நிறுமம் கலைக்கப்பட்ட பின் தொழிலை முடிவுக்குக் கொண்டு வரும் உரிமை கூட்டாளிகளுக்கு உண்டு. நிறுமத்தின் சொத்துக்களைத் திரட்டி, அதன் கடன்களை தீர்த்துவிட்டு, உபரித் தொகை ஏதும் இருப்பின், அதை கூட்டாளிகளுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டும்.

2. நிறுமச் சொத்தை நிறுமக் கடனை அடைப்பதற்கு கூட்டாளிகள் பயன்படுத்தலாம் **(பிரிவு 49).**

3. கூட்டாளி ஒருவர் நிறுமக் கலைப்பிற்குப் பின் நிறுமத்தின் நற்பெயரை (Goodwill) பயன்படுத்தி இலாபம் பெறலாம். **(பிரிவு 50).**

4. ஒரு கூட்டாளி குறிப்பிட்ட காலத்திற்கு கூட்டாண்மையில் சேர மிகை மதிப்பு (premium) பணம் தந்திருந்து, அக்கூட்டாண்மை நிறுமம் கலைக்கப் பட்டால், அவர் அம்மிகை மதிப்புப் பணத்தை திரும்பப் பெறும் உரிமையைப் பெறுகிறார். **(பிரிவு 51).**

5. மோசடிக்காக அல்லது திரித்துக் காட்டலுக்காக கூட்டாண்மை ஒப்பந்தம் நீக்கப்பட்டிருந்தால் கூட்டாளிகள் பற்றுரிமை (lien), பற்றுரிமை மாற்றீடு (Right at subrogation), ஈட்டுறுதி பெறும் உரிமைகளை உடையவர் **(பிரிவு 52).**

6. நிறுமத்தின் பெயரையோ அல்லது நிறுமத்தின் சொத்துக்களையோ, கூட்டாளிகள் பயன்படுத்துவதை தடை செய்யும் உரிமை **(பிரிவு 53).**

கலைப்பிற்குப் பிறகு கூட்டாளிகளின் பொறுப்புகள் (Liabilities of a partner on dissolution) :

1. நிறுமம் கலைக்கப்பட்ட பின் செய்யப்பட்ட செயல்களின் பொறுப்பிலிருந்து விடுவிப்பு பெற அக்கலைப்பு பற்றி பொது அறிவிப்பு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் கூட்டாளிகள் மூன்றாம் நபர்களுக்கு தொடர்ந்து பொறுப்பாவார்கள். இந்நிலையில் ஒரு கூட்டாளி கலைப்பிற்குப் பின்னர் செய்த ஒரு செயல் கலைப்பிற்கு முன்னர் செய்த செயலாக கருதப்படும் **(பிரிவு 45).**

2. நிறுமம் கலைக்கப்பட்ட பின், கூட்டாளிகளின் அதிகாரமும், உரிமைகளும், கடப்பாடுகளும் தொடர்ந்து நிறுமத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் **(பிரிவு 47).**

18. Under what circumstances can a person who is not a partner or who has ceased to be a partner be made liable for the dealings of the firm ? (எந்தச் சூழ்நிலைகளில் கூட்டாளியாக இல்லாத ஒருவர் அல்லது கூட்டாளியாக இருந்து விலகியவர், நிறுவனம் ஒன்றின் வணிக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாவார் ?)

(அல்லது)

Under what circumstances can a person who is not a partner be made liable for the dealings of the firm ? (எந்தச் சூழ்நிலைகளில் கூட்டாளியாக இல்லாத ஒருவர் கூட்டாண்மை ஒன்றின் விவகாரங்களுக்கு கட்டுப்பாட்டுக்குள்ளாக்கப்படுவார்?)

(அல்லது)

When a person, who is not a partner, liable to the acts of a partnership (கூட்டாளியாக இல்லாதவர் எப்பொழுது கூட்டாண்மையின் செயல்களுக்கு பொறுப்பாவார் ?)

பின்வரும் சூழ்நிலைகளில் பொது அறிவிப்பு (Public Notice) செய்யப் பட வேண்டுமென இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் பின்வரும் வகைமுறைகள் கூறுகின்றன. அவ்வாறு செய்யவில்லையென்றால், கூட்டாளியாக இல்லாத ஒருவர் கூட்டாண்மை ஒன்றின் விவகாரங்களுக்கு பொறுப்பாவார்.

1. ஒரு இளவர் (Minor), கூட்டாண்மையின் நலன்களைப் பெறுவதற்காக (admitted for the benefits of partnership) மட்டும் சேர்க்கப்பட்டு, அவர் கூட்டாளியாகவோ அல்லது கூட்டாளியாகாமல் இருக்கவோ தேர்வு செய்யும்போது, அது குறித்து பொது அறிவிப்பு கொடுக்க வேண்டும். இதில் தவறுகைப் புரிந்தால், இளவர் கூட்டாளியாகவே கருதப்பட்டு பொறுப்பேற்க வேண்டியவராவார். **[பிரிவு 30 (5)].**

2. ஒரு கூட்டாளி நிறுமத்திலிருந்து விலகும்போது பொது அறிவிப்பு கொடுக்க வேண்டும். தவறினால் விலகிய கூட்டாளி அவர் விலகிய பின்பும் நிறுமத்தின்

செயல்களுக்கு கூட்டாளியாக தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டியவராவார்.

3. ஒரு கூட்டாளி நிறுமத்திலிருந்து விலக்கப்படும்போது, பொது அறிவிப்பு செய்யப்படவில்லையெனில், அவர் விலக்கப்பட்ட பின்பும், நிறுமத்தின் செயல்களுக்கு கூட்டாளியாக தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டியவராவார்.

4. ஒரு நிறுமம் கலைக்கப்படும்போது, பொது அறிவிப்பு ஏதும் செய்யப் படவில்லையெனில், கூட்டாளிகளில் எவரேனும் ஒருவர் செய்த செயலுக்கு அனைத்துக் கூட்டாளிகளும், நிறுமம் கலைப்பதற்கு முன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட்டு மூன்றாம் நபர்களுக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாவார்கள்.

பொது அறிவிப்பு தரும் வழிகள் (பிரிவு 72) :

1. ஒரு நிறுமம் பதிவு செய்யப்பட்டதாக இருந்தால், மேற்கண்ட சூழ்நிலைகளில் பொது அறிவிப்பை நிறுமங்களின் பதிவாளருக்குத் தர வேண்டும். இது தவிர அந்த அறிவிப்பு அரசிதழிலும் (Official Gazette) வெளியிடப்பட வேண்டும். அத்துடன் நிறுமம் தொழில் புரியும் இடத்தின் வட்டார மொழியில் வெளி வரும் செய்தித்தாள் ஏதேனும் ஒன்றிலும் வெளியிடப்பட வேண்டும்.

2. மற்ற சூழ்நிலைகளில் பொது அறிவிப்பு அரசிதழிலும், நிறுமம் தொழில் புரியும் மாவட்டத்தின் வட்டார மொழியில் வரும் செய்தித்தாள் ஏதேனும் ஒன்றிலும் வெளியிடப்பட வேண்டும்.

-oOo-

7

பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions]

ஈட்டுறுதி ஒப்பந்தம் [Contract of Indemnity]

1. A promises B to indemnify him against the consequences of any proceedings which C may take against B to recover a sum of Rs.1,000 due from B to C. Is this a contract of indemnity? Give reasons.

'ஆ', 'இ'க்கு கொடுக்க வேண்டிய கடன் தொகை ரூ.1000ஐ வசூலிக்க 'இ' எடுக்கும் நீதிமன்ற நடவடிக்கைகளின் விளைவுகளிலிருந்து பாதுகாப்பதாக 'அ' 'ஆ'விடம் உறுதியுரை செய்கிறார். இது ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தமாகுமா? காரணம் கூறுக.

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனையில் கண்டுள்ள 'அ'–க்கும், 'ஆ'–க்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தமே (Contract of Indemnity) என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. அதற்கான காரணத்தை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 124–வது பிரிவு கூறுகிறது. அதன்படி, "உறுதியுரை அளிப்பவரின் அல்லது வேறு நபரின் செய்கையால் விளையும் இழப்பிலிருந்து மறுதரப்பினரைக் காக்க, அவ்வுறுதியுரையை அளிப்பவர், அத்தரப்பினருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம், ஈட்டுறுதி ஒப்பந்தமாகும்."

பொதுவாக, ஈட்டுறுதி என்பது இழப்பினை ஈடு செய்வதாகும் (Compensating the loss). இரு நபர்கள் ஒப்பந்தத்தில் ஈடுபடும்போது அவர்களில் ஒருவர் தம்மாலோ அல்லது பிற நபர்களாலோ மேற்படி ஒப்பந்தத்தின் மறு தரப்பினருக்கு இழப்புகள் ஏதேனும் ஏற்பட்டால் அவற்றை ஈடு செய்வதாக

உறுதியுரை அளித்தால், அது ஈட்டுறுதி ஒப்பந்தமாகும். இதை மேற்கண்ட பிரச்சனையை ஒத்தவாறு உள்ள பின்வரும் எடுத்துக்காட்டு தெளிவாக விளக்குகிறது.

A என்பவர் B என்பவரிடமிருந்து ரூ. 200/- கடன் வாங்கியுள்ளார். B என்பவர் அப்பணத்தை வசூலிக்கும் பொருட்டு A என்பவர் மீது வழக்கு தொடர்கிறார். அப்பொழுது C என்பவர், மேற்படி வழக்கு நடவடிக்கையில் A என்பவருக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதனை தாம் ஈடு செய்வதாக A-யிடம் உறுதியுரை அளிக்கிறார். இந்நிலையில் ரூ.200/-ஆய் செலவுத் தொகையுடன் மேற்படி A என்பவர் B-க்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்று B-க்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இங்கு A-க்கும் C-க்கும் இடையே ஈட்டுறுதி ஒப்பந்தம் இருப்பதால், மேற்படி C அப்பணத்தை ஒப்புக் கொண்டபடி A-க்குச் செலுத்த வேண்டும். எனவே மேற்கண்ட சட்டப் பிரிவு மற்றும் எடுத்துக்காட்டின் அடிப்படையில், 'அ'-க்கும், 'ஆ'-க்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம், ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தமே.

பொறுப்புறுதி ஒப்பந்தம் [Contract of Guarantee]

2. A guarantees the debt owned by B to C. The debt is wiped out by a Debt Relief Act. Is A liable on his guarantee?

'ஆ' வினால் 'இ'க்கு கொடுக்கப்பட வேண்டிய கடனிற்கு 'அ' பொறுப்புறுதி அளிக்கிறார். கடன் நிவாரணச் சட்டம் ஒன்றினால் அந்தக் கடன் இல்லாமல் செய்யப்படுகிறது. 'அ' தன் பொறுப்புறுதி மீது பொறுப்பு நிலை உடையவரா?

தீர்வு:

பிணையாளரின் பொறுப்பு, தலைக் கடனாளியின் பொறுப்புடன் இணைந்து பரவும் (Co-extensive) தன்மையது என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 128-வது பிரிவு கூறுகிறது. தலைக் கடனாளி எந்தத் தொகைக்குப் பொறுப்பாகிறாரோ அதற்கே பிணையாளரும் பொறுப்பாவார். தலைக் கடனாளியின் பொறுப்பு தீர்ப்பாணை மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ குறைக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் பிணையாளரின் பொறுப்பும் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும்.

மேற்படி வழக்கில் B வாங்கிய கடன், கடன் நிவாரணச் சட்டம் ஒன்றினால் தள்ளுபடி (இல்லாமல்) செய்யப்படுகிறது. எனவே மேற்படி B அக்கடன் தொகையை திரும்பச் செலுத்தத் தேவையில்லை. இதனால் அவருக்கு பிணையாளராக நின்ற A-வும் அக்கடனைத் திரும்பச் செலுத்த வேண்டியதில்லை என்பதே இங்கு தீர்வு. மேற்படி பிரச்சனை, **Narayan Singh v. Chattar Singh**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும்.

1. A.I.R. 1973 Raj. 347

3. 'A' is farmer. He got a loan of Rs. 10,000 from 'B'. 'C' was the surety. By way of Debt Relief Act, the debt was reduced to Rs.5,000. But 'A' was not in a position to pay even the reduced amount. What is the liability of 'C'?

A என்ற விவசாயி Bயிடம் ரூ.10,000 கடனாக வாங்கினார். அதற்கு C என்பவர் பிணையாளர். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் பயனாய், இந்த கடன் தொகை ரூ.5,000 ஆக குறைக்கப்பட்டது. இந்த குறைக்கப்பட்ட பணத்தைக் கூட Aயினால் கட்ட முடியவில்லை. Cயின்பொறுப்பு நிலை என்ன?

தீர்வு:

நாம் இதற்கு முன்பு கண்ட பிரச்சனையின் அடிப்படையில், ஆனால் ஒரு சிறு மாறுதலுடன் இப்பிரச்சனை அமைந்துள்ளது. அதில் கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இப்பிரச்சனையில் கடன் தொகை ரூ.10,000/–லிருந்து ரூ.5,000/– ஆக குறைக்கப்பட்டுள்ளது. இனி பிரச்சனையின் தீர்விற்கு வருவோம்.

மேற்படி பிரச்சனை, பொறுப்புறுதி ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்த தாகும். இதில், A என்பவர் தலைக் கடனாளி. B என்பவர் A–க்கு கடனீந்தவர். C என்பவர் A–க்கு பிணையாளர். இங்கு A–யின் கடன் தொகையான ரூ.10,000/–, கடன் நிவாரணச் சட்டத்தால் ரூ.5,000/–மாக குறைக்கப்படுகிறது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 128–வது பிரிவின்படி, பிணையாளர் ஒருவரின் பொறுப்பு, தலைக் கடனாளியின் பொறுப்புடன் இணைந்து பரவும் (Co-extensive) தன்மையதாகும். தலைக் கடனாளி எந்தத் தொகைக்குப் பொறுப்பாகிறாரோ அதற்கே பிணையாளரும் பொறுப்பாவார். தலைக் கடனாளியின் பொறுப்பு தீர்ப்பாணை மூலமோ அல்லது சட்டத்தின் மூலமோ முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ குறைக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் பிணையாளரின் பொறுப்பும் குறைக்கப்படும் அல்லது நீக்கப்படும். எனவே C எனும் பிணையாளர் குறைக்கப்பட்ட தொகையான ரூ.5,000/–த்திற்கே பொறுப்பாவர். அதாவது தலைக் கடனாளியின் (A) பொறுப்பை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பிணையாளரின் (C) பொறுப்பு இருக்காது. தலைக் கடனாளி எத்தொகையை திருப்பிச் செலுத்த பொறுப்புடைய வரோ, அத்தொகைக்கே அவரது பிணையாளரும் பொறுப்புடையவர் ஆவார். எனவே C எனும் பிணையாளர் ரூ.5,000/–த்திற்கே பொறுப்பாவார்.

4. A and B execute a joint pronote in favour of C. In fact A executes it only as surety for B and this fact is known to C. C files a suit against A upon the note. Discuss the liability of A.

C என்பவருக்கு ஆதரவாக, Aயும், Bயும் கூட்டுக் கடனுறுதிச்சீட்டு எழுதித் தருகிறார்கள். உண்மையில் Bக்கு பிணையாளராகவே A அதை எழுதிக் கொடுக்கிறார். இதன் விவரம் Cக்குத் தெரிந்தே இருக்கிறது. கடனுறுதிச் சீட்டின்

பேரில் Aக்கு எதிராக C வழக்கு தொடருகிறார். Aயின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **132–வது பிரிவானது,** ஒருவரின் தவறுகையின் பொழுது மற்றொருவர் அதற்கு பிணையாளராக இருப்பது என்று இரு நபர்கள் செய்து கொள்ளும் ஏற்பாட்டினால், யார் முதலில் பொறுப்பேற்பது என்பது பாதிக்கப் படாது என்று கூறுகிறது. அதாவது அங்கு இருவருமே பொறுப்பு என்று மேற்படி பிரிவு கூறுகிறது. அப்பிரிவு கூறும் விளக்கத்தின்படி, ஒரு குறிப்பிட்ட பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இரண்டு நபர்கள், மூன்றாம் நபர் ஒருவருடன் முதலில் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்கின்றனர். பின்னிட்டு, அப்பொறுப்பை தீர்ப்பதில் ஒருவர் தவறுகை புரியும் பொழுது மட்டுமே, மற்றொருவர் அதற்குப் பொறுப்புடையவர் ஆவர் என்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் இரண்டாவதாக ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இந்த இரண்டாவது ஒப்பந்தத்திற்கு மேற்கண்ட மூன்றாம் நபர் ஒரு தரப்பினராக இல்லாது போனாலும், முதல் ஒப்பந்தத்தின் கீழாக அவ்விரு நபர்களில் ஒவ்வொருவருக்கும் அம்மூன்றாம் நபருக்கு ஆற்ற வேண்டிய பொறுப்பானது, அவ்விரண்டாவது ஒப்பந்தத்தின் காரணமாக பாதிக்கப்படாது. இங்கு அந்த இரண்டாவது ஒப்பந்தம் குறித்து அம்மூன்றாம் நபர் அறிந்திருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல. எனவே இரண்டு பிணையாளர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கடனாளிகளாவும், அம்மூன்றாம் நபரைப் பொறுத்தவரை பிணையாளர்களாகவும் உள்ளனர்.

அப்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டின்படி, 'அ'–வும், 'ஆ'–வும் சேர்ந்து 'இ'–க்கு கூட்டாக கடனுறுதிச் சீட்டு ஒன்றை எழுதித் கொடுக்கின்றனர். ஆனால் இங்கு உண்மையில் 'அ' என்பவர் 'ஆ'–க்கு பிணையாளராக உள்ளார். கடனுறுதிச் சீட்டு வழங்கப்படும்போதே, இந்த உண்மை 'இ'–க்கு தெரியும். இவ்வாறு 'இ'–க்கு தெரிந்திருப்பது, அவர் 'அ' மீது மட்டும் அக்கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் தொடரும் வழக்கில் ஒரு சமாதானமாக அமையாது. அதாவது 'இ' என்பவர் 'அ' மீதோ அல்லது 'ஆ' மீதோ அல்லது அவ்விருவரின் மீதோ கடனாளிகளாகவே தொடரும் வழக்கை பாதிக்காது.

மேற்கண்ட பிரிவு மற்றும் எடுத்துக்காட்டின்படி, மேற்படி பிரச்சனையில் 'A'–க்கு எதிராக 'C' தொடரும் வழக்கில், 'A' பொறுப்புடையவரே. தான் 'B'–க்கு ஒரு பிணையாளர் மட்டுமே என்றும், இந்த உண்மை 'C'–க்குத் தெரியும் என்றும் அவர் எதிர் வாதம் புரிய சட்டத்தில் இடமில்லை.

மேலும் கடனீந்தர், தலைக் கடனாளி மீதோ அல்லது பிணையாளர் மீதோ அல்லது இருவரின் மீதோ வழக்குத் தொடர்ந்து தொகையை வசூல் செய்யலாம். இதற்கு மாறாக தலைக் கடனாளி மீது மட்டும் முதலில் வழக்கு தொடர்ந்துவிட்டு, பிறகு தான் பிணையாளர் மீது வழக்கு தொடர வேண்டும் என்று எப்பிரிவும்

கூறவில்லை. அதாவது தலைக் கடனாளிக்கு எதிராக நிவாரணம் பெற எல்லாத் தீர்வழிகளையும் முதலில் அணுகித் தீர்க்கும்படி (exhausts the remedy against the principal debtor) கடனீந்தவரைக் கோர பிணையாளருக்கு உரிமையில்லை. பிணையாளர் மீது முதலில் வழக்கிடப்பட்டால் அதை அவர் எதிர் கொண்டே ஆக வேண்டும். அவ்வழக்கானது கடனீந்தவர் பக்கம் தீர்ப்பானால் பிணையாளர் கடன் தொகையை திருப்பிச் செலுத்தத்தான் வேண்டும். ஆனால் அதை அவர் திரும்ப தலைக் கடனாளியின் மீது வழக்கிட்டு, வசூலித்துக் கொள்ள அவருக்கு முழு உரிமையுண்டு.

5. A is employed as cashier in a co-operative society. B gives a guarantee for A's fidelity. The society promises to make a monthly check up regarding the work of the cashier but fails to do so. A embezzles the money collected and absconds. The society sues B as surety to make good the loss. Advise B.

ஒரு கூட்டுறவு சங்கத்தில் A கணக்கராகப் பணி புரிகிறார். A–யின் கடமை தவறாமைக்கு B பொறுப்புறுதி ஏற்கிறார். அந்தச் சங்கம் கணக்கரின் பணியை ஒவ்வொரு மாதமும் பரிசோதித்து பார்ப்பதாக உறுதி செய்தது. ஆனால் சங்கம் அவ்வாறு செய்யத் தவறி விடுகிறது. A, தாம் வசூலித்த பணத்தை கையாடல் செய்து கொண்டு தலைமறைவாகி விடுகிறார். அந்த சங்கம் பிணையாளரான B மீது வழக்கு தொடர்கிறது. B–க்கு ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **139–வது** பிரிவு பிணையாளருக்கு கிடைக்கச் சாத்தியமுள்ள தீர்வழியை ஊறுபடுத்தும் வகையில் கடனீந்தவர் ஒரு செயலைச் செய்தால் அல்லது செய்யாது விடுத்தால், அங்கு பிணையாளர் விடுவிப்பு பெறுவார் **(Discharge of surety by creditor's act or omission impairing surety's eventual remedy)** என்று கூறுகிறது. அதாவது, கடனீந்தவர், பிணையாளரின் உரிமைகளுக்கு ஒவ்வாத ஒரு செயலைச் செய்தோ அல்லது பிணையாளருக்குச் செய்ய வேண்டியதாக உள்ள ஒரு கடமையைச் செய்யாமல் விடுத்தோ, தலைக் கடனாளிக்கு எதிராக பிணையாளருக்கு கிடைக்கச் சாத்தியமுள்ள தீர்வழிக்கு ஊறு விளைவித்தால், அங்கு பிணையாளர் விடுவிப்பு பெறுவார்.

மேற்படி பிரச்சனையில் ஒரு கூட்டுறவு சங்கத்தில் கணக்கராகப் பணிபுரியும் A என்பவரின் கடமை தவறாமைக்கு (fidelity) B பொறுப்புறுதி ஏற்கிறார். இங்கு அச்சங்கம் **'கடனீந்தவராக'** உள்ளது. B என்பவர் **'பிணையாளராக'** உள்ளார். A என்பவர் **'தலைக் கடனாளியாக'** உள்ளார். இந்நிலையில், அச்சங்கம் கணக்கரின் பணியை ஒவ்வொரு மாதமும் பரிசோதித்து பார்ப்பதாக பிணையாளராகிய B என்பவருக்கு உறுதியுரையளிக்கிறது. அதாவது பிணையாளருக்கு ஆதரவாக (B)

ஒரு செயலைச் செய்ய அச்சங்கம் உறுதியளிக்கிறது. ஆனால் அச்சங்கம் அவ்வாறு செய்யத் தவறி விடுகிறது. இதன் விளைவாக A, தாம் வசூலித்த பணத்தை கையாடல் செய்து கொண்டு தலைமறைவாகி விடுகிறார். இங்கு அச்சங்கம் செய்வதாக உறுதி அளித்த செயலைச் செய்யத் தவறியதால்தான், A என்பவர் தான் வசூலித்த பணத்துடன் தலைமறைவாகிவிட்டார். இதனால் A–க்கு எதிராக B–க்கு கிடைக்கச் சாத்தியமாக உள்ள தீர்வழியை அச்சங்கம் ஊறுபடுத்திவிடுகிறது. எனவே அத்தொகைக்காக அச்சங்கம் பிணையாளரான B மீது வழக்கு தொடர இயலாது. அப்படித் தொடர்ந்தால், B என்பவர் மேற்படி பிரிவு 139–ன் அடிப்படையில் எதிர் வாதம் புரியலாம். அச்சூழலில் அச்சங்கத்தின் வழக்கு நிச்சயம் தோல்வியுறும். இதுவே நாம் B–க்கு வழங்கும் ஆலோசனையாகும். (மேற்படி பிரச்சனை, பிரிவு 139–ன் கீழான (c) எனும் எடுத்துக்காட்டை அடியொற்றியதாகும்.)

6. 'A' engages 'B' as a clerk to collect rents from his tenants. 'B' fails to account for the sums collected. 'A' in consequence calls upon 'B' to furnish security and 'C' stands as security for 'B's due accounting. But 'A' does not inform 'C' about 'B's previous misconduct. 'B' again defaults. Is 'C' bound by the guarantee.

தம்முடைய வாடகைக்காரர்களிடமிருந்து வாடகையை வசூல் செய்வதற்காக 'ஆ'வை ஒரு எழுத்தராக 'அ' அமர்த்துகிறார். வசூல் செய்த பணத்திற்கு கணக்கு ஒப்படைக்க 'ஆ' தவறுகிறார். அதன் விளைவாக 'ஆ'வை பிணையம் தரும்படி 'அ' கேட்கிறார். 'ஆ' ஒழுங்காக கணக்கு கொடுக்க 'இ' பிணையாளராக இருக்க ஒப்புக் கொள்கிறார். ஆனால் 'இ'யிடம் 'ஆ'வின் முந்திய தவறான நடத்தையை 'அ' அறிவிக்கவில்லை. 'ஆ' மறுபடியும் பணம் செலுத்த தவறுகிறார். 'இ' தம்முடைய பொறுப்புறுதியினால் கட்டுப்பட்டவரா?

தீர்வு :

இப்பிரச்சனையின் தீர்வு, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 143–வது பிரிவில் அடங்கியுள்ளது. அப்பிரிவின்படி, முக்கியச் சூழ்நிலை குறித்து மௌனமாக இருப்பதன் வாயிலாக பொறுப்புறுதி எதையும் கடனீந்தவர் பெற்றால், அது செல்லாது.

மேற்படி பிரச்சனையில் முக்கியச் சூழ்நிலை யாதெனில், 'இ'யிடம் 'ஆ'வின் முந்தைய தவறான நடத்தையை 'அ' அறிவிக்காததாகும். அதாவது இங்கு 'அ' எனும் கடனீந்தவர், 'ஆ' எனும் தலைக்கடனாளியின் முந்தைய தவறான நடத்தை குறித்து 'இ' எனும் பிணையாளரிடம் அறிவிக்காமல் மௌனமாக உள்ளார். எனவே மேற்படி பிரிவின்படி, 'அ' எனும் கடனீந்தவர், 'இ' எனும் பிணையாரிடமிருந்து பெற்ற பொறுப்புறுதி செல்லாது. இந்நிலையில் 'ஆ' மறுபடியும் பணம் செலுத்த தவறுகிறார். இதற்கு 'இ' தம்முடைய பொறுப்புறுதியினால் கட்டுப்பட்டவரல்ல என்பதே தீர்வு.

(இப்பிரச்சனை பிரிவு 143–ன் கீழான (a) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

7. 'A', 'B' and 'C' have agreed to become liable for Rs.10,000/-, Rs. 20,000/- and Rs. 40,000/-respectively as sureties for 'D's liability. 'D's indebtedness was Rs. 40,000/- What sum is each of the three sureties liable to pay ?

'ஈ'யின் பொறுப்பு நிலைக்கு முறையே ரூ.10,000/–, ரூ.20,000/–ரூ.40,000/–க்கும் பிணையாளர்களாக பொறுப்புறுதி ஏற்க அ, ஆ, இ ஆகிய மூவரும் உடன்பட்டனர். 'ஈ'யின் கடன் தொகை ரூ.40,000/–. பிணையாளர் ஒவ்வொருவரும் எவ்வளவு தொகையைக் கொடுக்க பொறுப்பு நிலை கொள்கிறார்?

தீர்வு :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **147–வது பிரிவு** வேறுபாடான தொகைகளுக்குக் கடமைப்பட்ட இணைப் பிணையாளர்களைப் பற்றி கூறுகிறது. இணைப் பிணையாளர்கள் வித்தியாசமான தொகைகட்கு பொறுப்புடையவர்களாக இருக்க உடன்பாடு கொண்டிருந்தால், அவர்கள் தாங்கள் உடன்பட்ட தொகையை மீறாமல், சரிசம விகிதப் பங்களிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள்.

மேற்படி பிரச்சனையில், D-யின் கடன் தொகை ரூ.40,000/–. இதற்கு A-ரூ.10,000/–க்கும் (உடன்பட்ட உயர்ந்த அளவு பொறுப்பு), B-ரூ.15,000/–க்கும், C-ரூ.15,000/–க்கும் பொறுப்பு நிலை கொள்கிறார்கள். அதாவது தாங்கள் பொறுப்பேற்க ஒத்துக்கொண்ட தொகைக்கு மீறாமல் சரிசமமாக பங்கேற்றுக் கொள்ளல். ஆனால் ஆங்கில சட்ட விதிகளின்படி A,B,C ஆகிய மூவரும் 1 : 2: 4 என்ற விகிதத்தில் பொறுப்பேற்றுக் கொள்ள கடமைப்பட்டவர்கள். (மேலும் விளக்கங்களுக்கு, இந்நூலின் பக்கம் எண்கள். 26 மற்றும் 27–ல் காணவும்.)

ஒப்படைவு [Bailment]

8. A lends a horse which he knows to be vicious to B. He does not disclose the fact that the horse is vicious. The horse runs away throwing down B who got injured. What is the liability of A?

A தன்னுடையது திமிர்பிடித்த குதிரை என்று தெரிந்தும் அதனை தெரியப்படுத்தாது B –க்கு கொடுக்கிறார். அந்த குதிரை B–யை தள்ளிவிட்டு ஓடி விடுகிறது. அதனால் Bக்கு காயங்கள் ஏற்படுகிறது. A–யின் பொறுப்பு நிலை என்ன?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **150–வது பிரிவானது,** ஒரு பொருளை

ஒப்படைவு செய்பவரின் முக்கியக் கடமை ஒன்றை விளக்குகிறது. அதன்படி, ஒப்படைவு செய்யப்பட்ட பொருட்களில் உள்ள தனக்குத் தெரிந்த குறைபாடுகளை ஒப்படைவு செய்பவர் வெளிப்படுத்த வேண்டியது அவரது தலையாய கடமையாகும். குறைபாடுகளை தெரியப்படுத்தாவிடில் அதனால் ஒப்படைவு பெறுபவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்படைவு செய்பவரே பொறுப்பாவார். ஆனால் மேற்படி பிரச்சனையில், தனது குதிரை திமிர் பிடித்தது என்று தெரிந்திருந்தும், அதனைத் தெரிவிக்காமல் A என்பவர் B–க்கு கொடுக்கிறார். அக்குதிரை **B–யை தள்ளி விட்டு ஓடி விடுகிறது. அதனால் Bக்கு காயங்கள் ஏற்படுகின்றன.** இங்கு மேற்படி பிரிவு 150 விதித்துள்ள கடமையை A என்பவர் நிறைவேற்றத் தவறிவிடுகிறார். எனவே B–க்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்க A பொறுப்புடையவர். (மேற்படி பிரச்சனை, பிரிவு 150–ன் கீழான (a) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

9. X, a customer in A's shop put down a gold brooch with her coat and forget to take it up. One of A's assistants found it and it was placed in a drawer over the week end. On the next day it was found missing. Discuss the liability of A.

A-யின் கடையில் X என்கிற ஒரு வாடிக்கையாளர் தனது கோட்டுடன் ஓர் தங்க ஆடை ஊக்கினை வைத்து விட்டு எடுத்தும் செல்ல மறந்து விடுகிறார். A-யின் உதவியாளர்களில் ஒருவர், வார இறுதியில் அதைக் கண்டெடுத்து, ஓர் அறையில் வைக்கிறார். அடுத்த நாள் அது காணாமல் போனது தெரிய வருகிறது. A–யின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **151–வது பிரிவின்படி,** ஒப்படைவு பெறுபவர் (Bailee) ஒப்படைவுப் பொருள்களை கவனமாகப் பராமரித்து பாதுகாத்தல், அவரது தலையாய கடமையாகும். ஒப்படைவு பெறுபவர் தன்னுடைய சொந்தப் பொருளை எந்த அளவிற்கு கவனமாகப் பாதுகாப்பரோ, அதே அளவிற்கு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளையும் பாதுகாக்க வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் A-யின் கடையில் X என்கிற ஒரு வாடிக்கையாளர் தனது கோட்டுடன் ஓர் தங்க ஆடை ஊக்கினை வைத்து விட்டு எடுத்தும் செல்ல மறந்துவிடுகிறார். A என்பவரின் உதவியாளர்களில் ஒருவர் அதைக் கண்டெடுத்து, ஓர் அறையில் வைக்கிறார். இங்கு தற்பொழுது, A என்பவர் X–ன் மேற்படி பொருளை ஒப்படைவு பெற்றவராக உள்ளார். எனவே A என்பவர் அதை கவனமுடன் பாதுகாக்க வேண்டும்; அதுமட்டுமல்லாது அப்பொருளை X–ன் வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். ஆனால் அதனை A தொலைத்துவிடுகிறார். இதனால் ஒப்படைவு பெற்றவர் எனும் நிலைக்குரிய கடமையிலிருந்து A தவறிவிடுகிறார். இதனால் அப்பொருளுக்கு A பொறுப்புடையவரே. அதற்குரிய விலையை X என்பவர் மேற்படி

A மீது வழக்கிட்டுப் பெறலாம். (மேலும் விளக்கங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 39–ல் காண்க.)

10. A's ornaments, having been stolen, were recovered by the police and while in police custody they were stolen again. Can 'A' take action against the police?

'A'–யின் திருட்டுப் போன ஆபரணங்களை காவலர் திரும்பப் பெறுகின்றனர். காவலரின் உடைமையிலிருக்கும் போது அவை மீண்டும் திருட்டுப் போகின்றது. 'A' காவலர் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா?

தீர்வு:

முன் சென்ற பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட தீர்வே, இப்பிரச்சனைக்கும் பொருந்தும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **151–வது பிரிவின்படி**, ஒரு பொருளை ஒப்படைவு பெற்றவர், அதனை கவனமுடன் பாதுகாக்க வேண்டும். இங்கு 'A'–யின் திருட்டுப் போன ஆபரணங்களை காவலர் திரும்பப் பெறுகின்றனர். எனவே அவர்கள் 'A'–யின் பொருளை ஒப்படைவு பெற்றவர்கள் எனும் நிலையில் உள்ளனர். இதனால் அப்பொருளை கவனமுடன் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் அவர்கள் கொண்டுள்ளனர். ஆனால் அப்பொருள் (ஆபரணங்கள்) காவலரின் உடைமையில் இருக்கும் போது அவை மீண்டும் திருட்டுப் போகின்றன. இங்கு சாதாரண மனிதர்களை விட விழிப்புடனும், கவனமுடனும் இருக்க வேண்டிய காவலர்களே, அவ்வாறிருக்க தவறிவிடுகின்றனர். எனவே, 'A' என்பவர் தனது ஆபரணங்களுக்காக அக்காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க முழு உரிமை கொண்டவர்.

11. Adavan gives a horse to Baskar for his own riding. Baskar drives the horse in his carriage and injured also. Can Adavan terminate the contract? Whether he can claim damages from Baskar.

ஆதவன், தன் குதிரையை, பாஸ்கர் என்பவர் மட்டும் தனித்து சவாரி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாடகைக்கு விடுகின்றார். ஆனால் பாஸ்கர், அக்குதிரையினை வண்டியில் பூட்டி ஓட்டியதால் அதற்கு காயம் ஏற்பட்டது. ஆதவன், ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாமா? இழப்பீடு கேட்கலாமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **153–வது பிரிவானது**, சரக்கினை ஒப்படைக்கப் பெற்றவர், எந்நிபந்தனைகளுடன் அச்சரக்கு ஒப்படைக்கப்பட்டதோ அந்நிபந்தனைகளுக்கு முரணாக அச்சரக்கு தொடர்பாக செயல் எதையும் செய்தால், அச்சரக்கை ஒப்படைவு செய்தவர் தனது விருப்பத்தின் பேரில் அச்சரக்கு ஒப்படைவு ஒப்பந்தத்தை தவிர்த்துக் கொள்ளலாம். சுருங்கக்கூறின், அவர் சரக்கு ஒப்படைவு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் (Termination of bailment by bailee's act inconsistent with conditions of bailment).

மேற்படி பிரச்சனையில், ஆதவன், தன் குதிரையை, பாஸ்கர் என்பவர் மட்டும் தனித்து சவாரி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் வாடகைக்கு விடுகின்றார். ஆனால் பாஸ்கர், அக்குதிரையினை வண்டியில் பூட்டி ஓட்டியதால் அதற்கு காயம் ஏற்பட்டது. இங்கு ஒப்படைவு ஒப்பந்தத்தின் நிபந்தனைக்கு முரணாக, அக்குதிரையை ஒப்படைவு பெற்றவராகிய பாஸ்கர் நடந்து கொண்டுள்ளனர். எனவே மேற்படி பிரிவு 153–ன்படி, ஆதவன், அவ்வொப்படைவு ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம். மேலும், பிரிவு 154–ன்படி குதிரைக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ஆதவன், பாஸ்கரிடமிருந்து இழப்பீடும் கேட்கலாம். (பிரிவு 154 என்ன கூறுகிறது என்பதை அடுத்த பிரச்சனையில் காண்க.) (இப்பிரச்சனை பிரிவு 153–ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

12. A lends a horse to B for his own riding only. B allows C a member of his family to ride the horse. C rides with care but the horse accidently falls and is injured. Has A any right against B?

B என்பவரிடம் ஒரு குதிரையை அவர் மட்டும் சவாரி செய்ய A என்பவர் வாடகைக்குக் கொடுக்கிறார். B அக்குதிரையை தன் குடும்பத்தில் ஒருவரான C என்பவரை சவாரி செய்ய அனுமதிக்கிறார். C மிகவும் கவனமாகத்தான் சவாரி செய்கிறார். இருப்பினும் அக்குதிரை தற்செயலாகக் கீழே விழுந்து காயமடைகிறது. B–க்கு எதிராக A என்பவருக்கு ஏதேனும் உரிமையுண்டா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 154–வது பிரிவானது, ஒரு பொருள் ஒப்படைவு பெற்றவரின் பயன்பாட்டிற்காக ஒப்படைவு செய்யப்பட்டு, அதை அவர் ஒப்படைவு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி பயன்படுத்தாமல், வேறு விதங்களில் பயன்படுத்தி, அதற்கு சேதம் எதையும் விளைவித்தால், அவர் ஒப்படைவு செய்தவருக்கு இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டவர் என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் B என்பவரிடம் ஒரு குதிரையை அவர் மட்டும் சவாரி செய்ய A என்பவர் வாடகைக்குக் கொடுக்கிறார். இங்கு அக்குதிரையை B என்பவர் மட்டுமே சவாரி செய்ய வேண்டும் என்பது மேற்படி ஒப்படைவின் நிபந்தனையாகும். ஆனால் B என்பவர் இந்நிபந்தனையை மீறி அக்குதிரையை தன் குடும்பத்தில் ஒருவரான C என்பவரை சவாரி செய்ய அனுமதிக்கிறார். C மிகவும் கவனமாகத்தான் சவாரி செய்கிறார். இருப்பினும் அக்குதிரை தற்செயலாகக் கீழே விழுந்து காயமடைகிறது. இங்கு ஒப்படைவின் நிபந்தனை மீறப்பட்டுள்ளதால், B–யிடமிருந்து இழப்பீடு கோர A–க்கு மேற்படி பிரிவு 154–ன்படி உரிமை உண்டு. (இப்பிரச்சனை பிரிவு 153–ன் கீழான (a) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

13. A had bailed 100 quintals of Punjab wheat with B, a warehouse keeper. B mixes 80 quintals of Argentinian wheat with the wheat of A. Discuss the liability of B.

அ என்பவர் 100 குவிண்டால்கள் பஞ்சாப் கோதுமையை ஆ என்னும் கிடங்கு வைத்திருப்பவரிடம் ஒப்படைவு செய்கிறார். ஆ என்பவர் 80 குவிண்டால்கள் அர்ஜெண்டைனா கோதுமையோடு அ-வின் கோதுமையை கலக்கிறார். ஆ-வின் பொறுப்பு நிலையை விவாதிக்கவும்.

தீர்வு:

ஒப்படைவு பெற்றவர், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவற்றை தனது சொந்தப் பொருட்களுடன் கலக்கக் கூடாது என்பது ஒப்படைவு ஒப்பந்தத்தின் ஒரு உட்கிடை நிபந்தனையாகும். இதை **இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 157-வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, 'பிற பொருட்களிலிருந்து ஒப்படைவு செய்யப் பட்ட பொருட்களை பிரித்தெடுத்து திரும்ப ஒப்படைக்க முடியாதபடி, ஒப்படைவு பெற்றவர், ஒப்படைவு செய்தவரின் இசைவில்லாமல், அவரது பொருளை கலந்து விட்டால், அப்பொருளின் இழப்பிற்கான இழப்பீட்டை ஒப்படைவு பெற்றவரிடமிருந்து பெற ஒப்படைவு செய்தவருக்கு உரிமை உண்டு.'

மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவர் 100 குவிண்டால்கள் பஞ்சாப் கோதுமையை 'ஆ' என்னும் கிடங்கு வைத்திருப்பவரிடம் ஒப்படைவு செய்கிறார். இதை மேற்படி பிரிவின்படி 'ஆ' என்பவர் தன்னிடம் உள்ள பொருட்களுடன் கலக்கக் கூடாது. ஆனால், 'ஆ' என்பவர் 80 குவிண்டால்கள் அர்ஜெண்டைனா கோதுமையோடு 'அ'-வின் கோதுமையை கலக்கிறார். இவ்வாறு பஞ்சாப் கோதுமையையும், அர்ஜெண்டைனா கோதுமையையும் ஒன்றுடன் ஒன்று கலந்துவிடுவதால், அதைப் **பிரித்தெடுக்க முடியாது.** எனவே 100 குவிண்டால் பஞ்சாப் கோதுமையின் இழப்பிற்கு 'அ'-க்கு 'ஆ' இழப்பீடு தர பொறுப்புடையவர்.

[இப்பிரச்சனையே பின்வருமாறு அமைந்தால், அங்கு 'ஆ'-வின் பொறுப்பு நிலை என்ன என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். அதாவது 100 மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ள பஞ்சாப் கோதுமையுடன், 80 மூட்டைகளில் கட்டி வைக்கப்பட்டுள்ள அர்ஜெண்டைனா கோதுமையை கலந்தால், அவ்வாறு கலந்து வைக்கப்பட்ட அர்ஜெண்டைனா கோதுமை மூட்டைகளை தனியாகப் **பிரித்தெடுத்து விடலாம்.** எனவே, **பிரிவு 156-ன்படி** ஒப்படைவு பெற்றவர் ('ஆ') 100 குவிண்டால் கோதுமை மூட்டைகளை ஒப்படைவு செய்தவரிடம் ('அ'-விடம்) திரும்ப ஒப்படைத்துவிட வேண்டும். மேலும் அவ்வாறு பிரிப்பதற்கான செலவுகளையும், அவ்வாறு கலந்துவிட்டதால் சேதம் ஏதும் ஏற்பட்டிருப்பின் அதற்கான செலவுகளையும் ஒப்படைவு பெற்றவர் ('ஆ'), ஒப்படைவு செய்தவருக்கு ('அ'-க்கு) அளிக்க வேண்டும்.]

14. A gives some cloth to a tailor for making a suit out of it. The tailor's charges are settled at Rs. 300. After the suit is ready A tenders Rs. 300 for the charges, but the tailor refuses to deliver the suit till A pays an old debt of Rs. 60. Is the tailor entitled to do so?

A என்பவர் ஒரு தையற்காரரிடம் துணி ஒன்றைக் கொடுத்து அதில் தனக்கு சூட் ஒன்று தைத்து தருமாறு கோருகிறார். அவரும் அதனை ஒப்புக் கொண்டு அதற்காக ரூ.300 கூலியாக கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கிறார். ஆனால், தையற்காரர் A என்பவரிடமிருந்து பெற வேண்டிய பழைய பாக்கியான ரூ.60 செலுத்தும் வரையில் சூட்டினைக் கொடுக்க முடியாது என்று கூறுகிறார். தையற்காரர் அவ்வாறு செய்ய இயலுமா?

தீர்வு:

ஒப்படைவுக்கான சட்ட முறையான செலவுகள் செலுத்தப்படவில்லை எனில், ஒப்படைவு பெறுபவர் (Bailee), ஒப்படைவுப் பொருள்களை திரும்பத் தராமல் தன்னிடமே இருத்திக் கொள்ள உரிமையுண்டு. அதாவது, பிறிதொருவரின் பொருள்களைத் தன்னிடத்தே வைத்துள்ள நபர் ஒருவர், அவரிடமிருந்து வர வேண்டிய கடனையோ, உரிமைக் கோரலையோ திரும்பப் பெறும் வரை, அவற்றைத் தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளும் உரிமை, 'பற்றுரிமை' (Lien) எனப்படும். இதனையே, 'உடைமைப் பற்றுரிமை' (Possessory Lien) என்றும், 'ஒப்படைவு பெறுபவரின் பற்றுரிமை' (Bailee's Lien) என்றும் அழைக்கிறோம். உதாரணமாக, ஒருவர் தனது 'பல்சர்' மோட்டார் சைக்கிளை பழுது பார்ப்பதற்காக மற்றொருவரிடம் ஒப்படைக்கிறார். அவர் அதனைப் பழுது பார்த்ததற்கான கூலியை பெறும் வரை, அம்மோட்டார் சைக்கிளை தன்னிடம் இருத்தி வைத்துக் கொள்ளும் உரிமை உடையவர். இதுவே 'பற்றுரிமை' எனப்படுகிறது.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 170–வது பிரிவின்படி, ஒப்படைவு பெற்றவர், ஒப்படைவு செய்யப்பட்டதன் நோக்கத்திற்கிணங்க, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பொறுத்து தனது உழைப்பு அல்லது திறமையைப் பயன்படுத்தி பணி எதையும் புரிந்திருப்பின், அதற்கான ஊதியத்தை ஒப்படைவு செய்தவரிடமிருந்து பெறும் வரை அப்பொருளை தன்னிடமே இருத்திக் (தக்க வைத்துக்) கொள்ளலாம். அந்த வகையில், ஒரு பொருளை ஒப்படைவு பெற்றவருக்கு அப்பொருளின் மீது குறிப்பிட்ட பற்றுரிமைதான் (Particular lien) உண்டு. அதாவது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளுக்கு மட்டுமே செய்த பணிக்கான ஊதியத்தைப் பெறும் வரைதான், அப்பொருளை தன்னிடமே இருத்தி வைத்துக் கொள்ளலாம். மாறாக, மேற்கண்ட பொருளைத் தவிர, ஒப்படைவு செய்தவர் ஒப்படைத்த பிற பொருட்களுக்கு செய்த பணிக்கான ஊதியங்களை அல்லது பழைய கடன்களைப் பெறும் வரை அப்பொருளை தன்னிடம் இருத்தி வைத்துக் கொள்ள முடியாது. வேறு விதத்தில் கூறுவதானால், ஒப்படைவு பெற்றவருக்கு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் மீது 'பொதுவான பற்றுரிமை' (General lien) கிடையாது. எனவே, மேற்படி பிரச்சனையில் தையற்காரர் A என்பவரிடமிருந்து பெற வேண்டிய பழைய பாக்கியான ரூ.60 செலுத்தும் வரையில் சூட்டினைக் கொடுக்க முடியாது என்று கூற முடியாது. அந்த சூட்டைத் தைத்தற்கான கூலி ரூ.300/–ப் பெற்றவுடன், அதனை திரும்பக் கொடுத்து விட வேண்டும்.

அடகு [Pledge]

15. Ramesh purchases a ring from Suresh by exercising coercion and pawns it with Ganesan before the contract is rescinded by Suresh. Is the pledge valid?

ரமேஷ் என்பவர் சுரேஷ் என்பவரிடமிருந்து வலுக்காட்டாயத்தின்பேரில் மோதிரம் ஒன்றினை வாங்குகிறார். பிறகு அந்த ஒப்பந்தத்திலிருந்து சுரேஷ் பின்னடைவு செய்யும் முன்னரே ரமேஷ் என்பவர் கணேஷ் என்பவரிடம் அந்த மோதிரத்தினை அடகு வைத்து விடுகிறார். இந்த அடகு செல்லத்தக்கதா?

தீர்வு:

மேற்படி அடகு செல்லத்தக்கதே. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 178–A-ன்படி** வலுக்கட்டாயத்தின்பேரில் ஒரு பொருளின் உடைமையைப் பெற்றவர், அதை மற்றொருவரிடம் அடகு வைக்கலாம். ஆனால் இதற்கு பின்வரும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். அவை, (1) அப்பொருளின் (மோதிரத்தின்) உண்மையான உரிமையாளர், வலுக்கட்டாயத்தின் பேரில் எழுந்த மேற்படி ஒப்பந்தத்தை பின்னடைவு (இரத்து) (rescind) செய்யும் முன்னர், அதை வாங்கியவர் அடகு வைத்திருத்தல் வேண்டும். (2) அடகு பெறுபவர் நல்லெண்ணத்துடனும், அடகு வைப்பவருடைய உரிமை குறைபாடுடையது என்பதை அறியாமலும் செயல்பட்டிருக்க வேண்டும்.

நமது மேற்படி பிரச்சனையில் மேற்கண்ட இரு நிபந்தனைகளும் பூர்த்தியாகி உள்ளதாகவே கொள்ள வேண்டும். எனவே அந்த அடகு செல்லத்தக்கதே என்றுதான் இங்கு தீர்வு பகர வேண்டியுள்ளது. (மேலும் விளக்கங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 51–ல் இறுதிப் பத்தியில் காணவும்.)

முகவரியம் [Agency]

16. In the absence of A (husband), B (wife) purchases some goods of necessity from the shop of C, on credit. Can B act as an agent of A? Can the shop keeper (C) recover the money from A?

'அ' என்பவர் இல்லாத பொழுது, அவருடைய மனைவி 'ஆ' என்பவர் தேவையின் பொருட்டு, வீட்டிற்கு தேவையான பொருட்களை 'இ' என்பவரிடம் கடனாக வாங்குகிறார். 'ஆ' என்பவர் முகவராக செயல்பட முடியுமா? 'இ' என்பவர் தனக்கு சேர வேண்டிய கடன் தொகையை 'அ' என்பவரிடமிருந்து பெற முடியுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **189–வது பிரிவின்படி**, முகவரிய ஒப்பந்தம்

சில சமயங்களில் நெருக்கடியான சூழ்நிலையில் (emergency), தேவையின் அடிப்படையில் ஏற்படுவதுண்டு. ஒருவர் உண்மையில் மற்றவரது முகவராக இல்லாதிருந்த போதிலும், இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக அம்மற்றவரது முகவராகப் பணியாற்ற வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற்படுகிறது.

ஆனால் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் முகவரல்ல என்பது பொது விதி. எனினும், நெருக்கடியான சூழ்நிலையில் தேவை ஏற்பட்டால் (necessity out of emergency), ஒருவர் மற்றொருவரின் முகவராகலாம். ஆனால் திருமண பந்தம் ஒன்றே முகவரிய உறவை உண்டாக்காது. எனவே இதற்கு இரு வகையில் விலக்களிக்கலாம். அவை வருமாறு.

(a) கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் பொழுது : கணவனும், மனைவியும் சேர்ந்து வாழும்பொழுது, மனைவி வீடு தொடர்பான செயல்களை தேவையின்பாற் கவனிக்கும் பொருட்டு செய்தால் அம்மனைவி, கணவனது முகவராக செயல்பட்டாள் என்று துணிபு (Presumption) கொள்ளப்படும். எனினும் பின்வரும் சூழ்நிலைகளில் இத்துணிபு மறுக்கப்படலாம் (rebuttable). அவை,

(1) பொருள்களை கடனுக்கு வாங்கவோ அல்லது பணம் கடன் வாங்கவோ கூடாது என கணவன், மனைவியை வெளிப்படையாக தடை செய்திருந்தால்; (2) மனைவி வாங்கும் பொருள் அவசரத் தேவைக்குட்படாததாக இருப்பின். (எ.கா.) தன் வேலைக்காரனுக்காக ஒரு 'ஏர்–கூலர்' வாங்குவது; (3) மனைவிக்கு கடன் கொடுக்கக் கூடாது என்று விற்பனையாளரிடம் கணவன் வெளிப்படையாக எச்சரித்திருந்தால், அதற்கு கணவன் ஒரு முதல்வராகப் பொறுப்பாக முடியாது.

(b) கணவனைப் பிரிந்து மனைவி வாழ்ந்தால் : ஒரு மனைவி தன் கணவரிடமிருந்து நியாயமான சூழ்நிலையில் பிரிந்து வாழ்ந்தால் தன் கணவன் பேரில் தேவையான (அவசியமான) பொருள்களுக்கான கடனை ஏற்படுத்த முடியும். ஏனெனில் கணவன் மனைவியைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாட்டில் இருக்கிறான். ஆனால் அம்மனைவி நியாயமற்ற காரணத்துடன் தனித்து வாழ்ந்தால், அவசியப் பொருட்களுக்குக் கூட தன் கணவன் பேரில் கடன் ஏற்படுத்த முடியாது.

இனி நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். அதில் 'அ' என்பவர் இல்லாத பொழுது, அவருடைய மனைவி 'ஆ' என்பவர் தேவையின் பொருட்டு, வீட்டிற்கு தேவையான பொருட்களை 'இ' என்பவரிடம் கடனாக வாங்குகிறார். இங்கு 'அ' என்பவரின் மனைவியாகிய 'ஆ' என்பவர் தேவையின் பொருட்டு பொருட்களை வாங்குகிறார். அதுவும் வீட்டிற்கு தேவையான பொருட்களைத்தாம் வாங்குகிறார். வீணான பொருட்களை அல்ல. இங்கு மேற்கண்ட இருவரும் சேர்ந்து வாழ்வதாகக் கொண்டாலும் அல்லது நியாயமான காரணங்களின் அடிப்படையில் 'ஆ' எனும் மனைவி 'அ' எனும் தனது கணவரை விட்டு பிரிந்து வாழ்ந்தாலுமே கூட, 'ஆ' என்பவர் 'அ' எனும் தனது கணவரின் முகவராகச் செயல்படுவதாகவே கொள்ள வேண்டும்.

எனவே 'இ' என்பவர் தனக்கு சேர வேண்டிய கடன் தொகையை 'அ' எனும் அவரது கணவரிடமிருந்து பெற முடியும்.

17. 'A', as agent of 'B', with his authority named another person 'C' to act in his place as agent of his principal, 'B'. 'A' suggested the name of 'C' knowing that he was a criminal. Can the principal hold 'A' liable for the consequences?

B என்பவரின் முகவர் A தனக்கு பதிலாக C என்பவரை நியமிக்கிறார். இதற்கு அதிகாரம் அவருக்கு B கொடுத்து இருக்கிறார். C ஒரு குற்றவாளி என்பதை தெரிந்தே அவரின் பெயரை தனக்கு பதிலாக A கூறுகிறார். இப்பொழுது B, Cயின் தவறான நடவடிக்கைகளுக்கு Aயை பொறுப்பு நிலை ஆக்க முடியுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **194–வது பிரிவின்படி**, முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க முகவரால் பெயர் கூறப்படும் நபர் **'மாற்று முகவர்' (Substituted Agent)** எனப்படுவார். அதாவது ஒரு முகவர், முகவரிய அலுவலுக்கு, முதல்வருக்காகச் செயல்பட வேறொரு நபரின் பெயரைக் கூற வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரம் பெற்று, அவ்வாறு மற்றொரு நபரின் பெயரை முறையோடு கூறியிருந்தால் அந்த நபர் 'மாற்று முகவர்' என்றே அழைக்கப்படுவார்.

மேற்படி பிரச்சனையில் அவ்வாறு மாற்று முகவர் ஒருவரின் பெயரைக் கூற A எனும் முகவருக்கு B எனும் முதல்வர் அதிகாரமளித்துள்ளார். அவர் இதனைப் பயன்படுத்தி தனதிடத்தில் முதல்வரின் முகவராகச் செயல்பட C என்பவரை முதல்வருக்கு பரிந்துரைக்கிறார். இங்குதான் நாம் **பிரிவு 195** கூறுவதை கவனிக்க வேண்டும். அதன்படி, "எவ்வாறு இயல்பான அறிவுத்திறம் படைத்த ஒருவர் தனது சொந்த விஷயத்தில் தன்விருப்புரிமையைப் (discretion) பயன் படுத்தி அத்தகு மாற்று முகவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பாரோ அதே அளவிலான தன் விருப்புரிமையை பயன்படுத்தி ஒரு முகவரும் தனது முதல்வருக்காக அத்தகு மாற்று முகவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்; அம்முகவர் இவ்வாறு தேர்ந்தெடுத் திருப்பின், அம்மாற்று முகவரின் செயல்களுக்காக அல்லது கவனமின்மைக்காக முதல்வருக்கு பொறுப்பாகமாட்டார்."

மேற்கண்ட பிரிவின்படி இங்கு A எனும் முகவர் நடந்து கொண்டுள்ளரா? இல்லை. தான், மாற்று முகவராக பெயர் கூறவிருக்கும் C என்பவர் ஒரு குற்றவாளி என்பதை தெரிந்து கொண்டே அவரது பெயரை முதல்வருக்கு A பரிந்துரைக்கிறார். இங்கு A என்பவர் மேற்படி பிரிவின்படி தனது இயல்பான அறிவுத்திறனின் அடிப்படையில் தனது தன்விருப்புரிமையைப் பயன்படுத்தி, அவரைத் தேர்ந் தெடுக்கவில்லை. தனது இடத்தில் செயல்பட குற்றவாளியெனத் தெரிந்த ஒருவரை எவரேனும் சம்பந்தப்பட்டவர்களுக்கு பரிந்துரைப்பார்களா? அப்படிப் பரிந்துரைத்தால்,

பரிந்துரைப்பவரும் ஒரு குற்றவாளியாகத்தான் இருப்பாரன்றோ? எனவே, மேற்படி பிரச்சனையில் தன்னால் பெயர் கூறப்பட்ட C–யின் செயல்களுக்கு, A என்பவரே மூன்றாம் நபர்களுக்கு பொறுப்பாவார். மாறாக B எனும் அவரது முதல்வர் பொறுப்பாகமாட்டார்.

18. 'A' directs 'B', a solicitor to sell his estate by auction and to employ an auctioneer for the purpose. 'B' names 'C' as an auctioneer to conduct the sale. Discuss the position of 'C'.

'ஆ' என்ற வழக்குரைஞரை 'அ' தன் சொத்தை ஏலத்தில் விற்கவும் அதன் பொருட்டு ஏல விற்பனை செய்பவர் ஒருவரை அமர்த்தவும் பணிக்கிறார். 'இ'யை ஏல விற்பனை செய்பவராக 'ஆ' நியமிக்கிறார். 'இ'யின் சட்ட நிலையை ஆராய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவர் தன் சொத்தை ஏலத்தில் விற்பதற் காக 'ஆ' என்ற வழக்குரைஞரை பணிப்பதால், மேற்படி 'அ' முதல்வராகவும், 'ஆ' முகவராகவும் ஆகிறார். ஆனால் அதே சமயத்தில் அந்த ஏல விற்பனையை நடத்தும் பொருட்டு ஒருவரை அமர்த்தவும் மேற்படி முதல்வரே, முகவருக்கு கூறுகிறார். முதல்வர் கூறியதன் பேரில் 'ஆ' என்ற முகவர் 'இ' என்பவரை அமர்த்துகிறார். இவ்வாறு அமர்த்தப்படுவதால் மேற்படி 'இ' என்பவர் **மாற்று முகவர் (Substituted Agent)** எனப்படுகிறார் **(பிரிவு 194).** இவர் மேற்படி ஏல விற்பனையை நடத்தும் நோக்கத்திற்கு மட்டும் மாற்று முகவராவார். எனவே மாற்று முகவருக்கும் முதல்வராகிய 'அ'–விற்கும் இடையே ஒப்பந்த உறவு நிகழ்கிறது. எனவே மாற்று முகவராகிய 'இ'–யால் ஏற்படும் இழப்புகளுக்கு, அவர் மீது முதல்வராகிய 'அ' வழக்குரைக்கலாம். இவ்வாறே மாற்று முகவர் தனது ஊதியத்திற்கு முதல்வர் மேல் வழக்குரைக்கலாம்.

19. 'A' without authority buys goods for 'B'. 'B' sells part of these goods to 'X' on his account. As regards the rest of the goods he denies A's authority to buy for him. 'A' contends that 'B' is bound by the purchase. Discuss and decide.

'B' என்பவரின் அதிகாரம் இல்லாமல் அவருக்காக 'A' என்பவர் வாங்கிய பொருட்களின் ஒரு பகுதியை 'B' தன் சொந்த கணக்கில் 'X' க்கு விற்கிறார். மீதமுள்ள பொருட்களை பொறுத்தமட்டில் 'A' என்பவர் தனக்காக பொருள் வாங்க உரிமை இல்லை என்று 'B' மறுக்கிறார். ஆனால் 'A' என்பவர் 'B' என்பவர் பொருள் வாங்கியமைக்கு கட்டுப்பட்டவர் என்று வாதிக்கின்றார். விவாதித்து முடிவு செய்க.

தீர்வு :

அதிகாரமின்றி முன்பே செய்யப்பட்ட ஒரு செயலை பின்பு ஏற்புச் செய்தால், அது 'ஏற்புறுதி' (Ratification) ஆகும். ஒரு முகவர் தனது அதிகாரத்திற்கு

உட்படாத ஒரு செயலை செய்த பின்னர், அதனை முதல்வர் ஏற்புறுதி செய்தால், அது **'ஏற்புறுதியினால் விளையும் முகவரியம்' (Agency by Ratification)** எனப்படுகிறது. இந்நிலைப்பாட்டைத்தான் **இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 196–ஆனது,** 'மற்றொருவருக்குத் தெரியாமல் அல்லது அவரது அதிகாரமின்றி ஒருவர், அவருக்காக சில செயல்களை செய்தால், அம்மற்றொருவர் ஒன்று அச்செயல்களை ஏற்புறுதி செய்யலாம் அல்லது மறுக்கலாம். இங்கு அவ்வாறு மறுக்காமல், அச் செயல்களை ஏற்புறுதி செய்தால், அச்செயல்கள் அவரது அதிகாரத்துடன் செய்யப் பட்ட செயலாகக் கருதப்படும்' என்று கூறுகிறது. இது **'பின்பெற்ற அதிகாரத்தால் எழும் முகவரியம்' (Expost facto agency by Subsequent Authority)** என்றும் அழைக்கப்படுகிறது.

நமது மேற்படி பிரச்சனையில் **'B' என்பவரின் அதிகாரம் இல்லாமல் அவருக்காக 'A' என்பவர் வாங்கிய பொருட்களின் ஒரு பகுதியை 'B' தன் சொந்த கணக்கில் 'X' க்கு விற்கிறார்.** எனவே இங்கு தனது அதிகாரமில்லாமல் 'A' செய்த செயலை 'B' உட்கிடையாக ஏற்புறுதி செய்துள்ளார். ஆனால் அவரே, **மீதமுள்ள பொருட்களை பொறுத்தமட்டில் 'A' என்பவர் தனக்காக பொருள் வாங்க உரிமை இல்லை என்று மறுக்கிறார்.** இங்கு அவ்வாறு மறுக்க B–க்கு உரிமையில்லை. ஏனெனில், **பிரிவு 199–ன்படி,** முதல்வர், முகவரின் சம்பந்தப்பட்ட அதிகாரமற்ற நடவடிக்கை முழுமைக்கும் ஏற்புறுதி அளிக்க வேண்டும். பகுதியாக ஏற்புறுதி செய்ய முடியாது (Ratification must be of the entire transaction) அதாவது சம்பந்தப்பட்ட செயலை, முதல்வர் ஒன்று முழுமையாக ஏற்றுக் கொள்ள (ratify intoto) வேண்டும் அல்லது முழுமையாக ஏற்க மறுக்க (reject intoto) வேண்டும். எனவே B என்பவர் தனது முகவராகிய A என்பவர் செய்த செயலை முழுமையாகத்தான் ஏற்றுக் கொள்ள முடியும். தனக்கு அனுகூலமாக உள்ள பகுதியை ஏற்றுக் கொண்டு, அனுகூலமற்ற மீதிப் பகுதியை ஏற்க மறுக்க முடியாது. இதனால், மேற்கண்ட பிரச்சனையில், **A' என்பவர் வாங்கிய பொருள் முழுமைக்கும் 'B' என்பவர் கட்டுப்பட்டவர் என்று வாதிடுவது சரியே.** அவர் தனது வழக்கில் நிச்சயம் வெற்றி பெறுவார்.

20. Gomathi who owes Rs. 10,000/- to Malathi appoints her as agent to sell her landed property at Delhi. Malathi has also been instructed to appropriate what is due to her and hand over the balance to Gomathi. Can Gomathi revoke the authority given to Malathi?

கோமதி என்பவர் மாலதி என்பவருக்கு ரூ. 10,000/– தர வேண்டியிருந்த போதிலும், அவரை முகவராக நியமித்து டில்லியில் உள்ள நிலச் சொத்தினை விற்கப் பணிக்கப்படுகிறார். மற்றும் மாலதியினால் பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து அவருக்கு சேர வேண்டிய ரூ. 10,000/–த்தினையும் எடுத்துக் கொள்ளவும், எஞ்சியுள்ள தொகையினை மட்டும் தன் வசம் கொடுத்துவிட

வேண்டும் என்றும் கோமதி கூறுகிறார். கோமதி, மாலதிக்கு கொடுக்கப்பட்ட இவ்வதிகாரத்தினை பின்னடைவு (திரும்பப் பெற) செய்ய முடியுமா?

தீர்வு:

மேற்படி அதிகாரத்தை கோமதி பின்னடைவு, அதாவது திரும்பப் பெற முடியாது. ஏனெனில், மேற்படி முகவரியம், **'நலன் இணைந்த முகவரியமாகும்' (Agency coupled with interest).**

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 202–ன்படி, முகவரியத்தின் மூலக்கூறான பொருளில் முகவருக்கு நலன் அல்லது பற்று இருந்தால், அது நலனிணைந்த முகவரியமாகும். மேற்படி பிரச்சனையில், கோமதி என்பவர் மாலதிக்கு ரூ.10,000/– கொடுக்க வேண்டியுள்ளது. அதே சமயத்தில் கோமதியின் சொத்தை விற்றுத் தருவதற்காக, மாலதி என்பவர் முகவராக நியமிக்கப்படுகிறார். மேலும் விற்று வந்த தொகையிலிருந்து மாலதிக்கு சேர வேண்டிய தொகையான மேற்படி ரூ. 10,000/–த்தை எடுத்துக் கொண்டு மீதமுள்ள விற்பனைத் தொகையை மட்டும் கொடுத்தால் போதும் என்று கோமதி கூறியுள்ளார். எனவே மாலதி எதற்காக முகவராக நியமிக்கப்பட்டாரோ அச்செயலை செய்வதில் அவருக்கு தனிப்பட்ட நலன் உள்ளது. அதாவது அவருக்கு சேர வேண்டிய ரூ. 10,000/–ம் கோமதியிடமிருந்து கிடைக்கிறது. எனவே இது நலன் இணைந்த முகவரியம் ஆகிறது. இப்படிப்பட்ட முகவரியங்களை மேற்படி பிரிவு 202–ன்படி முகவருக்கு எதிராக திரும்பப் பெற முடியாது. முகவரின் நலன் காக்கவே சட்டத்தில் இவ்வாறு வகை செய்யப்பட்டுள்ளது.

இம்மாதிரியான தருணங்களில் முதல்வரிடமிருந்து (கோமதி), தனக்கு (மாலதிக்கு) வரவேண்டிய கடன் பாக்கிக்கு அம்முகவரியமே பிணையமாக (Security) உள்ளது. நலனிணைந்த இம்முகவரியத்தை, முதல்வரின் இறப்பாலோ, திடமற்ற மனத்தாலோ, நொடிப்பாலோ கூட திரும்பப் பெற முடியாது என்பது குறிப் பிடத்தக்கதாகும். (மேலும் விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண். 77–ல் 1–வது எண் கொண்ட பத்தியில் காண்க.)

21. A directs his agent B to buy a certain house for him. B tells A that it cannot be bought. Later A discover that B has bought the house for himself. What is the remedy open to A?

'ஆ' என்னும் தன்னுடைய முகவரை 'அ' ஒரு வீடு வாங்குமாறு ஏவுகிறார். 'ஆ' அதை வாங்குவதற்கு இயலாது என்று கூறுகிறார். அதன் பின்னர் 'ஆ' அந்த வீட்டை தனக்காக வாங்கியிருக்கிறார் என்ற 'அ' தெரிந்து கொள்கிறார். 'அ'வுக்கு சட்டத்திலிருக்கும் தீர்வழிகள் யாவை?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **216–வது பிரிவானது, 'முகவரியத்**

தொழிலில் முகவர் தனது சொந்த அக்கறையில் எடுத்த நடவடிக்கையினால் விளைந்த பலனில் முதல்வருக்கு உரிமையுண்டு' (Principal's right to benefit gained by agent dealing on his own account in business of agency) என்று கூறுகிறது. அப்பிரிவு கூறுவதன்படி, "முகவர் ஒருவர், தனது முதல்வரின் அக்கறைக்காக செயல்படுவதற்குப் பதிலாக, அவருக்குத் தெரியாமல், தனது சொந்த அக்கறைக்கு செயல்பட்டு முகவரியத் தொழிலில் நடவடிக்கை எதையும் எடுத்தால், அந்நடவடிக்கையினால் விளைந்த பலனைக் கோர முதல்வருக்கு உரிமையுண்டு."

மேற்படி பிரச்சனையில், 'ஆ' என்னும் தன்னுடைய முகவரை 'அ' ஒரு வீடு வாங்குமாறு ஏவுகிறார். 'ஆ' அதை வாங்குவதற்கு இயலாது என்று கூறுகிறார். அதன் பின்னர் 'ஆ' அந்த வீட்டை தனக்காக வாங்குகிறார். **இங்கு 'ஆ' எனும் முகவர் தனது முதல்வராக 'அ'–வின் அக்கறைக்காக செயல்படாமல், தனது சொந்த அக்கறையின் பொருட்டு செயல்பட்டு, அந்த வீட்டை வாங்குவதன் மூலம் பலன் அடைந்துள்ளார்.** இதை பின்னிட்டு 'அ' தெரிந்து கொள்கிறார். எனவே மேற்படி பிரிவின்படி, அவ்வீட்டை 'ஆ' எனும் முகவர் கொடுத்த அதே விலைக்கு தனக்கு விற்க வேண்டும் என்று வலியுறுத்த 'அ' எனும் அவரது முதல்வருக்கு உரிமையுண்டு. இதுவே, 'அ'–க்கு கிடைக்கும் சட்டப்படியான தீர்வழியாகும். (இப்பிரச்சனை, பிரிவு 216–ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

22. 'B' entrusts to 'A' an agent his article for sale. 'A' sells them for Rs.4,000 and also receives Rs. 500 as secret commission. 'A' pays Rs.4,000 to 'B'. 'B' claims the secret commission received by 'A'. Decide.

'அ' எனும் முகவரிடம் 'ஆ' தன்னுடைய பொருள்களை விற்பனை செய்வதற்காக ஒப்படைவு செய்கிறார் 'அ' பொருள்களை ரூ.4,000த்திற்கு விற்கிறார். மேலும் ரூ.500 இரகசிய தரகும் பெறுகிறார். 'அ' ரூ.4,000 மட்டும் 'ஆ'விடம் செலுத்துகின்றார். 'அ' என்பவர் இரகசியமாக பெற்றுக் கொண்ட தரகும் தன்னிடம் ஒப்படைக்குமாறு 'ஆ' என்பவர் கேட்கிறார். முடிவு செய்க.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **218–வது பிரிவானது**, ஒரு முகவர் தனது முதல்வரின் கணக்கில் பெற்ற அனைத்து தொகைகளையும், அவற்றில் தனக்குரிய பிடித்தங்கள் ஏதும் இருப்பின், அதைக் கழித்துக் கொண்டு முதல்வரிடம் செலுத்தக் கடமைப்பட்டவர் என்று கூறுகிறது. எனவே ஒரு முகவர் முதல்வருக்காக எத் தொகைகளைப் பெற்றாலும், அதனை முதல்வரிடம் செலுத்திவிட வேண்டும். இந்த வகையில், ஒரு முகவர் தனது முதல்வருக்காக செய்யும் செயல்களில் இரகசியமான ஆதாயம் எதையும் பெற்றால், அதையும் முதல்வரிடம் செலுத்திவிட வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் அத்தகு இரகசிய ஆதாயத்தை, அதாவது

இரகசியத் தரகுத் தொகையாக ரூ.500/–அய், 'அ' எனும் முகவர் பெறுகிறார். இதை மேற்கண்ட பிரிவின்படி, அவர் முதல்வரிடம் ஒப்படைக்கக் கடமைப்பட்டவர். மேலும் **பிரிவு 220–ன்படி,** அந்த அந்த இரகசிய ஆதாயத்தின் அளவிற்கு, அவரது ஊதியத்தையும் முதல்வர் பிடித்துக் கொள்ளலாம். (எனினும் மேற்படி பிரச்சனையில், முதல்வரின் பொருட்களை விற்றுக் கொடுத்தால், அதற்கு முகவருக்கு அளிக்கப் படும் ஊதியம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை.)

23. Murugan employs Kumaran as his agent to recover Rs.10,000 from Valli. Through Kumaran's misconduct the money is not recovered. State if Kumaran is entitled to any remuneration and is liable to Murugan?

குமரன் என்பவரை முருகன் முகவராக நியமித்து வள்ளியிடமிருந்து ரூ.10,000 வசூல் செய்து கொடுக்க பணிக்கின்றார். குமரனுடைய தவறான நடத்தையினால் இத்தொகை வசூலிக்கப்படவில்லை. குமரன் என்பவர் தனக்குரிய சம்பளத்தினை பெற முடியுமா என்பதினையும் மற்றும் முருகன் என்பவருக்கு அவர் பொறுப்புடையவரா என்பதினையும் கூறவும்.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **220–வது பிரிவின்படி** முகவரியத் தொழிலில் முகவர் ஒருவர் துர்நடத்தையுடன் (தவறான நடத்தையுடன்) செயல் பட்டிருப்பின், அவர் துர்நடத்தையுடன் நடந்து கொண்ட பகுதி வரையிலான அவரது ஊதியத்தைப் (சம்பளத்தைப்) பெற அவருக்கு உரிமையில்லை.

மேற்படி பிரச்சனையில் வள்ளியிடமிருந்து ரூ.10,000/– வசூல் செய்ய குமரன் என்பவரை முருகன் முகவராக நியமிக்கிறார். ஆனால் குமரனுடைய தவறான நடத்தையினால் இத்தொகை வசூலிக்கப்படவில்லை. எனவே மேற்படி பிரிவின்படி, குமரன் என்பவர் தனக்குரிய ஊதியத்தைப் பெறவியலாது. மேலும் அதனால் முருகனுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு குமரன் ஈடு செய்யப் பொறுப்புடையவர்.

24. A has to give Rs. 5,000 to B. A sells Rs. 10,000 worth rice to B. A is acting as agent for C in the transaction. B has no knowledge nor reasonable grounds of suspicion that such is the case. Can C compel B, to take the rice without allowing him to set off A's debt?

Bக்கு ரூபாய் 5,000 கடன்பட்டிருக்கும் A, Bக்கு ரூபாய் 10,000 மதிப்புள்ள அரிசியை விற்பனை செய்கின்றார். இந்த நேரத்தில் A என்பவர், C-யின் முகவராகச் செயல்படுகின்றார். இந்த உண்மை Bக்கு தெரியாதது மட்டுமல்ல, சந்தேகப்படவும் போதிய காரணமில்லை. A, Bக்கு தரவேண்டிய கடனைக் கழிக்காமலேயே அரிசியைப் பெற்றுக் கொள்ளும்படி Bயை C வற்புறுத்த முடியுமா?

தீர்வு :

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **232–வது பிரிவைக்** காண வேண்டும். அப்பிரிவு, **"முதல்வரென வைத்துக் கொள்ளப்படக் கூடிய முகவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் நிறைவேற்றம்" (Performance of contract with agent supposed to be principal)** குறித்துக் கூறுகிறது.

அப்பிரிவு கூறும் விளக்கத்தின்படி, மற்றொருவர் முகவர் என்பதை அறியாமல் அல்லது அவ்வாறு அய்யமுற (சந்தேகப்பட) நியாயமான காரணங்கள் ஏதுமில்லாமல், அவருடன் ஒருவர் ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்து, அம்முகவரின் முதல்வர் அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றக் கோரினால், அம்முகவருக்கும், அவ்வொப்பந்ததின் மறு தரப்பினருக்கும் இடையே நிலவும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் அத்தகு நிறைவேற்றத்தை அவர் பெற முடியும். தற்பொழுது இப்பிரிவு 232–அய் நமது மேற்கண்ட பிரச்சனைக்குப் பொருத்திப் பார்ப்போம்.

மேற்படி பிரச்சனையில் Bக்கு ரூபாய் 5,000 கடன்பட்டிருக்கும் A, Bக்கு ரூபாய் 10,000 மதிப்புள்ள அரிசியை விற்பனை செய்கிறார். இங்கு A என்பவர், C-யின் முகவராகச் செயல்படுகிறார். இந்த உண்மை Bக்கு தெரியாதது மட்டுமல்ல, சந்தேகப்படவும் போதிய காரணமில்லை. எனவே A மற்றும் B–க்கு இடையிலான உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுக்குட்பட்டுத்தான், அவர்களது மேற்படி ஒப்பந்தத்தை A–யின் முதல்வராகிய C என்பவர் நிறைவேற்றக் கோர முடியும்.

இங்கு அத்தகு உரிமைகளும், கடப்பாடுகளும் யாதெனில், A என்பவர் B–க்கு ரூ.5,000/– கடன்பட்டுள்ளார். அதை A–யிடமிருந்து திரும்பப் பெறக்கூடிய உரிமை B–க்கு உண்டு. அதுபோல் அதை B–க்கு திரும்பச் செலுத்த வேண்டிய கடப்பாடு A–க்கு உண்டு. இந்த உரிமைக்கும், கடப்பாட்டிற்கும் உட்பட்டுத்தான் முதல்வராகிய C, A–க்கும் B–க்கும் இடையிலான ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோர முடியும். இந்நிலையில் A என்பவர் ரூ.10,000/– மதிப்புள்ள அரிசியை B–க்கு விற்கிறார். **எனவே இங்கு A என்பவர் B-க்கு தரவேண்டிய கடன் தொகையான ரூ.5,000/–த்தைக் கழிக்காமலேயே (set-off) அரிசியைப் பெற்றுக் கொள்ளும்படி B-யை C வற்புறுத்த முடியாது.**

அதாவது அரிசியின் விலையான ரூ.10,000/–த்தையும் அப்படியே தருமாறு B-யை C வற்புறுத்த முடியாது. B தனக்கு A–யிடமிருந்து சேர வேண்டிய கடன் தொகையான ரூ.5,000/–த்தைக் கழித்துக் கொண்டு மீதி ரூ.5,000/–த்தை A–க்கு கொடுக்கலாம். இங்கு A–யை C–யின் முகவர் என்பதை அறிந்து கொள்ளாமல் அல்லது அவ்வாறு சந்தேகப்பட காரணங்கள் ஏதுமில்லாமல் A–யையே முதல்வராக B வைத்துக் கொள்வதால் (supposed) மேற்கண்ட நிலை ஏற்படுகிறது. (இப் பிரச்சனை பிரிவு 232–ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.)

1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டம் [The Sale of Goods Act, 1930]

25. 'X' purchased certain linen table cloths from an auctioneer on the basis of the description given by the Seller/Auctioneer that they belonged to 16th century. After purchase 'X' found that they actually belonged to 17th century. 'X' approaches you for legal remedy. - Advise.

X என்பவர் ஒரு ஏல விற்பனையாளரிடம் இருந்து அவரது கூற்றின்படி பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்தவைகள் என்று கருதி சில மேஜை துணிகளை வாங்கினார். வாங்கிய பின்னர் தான் அவைகள் 17ம் நூற்றாண்டை சேர்ந்தவைகள் என்று அவருக்கு தெரிய வந்தது. அவர் சட்ட ரீதியான தீர்வழிக்காக உங்களை அணுகுகிறார். – ஆலோசனை வழங்குக.

தீர்வு:

1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தின் **15–வது பிரிவின் முற்பகுதியின்படி,** விற்கப்படுகிற சரக்கு, விற்பனை ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறித்துரைக்கு (விபரத்திற்கு) (Description) ஒத்ததாக இருக்க வேண்டும் என்பது ஒரு உட்கிடையான நிபந்தனையாகும் (implied condition). அதாவது குறித்துரை வாயிலான விற்பனை ஒப்பந்தமொன்றின் (sale by description) அடிப்படையில் விற்கப்படும் சரக்கு, அக்குறித்துரைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் X என்பவர் ஒரு ஏல விற்பனையாளரிடம் இருந்து அவரது கூற்றின்படி (description) பதினாறாம் நூற்றாண்டை சேர்ந்தவை என்று கருதி சில மேஜை துணிகளை வாங்கினார். வாங்கிய பின்னர் தான் அவை 17–ஆம் நூற்றாண்டை சேர்ந்தவை என்று அவருக்கு தெரிய வந்தது. எனவே அவர் அவ்விற்பனையை தள்ளுபடி செய்ய ஏல விற்பனையாளர் மீது வழக்கிடலாம் என்பதே இங்கு நாம் X–க்கு வழங்கும் ஆலோசனையாகும். **(தொடர்புடைய வழக்குகளுக்கும், விளக்கங்களுக்கும் இந்நூலின் பக்கம் எண். 97–ல் காண்க.)**

26. A sold an harvest machine to B. He described and assured that the machine is new one without any defect. But afterwards B found that the machine was a very old and damaged one. So B filed a suit to set aside the sale. Will he succeed?

A என்பவர் ஒரு அறுவடை இயந்திரத்தை புதியது, பழுதில்லாதது என்று விவரித்து உறுதி கூறி B என்பவருக்கு விற்றார். பின்னர் அது பழைய இயந்திரம் என்றும், அதில் நிறைய பழுதுள்ளது என்றும் B–க்கு தெரிய வந்தது. ஆகவே B விற்பனையை தள்ளுபடி செய்ய வழக்கு தொடுத்தார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனையில் கண்டவாறு, 1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தின் **15–வது பிரிவின் முற்பகுதியின்படி,** விற்கப்படுகிற சரக்கு, விற்பனை ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறித்துரைக்கு (விபரத்திற்கு) (Description) ஒத்ததாக இருக்க வேண்டும் என்பது ஒரு உட்கிடையான நிபந்தனையாகும் (implied condition). அதாவது குறித்துரை வாயிலான விற்பனை ஒப்பந்தமொன்றின் (sale by description) அடிப்படையில் விற்கப்படும் சரக்கு, அக்குறித்துரைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

மேற்படி பிரச்சனையில், A என்பவர் ஒரு அறுவடை இயந்திரத்தை புதியது, பழுதில்லாதது என்று விவரித்து (குறித்துரைத்து), உறுதி கூறி என்பவருக்கு விற்றார். பின்னர் அது பழைய இயந்திரம் என்றும், அதில் நிறைய பழுதுள்ளது என்றும் B–க்கு தெரிய வந்தது. இங்கு அந்த அறுவடை இயந்திரம் குறித்துரைத்த விபரத்தின்படி இல்லை. இது பிரிவு 15–ல் கூறும் உட்கிடை நிபந்தனையை மீறுவதாக உள்ளது. இதன் அடிப்படையில் B அவ்விற்பனையை தள்ளுபடி செய்ய வழக்கு தொடுக்க உரிமை கொண்டவர். அதில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார்.

மேற்படி பிரச்சனையை ஒத்த **Varley v. Whipp** [1] எனும் வழக்கில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட அறுவடை இயந்திரம் (second-hand reaping machine) ஒன்றை, வாங்கி இரண்டே மாதங்களானது என்றும், ஏறத்தாழ புதியதைப் போல உள்ளதென்றும், சுமார் 50 அல்லது 60 ஏக்கர் நிலப்பரப்பில் விளைந்த கதிர்களை மட்டுமே இதுகாறும் அறுத்துள்ளது என்றும் குறித்துரைத்து ஒருவர் மற்றொருவருக்கு விற்றார். ஆனால் வாங்கிய பின்தான் தெரிந்தது, அவ்வியந்திரம் பழுதடைந்த பழைய இயந்திரமென்பது. இங்கு சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் நிபந்தனை மீறப்பட்டுள்ளது என்றும், அவ்வியந்திரத்தை வாங்கியவர், அதனை திருப்பிக் கொடுத்து அதன் விலையை திரும்பப் பெற உரிமையுடையவர் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

27. F bought milk from A. The milk contained harmful germs. F's wife took the milk, got infection and as a result died. F sues A. Decide.

Aயிடமிருந்து F என்பவர் பால் வாங்கினார். அதில் வியாதியைப் பரப்பும் கொடிய கிருமிகள் இருந்தன. F–ன் மனைவி அப்பாலை அருந்தியதால், நோய்வாய்ப்பாட்டு, அதனால் இறந்துவிட்டார். A மீது F வழக்கிடுகிறார். தீர்க்க.

தீர்வு:

1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தின் **பிரிவு 16(2)–ன்படி,** குறித்துரை மூலமான விற்பனையில் (sale by description) அளிக்கப்படும் சரக்கு, வணிகத் தரம் (Merchantability) (அதாவது விற்கத்தக்க நிலை)

1. (1900) 1 QB 513

வாய்ந்ததாக இருக்க வேண்டும், என்பது சரக்கு விற்பனையின் ஒரு உட்கிடை நிபந்தனையாகும். மேற்கண்ட வணிகத் தரம் என்பதில் 'அச்சரக்கு துய்ப்பதற்கு (நுகர்வதற்கு) ஏற்றதாக இருக்க வேண்டும்' (wholesomeness) என்பதும் அடங்கும். எனவே இதுவும் ஒரு உட்கிடை நிபந்தனையாகும். இதன் அடிப்படையில், மேற்கண்ட பிரச்சனையில் கிருமிகள் கொண்ட பாலை விற்பனை செய்த A-யின் மீது, தனது மனைவியின் இறப்பிற்காக இழப்பீடு கோரி F வழக்கிடலாம். அவர் இதில் வெற்றி பெறுவார். இங்கு அப்பாலுக்கு வணிகத் தரம் இல்லை என்பதே காரணமாகும். **(இந்நூலின் பக்கம் எண். 101–ல் 7–வது எண் கொண்ட பத்தியில் காணவும். அதில் கொடுக்கப்பட்டுள்ள வழக்கையும் சுட்டிக்காட்டவும்.)**

28. A and his friend B went to a retail shop. A purchased two bottles of ginger beer. While dringing B found some decomposed parts of snail in his bootle. B suffered shock and alergy. He filed a case against the manufacturer to get damages on the breach of implied conditions. Will he succeed?

'அ' என்பவர் தன்னுடைய நண்பர் 'ஆ' என்பவருடன் கடைக்கு சென்று இரண்டு பாட்டில் ஜிஞ்சர் பீர் வாங்கினார். 'ஆ' என்பவர் குடிக்கும்போது, அந்த பாட்டிலில், அழுகிய நத்தையின் உடல் கூறுகள் இருப்பதைக் கண்டார். 'ஆ' என்பவருக்கு அதிர்ச்சி உண்டாகி 'அரிப்பு நோய்' வந்தது. அவர் ஜிஞ்சர் பீர் உற்பத்தியாளர் மீது, உட்கிடை நிபந்தனை மீறலுக்காக இழப்பீடு கேட்டு வழக்கிடுகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இப்பிரச்சனையும் மேற்கண்ட பிரச்சனையை ஒத்ததே. எனவே அதில் கண்ட தீர்விற்குரிய காரணங்களின்படி, 'அ' என்பவர் தனது வழக்கில் வெற்றி பெறுவார். மேற்கண்ட பிரச்சனை **Donoghue v. Stevenson**[1] எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றியதாகும். இவ்வழக்கில் ஒரு சரக்கை நுகர்வோர்கள் உடனடியாக நுகர்வதற்கேற்ற வகையில் உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்பும் உற்பத்தியாளர், அச்சரக்கின் உற்பத்தியில் உரிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் அச்சரக்கு அவரை விட்டுச் செல்கையில், அது நுகர்வதற்கு முடியாத வகையில் அல்லது விஷத்தன்மை வாய்ந்தவாறு இருத்தல் கூடாது. அத்தகு குறைகளிலிருந்து அவை விடுபட்டதாக இருக்க வேண்டும். இதில் அவ்வுற்பத்தியாளர் தவறினால், அச்சரக்கை அறுதியாக நுகரும் (துய்க்கும்) நுகர்வோர்களுக்கு (ultimate consumers) அவர் பொறுப்புடையவரே. இங்கு அவருக்கும், அவரது சரக்கை நுகரும் நுகர்வோர்களுக்கும் இடையே எவ்வித உடன்பாடும் நேரடியாக இல்லாது போனாலும், தீங்கியலின் (Torts) அடிப்படையில் அவர் பொறுப்புடையவரே என்று கூறப்பட்டது.

1. (1932) A.C. 562

29. Mala was shopping in a self-service super market. She picked up a bottle of orange squash from a shelf. While she was examining it, the bottle exploded in her hand and injured her. Can Mala claim damages for the injury.

சுய சேவை சிறப்பு அங்காடி ஒன்றில் மாலா என்பவர் பொருள்கள் வாங்க சென்றார். அவர் படித்தட்டில் வைக்கப்பட்டிருக்கும் ஆரஞ்சு ரச பாட்டில் ஒன்றினை எடுத்தார். அவர் அதனை ஆய்வு செய்து கொண்டிருக்கும் போது, அந்த பாட்டில் அவர் கையிலே வெடித்து காயப்படுத்தியது. மாலா என்பவர் தனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு கோர முடியுமா?

தீர்வு :

இதற்கு முன் சென்ற இரண்டு பிரச்சனைகளில் அளிக்கப்பட்ட தீர்வுகள் மற்றும் அதற்கான காரணங்களின் அடிப்படையில், மாலா தனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு கோர முடியும்.

30. Murugan agrees to sell Kumaran 7 bags of Rice of superior variety, out of 100 bags lying in his godown for Rs. 8,000. The rice is completely destroyed by fire. Can Kumaran compel Murugan to supply the rice as per the agreement?

குமரன் என்பவருக்கு முருகன் என்பவர் தன்னுடைய கிட்டங்கியில் உள்ள 100 அரிசி மூட்டைகளிலிருந்து உயர் ரக அரிசி அடங்கிய ஏழு மூட்டைகள் கொடுக்க ஒப்புக் கொள்கிறார். தீ விபத்தின் காரணமாக அரிசி முழுவதும் அழிந்து விட்டன. குமரன் என்பவர் முருகன் என்பவரைக் கட்டாயமாக ஒப்பந்தப்படிக்கு அரிசி கொடுக்க வேண்டுமெனக் கூற முடியுமா?

தீர்வு:

1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தின் **18–வது பிரிவு,** விற்கப்படும் சரக்கு உறுதிப்படுத்தப்படும் வரை, அதன் மீதான உரிமை வாங்குபவருக்கு மாறாது என்று கூறுகிறது. மேற்படி பிரச்சனையில் சரக்கானது, உறுதி செய்யப்படவில்லை. ஏனெனில், முருகனின் கிட்டங்கியிலிருந்த 100 மூட்டை அரிசியிலிருந்து 7 மூட்டை உயர் ரக அரிசியை ரூ.8,000/–க்கு குமரனுக்கு கொடுக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு 'உயர் ரக அரிசி' என்பதை முருகன் பிரித்து ஒதுக்க வேண்டியுள்ளது. அவ்வாறு ஒதுக்கும் முன்பாக அந்தக் கிட்டங்கியே தீப்பிடித்து, சரக்கு (அரிசி) அழிந்துவிடுகிறது.

எனவே அச்சரக்கின் (அரிசியின்) மீதான உடைமையுரிமை (property in the goods) வாங்குபவருக்கு (குமரனுக்கு) மாறவில்லை. இதனால் அந்த அரிசி மூட்டைகள் பிரிவு 20–ல் கூறப்பட்டபடி வழங்கத்தகு நிலையிலும் (deliverable state) இல்லை என்றே பொருளாகும். முருகன் உயர் ரக அரிசியை பிரித்து ஒதுக்கி

வைத்த பிறகுதான், குமரன் கேட்ட அத்தகு 7 மூட்டை அரிசி வழங்கத்தகு நிலைக்கு வருகிறது. இங்கும் சரக்கின் மீதான உடைமையுரிமை குமரனுக்கு மாறவில்லை. **பிரிவு 26–ன்படி,** 'இடர் என்பது சரக்கின் உடைமையுரிமையுடன் மாறக் கூடிய தாகும்' (Risk prima facie passes with property). இங்கு தீப்பிடித்து எரிந்த 7 மூட்டைகளின் மீதான உடைமையுரிமை குமரனுக்கு மாறவில்லை. முருகனிடமே உள்ளது. எனவே குமரன் அவ்விற்பனை ஒப்பந்தத்தை தள்ளுபடி செய்து, **பிரிவு 57–ன்படி** இழப்பீடு கோரி வழக்கிடலாம் அல்லது **பிரிவு 61–ன்படி** குமரன் கொடுத்த விலையான ரூ.8,000/–த்தை வட்டியுடன் திரும்பப் பெற முருகன் மீது வழக்கிடலாம். ஆனால், குமரன் என்பவர் முருகன் என்பவரைக் கட்டாயமாக ஒப்பந்தப்படிக்கு அரிசி கொடுக்க வேண்டுமெனக் கூற முடியாது. ஏனெனில் குமரன் கேட்ட உயர் ரக அரிசி முருகனால் உறுதி செய்யப்படவில்லை.

31. L goes to a shop of M and agrees to purchase some ready-made uniform and take delivery of the same next day. The uniform are destroyed in fire o the same night. Who should bear the loss? Discuss.

M என்பவரின் கடைக்கு L என்பவர் சென்று சில ரெமேட் சீருடைளை வாங்குவதற்கும், அவற்றை அடுத்த நாள் டெலிவரி எடுத்துக் கொள்வதாகவும் உடன்பாடு செய்துகொள்கிறார். ஆனால் அதே நாள் இரவு அச்சீருடைகள் ஒரு தீ விபத்தில் எரிந்துவிடுகின்றன. இழப்பை யார் ஏற்றுக்கொள்வது ? விவாதிக்க.

தீர்வு:

'இடர், சரக்கின் உடைமையுரிமையுடன் கடந்து செல்லும்' என்பது பொது விதி. அதாவது சரக்கு ஒப்படைக்கப்பட்டவுடன் அதன் பொறுப்பும் (இடர்) மாறிச் சென்று விடும். **பிரிவு 26–ன்படி** "சரக்குகளின் உரிமை, அவற்றை வாங்குபவருக்கு மாறும் வரை விற்பவரின் பொறுப்பிலிருக்கும். ஆனால் சரக்குகள் ஒப்படைவு செய்யப்பட்டாலும் இல்லையென்றாலும், சரக்குகளின் உரிமை வாங்குபவருக்கு மாற்றப்படும் வரை, அவை வாங்குபவரின் பொறுப்பிலிருக்கும். சரக்குகளுக்கு இழப்பு ஏற்பட்டால், அத்தருணத்தில் யாரிடம் சரக்குகளின் உரிமை இருந்ததோ அவரையே அவ்விழப்பு சாரும்".

மேற்படி பிரச்சனையில் சரக்குகளை (சீருடைகள்) வாங்க L உடன் படுகிறார். ஆனால் அவற்றை அதற்கடுத்த நாள் 'டெலிவரி' எடுத்துக் கொள்வதாக கூறிவிட்டு சென்றுவிடுகிறார். இங்கு மேற்படி உடன்பாட்டுடன் அச்சாரமாக ஏதேனும் தொகை கொடுத்துவிட்டுச் சென்றிருந்தாலோ அல்லது அச் சீருடைகளின் முழு விற்பனைத் தொகையையும் கொடுத்துவிட்டு சென்றிருந்தாலோ, அல்லது அச்சீருடைகள் எவையென்று உறுதி செய்து அவற்றை வாங்குபவர் தனியாக ஒதுக்கி வைத்திருந்தாலோ, அச்சீருடைகளின் உரிமை Lக்கு மாறிவிட்ட தாகப் பொருளாகும். அதே சமயத்தில் அச்சீருடைகளை அடுத்த நாள் டெலிவரி

எடுத்துக்கொள்வதாக அவரேதான் கூறுகிறார். இடையில் ஏற்படும் தீ விபத்தில் அச்சீருடைகள் அழிந்து விடுகின்றன. இங்குL- க்கு சரக்குகளின் உரிமை மாறிவிட்டதால், அவரே அச்சீருடைகளுக்கு உண்டான இழப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனினும் இம்மாதிரியான சூழ்நிலையில் கடைக்காரர் அச்சீருடைகளை பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். அவரது கவனமின்மையால் ஏற்பட்ட இழப்பிற்கு ஒப்படைப்பின் (Bailment) அடிப்படையில் வேண்டுமானால் நட்டஈடு கோரி L என்பவர் கடைக்காரரான M மீது வழக்கிடலாம்.

ஆனால் மேற்படி பிரச்சனையில் அவர் அச்சாரமோ அல்லது முழு விலையோ கொடுக்காமலும், அச்சீருடைகள் ஒதுக்கி வைக்கப்படாமலும், அடுத்த நாள் வந்து வாங்குவதாக கூறிவிட்டு சென்றிருந்து, தீ விபத்து ஏற்பட்டிருந்தால், இங்கு ஏற்பட்ட இழப்பிற்கு L பொறுப்பேற்க வேண்டியதில்லை. ஏனெனில் சரக்குகளின் உரிமை அவருக்கு மாறவில்லை.

12. X buys from Y a T.V. set for Rs. 5,000/- and pays full price and informs Y that he will take delivery of the same after a week. Later Y sells the same T.V. set to Z who does not know the first sale. Examine the nature of the title of Z.

X என்பவர் ரூ. 5,000/– விலை கொடுத்து Y யிடமிருந்து ஒரு T.V. செட்டை விலைக்கு வாங்குகிறார். அந்த T.V. செட்டை ஒரு வாரம் கழித்து எடுத்துக் கொள்வதாக X, Y யிடம் கூறுகிறார். ஆனால் இதற்கிடையில் Y அதே T.V. செட்டை Zக்கு விற்றுவிடுகிறார். ஆனால் T.V. செட்டின் முதல் விற்பனை பற்றி தெரியாது. Zற்கு அந்த T.V. செட் மீதுள்ள உரிமைமூலத்தின் தன்மையை ஆராய்க.

தீர்வு :

சரக்கு விற்பனைச் சட்டத்தின்படி **"ஒரு நபர் தன்னிடமிருப்பதை விடச் சிறந்த உரிமை மூலத்தை மற்றவருக்கு அளிக்க முடியாது"** என்பது பொது விதி. அதாவது ஒரு நபர் உரிமை மூலம் இல்லாமல் ஒரு சரக்கை விற்பனை செய்தால், வாங்குபவருக்கும் அவ்வாறே அச்சரக்கின் மீது உரிமை மூலம் இல்லாமல் போகிறது.

ஆனால் இப்பொது விதிக்கு சில விதிவிலக்குகள் சட்டத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஏனெனில் சரக்கின் உண்மையான உரிமைமூலத்தைப் பற்றி அறியாமல், அதனை வாங்கியவர்களுக்கெதிராக மேற்படி பொது விதி மிகக் கடுமையாக செயல்படுகிறது. எனவே நல்லெண்ணத்துடன் செய்யப்படும் வியாபார நடவடிக்கைகளில் வாங்குபவரைப் பாதுகாக்கும் பொருட்டு மேற்படி பொது விதிக்கு, விலக்குகள் உள்ளன. அதாவது விற்பவருக்கு சரக்கின் மீது உரிமை

இல்லாவிட்டாலும், வாங்கியவருக்கு அப்பொருளின் மீது உரிமை ஏற்படுகிறது. 27 முதல் 30 வரையுள்ள சட்டப்பிரிவுள் இவ்விதிவிலக்குகளைக் கூறுகின்றன.

நமது மேற்படி பிரச்சனைக்கு **பிரிவு 30 (1)** தீர்வளிக்கிறது. அதன்படி ஒரு சரக்கை விற்றவர் விற்பனைக்குப் பிறகும் அச்சரக்கை அல்லது அச்சரக்கிற்கான ஆவணங்களை தன்னிடம் வைத்திருந்து அதை வேறொருவருக்கு விற்றால், வாங்கியவர் அச்சரக்கின் மீது சிறந்த உரிமை மூலத்தைப் பெறுகின்றார். மேற்படி பிரச்சனையில் X என்பவர் Y என்பவரிடமிருந்து T.V. செட்டை முழு விலை கொடுத்து வாங்கிய பிறகு, அதனை ஒரு வாரம் கழித்து எடுத்துக் கொள்வதாக X கூறியதால், அந்த T.V.செட் Y வசமே உள்ளது. T.V. செட்டின் முழு விலையையும் Y பெற்றுக் கொண்டுவிட்டபடியால் அதற்குண்டான உரிமை மூலம் Y-யை சென்றடைகிறது. எனினும் Y மீண்டும் அதை Z என்பவருக்கு விற்கிறார். முந்தைய விற்பனை குறித்து Z-க்கு தெரியாது. இந்நிலையில் மேற்படி விதிவிலக்கின்படி அந்த T.V. செட்டின் மீது Z-க்கு நல்ல உரிமை மூலமே உள்ளது. ஏனெனில் அவர் முந்தைய விற்பனை பற்றி அறியாமல் நல்லெண்ணத்தோடு அந்த T.V. செட்டை வாங்கியுள்ளார். அந்த T.V. செட்டுக்கு Z தான் உரிமையாளர், அதே சமயத்தில் முழு விலையையும் கொடுத்த மேற்படி X, தான் கொடுத்த விலைக்காகவும், இழப்பீட்டிற்காகவும் Y மீது வழக்கிட்டு நிவாரணம் பெறலாம்.

33. 'A' sells and consigns goods to 'B' of the value of Rs. 10,000. 'B' assigns the bill of lading for these goods to 'C' to secure the sum of Rs. 5,000 due from him to 'C'. 'B' become insolvent. Can 'A' stop the goods in transit?

'அ' என்பவர் ரூ.10,000 பெறுமானமுள்ள சரக்குகளை விற்பனையாக 'ஆ' வசம் ஒப்படைக்கிறார். 'இ'க்கு தர வேண்டிய தொகை ரூ.5,000க்கு 'இ'யின் பெயருக்கு கப்பற் சரக்கு பட்டியலை 'ஆ' மாற்றிக் கொடுக்கிறார். இத்தருணத்தில் 'ஆ' நொடிப்பு நிலை அடைகிறார். சரக்கு செல்லுகையில் 'அ'வால் நிறுத்தம் செய்ய இயலுமா?

தீர்வு:

விற்பனையாளர், வாங்குவோருக்குச் சரக்குகளை அனுப்புவதற்காக சரக்கேற்றி (லாரி, ரெயில், கப்பல், பார்சல் சர்வீஸ் போன்றவை) ஒருவரிடம் ஒப்படைத்து அவை செல்லும் போது தடுத்து, அச்சரக்கிற்கான விலை செலுத்தப் பெறும் வரை, அவற்றை தன்னிடமே தக்க வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் 1930–ஆம் ஆண்டின் சரக்கு விற்பனைச் சட்டத்தின் **பிரிவு 50–ன்படி,** பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால்தான், இவ்வுரிமை விற்பனையாளருக்குக் கிடைக்கும். அவை, (i) அச்சரக்கின் விலை முழுவதுமாக செலுத்தப்படாதவராக அல்லது செலுத்த முனைவு செய்யப்படாதவராக

அவ்விற்பனையாளர் இருக்க வேண்டும்; (ii) அவர் சரக்கின் உடைமையை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும்; (iii) சரக்குகள் செல்லுகையின் பொருட்டு சரக்கேற்றி ஒருவரிடம் இருக்க வேண்டும். அதாவது சரக்குகள் வாங்கியவரை சென்றடைந்திருக்கக் கூடாது; (iv) வாங்கியவர் நொடிந்தவராகியிருக்க வேண்டும்.

வாங்கியவருக்கு சரக்கு வழங்கப்படாத வரை, சரக்கு செல்லுகையில் இருப்பதாக பொருளாகும். ஆனால் சரக்குகள் வாங்கியவரையோ அல்லது அவரது முகவரையோ சென்றடைந்துவிட்டால், 'சரக்கு செல்லுகையில் நிறுத்தம்' எனும் உரிமை முடிவிற்கு வருகிறது.

மேற்கண்ட பிரச்சனையில், 'அ' என்பவர் ரூ.10,000/– பெறுமானமுள்ள சரக்குகளை விற்பனையாக 'ஆ'–விற்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கிறார் (consigns). (பிரச்சனையின் தமிழாக்கத்தில் 'ஒப்படைக்கிறார்' என்றுள்ளது. சரக்கு வாங்குபவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டால், விலை செலுத்தப் பெறா விற்பனையாளர் அச்சரகை அதன் செல்லுகையில் நிறுத்த முடியாது. எனவே இது தவறான மொழியாக்கம் என்பதை கவனத்தில் கொள்க). எனவே சரக்கு செல்லுகையில் உள்ளது. மேலும் 'அ' என்பவர் மேற்கண்ட ரூ.10,000/–த்தை செலுத்தப் பெறாத விற்பனையாளராக உள்ளார். இந்நிலையில் 'இ'–க்கு தர வேண்டிய தொகை ரூ.5,000/–க்கு 'இ'யின் பெயருக்கு கப்பற் சரக்கு பட்டியலை 'ஆ' மாற்றிக் கொடுக்கிறார். இத்தருணத்தில் 'ஆ' நொடிப்பு நிலை அடைகிறார். எனவே 'அ' என்பவர் சரக்கு செல்லுகையில் நிறுத்தம் செய்யலாம். இங்கு 'இ'–க்கு தர வேண்டிய தொகை ரூ.5,000/–க்கு 'இ'–யின் பெயருக்கு கப்பற் சரக்கு பட்டியலை 'ஆ' மாற்றிக் கொடுத்துவிட்டதால் மட்டுமே 'அ' என்பவர் மேற்படி சரக்கு செல்லுகையில் நிறுத்தம் செய்யும் உரிமை பறிபோய்விடாது.

34. Under a contract of sale, X has despatched one lorry load of oranges to Y. In the meantime Y has become insolvant. What are the rights of X ? Discuss.

ஒரு விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் ஒரு லாரி லோடு ஆரஞ்சு பழங்களை X என்பவர் Yக்கு அனுப்பி வைத்தார். இதற்கிடையில் Y நொடிந்தவரானார். Xன் உரிமைகள் என்ன ?

தீர்வு:

ஆரஞ்சு பழங்களை ஏற்றுக் கொண்டு செல்லும் லாரியை வழியிலேயே நிறுத்தி (Right of stoppage of goods in transit) அப்பழங்களை திரும்ப X பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு **பிரிவு 50–ன்படி** உரிமை உண்டு.

அதே போல் மேற்படி ஆரஞ்சு பழங்கள் விரைவில் அழுகக்கூடியவை மற்றும் கெட்டுப் போகக்கூடியவை. எனவே அவற்றை **பிரிவு 54–ன்படி** மறுவிற்பனை செய்வதற்கும் X-க்கு உரிமை உண்டு.

1932-ஆம் ஆண்டின் இந்தியக் கூட்டாண்மைச் சட்டம் [The Indian Partnership Act, 1932]

35. A, B and C enter into a partership agreement under which C is not liable for losses. D filed a suit against A, B and C for the amount due from the firm. Examine the position of C.

A, B மற்றும் C ஆகியோர் கூட்டாண்மை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினார். அதன்படி C என்பவர் இழப்புகளுக்கு பொறுப்பானவரல்ல. நிறுமத்திலிருந்து சேர வேண்டிய தொகைக்கு D ஒரு வழக்கை A, B மற்றும் C-க்கு எதிராக தொடுத்தார். C-யின் நிலையை ஆராய்க.

தீர்வு:

மேற்படி பிரச்சனையின்படி A, B மற்றும் C ஆகியோர் கூட்டாண்மை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர். அதன்படி C என்பவர் இழப்புகளுக்கு பொறுப்பான வரல்ல. இவ்வாறு இழப்புகளுக்கு பொறுப்பாகாத கூட்டாளி, **'இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி'** (Partner only for profits) எனப்படுகிறார்.

இவ்வாறு செய்து கொள்ளும் கூட்டாண்மை ஒப்பந்தம், முதற்கண் செல்லத்தக்கதே. எனினும், இவரும் மற்ற கூட்டாளிகளைப் போன்றே கூட்டாண்மை நிறுமத்துடன் தொடர்பு கொள்ளும் மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பானவர். மேற்கண்ட ஒப்பந்தம், அம்முன்றாம் நபர்களைப் பொறுத்தவரை அத்தகு கூட்டாளிக்கு (C–க்கு) எவ்வித பாதுகாப்புரிமையையும் வழங்காது. கூட்டாண்மையின் இலாப–நட்டக் கணக்குகளை கணக்கிடும் பொழுது, தனக்கு இழப்பில் (நட்டங்களில்) பொறுப்பில்லை என்று கூற மட்டுமே, மேற்கண்ட ஒப்பந்தம்C –க்கு உரிமை வழங்குகிறது. எனவே பிரச்சனையின்படி, நிறுமத்திலிருந்து சேர வேண்டிய தொகைக்காக D என்பவர் A மற்றும் B-க்கு எதிராக வழக்கு தொடுப்பதோடு மட்டுமல்லாமல், C-க்கு எதிராகவும் தொடுக்கலாம். அந்நிறுமம் D–க்கு கொடுக்க வேண்டிய தொகைக்கு, A மற்றும் B-யுடன் சேர்ந்து C-யும் பொறுப்பானவரே. இதுதான் C-யின் சட்டப்பூர்வமான நிலை. C, மேற்படி ஒப்பந்தத்தைக் காண்பித்து, பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ளவியலாது.

36. A and B are partners of a trading firm. A employes for the firm a typist who is beautiful and expensive without the consent of B. Is B bound by the appointment ?

ஒரு வணிக நிறுமத்தின் கூட்டாளிகள் A மற்றும் B. A என்பவர் அழகான அதிக சம்பளம் பெறும் ஒரு டைப்பிஸ்ட்டை Bயின் ஒப்புதலில்லாமல் வேலைக்கு அமர்த்துகிறார். B இதற்கு கட்டுப்பட்டவரா?

தீர்வு:

இந்திய கூட்டாண்மைச் சட்டம் **பிரிவு 19–ன்படி,** கூட்டாளிகளுக்கு சில உட்கிடை அதிகாரங்கள் (Implied Authority) உண்டு. அதாவது, நிறுமம் நடத்தும் தொழிலைச் சிறந்த முறையில் நடத்துவதற்குக் கூட்டாளிகள் வழக்கமாக எடுத்துக் கொள்ளும் செயல் நிறுமத்தைக் கட்டுப்படுத்தும். இவ்வாறு நிறுமத்தைக் கட்டுப்படுத்தும் கூட்டாளியின் அதிகாரமே உட்கிடை அதிகாரம் எனப்படுகிறது. ஒரு கூட்டாளிக்கு பல்வேறு விஷயங்களில் உட்கிடை அதிகாரம் உள்ளது. அவற்றில், கூட்டாண்மை நிறுமத்திற்காக பணியாட்களை அமர்த்துவதும் ஒன்று.

நமது மேற்படி பிரச்சனையில் A ஒரு அழகான டைப்பிஸ்ட்டை வேலைக்கு அமர்த்துகிறார். எந்தவொரு நிறுமமும் தமது கீழ் பணிபுரிய வேண்டிய டைப்பிஸ்ட் அழகாக இருத்தல் வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே. அழகை யார்தான் வெறுப்பர்? அதே சமயத்தில் அவளிடம் தட்டச்சு வேகமாக செய்யும் திறமை அதிகமாக இருக்கலாம். எனவே அதிக சம்பளம் கொடுப்பதும் இயற்கையே. இதனால் மேற்படி A-யின் செயலுக்கு B கட்டுப்பட்டராகிறார். ஆனால் இதே அழகான டைப்பிஸ்ட்டை வேலைக்கு அமர்த்துவதற்கு பதிலாக அரைகுறை ஆடைகள் அணிந்த கவர்ச்சியான தோற்றமுடைய, தட்டச்சு இயந்திரத்தையே அறியாத ஒரு பெண்ணை டைப்பிஸ்ட்டாக A நியமித்தால் அதற்கு B பொறுப்பல்ல. ஏனெனில் அவ்வாறு தகுதியற்றவர்களை நியமிக்கும் உட்கிடை அதிகாரம் A-க்கு இந்தியக் கூட்டாண்மைச் சட்டப்படி கிடையாது.

37. X has been admitted as a new partner. What are his obligations as far as old debts of the firm ?

X என்பவர் ஒரு புதிய கூட்டாளியாக நிறுமத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகிறார். அந்நிறுமத்தின் பழைய கடன்களைப் பொறுத்தவரை அவரது கடப்பாடுகள் யாவை ?

தீர்வு:

இந்நூலின் பக்கம் எண். 154–ல் வினா எண். 12–ல் 'உள்வரும் கூட்டாளியின் பொறுப்பு' என்ற தலைப்பின் கீழ் காண்க.

38. A,B,C are partners. C retires from partnership. A and B continued the partership in its old name after admitting D as partner. X, a customer without knowing the change in the partnership started business relations with the reconstituted partnership. He wants to make A,B,C and D liable. Advise X.

A, B, C ஆகிய மூவரும் கூட்டாளிகள். C தொழிலை விட்டு விலகுகிறார். Aயும் Bயும் Dயை சேர்த்துக் கொண்டு பழைய கூட்டாண்மையின் பெயரில் கூட்டாண்மையைத் தொடர்ந்து நடத்துகின்றனர். X எனும் ஒரு வாடிக்கையாளர்

மாற்றியமைக்கப்பட்ட கூட்டாண்மையுடன் அம்மாறுதல் பற்றி அறியாதவராக வணிகத் தொடர்பு கொள்கிறார். அவர் A, B, C மற்றும் D இவர்களை கடப் பாட்டுக்குள்ளாக்க விரும்புகிறார். Xக்கு அறிவுரை தருக.

தீர்வு:

ஒரு கூட்டாளி விலக வேண்டுமெனில் அவர் பொது அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் வரை, அவர் விலகிய பின்பும் நிறுமத்தின் செயல்களுக்கு தொடர்ந்து பொறுப்பாளியாவார் என்று இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் **பிரிவு 32(3)** கூறுகிறது. மேற்படி பிரச்சினையில் C விலகிய விபரத்தை X அறியவில்லை. எனவே C பொது அறிவிப்பு கொடுக்கவில்லை என்றே கொள்ள வேண்டும். எனவே C விலகிய பின்பும், அவர் கூட்டாளியாக இருந்த நிறுமம் செய்த செயல்களுக்காக தொடர்ந்து பொறுப்பாளியாக உள்ளார்.

அதே போல் D என்பவர் ஒரு புதிய கூட்டாளியாக சேருகிறார். இவர் நிறுமத்தின் முந்தைய செயல்களுக்கு பொறுப்பாவதில்லை. ஆனால் D-யைச் சேர்த்துக் கொண்டு புதிதாக மாற்றியமைக்கப்பட்ட நிறுமம், பழைய நிறுமத்தின் பொறுப்புகளை அப்படியே ஏற்றுக் கொண்டால் D பொறுப்பாளியாவார். ஆனால் மேற்படி பிரச்சனையில் இவ்வாறு கூறப்படவில்லை. எனவே A, B மற்றும் C மீது வழக்கிடுவதே X-க்கு கிடைக்கும் தீர்வழி ஆகும். அவர்கள்தாம் நிறுமத்தின் பொறுப்பாளியாக உள்ளனர்.

39. X, Y and Z are partners in a trade. X retires from partnership . Y and Z continue the business in partership and incur debts. Can the creditors make X liable for the debts? Give reasons for your answer.

X, Y மற்றும் Z என்பவர்கள் ஓர் வர்த்தகத்தில் கூட்டாண்மையர்கள். அக்கூட்டாண்மையிலிருந்து X என்பவர் ஓய்வு பெறுகிறார். ஆனால் Y மற்றும் Z அக்கூட்டாண்மையினை தொடர்ந்து செயல்பட்டு கடனுக்குள்ளாகிறார்கள். அக்கடன்களுக்கு கடனாளர்கள் X யின் மீது பொறுப்பு சுமத்த முடியுமா? உரிய காரணங்களுடன் விடை எழுதுக.

தீர்வு:

ஒரு கூட்டாளி விலக வேண்டுமெனில் அவர் பொது அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் வரை, அவர் விலகிய பின்பும் நிறுமத்தின் செயல்களுக்கு தொடர்ந்து பொறுப்பாளியாவார் என்று இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் **பிரிவு 32(3)** கூறுகிறது. மேற்படி பிரச்சினையில் X விலகுகிறார். ஆனால் அவர் விலகிய விபரம் குறித்து பொது அறிவிப்பு தந்த விபரம் குறித்து மேற்படி பிரச்சனையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலைப்பாட்டை அவ்வாறே ஏற்றுக் கொண்டால், X என்பவர் அக்கூட்டாண்மைக்கு தொடர்ந்து பொறுப்புடையவ

ராக உள்ளதாகப் பொருளாகும். எனவே அக்கூட்டாண்மைக்கு கடன் கொடுத்தவர்கள், தங்கள் கடனுக்கு X-யும், Y மற்றும் Z உடன் சேர்த்து பொறுப்பாக்க முடியும்.

40. A carried on business under the name of 'Kailas Traders', the name of his brother. A sold his business with the goodwill together with the exclusive right of using the name 'Kailas Traders and Company.' The buyer persisted in using the name 'Kailas Traders.' Can the buyer do so? Give reasons.

A என்பவர் தனது சகோதரரின் பெயரான 'கைலாஷ் டிரேடர்ஸ்' எனும் பெயரில் வாணிகம் செய்து வந்தார். A தனது மேற்படி வாணிகத்தை அதன் நற்பெயருடன், 'கைலாஷ் டிரேடர்ஸ் மற்றும் கம்பெனி' எனும் பெயரை உபயோகிப்பதற்குண்டான முழு உரிமையுடன் விற்பனை செய்தார். ஆனால் வாங்கியவரோ 'கைலாஷ் டிரேடர்ஸ்' எனும் பெயரை வாணிகத்திற்கு உபயோகிப்பதிலேயே விடாது குறியாக இருந்தார். வாங்குபவர் அவ்வாறு செய்ய இயலுமா? காரணங்கள் தருக.

தீர்வு:

இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் **பிரிவு 55(1)–ன்படி** ஒரு நிறுமத்தின் வணிக நற்பெயர் அந்நிறுமச் சொத்தின் ஒரு பகுதியாகும். அதைத் தனியாகவோ மற்ற சொத்துக்களுடனோ விற்பனை செய்யலாம்.

வணிக நற்பெயர் என்பது அந்நிறுமத்தின் பெயரையும் உள்ளடக்கிய தாகும். ஒரு வணிகம் அதன் நற்பெயருடன் விற்கப்படும் பொழுது, அவ்வணிகத் தின் பெயரை அப்படியே உபயோகிப்பதற்கு, அவ்வணிகத்தை வாங்கியவருக்கு முழு உரிமை உண்டு. ஏனெனில் அவ்வணிகத்தை விற்றவர் **பிரிவு 55(2)–ன்படி** அவ்வணிகத்தின் பெயரை மீண்டும் தான் ஆரம்பிக்கும் வணிகத்திற்கு உபயோகப் படுத்தக் கூடாது.

எனவே நமது மேற்படி பிரச்சனையில் அவ்வணிகத்தை வாங்கியவர் 'கைலாஸ் டிரேடர்ஸ்' எனும் பெயரிலேயே தொடர்ந்து வணிகத்தை நடத்தலாம். 'கைலாஷ் டிரேடர்ஸ் மற்றும் கம்பெனி' எனும் பெயரில்தான் வணிகத்தை நடத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டால், அது அவ்வணிகத்தை நற்பெயருடன் வாங்கியதாகப் பொருளாகாது. நற்பெயருக்குண்டான மதிப்பை வேண்டுமானால், வணிகத்தின் மொத்த விற்பனைத் தொகையிலிருந்து கழித்துக் கொண்டு, அவ்வணிகத்தை வாங்கலாம்.

ஆனால் இவ்வாறு அவ்வணிகத்தை வாங்குவதால் பலன் ஏதுமில்லை. கூட்டாண்மை நிறுமப் பெயருடன் (Firm name), வணிக நற்பெயரையும் வாங்குவதே சிறந்தது.

41. 'A' and 'B' are partners. 'A' buys railway shares in his own name with the money of the firm and for the firm. Who is the actual owner of the property ?

'அ' மற்றும் 'ஆ' ஒரு கூட்டாண்மையின் பங்குதாரர்கள். 'அ' என்பவர் புகை வண்டி நிறுவனத்துடைய பங்குகளைக் கூட்டாண்மை நிறுமத்தின் பணம் போட்டு கூட்டாண்மைக்காகத் தன் பெயரில் வாங்குகி றார். இப்பங்குகளின் உரிமையாளர் யார் ?

தீர்வு:

இப்பிரச்சனைக்குத் தீர்வு காண நாம் எவையெல்லாம் ஒரு **கூட்டாண்மை நிறுமத்தின் சொத்தாகும் (The Property of the firm)** என்று கூறும் **பிரிவு 14–ஐக்** கவனிக்க வேண்டும். அதன்படி, "கூட்டாளிகளுக்கிடையிலான ஒப்பந்தத் திற்கு உட்பட்டு, கூட்டாண்மை நிறுமத்தால் அல்லது நிறுமத்திற்காக, அல்லது நிறுமத்தின் நோக்கங்களுக்காகவும் மற்றும் அதன் வியாபாரத்தின் போதும் கொள் முதல் மூலமாக அல்லது வேறுவிதமாக நிறுமத்தின் இருப்பில் ஆதியில் கொண்டு வரப்பட்ட, அல்லது அடையப்பெற்ற சொத்து மற்றும் அச்சொத்தில் உள்ள உரிமைகள் மற்றும் நலன்கள் அனைத்தையும் நிறுமத்தின் சொத்து உள்ளடக்கியதாகும், மற்றும் வணிகத்தின் நன்மதிப்பையும் உள்ளடக்கியதாகும்.

முரண்பாடான கருத்து தோன்றினாலன்றி, நிறுமத்தின் பணத்தைக் கொண்டு அடையப்பெற்ற சொத்து மற்றும் அச்சொத்தில் உள்ள உரிமைகள் மற்றும் நலன்களானவை, நிறுமத்திற்காக அடையப்பெற்றதாகவே கருதப்படுதல் வேண்டும்.

நமது பிரச்சனையில் அ என்ற பங்குதாரர் கூட்டாண்மை நிறுமத்தின் பணம் போட்டு ஒரு புகைவண்டி நிறுவனத்தின் பங்குகளை கூட்டாண்மைக்காக தன் பெயரில் வாங்குகிறார். மேற்படி பிரிவு 14–இன் இரண்டாம் பத்தி கூறுகின்ற வகைமுறையின்படி, நிறுமத்தின் பணத்தைக் கொண்டு அடையப் பெற்ற சொத்து மற்றும் அச்சொத்தில் உள்ள உரிமைகள் மற்றும் நலன்களானவை, நிறுமத்திற்காக அடையப்பெற்றதாகவே கருதப்பட வேண்டும்.

எனவே அ என்ற பங்குதாரர் தன் பெயரில் அப்பங்குகளை வாங்கியிருந் தாலும், கூட்டாண்மையின் பணத்தைக் கொண்டு வாங்கியிருப்பதால், அதன் உண்மையான உரிமையாளர் அவர் ஆ–வுடன் பங்குதாராக உள்ள நிறுவனமேயாகும்; அ என்ற பங்குதாரர் அப்பங்குகளுக்கு உரிமையாளர் ஆக மாட்டார் என்பதே தீர்வு.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்

மூன்றாண்டு சட்டக்கல்வி

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (Semester) EXAMINATIONS, MAY 2018

(Three Years Regular Course)
First Year / Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Distinguish a condition from a warranty. What are the implied conditions and warranties in a contract of sale of goods ?

ஒரு நம்புறுதியிலிருந்து நிபந்தனையை வேறுபடுத்துக. சரக்குகள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் உட்கிடையான நிபந்தனைகளும் நம்புறுதிகளும் யாவை ?

2. Define partnership. Discuss the rights of partners.

கூட்டாண்மையை வரையறு. கூட்டாளிகளின் உரிமைகளை விவாதிக்க.

3. "A bailee is bound to take reasonable care and nothing more" - Elucidate.

"ஒப்படைவு பெறுநர் போதிய கவனம் செலுத்த வேண்டுமே அன்றி அதற்கு அப்பாற்பட்டு இல்லை" – என்பதை விவரிக்க.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the concept of "Agency coupled with Interest".
நலன் இணைந்த முகமையின் கருத்துக்களை விளக்குக.

5. Define Trade ractice and explain Restrictive Trade Practice measure.
வணிக பழக்கம் என்பதை வரையறை செய்து வரையறைக்குட்பட்ட வணிக பழக்கத்தின் நடவடிக்கைகளைப் பற்றி விவரிக்க.

6. Explain the procedure to be followed by the National Commission.
நாட்டு ஆணையம் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை விவரி.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Pledge by non-owners.
உரிமையற்றவர்கள் செய்யும் அடகு.

(b) Difference between Partnership and Joint Family.
கூட்டாண்மைக்கும் மற்றும் கூட்டுக் குடும்பத்திற்கும் உள்ள வேற்றுமைகள்.

(c) Irrevocable Agency.
திரும்பப் பெற முடியாத முகமை.

(d) Particular lien.
குறிப்பிட்ட பற்றுரிமை.

(e) Hirer of services.
சேவையை பணம் கொடுத்து பெறுபவர்.

(f) Del credere agent.
பிணை முகவர்.

(g) Stoppage in transit.
செல்லுகையில் நிறுத்தம்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. An unregistered partnership firm borrows Rs. 1,00,000/- from Mr. X. The firm failed to repay it within time. Now what can Mr. X do to recover the amount. Advise X.

'X' என்பவரிடமிருந்து ரூபாய். 1,00,000/–த்தை பதிவு செய்யப்படாத கூட்டாண்மை ஒன்று வாங்கியது. அக்கூட்டாண்மை குறித்த காலத்திற்குள் அதனை திருப்பிச் செலுத்த தவறியது. 'X' என்பவர் அதனை வசூல் செய்ய அறிவுரை வழங்குக.

9. Sanjay applied for an 'Aadhaar Card'. He did not receive the card till date.

Can he file a complaint against the Unique Identification Authority of India (UIADAI) before the Consumer Court ? Decide.

சஞ்சை என்பவர் ஒரு ஆதார் அட்டை (சாதாரண மனிதனின் அதிகாரம்) வழங்குமாறு விண்ணப்பம் செய்தார். நாளது வரை அந்த அட்டை அவருக்கு கிடைக்கப்படவில்லை. அவர் இந்திய தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்புக்கு எதிராக நுகர்வோர் நீதிமன்றத்தில் முறையீடு தாக்கல் செய்ய முடியுமா ? தீர்மானிக்க.

10. 'A' finds an article belonging to 'B', of the value of Rs. 1,000/-. 'A' incurs expenditure to the extent of Rs. 900/- towards safe keeping of the article and for finding out the owner. Can he recover the amount of Rs. 900/- from 'B' ?

'A' என்பவர் 'B' என்பவருக்கு சொந்தமான ஒரு பொருளைக் கண்டெடுக்கிறார். அப்பொருளின் மதிப்பு ரூ. 1,000/–மாகும். 'A' அப்பொருளைப் பாதுகாத்திடவும், அப்பொருளின் உரிமையாளரைக் கண்டுபிடிக்கவும் செலவிட்ட தொகை ரூ. 900/–யை 'B'-யிடமிருந்து பெற இயலுமா ?

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2018

(Three Years Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define bailment. Explain the duties of bailee.

ஒப்படைவை வரையறுக்கவும். ஒப்படைவு பெறுபவரின் கடமைகளை விவரிக்க.

2. Define a contract of Indemnity. What are the rights of an indemnity holder? Distinguish between Indemnity and Guarantee.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையறை செய்க. ஈட்டுறுதி பெற்றிருப்பவரின் உரிமைகள் யாவை ? ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதிக்குள்ள வேற்றுமைகள் யாவை ?

3. Define "Contract of Guarantee'. Discuss the element of consideration with reference to a contract of guarantee.

பொறுப்புறுதி ஒப்பந்தம் என்பதை வரையறை செய்க. பொறுப்புறுதி ஒப்பந்தத்தில் மறுபயன் குறித்த ஆக்கக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "The surety is a favoured debtor" - Discuss.
பிணையாளர்வர் ஒரு ஆதரவு பெற்ற கடனாளி – விவாதிக்க.

5. Explain the procedure to be followed by the district forum on receipt of a complaint from a consumer.
ஒரு நுகர்வோரிடமிருந்து குற்ற முறையீடு கிடைக்கப் பெற்றதும் மாவட்ட நுகர்வோர் மன்றம் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

6. Discuss the growth and development of consumer movement in India.
இந்தியாவில் நுகர்வோர் இயக்க வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் பற்றி விவாதிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Legal position of sub-agent.
சார்பு முகவரின் சட்ட நிலை.

(b) Reconstitution of firm.
கூட்டாண்மையின் மறு கட்டமைப்பு

(c) Kinds of partner.
கூட்டாண்மையர்களது வகைகள்.

(d) Undisclosed principal.
வெளிப்படுத்தப்படாத முதல்வர்.

(e) Consumer disputes.
நுகர்வோர் தகராறுகள்.

(f) Rule relating to passing of property.
உரிமை மாற்றம் சார்ந்த விதிகள்.

(g) Rights of a finder of lost goods.
காணாமல் போன பொருளைக் கண்டெடுப்பவரின் உரிமைகள்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' purchased a xerox machine. 'X' died within one year from the date of purchase. The machine is defective. Can the legal heirs of 'X' file a complaint under the Consumer Protection Act ?
'X' என்பவர் ஒரு படியெடுக்கும் பொறியை விலைக்கு வாங்கினார். அதை வாங்கிய நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் 'X' என்பவர் இறந்து விடுகிறார். அந்தப் பொறியில் குறைபாடு இருந்தது. 'X' என்பவரின் சட்ட இறங்குரிமையர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புகார் தாக்கல்

செய்ய இயலுமா ?

9. 'A' obtains a loan from a co-operative society for which 'B' is the guarantor. The society waived repayment of loan. Explain 'B' liability as a surety.

'B' என்பவரை பொறுப்புறுதியராகக் கொண்டு 'A' என்பவர் கூட்டுறவு சங்கத்தில் ஒரு கடன் பெறுகிறார். அச்சங்கம் கடனை திரும்ப செலுத்த விடுவிப்பு அளித்தது. 'B'-யின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

10. 'A' directs 'B' his agent to buy a certain house for him. 'B' tells 'A' it cannot be bought. Later 'A' discovers that 'B' has bought the house for himself. What is remedy open to 'A' under law ?

'B' என்னும் தனது முகவரை 'A' என்பவர் தனக்கு ஒரு வீடு வாங்குமாறு ஏவுகிறார். B' அதை வாங்குவதற்கு இயலாது எனக் கூறுகிறார். அதன் பின்னர் 'B' அந்த வீட்டை தனக்காக வாங்கிக் கொள்கிறார் என்று 'A' அறிகிறார். 'A'-க்கு சட்டத்தில் உள்ள தீர்வழிகள் யாவை ?

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2019

(Three Years Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Contract of Guarantee". Explain the distinction between contract of Indemnity and Contract of Guarantee.

"பொறுப்புறுதி ஒப்பந்தம்" என்பதை வரையறை செய்க. ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை விளக்குக.

2. What is "Bailment"? What are the rights and duties of a bailor and bailee?

"ஒப்படைவு" என்றால் என்ன? ஒப்படைவு செய்பவர் மற்றும் ஒப்படைவு பெறுபவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் யாவை?

3. What is Lien? Discuss the kinds of Lien in detail.

பற்றுரிமை என்றால் என்ன? பற்றுரிமையின் வகைகளை விரிவாக விளக்குக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss about th Consume Protection Councils in India in detail.

இந்தியாவில் உள்ள நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் பற்றி விரிவாக விவாதிக்கவும்.

5. Define "Partnership". Discuss about the essentials of partnership under the Partnership Act.

"கூட்டாண்மை" என்பதை வரையறை செய்து கூட்டாண்மை சட்டத்தின் கீழ் கூட்டாண்மையின் இன்றியமையாதவைகளை விவாதிக்கவும்.

Define 'Condition' and 'Warranty' and explain the exemption to this clause.

நிபந்தனை மற்றும் நம்பிறுதி என்பதை வரையறை செய்க. மேலும் இந்த வகைபாத்திற்கான விலக்குகள் பற்றி விளக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Partnership Property
கூட்டாண்மை சொத்து

(b) Mercantile Agent
விற்பனை முகவர்

(c) Duties of Agent
முகவரின் கடமைகள்

(d) Dugdale Vs. Lovering
டக்டேல் எதிர் லவ்ரிங்

(e) Birkmir Vs. Darnell
பிர்க்மிர் எதிர் டேல்நீல்

(f) Principal debt
முதன்மை கடன்

(g) Finder of Lost goods
தொலைந்த பொருளை கண்டெடுத்தவர்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Prakash is a manufacurer of Soda Bevarages. He purchased a machine for preparing Soda for his factory for commercial purpose. The machine became defective. Can he get remedy under the Consumer Protection Act?

பிரகாஷ் என்பவர் சோடா பானம் தயாரிப்பவராவார். அவர் தனது தொழிற்சாலைக்கென வியாபார நோக்கில் சோடா தயாரிக்கும் இயந்திரம் ஒன்றினை வாங்குகிறார். அந்த இயந்திரமானது குறைபாடு உடையதாகின்றது. அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற இயலுமா?

9. A guarantees to B the payment of Bill of exchange by C the acceptor.The Bill was dishonoured by C. Discuss the liability of A

பிரகாஷ் என்பவர் சோடா பானம் தயாரிப்பவராவார். அவர் தனது தொழிற்சாலைக்கென வியாபார நோக்கில் சோடா தயாரிக்கும் இயந்திரம் ஒன்றினை வாங்குகிறார். அந்த இயந்திரமானது குறைபாடு உடையதாகின்றது. அவர் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற இயலுமா?

10. Arun pleadged his cinema projector and accessories with a bank. The bank allowed the property to remain with the pledger. Subsequently the pledger sold the machinery. Discuss the rights of the banker.

அருண் என்பவர் தனது படக்காட்சி எந்திரம் மற்றும் அதனுடன் சேர்ந்த தளவாட பொருட்களை வங்கி ஒன்றில் அடகு வைக்கிறார். ஆனால் வங்கியானது மேற்கண்ட சொத்துக்களை அடகு வைப்பவர் வசம் வைத்துக் கொள்ள அனுமதித்திருந்தது. பின்னர் அடகு வைத்தவர் அந்த எந்திரங்களை விற்றுவிடுகின்றார். வங்கியரின் உரிமையினை விவாதிக்கவும்.

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2019

(Three Years Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Contract of indemnity. What are the rights of indemnity holder? When does indemnifier's liability commence?

"ஈட்டுறுதி ஒப்பந்தம்" வரையறு. ஈட்டுறுதி பெற்றிருப்பவரின் உரிமைகள் யாவை? ஈட்டுறுதி அளித்தவரின் பொறுப்பு எப்பொழுது ஆரம்பமாகிறது?

2. Who is a finder of lost goods? What are his rights and duties?

காணாமல் போன பொருளைக் கண்டெடுத்தவர் என்பவர் யார்? அவருடைய உரிமைகளும் கடமைகளும் யாவை?

3. Define 'Consumer', 'who is not a consumer', 'Service' and 'Deficiency in service' as per the provisions of the Consumer Protection Act. Explain their conditions.

'நுகர்வோர்', 'நுகர்வோர் அல்லாதவர்', 'சேவை' மற்றும் 'சேவையில் குறைபாடு' ஆகியவற்றை நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின்படி வரையறை செய்க. மேலும் அவைகளின் முக்கியக்கூறுகளை விளக்குக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define "Bailment". State the rights and duties of Bailor and Bailee.

'ஒப்படைவு' என்பதை வரையறு. ஒப்படைவு பெற்றவர் மற்றும் ஒப்படைவு அளித்தவர் ஆகியவர்களின் உரிமைகளையும், கடமைகளையும் கூறு.

5. Define and explain the term "Unfair Trade Practice" under the Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நேர்மையற்ற வணிகப்பழக்கம் என்ற பதத்தினை வரையறை செய்து விளக்குக.

6. Explain the different methods by which a partnership firm can be dissolved.

ஒரு கூட்டாண்மையினைக் கலைப்பதற்கான வெவ்வேறு முறைகள் யாவை என்பதை விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) State Commission
மாநில ஆணையம்

(b) Stoppage in transit
செல்லுகையில் நிறுத்தம்

(c) Caveat emptor
வாங்குபவனே வழித்திரு

(d) Pledge
அடகு

(e) Partnership at will
விரும்பும் வரை கூட்டு

(f) Kinds of partners
கூட்டாளிகளின் வகைகள்

(g) Kinds of lien
பற்றுரிமையின் வகைகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A minor was admitted to the benefits of the partnership firm. The firm had dealing with Siva. Due to some official reason, the firm was indebted to the tune of Rs. 4 lakhs to Siva. Subsequently the partners were declared as insolvent and the firm was dissolved. Siva brought an action against the minor to recover Rs. 4 lakhs. Can he succeed?

கூட்டாண்மை நிறுமத்தின் நலனுக்காக ஒரு இளவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். நிறுமம் சிவா என்பவருடன் வணிக நட்புறவினை வைத்திருந்தது. சில நிருவாகக் காரணத்தால் நிறுமம் ரூ.4 இலட்சம் அளவிற்கு சிவா என்பவரிடம் கடன் பட்டிருந்தது. இதன் பிறகு நிறுமத்தின் கூட்டாளிகளை நொடிப்பு நிலையர் என்று அறிவித்ததால் நிறுமம் கலைக்கப்பட்டது. சிவா என்பவர் ரூ. 4 இலட்சத்தை வசூலிக்க இளவர் மீது வழக்கிடுகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

9. A applied for a PAN card. Is he a Consumer? Decide.

அ ஒரு PAN அட்டை வழங்குமாறு விண்ணப்பம் செய்கிறார். அவர் ஒரு நுகர்வோரா? தீர்மானிக்க.

10. A purchases a table with a broken leg from B. Can A repudiate the contract?

அ என்பவர் ஒரு கால் முறிந்த மேசையை ஆ என்பவரிடம் வாங்கினார். அ என்பவர் ஒப்பந்தத்தை தள்ளி வைக்க முடியுமா?

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JANUARY 2021

(Three Years Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Contract of indemnity. What are the rights of indemnity holder? Distinguish between Indemnity and Guarantee.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையரை செய்க. ஈட்டுறுதி பெற்றிருப்பவரின் உரிமைகள் யாவை? ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதிக்குள்ள வேற்றுமைகளைக் கூறுக.

2. On what grounds may a Court dissolve the firm and discuss the relevant provisions of the Act.

கூட்டாண்மை நிறுமத்தை எக்காரணத்தின் அடிப்படையில் நீதிமன்றம் கலைக்கலாம் என்பதை தகுந்த சட்டப்பிரிவுகளோடு விவாதிக்கவும்.

3. Define bailment and enumerate the rights and duties of a bailee..

ஒப்படைவு என்பதை வரையறு. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி விவரி.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. How is an Agency terminated by the acts of parties and by the operation of law?

தரப்பினர்களின் செயல்களாலும், சட்டத்தின் செயலாலும் முகவரியம் எவ்வாறு முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது?

5. Define pledge and enumerate the rights of a Pawner and Pawnee.

அடகு என்பதை வரையறை செய்து அடகு வைப்பவர் மற்றும் அடகு பெறுபவர் ஆகியோருடைய உரிமைகளைக் குறிப்பிடுக.

6. Define trade practice and explain restrictive trade practice measure.

வணிக பழக்கம் என்பதை வரையறை செய்து வரையறைக்குட்பட்ட வணிக பழக்கத்தின் நடவடிக்கையைப் பற்றி விவரிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Lien an its nature

பற்றுரிமை மற்றும் அவற்றின் தன்மை

(b) Auction Sale

ஏல விற்பனை

(c) Goods and Documents of title of goods

சரக்குகள் மற்றும் சரக்குகளின் உரிமை மூல பத்திரம்

(d) Grace v. smith

கிரேஸ் எதிர் ஸ்மித்

(e) Caveat emptor

வாங்குபவனே விழித்திரு.

(f) Consumer Protection Councils

நுகர்வோர் பாதுகாப்பு குழுக்கள்

(g) Deficiency in service

சேவையில் குறைபாடு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A lends a horse to B which is unruly. This was not disclosed to B, though A was aware of it. While racing, B was thrown away and injured. Whether A is answerable to B for the injury?

அ என்பவர் ஒரு முரட்டுக்குதிரையினை ஆ என்பவருக்கு வாடகைக்கு கொடுத்தார். அது முரட்டுக் குதிரையென்று தெரிந்திருந்தும் அதனை ஆ என்பவருக்கு தெரியப்படுத்தவில்லை. பந்தையத்தின் பொழுது ஆ என்பவரை குதிரை தூக்கி எறிந்ததால் அவருக்கு காயம் ஏற்பட்டது. ஆ–வின் காயத்திற்கு அ பதில் சொல்ல கடமைப்பட்டவரா?

9. A tells a shopkeeper, "deliver the rice to B, I will see you paid" - Is it a contract of indemnity or guarantee - Give reason for your answer.

அ ஓர் கடைக்காரரிடம் 'அரிசியை ஆ–விடம் தந்துவிடவும், நான் உமக்கு அதற்குரிய பணத்தை கிடைக்குமாறு செய்கிறேன்" என்று கூறினார். இது ஒரு ஈட்டுறுதி அல்லது பொறுப்புறுதி ஒப்பந்தமா என்பதை தக்க காரணங்களுடன் விடையளிக்கவும்..

10. A purchased two computers from B's shop. One was for his home and the other for his office. Both the computers were found to be defective. Has he got any remedy under the Consumer Protection Act?

அ இரண்டு கணிப்பொறிகளை ஆ–வின் கடையிலிருந்து விலைக்கு வாங்கினார். ஒன்று அவரது விட்டு உபயோகத்திற்கு எனவும், மற்றொன்று அவர் அலுவலகத்திற்கு என்றும் வாங்கப்பட்டது. இரண்டு கணிப்பொறிகளிலும் பழுது இருந்தது. நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் அவருக்கு ஏதாவது தீர்வழி உண்டா?

(For candidates admitted during 2017-2018)

L.L.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022

(Three Years Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the circumstances under which a surety in discharged from liability.

எந்தெந்த சூழ்நிலைகளில் பொறுப்புறுதி அளித்தவர் தனது பொறுப்பிலிருந்து விடுவிக்கப் படுவார் என்பதை விளக்குக.

2. State the exceptions to the maxim- "Nemo dat quod non habet", under the Sale of Goods Act.

சரக்குகள் விற்பனை சட்டத்தின் கீழ் "ஒருவர் தான் பெற்ற உரிமையை விட மிதமான உரிமையை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது" என்ற கோட்பாட்டின் விதி விலக்குகளைக் கூறுக.

3. Briefly explain the Consumer Protection Councils, its organisation, objects and procedure.

நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களைப் பற்றியும் மற்றும் அவற்றின் அமைப்பு, நோக்கம் மற்றும் நடைமுறைகளைப் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Pledge is a form of Bailment". Explain.
"அடகு ஒரு வகையான ஒப்படைவே" – விளக்குக.

5. Explain the rights of a surety against
(a) Creditor
(b) Principal debtor
(அ) கடனீந்தவர்,
(ஆ) கடன் பெற்றவர் இவர்களுக்கு எதிராக பொறுப்புறுதி அளித்தவரின் உரிமைகளை விளக்குக.

6. Define partnership. What are the essential elements of partnership?
கூட்டாண்மையை வரையறை செய்யவும். கூட்டாண்மையின் முக்கியமான அம்சங்கள் என்ன?

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.
(a) Consumer dispute
நுகர்வோர் தகராறு
(b) Auction sale
ஏல விற்பனை
(c) Del credere Agent
பிணை முகவர்
(d) Damages
இழப்பீடு
(e) Goodwill of a firm
கூட்டாண்மையின் நற்பெயர்
(f) Sale and agreement to sell
விற்பனை மற்றும் விற்பனையான உடன்படிக்கை
(g) Bailment contract
ஒப்படைவு ஒப்பந்தம்

PART D - (2 x 6 = 12 Marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' sells and delivers goods to 'B'. 'C' afterwards without consideration agrees to pay for the goods if 'B' fails to pay. 'B' failed to pay. Decide the liability of 'C'.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Pledge is a form of Bailment". Explain.
"அடகு ஒரு வகையான ஒப்படைவே" – விளக்குக.

5. Explain the rights of a surety against
(a) Creditor
(b) Principal debtor
(அ) கடனீந்தவர்,
(ஆ) கடன் பெற்றவர் இவர்களுக்கு எதிராக பொறுப்புறுதி அளித்தவரின் உரிமைகளை விளக்குக.

6. Define partnership. What are the essential elements of partnership?
கூட்டாண்மையை வரையறை செய்யவும். கூட்டாண்மையின் முக்கியமான அம்சங்கள் என்ன?

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.
(a) Consumer dispute
நுகர்வோர் தகராறு
(b) Auction sale
ஏல விற்பனை
(c) Del credere Agent
பிணை முகவர்
(d) Damages
இழப்பீடு
(e) Goodwill of a firm
கூட்டாண்மையின் நற்பெயர்
(f) Sale and agreement to sell
விற்பனை மற்றும் விற்பனையான உடன்படிக்கை
(g) Bailment contract
ஒப்படைவு ஒப்பந்தம்

PART D - (2 x 6 = 12 Marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' sells and delivers goods to 'B'. 'C' afterwards without consideration agrees to pay for the goods if 'B' fails to pay. 'B' failed to pay. Decide the liability of 'C'.

'A' என்பவர் 'B' என்பவருக்கு சரக்குகளை விற்று 'B'விடம் ஒப்படைத்தும் விட்டார். அதன் பிறகு 'C' என்பவர் 'A'–யிடம் சென்று 'A' சரக்குக்கான விலையை தர தவறினால் எந்த மறு பயனுமின்றி தான் தருவதாக வாக்களித்தார். 'A' விலையை தரத் தவறிவிட்டார். 'C' என்பவரின் பொறுப்பு நிலையை தீர்மானி.

9. 'A' directs 'B', a solicitor to sell his estate by auction and to employ an auctioneer for the purpose. 'B' names 'C' as an auctioneer to conduct the sale. Discuss the legal position of 'C'.

'B' என்கிற வழக்குரைஞரை 'A' தன் நிலச் சொத்தை ஏலத்தில் விற்கவும், அதன் பொருட்டு ஏல விற்பனை செய்பவர் ஒருவரை அமர்த்தவும் பணிக்கிறார். 'C'–ஐ ஏல விற்பனை செய்பவராக 'B' நியமிக்கிறார். 'C'–ன் சட்ட நிலையை ஆராய்க.

10. Three brothers, 'A' aged 20 years, 'B' aged 19 years and 'C' aged 17 years decide to form a partnership with the provision that 'C' will share the profit only. Can they do so?

20 வயதான 'A', 19 வயதான 'B' மற்றும் 17 வயதான 'C' என்ற மூன்று சகோதரர்கள் ஒரு கூட்டாண்மையை அமைப்பதாகவும், 'C' இலாபத்தில் மட்டும் பங்கு பெறுவார் எனவும் தீர்மானிக்கின்றனர். அவர்கள் அவ்வாறு இயங்க இயலுமா?

LL.B.DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Three year Regular Course)

First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What is Contract of Indemnity? What are the Rights of indemnifier?

ஈட்டுறுதி ஒப்பந்தம் என்றால் என்ன? ஈட்டுறுதியளிப்பவரின் உரிமைகள் யாவை?

2. "The liability of the surety is co-extensive with that of the principal debtor" - Discuss.

"ஒரு பிணையாளரின் பொறுப்பு என்பது முதன்மை கடனாளியின் பொறுப்புடன் இணைந்தே செல்லும்" – விவாதிக்கவும்.

3. Define "Complaint" and explain the powers and functions of the State Consumer Disputes redressal Commission.

"புகார்" என்பதை வரையறை செய்து, மேலும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define "Bailment", Explain the essentials of bailment and classification of bailment.

"ஒப்படைவு" என்பதை வரையறை செய்க. ஒப்படைவின் வகைகள் மற்றும் முக்கியக் கூறுகளை விளக்குக.

5. What is condition and warranty? What are the exemptions to this clause?

நிபந்தனை மற்றும் நம்புறுதி என்றால் என்ன? இந்த வகையத்திற்கு உள்ள விலக்குகள் யாவை?

6. What is Partnership? What are the essentials of partnership?

கூட்டாண்மை என்றால் என்ன? கூட்டாண்மையின முக்கியக் கூறுகள் யாவை?

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Retirement of partners

கூட்டாண்மையர்களின் ஓய்வு

(b) Concealed Principal

மறைக்கப்பட்ட முதல்வர்

(c) Sub agent

துணை முகவர்

(d) Unfair Trade Practice

முறையற்ற வணிக பழக்கம்

(e) Sale and Agreement to sell

விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்படிக்கை

(f) Frivolous complaint

அற்பமான புகார்

(g) Duties of the Bailee.

ஒப்படைவு பெறுபவரின் கடமைகள்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, B and C enter into a partnership agreement under which 'C' is not liable for the debts. 'D', the creditor files a suit against A, B and C. Examine the position of 'C'.

அ, ஆ மற்றும் இ ஆகியோர் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வொப்பந்தத்தின் படி 'இ' என்பவர் கடன்களுக்கு கடன்பட்டவர் அல்ல. ஈ என்ற கடன் கொடுத்தவர் அ, ஆ மற்றும் 'இ' க்கு எதிராக வழக்குத் தொடர்கிறார். 'இ' யின் நிலை என்ன?

9. Priya owned a Xerox shop. She purchased a Xerox machine for her shop usage. Is she a consumer under the Consumer Protection Act? Give reasons.

பிரியா என்பவர் ஒரு ஜெராக்ஸ் கடை நடத்தும் உரிமையாளர் ஆவார். அவர் தன் கடைத்தேவைக்கு ஒரு ஜெராக்ஸ் எந்திரம் வாங்குகின்றார். அவர் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நுகர்வோர் ஆவாரா? காரணம் தருக.

10. Akash obtains two loans from a Nationalized Bank at Chennai. First one is Jewel loan and the second one is personal loan. He repaid the Jewel loan in full and a long due in personal loan. After repayment of the Jewel loan, the Banker claims lien of the jewel for personal loan. Is it justifiable? Can Akash get any remedy?

ஆகாஷ் என்பவர் சென்னையில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் இரண்டு கடன்கள் பெற்றுள்ளார். அதில் முதலாவது ஒன்று நகை கடனும் இரண்டாவது ஒன்று தனிநபர் கடனுமாகும். அவர் நகை கடனை முற்றிலும் செலுத்திவிட்டார். மேலும் தனிநபர் கடனில் நீண்ட கால நிலுவை வைத்துள்ளார். வங்கியர் நகை கடனில் உள்ள நகைகளை தனிநபர் கடனுக்கு பற்று வைத்துள்ளார்? இது நியாயமானதா? ஆகாஷிற்கு ஏதேனும் தீர்வழி பெற இயலுமா?

LL.B. DEGREE EXAMINATIONS, DECEMBER 2022

(Three year Regular Course)

First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the rights of lien and stoppage in transit of goods of unpaid seller.

விலைபெறா விற்பனையாளரின் பற்று உரிமை மற்றும் சரக்கு செல்லுகையில் நிறுத்தம் செய்யும் உரிமை ஆகியவற்றை விளக்குக.

2. Who is consumer? Define the locus standi of consumer and describe the procedure to file complaint in District Consumer forum.

நுகர்வோர் என்பவர் யார்? நுகர்வோரின் வழக்குரையுரிமையை வரையறுத்து, மாவட்ட நுகர்வோர் மன்றத்தில் புகாரளிக்கும் நடைமுறையை விளக்கவும்.

3. Enumerate the different modes of dissolution of a partnership firm and explain the grounds of dissolution by the court.

கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் பல்வேறு முறைகளைக் குறிப்பிட்டு நீதிமன்றத்தில்

ஏற்படும் நிறுமக்கலைப்பின் காரணிகளை விளக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the Doctrine of Relating Back with respect to ratification under the Law of Agency.

முகவரிய சட்டத்தின் கீழ் பின்னேற்பு இசைவு குறித்த மீண்டும் தொடர்புபடுத்தும் கோட்பாடு பற்றி விளக்குக.

5. Define and distinguish the rights and liabilities of Bailor under gratuitous bailment and bailment for hire.

மதிப்புறு ஒப்படைவு மற்றும் வாடகை ஒப்படைவின் கீழ் ஒப்படைவு தருநரின் உரிமைகள் மற்றும் கடமைகள் வேறுபடுத்தி வரையறுக்கவும்.

6. "Satisfaction of the debt extinguishes the pawn". Explain the rights and duties of pledgor and pledgee in the satisfaction of debt.

"கடன் தொகையை செலுத்தும் போது அடகு முடிவிற்கு வரும்" – கடன் தொகை செலுத்துப் படுதலில் அடகு தருநர் மற்றும் அடகுபெறுநரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விளக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Minor's option on attaining majority

உரிய வயதடைந்த பின் இளவரின் தேர்வு

(b) Co-surety

இணை பிணையாளர்

(c) State Consumer Protection Council

மாநில நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில்

(d) Mercantile Agent

வணிக முகவர்

(e) Gajanan v.Moreshwar (AIR 1942 Bom 302)

கஜானன் எதிர் மொரேஷ்வர் (AIR 1942 Bom 302)

(f) C.I.F. Contract (Cost, Insurance and Freight Contract)

விலை, காப்பீடு மற்றும் சுங்கவரி ஒப்பந்தம்

(g) Mixture of goods by bailee

ஒப்படைவு பெறுநரால் ஏற்படும் பொருட்களின் கலவை

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions

of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' purchased a golden bangle from 'B' by exercising fraud and pledged it with 'C' before the contract was rescinded by 'B'. Is the pledge valid? Analyse with relevant case law.

'அ' என்பவர் ஒரு தங்க வளையலை 'ஆ' என்பவரிடமிருந்து மோசடி செய்து வாங்கினார். பிறகு அந்த ஒப்பந்தத்தை 'ஆ' தவிர்ப்பதற்கு முன் 'அ' அந்த வளையலை, "இ" யிடம் அடகு வைத்தார். இந்த அடகு செல்லத்தகுந்ததா? தொடர்புடைய வழக்கோடு ஆராய்க.

9. A car was delivered on 'Sale or return' within 8 days to 'B' by 'C'. The car got repaired within 5 days. Analyse who will bear the repair charges? B or C?

எட்டு நாட்களுக்குள், 'விற்பனை அல்லது திருப்பி தருதல்' என்ற அடிப்படையில் 'ஆ'விடம், 'இ' என்பவரால் மோட்டார் வண்டி ஒப்படைக்கப்பட்டது. ஐந்து நாட்களுக்குள் மோட்டார் வண்டி பழுதானது. மோட்டார் வண்டி பழுது செலவுகளுக்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? 'ஆ' அல்லது 'இ'? ஆராய்க.

10. 'A' guarantees payment to 'B' a tea dealer for Rs.100/- for any tea he may from time to time supply to 'C'. 'B' supplies tea to 'C' to the value of Rs.200/- and 'C' does not pay for it. Discuss the liability of 'A'.

'ஆ' என்ற தேநீர் விற்பனையாளர் 'இ' என்பவருக்கு அவ்வப்போது வழங்கும் ரூ.100/– வரையிலான தேநீருக்கு 'அ' என்பவர் பொறுப்புறுதி வழங்கினார். ஆனால் 'ஆ' ரூ.200/– வரை 'இ'க்கு தேநீர் வழங்கினார். 'இ' அதற்கு பண செலுத்தவில்லை. 'அ' வின் கடப்பாட்டை விளக்கவும்.

LL.B.DEGREE EXAMINATIONS, MAY 2023

(Three year Regular Course)

First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "The Law as to partnership is a branch of the law of principal and agent", Enumerate rights and liabilities of partners under the principle of Mutual Agency.

"கூட்டாண்மை சட்டம் என்பது முதல்வர்–முகவரிய சட்டத்தின் ஒரு பகுதியாகும்", –பரஸ்பர முகவரிய விதியின் கீழ் கூட்டாளிகளின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரிக்கவும்.

2. State the organisation, jurisdiction, powers and functions of Consumer Disputes Redressal Commissions.

நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் அமைப்பு, எல்லைவரம்பு: அதிகாரம் மற்றும்

செயல்பாடுகள் குறித்து விவரி.

3. Examine the exceptions to "Caveat Emptor" principle under the implied conditions and warranties in the Sale of Goods Act, 1930.

சரக்குகள் விற்பனை சட்டம், 1930–இன் கீழ் "வாங்குபனே விழித்திரு" என்ற கோட்பாட்டின் விதிவிலக்குகளை உட்கிடை நம்புறுதிகள் மற்றும் கட்டுவரம்புகள் கொண்டு விளக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. "Delegatus non potest delegare". Explain the general rule and exceptions to the maxim under the Law of Agency.

"அதிகார ஒப்படைவு பெற்றவர் பிறிதொருவருக்கு அதிகார ஒப்படைவு செய்ய இயலாது" – இக்கோட்பாட்டின் விதி மற்றும் விதிவிலக்குகளை முகவரிய சட்டத்தின் கீழ் விளக்குக.

5. Explain the essentials of Bailment describing the rights and duties of Bailee.

ஒப்படைவு பெறுநரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரித்து ஒப்படைவின் முக்கிய கூறுகளை விளக்கவும்.

6. Who can pledge? Is pledge by Non-owners valid? Examine.

யார் அடகு வைக்கலாம்? உரிமையற்றவரின் அடகு செல்லும் நிலை பெற்றதா? ஆராய்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Continuing Guarantee

தொடர் பொறுப்புறுதி

(b) Partnership at will

விருப்பமுறிவு கூட்டாண்மை

(c) Constructive delivery

கொள்நிலை ஒப்படைவு

(d) Consumer Rights

நுகர்வோர் உரிமைகள்

(e) Indemnity holder

ஈட்டுறுதி பெறுபவர்

(f) Bank of Bihar v. State of Bihar

பீகார் வங்கி எதிர் பீகார் அரசு

(g) Finder of lost goods

காணாமல் போன பொருளை கண்டெடுப்பவர்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions

of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' gives her gold ornament to a Goldsmith for making new ornament. Each evening, the semi-finished ornament will be put in a box and kept in the room of Goldsmith's house. The room was locked and the key was retained by 'A'. While so, the box with ornament was stolen. Analyse the liability of Goldsmith.

'அ' என்பவர் பொற்கொல்லரிடம் தனது பழைய நகைகளை புதிய நகையாக மாற்றுவதற்காக அளித்தார். ஒவ்வொரு நாள் மாலை பொழுதிலும், பகுதியாக முடிக்கப்பட்ட நகையை வாங்கி ஒரு பெட்டியினுள் மூடி, பொற்கொல்லர் வீட்டின் அறையில் வைத்து அறைகதவை பூட்டி விட்டு சாவியை 'அ' தன்னிடம் வைத்துக் கொள்வார். இந்நிலையில், நகைபெட்டி களவு போனது. பொற்கொல்லரின் கடப்பாட்டை விளக்குக.

9. The wife of a clerk drawing a monthly salary of Rs.50/- purchases on credit a radio set costing Rs.1,000/- Can the husband be made liable for the debt?

மாதந்தோறும் ஊதியமாக ரூ.50/– பெறும் கணக்காளரின் மனைவி ரூ.1,000/– மதிப்புள்ள வானொலி பெட்டியை கடனின் பெயரில் வாங்குகிறார். அக்கடனுக்காக கணவர் பொறுப்பேற்கப்படுவாரா? ஆராய்க.

10. Free tickets to London are offered by Lucky draw along with the purchase of Premier Padmini car. Whether the winner of free tickets can sue as consumer? Analyse.

பிரீமியர் பத்மினி கார் வாங்கும் பொழுது குலுக்கல் முறையில் லண்டன் நகரம் செல்வதற்கு இலவச பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டது. இலவச பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டது இலவச பயணச்சீட்டை வெல்பவர் நுகர்வோராக வழக்கிட இயலுமா? ஆராய்க.

LL.B.DEGREE EXAMINATIONS, NOVEMBER 2023

(Three year Regular Course)
First Year - Second Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Define the contract of indemnity. Distinguish between the contract of guarantee and contract of indemnity.

ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையறை செய்க. ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதிக்குள்ள ஒப்பந்தங்களின் வேற்றுமைகளை விளக்குக.

2. Explain three-tier Consumer Disputes Redressal Machinery, established under the Consumer Protection Act. Discuss the composition and jurisdiction of the National Commission. Where can an appeal lie against the order of the National Commission?

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மூன்று அமைப்பு கொண்ட நுகர்வோர் குறைதீர் மையத்தினை விளக்குக. தேசிய நுகர்வோர் ஆணையத்தின் அமைப்பு மற்றும் ஆள் வரம்புகையினை விளக்குக. இந்த தேசிய நுகர்வோர் ஆணைய உத்தரவிற்கு எதிராக எங்கு மேல் முறையீடு தாக்கல் செய்ய முடியும்?

3. Explain the conditions and warranties in a contract of Sale of Goods with decided case laws.

சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள கட்டு வரம்புகள் மற்றும் நம்புறுதிகள் ஆகியவற்றை தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் கொண்டு விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What are the remedies, available to the seller and buyer under the Sale of Goods Act?

சரக்கு விற்பனை சட்டத்தின் கீழ் விற்பவர் மற்றும் வாங்குபவர்களின் தீர்வழிகள் என்ன என்பதனை விவரி.

5. What do you understand by the term "caveat emptor"? State the rights and the obligations of finder of lost goods.

"வாங்குபவனே விழித்திரு" என்ற கோட்பாட்டின் மூலம் என்ன புரிந்து கொள்கிறீர்கள்? இழந்த பொருட்களை கண்டுபிடித்தவரின் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி விவரி.

6. Discuss the various ways by which partnership may be terminated.

கூட்டாண்மை எந்தெந்த வழிகளில் இரத்து செய்யப்படுகிறது என்பதினை விவாதிக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Agent's personal liability

முகவரின் தனிப்பட்ட பொறுப்படைவு

(b) Various kinds of guarantee

பொறுப்புறுதியின் பல்வேறு வகைகள்

(c) Sale by non owners

உரிமை அல்லாதோரின் விற்பனை

(d) Unfair Trade Practice and Restrictive Trade Practice

நேர்மையற்ற வணிக பழக்கம் மற்றும் கட்டுப்படுத்தக் கூடிய வணிக பழக்கம்

(e) Essential ingredients of pledge

அடகிற்குரிய தேவையான கூறுகள்

(f) Consequences for non-registration of partnership

பதிவு செய்யப்படாத கூட்டாண்மையின்விளைவுகள்

(g) Rights of Pawnor

அடகு வைப்பவரின் உரிமைகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' purchased a gold chain from 'B' by exercising undue influence and pledged it with 'C'. Is the Pledge valid as per law?

'அ' என்பவர் தகாதநிலை வற்புறுத்துதலின் பேரில் 'ஆ' விடமிருந்து தங்க சங்கிலியை வாங்கி 'இ' என்பவரிடம் அடகு வைக்கிறார். அந்த அடகு – சட்டப்படி செல்லத்தக்கதா?

9. 'A' asks 'B' to beat 'C' by promising to indemnify him against the consequences. In order to that, 'B' beats 'C' and the court fined Rs.5,000/-. Can 'B' recover the amount from 'A'? Decide.

'அ' என்பவர் 'ஆ' விடம் 'இ' என்பவரை அடிக்கச் சொல்கிறார். அதனால் ஏற்படும் விளைவுகளை ஈடு செய்வதாக 'அ' உறுதிபளிக்கிறார். இதன் பொருட்டு 'ஆ' என்பவர் 'இ' என்பவரை அடிக்கிறார். இவருக்கு நீதிமன்றம் ரூ.5,000/– அபராதம் விதிக்கின்றது. 'ஆ' என்பவர் இத்தொகையினை 'அ' விடமிருந்து திரும்ப பெற இயலுமா? தீர்மானிக்கவும்.

10. 'A' purchased a Xerox Machine for self employment. The machine is defective at the time when it was purchased. Can 'A' file a complaint under the Consumer Protection Act? Will he succeed in this case. Discuss.

'அ' என்பவர் தமது சுயவேலைக்காக ஒரு ஜெராக்ஸ் இயந்திரத்தினை விலைக்கு வாங்குகிறார். இதனை விலைக்கு வாங்கும் சமயம் அந்த இயந்திரம் பழுதுள்ளதாக இருக்கின்றது. இதன் காரணமாக 'அ' புகார் மனுவினை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்கிறார். 'அ' இவ்வழக்கில் வெற்றியடைவாரா? விவரி.

ஐந்தாண்டு சட்டக்கல்வி

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For candidates admitted during 2017 -2018)

B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019

(Five Years Regular Course)

Second Year / Fourth Semester

CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "An indemnifier's liability is primary, a surety's secondary". Discuss.

"ஒரு ஈட்டுறுதி அளிப்பவரின் பொறுப்பு நிலை முதன்மையானது, ஒரு பிணையாளரின் நிலை இரண்டாவது" – கூர்ந்து ஆராய்க.

2. State the doctrine of 'Caveat Emptor' and explain the exceptions to it.

"வாங்குபவனே விழித்திரு" என்கிற கோட்பாட்டினை குறிப்பிட்டு அதற்குரிய விலக்குகளை விளக்கம் செய்யவும்.

3. Briefly explain the various modes by which an agency may created?

பல்வேறு வகைகளில் ஓர் முகவரியம் தோற்றுவிக்கப்படும் வழிமுறைகளை சுருக்கமாக விளக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Pledge is a form of bailment" - Discuss.

"அடகு என்பது ஒரு வகை ஒப்படைப்பே ஆகும்" – ஆராய்க.

5. Explain the different kinds of partners.

கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விளக்குக.

6. Discuss the kinds, composition and jurisdiction of the consumer disputes redressal agencies in India.

இந்தியாவில் நுகர்வோர் சச்சரவு தீர்வழி அமைப்புகளின் வகைகள், அமைப்பு மற்றும் ஆள்வரை குறித்து விவாதிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Unfair Trade Practice

முறையற்ற வணிக நடவடிக்கை

(b) Rights and Duties of a Partner.

கூட்டாண்மையரின் உரிமைகள் மற்றும் கடமைகள்

(c) Continuing guarantee

தொடர் பொறுப்புறுதி

(d) Sub Agent

துணை முகவர்

(e) Agreement to sell

விற்பதற்கான உடன்பாடு

(f) Minor partner

வயதுறா பங்குநர்

(g) Contract of guarantee

பொறுப்புறுதி ஒப்பந்தம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The electricity board without prior notice, disconnected electricity supply against B's mill for non-running. Is it a deficiency of service?

மின் வாரியம் எந்த வித முன் அறிவிப்பும் இல்லாமல் ஆ–வின் ஆலை இயங்கா நிலையில் உள்ளது என்ற காரணத்திற்காக மின் இணைப்பை துண்டித்தது. இது ஒரு சேவை குறைபாடா?

9. X has been admitted as a new partner. What are his obligations as far as old debts of the firm are concerned.

X என்பவர் ஒரு புதிய கூட்டாளியாக நிறுமத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். அந்நிறுமத்தின் பழைய கடன்களைப் பொறுத்தவரை அவரது கடப்பாடுகள் யாவை?

10. A directs his agent B to buy a certain house for him. B tells that it cannot be bought. Later A discovers that B has bought the house for himself. What is the remedy open to A?

ஆ என்னும் தன்னுடைய முகவரை அ வீடு வாங்குமாறு ஏவுகிறார். ஆ அதை வாங்குவதற்கு இயலாது கூறுகிறார். அதன் பின்னர் ஆ அந்த வீட்டை தனக்காக வாங்கியிருக்கிறார் என்று அ தெரிந்து கொள்கிறார். அ–வுக்கு சட்டத்திலிருக்கும் தீர்வழிகள் யாவை?

B.A. LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2019

LAW OF CONTRACTS - II

(Five Years Regular Course)

Second Year / Fourth Semester

CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Bailment and enumerate the rights and duties of a bailee.

ஒப்படைவு என்பதை வரையறு. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி விவரி.

2. Distinguish a condition from a warranty. What are the implied conditions and warranties in a contract of sale of goods.

ஒரு நிபந்தனையிலிருந்து நம்புறுதியை வேறுபடுத்துக சரக்குகள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் உட்கிடையான நிபந்தனைகளும், நம்புறுதிகளும் யாவை?

3. The Indian Partnership Act provides for registration of firms without making it compulsory. Explain.

"இந்தியக் கூட்டாண்மைச் கூட்டாண்மையினை பதிவு சட்டமானது செய்வதை கட்டாயப் படுத்தாமல் இருந்த போதிலும் கூட்டாண்மை நிறுமத்தினை பதிவு செய்வதை உறுதி செய்கிறது". விளக்குக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Enumerate the rights, duties and liabilities of an agent.

முகவர் ஒருவரின் உரிமைகள், கடமைகள் மற்றும் கடப்பாடுகள் ஆகியவைகளை எடுத்துரைக்க.

5. Define 'a contract of indemnity'. What are the rights of an indemnity holder when sued?

ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தத்தை வரையறு. ஈட்டுறுதி பெறுபவரின் மீது வழக்கு தொடரப்படும். பொழுது அவருடைய உரிமைகள் யாவை?

6. Briefly explain the consumer protection councils, its organisation, objects and procedure.

நுகர்வோர் பாதுகாப்பு குழுக்களைப் பற்றியும் மற்றும் அவற்றின் அமைப்பு, நோக்கம் மற்றும் நடைமுறைகளைப் பற்றியும் சுருக்கமாக விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Pledge by non owner.

உரிமை அல்லாதோர் அடகு வைத்தல்.

(b) Termination of agency.

முகவர் நிலை முடிவுறச் செய்தல்.

(c) Unpaid seller.

விலை பெறா விற்பனையாளர்.

(d) Expulsion of partner.
கூட்டாளி ஒருவரை நீக்குதல்

(e) Lien.
பற்றுரிமை.

(f) Sale and agreement to sell.
விற்பனை மற்றும் விற்பனைக்கான உடன்பாடு.

(g) Deficiency in service.
சேவையில் குறைபாடு.

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' purchased a Xerox machine for self employment. The machine is defective. Can 'X' file a complaint under the Consumer Protection Act.

'X' சுய வேலைக்காக ஒரு ஜெராக்ஸ் இயந்திரத்தை விலைக்கு வாங்கினார். அதில் குறைபாடு இருந்தது. 'X' நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புகார் தாக்கல் செய்ய இயலுமா?

9. 'A' hires a carriage of 'B' which is unsafe, though 'B' was not aware of it. While using it 'A' was injured. Is 'B' responsible for the injury to 'A'.

'A' என்பவர் 'B'வினுடைய வண்டியை வாடகைக்கு எடுத்தார். அது பாது காப்பானது இல்லை என்பது 'B'விற்கு தெரியாது. அதனால் 'A'விற்கு காயம் ஏற்பட்டது. 'A'வின் காயத்திற்கு 'B' பொறுப்பாவாரா?

10. 'A' guarantees the debt owned by 'B' to 'C'. The debt is wiped out by a Debt Relief Act. Is 'A' liable on his guarantee?

'A' வினால் 'C'க்கு கொடுக்கப்பட வேண்டிய கடனிற்கு 'A' பொறுப்புறுதி அளிக்கிறார். கடன் நிவாரண சட்டம் ஒன்றினால் அந்தக் கடன் இல்லாமல் செய்யப் படுகிறது. 'A' தன் பொறுப்புறுதி மீது பொறுப்பு நிலை உடையவரா?

B.A. LL.B. DEGREE EXAMINATION, JANUARY 2021.

LAW OF CONTRACTS - II

(Five Years Regular Course)

Second Year / Fourth Semester

CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Under what circumstances a pledge created by non-owners is valid?

சொத்து மீது உரிமை இல்லாதவர்களால் வைக்கப்பட்ட அடகு எந்த சூழ்நிலைகளில் சட்டப்படி செல்லக் கூடியதாகும்?

2. What is meant by Dissolution of a Firm? In what cases does the Court order dissolution of a firm?

நிறுவனத்தைக் கலைத்தல் என்றால் என்ன? எந்தெந்த சூழ்நிலைகளில் நீதிமன்றத்தின் மூலம் நிறுவனம் கலைக்கப்படலாம்?

3. Explain the composition and jurisdiction of the State and National Dispute Redressal Commission, under the Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மாநில மற்றும் தேசிய குறைதீர் ஆணையங்களின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பை விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define 'Co-surety' and explain the circumstances under which a surety is discharged from liability.

இணை பிணையம் அளித்தவரை வரையறை செய்க. எந்தெந்தச் சூழ்நிலைகளில் பிணையாளர் தனது பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதை விளக்குக.

5. Define Bailment and write the difference between Bailment and Sale.

ஒப்படைவு என்பதை வரையறை செய்க. ஒப்படைவு என்பதை கூறவும். ஒப்படைவு என்பது விற்பனையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

6. What are the objectives of the Consumer Protection Act? How far it is fulfilled?

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்கள் யாவை? அது எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது?

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் வரைக.

(a) Agency of Necessity

அவசியத்தால் ஏற்படும் முகவாண்மை

(b) Unpaid Seller

விலைபெறாத விற்பனையாளர்

(c) Implied conditions

உட்கிடை கட்டுறுதிகள்

(d) Ratification
ஏற்புறுதி

(e) Finder of lost goods
தொலைந்த பொருளை கண்டெடுத்தவர்

(f) Defect in goods and deficiency in service under the Consumer Protection Act.
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி சரக்குகளில் குறை மற்றும் சேவைகளில் குறைபாடு

(g) Caveat Emptor
"வாங்குபவனே விழித்திரு"

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' directs 'B', his agent, to buy a certain House for him. 'B' informs 'A' that if cannot be purchased. Later 'A' finds out that 'B' has purchased the house for himself. Does 'A' has a remedy against 'B'?

'A' என்பவர், தன்னுடைய முகவர் 'B'–யை தனக்காக ஒரு குறிப்பிட்ட வீட்டை வாங்குமாறு பணித்தார். 'B' அதை வாங்குவதற்கு இயலாது என்று கூறுகின்றார். அதன் பின்னர் 'B' தனக்காக வாங்கியிருக்கிறார் என்று 'A' தெரிந்து கொள்கிறார். 'B'–க்கு எதிராக 'A'–க்கு தீர்வழி உண்டா?

9. A, B and C have agreed to become liable for Rs. 10,000, Rs. 20,000 and Rs. 30,000 respectively as sureties for D. D's indebtedness was Rs. 30,000. What is the sum for which each of the three sureties is liable to pay?

'C' என்பவரது பொறுப்பு நிலைக்கு முறையே ரூ.10,000, ரூ.20,000, ரூ.30,000 க்கும் பிணையாளர்களாக பொறுப்புறுதி ஏற்க, 'A', 'B' மற்றும் 'C' ஆகிய மூவரும் உடன்பட்டனர். 'C'–யின் கடன் தொகை ரூ.30,000. பிணையாளர் ஒவ்வொருவரும் எவ்வளவு தொகை கொடுக்க கடன்பட்டவர்கள்?

10. One 'A', who was seriously injured in an accident, was admitted in a hospital after payment of Rs. 100 towards registration charges only. As he was left unattended for nearly two hours after the admission, he succumbed to injuries. Does his wife has any remedy under the Consumer Protection Act?

'A' என்பவர் ஒரு விபத்துக் காரணமாக பலத்தக் காயங்களுடன் ஒரு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவரிடமிருந்து ரூ.100 மட்டும் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இரண்டு மணி நேரம் வரையில் அவருக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்காததால் இறந்து விடுகிறார். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 'A'–வின் மனைவிக்கு ஏதாவது தீர்வழி உண்டா?

B.A. LL.B. DEGREE EXAMINATION, FEBRUARY 2022.

LAW OF CONTRACTS - II

(Five Years Regular Course)

Second Year / Fourth Semester

CONTRACTS - II

Time: 2½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்குக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define indemnity and guarantee contracts. State the differences between these two.

ஈட்டுறுதி மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தங்களை வயைறை செய்க. இந்த இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை குறிப்பிடுக.

2. Explain 'Nemo dat quod non habet' and state the exceptions.

'ஒருவர் தான் பெற்ற உரிமையைக்காட்டிலும் மிகுதியாக உரிமையை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது' – என்பதை விளக்கி அதன் விதிவிலக்குகளை குறிப்பிடுக.

3. Explain the various modes by which a partnership firm can be dissolved.

ஒரு கூட்டாண்மையை கலைப்பதற்கான வெவ்வேறு முறைகள் யாவை என்பதை விளக்குக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who is a consumer and who is not a consumer? Who can be a complainant under the Consumer Protection Act? Explain.

நுகர்வோர் என்பவர் யார் மற்றும் நுகர்வோர் அல்லாதவர் யார்? நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் யார் புகார்தாரராக இருக்க முடியும்? விளக்குக.

5. State the circumstances in which the surety can be discharged from his liability.

ஒரு பிணையாளர் எந்தெந்த சூழ்நிலைகளில் தன் பொறுப்பிலிருந்து விடுபடுகிறார் என்பதைக் குறிப்பிடவும்.

6. Define unpaid seller. Explain the rights of unpaid seller.

விலைபெறா விற்பவர் வரையறை செய்க. விலை பெறா விற்பவரின் உரிமைகளை விளக்கவும்.

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Stoppage in transit
செல்லுகையில் நிறுத்தம்

(b) Agreement to sell and sale
விற்பனைக்கான உடன்படிக்கை மற்றும் விற்பனை

(c) Hirer of services
சேவையை பணம் கொடுத்து பெறுபவர்

(d) Rights of Pawnee
அடகு பெறுபவரின் உரிமைகள்

(e) Deficient Service
சேவையில் குறைபாடு

(f) Essentials of Bailment
ஒப்படைவின் முக்கியக்கூறுகள்

(g) Define - Pledge
அடைமானம் என்பதை வரையறு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' applied for a ration card. Is he a consumer? Decide.

அ ஒரு குடும்ப அட்டை வழங்குமாறு விண்ணப்பம் செய்கிறார். அவர் ஒரு நுகர்வோரா? தீர்மானிக்க.

9. In the absence of husband, wife purchases some goods of necessity from the shop of X on credit. Can wife act as an agent of husband? Can the shopkeeper X recover the money from the husband?

கணவர் இல்லாத போது அவருடைய மனைவி தேவையின் பொருட்டு வீட்டிற் குத் தேவையான பொருட்களை உ என்பவரின் கடையில் கடனாக வாங்குகிறார். மனைவி கணவரின் முகவராக செயல்பட முடியுமா? உ என்பவர் தனக்கு சேர வேண்டிய கடன் தொகையை கணவரிடமிருந்து பெற முடியுமா?

10. Under a contract of sale Magesh has despatched one lorry load of apples to Ramesh. In the meantime, Ramesh has become an insolvent. The goods are in transit. What are the rights of Magesh? Discuss.

ஒரு விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் ஒரு லாரி ஆப்பிள் பழங்களை மகேஷ் என்பவர் ரமேஷிற்கு அனுப்பி வைக்கிறார். இதற்கிடையில் ரமேஷ் நொடித்தவரானார். சரக்குகள் செல்லுகையில் இருக்கின்றன. மகேஷின் உரிமைகள் என்ன? விவாதிக்க.

B.A.LL.B DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Five year Regular Course)
Second Year - Fourth Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain "Nemo dat quod non habet" and state the exceptions.

"ஒருவர் தான் பெற்ற உரிமை மூலத்தைக் காட்டிலும் மிகுதியான உரிமை மூலத்தை மற்றவருக்கு மாற்றி அளிக்க இயலாது" என்பதை சரக்கு விற்பனை சட்டத்தின் கீழ் விதிவிலக்குகளுடன் எழுதுக.

2. Explain agency by ratification and state the requisities of a valid ratification.

பின் ஏற்பு முகவரியம் என்பதை விளக்குக மற்றும் அதனை சட்டப்படி செல்லத்தக்க ஒன்றாக ஆக்குவதற்கு தேவையான கூறுகளைக் குறிப்பிடவும்.

3. Discuss the powers and functions of Consumer Dispute Redressal agencies.

நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றங்களின் அதிகாரங்களையும் பணிகளையும் விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define contract of guarantee and explain the differences between contract of indemnity and guarantee.

பொறுப்புறுதி ஒப்பந்தம் என்பதை வரையறை செய்து ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குக.

5. Explain the mutual rights and liabilities of partners.

கூட்டாளிகளுக்கு இடையே உள்ள உரிமைகளையும் பொறுப்புகளையும் விளக்குக.

6. "Delegatus non potest delegare" - Explain.

"அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" – விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Defect in goods

பொருட்களின் குறைபாடு

(b) Pledge is a special form of Bailment.

அடகு என்பது ஒரு சிறப்பு வகை ஒப்படைவே ஆகும்.

(c) Continuing guarantee

தொடர் பொறுப்புறுதி

(d) Rights of an Agent

முகவரின் உரிமைகள்

(e) Doctrine of Caveat Emptor

வாங்குபவனே விழித்திரு என்னும் கோட்பாடு

(f) Rights of unpaid vendor

விலை பெறா விற்பனையாளரின் உரிமைகள்

(g) Minor partner

இளவர் கூட்டாளி

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A', a customer in B's shop put down a gold brooch with her coat and forgot to take it. One of the assistants found it and it was placed in a drawer over week end on the next day it was found missing. Discuss the liability of 'B'.

'B'–யின் கடையில் 'A' என்கிற ஒரு வாடிக்கையாளர் தனது கோட்டுடன் ஓர் தங்க ஆடை ஊக்கினை வைத்து விட்டு எடுத்தும் செல்ல மறந்து விடுகிறார். 'B'–யின் உதவியாளர்களில் ஒருவர் வார இறுதியில் அதைக் கண்டெடுத்து ஓர் அறையில் வைக்கிறார். அடுத்த நாள் அது காணாமல் போனது தெரிய வருகிறது, 'B'–யின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

9. 'A' goes to shop of 'B' and agrees to purchase some ready made uniform and take delivery of the same the next day. The uniform are destroyed in fire on the same day night. Who should bear the loss. Decide.

'B' என்பவரின் கடைக்கு 'A' என்பவர் சென்று சில ரெடிமேட் சீருடைகள் வாங்குவதற்கும் அவற்றை அடுத்த நாள் டெலிவரி எடுத்துக் கொள்வதாகவும் உடன்பாடு செய்து கொள்கிறார். ஆனால் அதே நாள் இரவு அச்சீருடைகள் ஒரு தீ விபத்தில் எரிந்து விடுகின்றன. இழப்பை யார் ஏற்றுக் கொள்வது? விவாதிக்க.

10. 'A' bought milk from 'B'. The milk contains harmful germs. A's wife took the milk, got infection and as a result died. A sues B. Decide.

'B'யிடமிருந்து 'A' என்பவர் பால் வாங்கினார். அதில் வியாதியைப் பரப்பும் கொடிய கிருமிகள் இருந்தன. 'A' யின் மனைவி அப்பாலை அருந்தியதால், நோய்வாய்ப்பட்டு அதனால் இறந்துவிட்டார். 'B' மீது 'A' வழக்கிடுகிறார். தீர்க்க.

B.A.LL.B. DEGREE EXAMINATIONS, DECEMBER 2022

(Five year Regular Course)

Second Year - Fourth Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Define bailment and enumerate the rights and duties of a bailee.

ஒப்படைவு என்பதை வரையறு. ஒப்படைவு பெறுபவரின் உரிமைகளும் மற்றும் கடமைகளும் பற்றி பட்டியலிட்டு விவரி.

2. Explain the implied conditions and warrantics in a contract of sale of goods.

ஒரு சரக்கு விற்பனை ஒப்பந்தத்தில் உள்ள உட்கிடையான கட்டுவரம்பு மற்றும் நம்புறுதிகளை விளக்குக.

3. Discuss the rights of surety against:
   (a) the creditor
   (b) the principal debtor and
   (c) the co-sureties

(அ) கடனாளர்

(ஆ) தலைக் கடனாளி மற்றும்

(இ) உடன் பிணையாளர்

ஆகியவர்கள் மீது பிணையாளரின் உரிமை குறித்து விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define sale and distinguish it from an Agreement to Sell.

விற்பனையை வரையறை செய்து அதனை விற்பனைஉடன்பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

5. Explain the different kinds of partners.

கூட்டாளிகளின் பல்வேறு வகைகளை விளக்குக.

6. Explain the objectives of the Consumer Protection Act.

இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களை விவரி.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Kinds of Agents

முகவர்களின் வகைகள்

(b) Risk prima facie passes with ownership

உடைமையோடு சேர்ந்து முதல் தோற்றத்திலேயே வருநிலை இழப்பு கடந்து செல்கிறது.

(c) True test of partnership

கூட்டாண்மையின் உண்மைச் சோதனை

(d) Rowland vs Divall

ரௌலண்ட் எதிர் திவால்

(e) Deficiency in Services

சேவை குறைபாடு

(f) Surety is a favoured debtor

பிணையாளர் ஒரு தனி சலுகைக்குரிய கடனாளி

(g) Unfair Trade Practice

முறையற்ற வணிகப் பழக்கம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' had bailed 200 quintals of Punjab wheat with 'B' a warehouse keeper. 'B' mixes 100 quintals of Argentinian wheat with the wheat of 'A'. Discuss the liability of 'B'.

'அ' என்பவர் 200 குவிண்டால் பஞ்சாப் கோதுமையை 'ஆ' என்னும் கிடங்கு வைத்திருப்பவரிடம் ஒப்படைவு செய்கிறார். 'ஆ' என்பவர் 100 குவிண்டால் அர்ஜெண்டைனா கோதுமையை 'அ' வின் கோதுமையோடு கலக்கிறார். 'ஆ' வின் பொறுப்பு நிலையை விவாதிக்கவும்.

9. 'A' purchased a hot water bottle which could with stand hot water but not boiling water. 'A' filled the bottle with boiling water and it bursts and hurted him. 'A' sues the seller for damages. Can he succeed? Explain.

வெந்நீரைத் தாங்குகின்ற ஆனால் கொதிநீரைத் தாங்காத ஒரு வெந்நீர் புட்டியை 'அ' என்பவர் வாங்கினார். கொதிநீரைக் கொண்டு அந்தப் புட்டியை 'அ' நிரப்பும் பொழுது அது வெடித்து உடைந்து அவரைக் காயப்படுத்தியது. விற்றவர் மீது 'அ' என்பவர் இழப்பீடு கோரி வழக்கொன்று தாக்கல் செய்கிறார். அவர் வெற்றி பெற முடியுமா? விளக்கவும்.

10. (a) Can a nominee of an insurance policy be held as a consumer?

(b) Can a person who applied for community certificate be held as a consumer? Decide.

(அ) ஓர் ஆயுள் காப்பீட்டின் நியமன அமர்வாளர் ஒரு நுகர்வோர் எனக் கொள்ள முடியுமா?

(ஆ) சாதிச் சான்றிதழ் ஒன்று வழங்குமாறு ஒரு நபர் விண்ணப்பம் செய்கிறார். அவர் ஒரு நுகர்வோரா? தீர்மானிக்க.

B.A.,LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2023

(Five year Regular Course)

Second Year - Fourth Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "The Liability of the Surety is always co-extensive with that of the Principal Debtor" - Explain.

"பிணையாளரின் பொறுப்பு நிலை தலைக் கடனாளியின் பொறுப்பு நிலையுடன் உடன் இணைந்து செல்கின்றது" – விளக்குக.

2. What is a Contract of agency? Briefly explain the various modes by which an agency may be created.

முகவரிய ஒப்பந்தம் என்றால் என்ன? வெவ்வேறு வழிகளில் முகவரிய ஒப்பந்தமொன்றை உருவாக்கலாம் என்பதனைப் பற்றி சுருங்க விளக்கவும்.

3. "Law of partnership is an extension of law of agency" - Discuss.

"கூட்டாண்மை சட்டம் என்பது முகவரிய சட்டத்தின் நீட்டிப்பே ஆகும்" – விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What is meant by pledge by non-owner? Explain.

உரிமையற்றவர்களால் உருவாக்கப்படும் அடகு என்றால் என்ன? விவரிக்கவும்.

5. State briefly about the rights of an unpaid Seller against the goods.

பொருட்களுக்கு எதிராக விலைபெறா விற்பனையாளர் உரிமைகள் பற்றி சுருக்கமாக கூறுக.

6. Write briefly about 'Unfair Trade Practice' under Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் 'முறையற்ற வணிக பழக்கம்' என்பதனைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Contract of Indemnity
ஈட்டுறுதி ஒப்பந்தம்

(b) Finder of Lost Goods
தொலைந்து போன பொருளை கண்டெடுத்தவர்

(c) Implied Conditions
உட்கிடை நிபந்தனைகள்

(d) Undisclosed Principal
வெளியிடப்படாத முதல்வர்

(e) Registration of Firm
நிறுமங்களைப் பதிவு செய்தல்

(f) Mediation
மத்தியஸ்தம்

(g) District Commission
மாவட்ட ஆணையம்

PART D - (2 X 6 = 12 marks)

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' gave a television for repair to 'B'. B did the repair work but A refuses to give the repair charges. Whether 'B' can retain the television for charges to be paid?

'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் தொலைக்காட்சி பெட்டியை பழுதுபார்க்க கொடுக்கிறார். 'ஆ' பழுதை சரி செய்த பின்னரும் 'அ' அதற்குண்டான தொகையை கொடுக்க மறுக்கிறார். 'ஆ' அந்த தொலைக்காட்சி பெட்டியை அந்த தொகைக்காக தக்க வைத்துக் கொள்ள முடியுமா?

9. 'Ram' bought a reaping machine from 'Sanjith' which was described as a news machine by him. Later 'Ram' found out that the machine was old one. What remedy is available to Ram?

'ராம்' என்பவர் 'சஞ்ஜித்' என்பவரிடமிருந்து ஒரு அறுவடை இயந்திரத்தை வாங்கினார். அதை சஞ்ஜித் புது இயந்திரம் என்று விவரித்திருத்தார். ஆனால் அந்த இயந்திரத்தை வாங்கிய பின்பு அது பழையது என்று ராமிற்கு தெரிய வந்தது. ராம் எந்த தீர்வு பெற முடியும்?

10. 'A' bought sewing machines for his business. He found a machine to be defective. Can 'A' seek remedy in Consumer forum?

'அ' என்பவர் தன்னுடைய வியாபாரத்திற்காக தையல் இயந்திரங்களை வாங்கினார். அவர் அதில் ஒரு இயந்திரம் குறைபாடுடன் இருப்பதைக் கண்டார். 'அ' என்பவர் நுகர்வோர் மன்றத்தில் தீர்வு பெற முடியுமா?

B.A.LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2023

(Five year Regular Course)

Second Year - Fourth Semester

LAW OF CONTRACTS - II

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Examine the territorial and pecuniary jurisdiction of Consumer Courts.

நுகர்வோர் நீதிமன்றங்களின் நில எல்லை மற்றும் பண அதிகார வரம்பு பற்றி ஆராய்க.

2. "The liability of a surety is co-extensive with that of a principal debtor" - Explain.

"ஒரு பிணையாளரின் பொறுப்பு நிலை முதன்மையான கடனாளரின் பொறுப்பு நிலையுடன் உடனிணைந்து பரவியுள்ளது" – விளக்குக.

3. Explain the nature and characteristic features of a bailment.

ஒப்படைவு என்பதின் தன்மையையும் பண்புச் சிறப்பியல்புகளையும் விவரிக்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Examine the implied conditions in a sale by description and a sale by a sample.

குறித்துரை அடிப்படை விற்பனையிலும், மாதிரி விற்பனையிலும் உள்ள உள்ளடங்கிய நிபந்தனைகளை ஆராய்க.

5. Define Partnership. What are the effects of non-registration of a firm?

கூட்டாண்மையை வரையறு. கூட்டாண்மையைப் பதிவு செய்யாததின் விளைவுகள் யாவை?

6. Definition of complainant under the Consumer Protection Act.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் படி புகார்தாரர் என்பதை வரையறு.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் **ஐந்திற்கு** சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rights of Indemnity holder

ஈட்டுறுதி பெறுபவரின் உரிமைகள்

(b) Guarantee and Insurance

பொறுப்புறுதி மற்றும் காப்பீடு

(c) Particular lien and General lien

குறிப்பிட்ட பற்றுரிமை மற்றும் பொதுப் பற்றுரிமை

(d) Distinguish sub-agent from substituted agent

துணை முகவர் என்பதை மாற்றுமுகவர் என்பதிலிருந்து வேறுபடுத்துக.

(e) Right of resale

மறு விற்பனை உரிமை

(f) Goodwill

வணிக நற்பெயர்

(g) Surety is a favoured debtors

பிணையாளர் ஒரு தனி சலுகைக்குரிய கடனாளி.

PART D - (2 X 6 = 12 marks)

பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Baskar, a five years old child, was admitted by his father Raman, in a government hospital for treatment. The child collapsed immediately and died after an injection was given by the Chief Doctor of the hospital. Whether Raman can file a complaint in the Consumer Court?

ராமன் தன் குழந்தையான ஐந்து, வயதான பாஸ்கரை, ஒரு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். தலைமை மருத்துவர் ஊசி மூலம் மருந்தை செலுத்தியவுடன் குழந்தை மயங்கி விழுந்து இறந்துவிட்டது. ராமன் நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் கொடுக்க முடியுமா?

9. 'A' promises 'B' to indemnify him against the consequences of any proceedings which 'C' may take against 'B' to recover a sum of Rs.100 due from 'B' to 'C'. Is this a Contract of Indemnity? Give reasons.

'ஆ', 'இ' க்கு கொடுக்க வேண்டிய கடன் தொகை ரூ.100–ஐ வசூலிக்க 'இ' எடுக்கும் நீதிமன்ற நடவடிக்கையின் விளைவுகளிலிருந்து பாதுகாப்பதாக 'அ', 'ஆ' விடம் உறுதியுரை செய்கிறார். இது ஒரு ஈட்டுறுதி ஒப்பந்தம் ஆகுமா? காரணம் கூறுக.

10. 'A' employs 'B' as his agent to recover Rs.20,000/- from 'C'. Because of 'B's misconduct, the money is not recovered. State if 'B' is entitled for any remuneration and is liable to 'A'.

"ஆ" என்பவரை "அ" முகவராக நியமித்து "இ" என்பவரிடமிருந்த ரூ.20,000/– வசூல் செய்து கொடுக்க பணிக்கின்றார். "ஆ"வின் தவறான நடத்தையினால் இத்தொகை வசூலிக்கப்படவில்லை. "ஆ" என்பவர் தனக்குரிய சம்பளத்தினை பெற முடியுமா? என்பதினையும் மற்றும் "அ" என்பவருக்கு அவர் பொறுப்புடையவரா என்பதினையும் கூறவும்.